MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,


MADURAI,TAMILNADU, INDIA.625016

முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

மதுரை, தமிழ்நாடு, இந்தியா.625016

VOLUME – IV ISSUE - I AUG – 2026

E-ISSN : 2584 – 1238



THANGAMARI SUDALAI

நூல் விவரம்

நூல் பதிப்பு	:	**EDI-IV** **Vol: I** -
முதற்பதிப்பு	:	ஆகத்து,2026
பதிப்புரிமை & வெளியீடு	:	தங்கமாரி சுடலை, 12/6,மேலப்பொன்னகரம் 8வது தெரு, 4வது குறுக்கு, ஆரப்பாளையம், மதுரை - 625016.
மின்னஞ்சல் முகவரி	:	laks@muththarasi.org
வலைதளம்	:	https://muththarasi.org/
E.ISSN No	:	2584 - 1238
புத்தக அளவு	:	A4
பக்கங்கள்	:	258

முத்தரசி

2023

ஆய்விதழ்

பதிப்புரை

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயரிய சிந்தனையை உலகிற்குத் தந்த பெருமை தமிழ் மொழிக்கு உண்டு. தொன்மை, மரபு, இலக்கியச் செழுமை எனப் பன்முகத் தன்மைகளைக் கொண்டு விளங்கும் தமிழிலக்கியப் பரப்பை, காலம்தோறும் அறிஞர்களும் ஆய்வாளர்களும் புதிய கோணங்களில் அணுகி வருகின்றனர். அந்த வரிசையில், தற்கால ஆய்வுலகிற்குப் புதியதொரு வரவாக இந்தப் பதிப்பு அமையும் என நம்புகின்றோம்.

இந்தப் பதிப்பில் அடங்கியுள்ள ஆய்வுக்கட்டுரைகள் தமிழிலக்கியப் பரப்பை ஒற்றைப்படைத் தன்மையோடு அணுகாமல், பன்முகத் தளங்களில் நின்று ஆராய்கின்றன. சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை தொல்லியல், பண்பாட்டியல், மொழியியல், சூழலியல், பெண்ணியம் மற்றும் கணினித் தமிழ் போன்ற நவீன பல்துறை கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும், இளம் ஆய்வாளர்களும் தங்களின் ஆழமான வாசிப்பினால், முறையாகக் களஆய்வு செய்து, ஆய்வுக்கட்டுரை வழங்கியுள்ளனர் என்பதைத் தரவுச் சேகரிப்பின் வழி அவர்களது உழைப்பும் வெள்ளிடைமலை அருவி போல தெரிகின்றது.

இலக்கியப் பிரதிகளைப் புதிய கோணத்தில் மறுவாசிப்புச் செய்து, தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலையும் உலகளாவிய அதன் சிந்தனைகளையும் அறிவியல் பூர்வமாக வெளிச்சமிட்டுக் காட்டுவதே ஆய்வு முதன்மையாகக் கொண்டு இயங்கும் '**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்**'(**E.ISSN: 2584-1238**) அதன் நோக்கினைக் கொண்டு மிகச் சரியாகப் பயணிக்கின்றது என்றே கருதுகின்றோம்.

'**ஆகத்து-2026**' பதிப்பானது செம்மையான முறையில் உருவாவதற்குக் காரணமாக அமைந்துள்ள ஆய்வாளர்களுக்கும், அதனைச் **சக மதிப்பாய்வு** செய்து வழங்கிய இதழின் **ஆசிரியர் குழு**வில் இடம்பெற்றுள்ள **சான்றோர் பெருமக்களுக்கும்** எங்களது நெஞ்சார்ந்த நன்றிகள். இதழின் வளர்ச்சியில் தோளோடு தோள்நின்று செவ்வனே பயணிக்கும் விருதுநகர் இந்து நாடார்களுக்குப் பாத்தியப்பட்ட செந்திக்குமார நாடார் கல்லூரியின் முதுகலைத் தமிழ்த்துறையின் தலைவரும், இதழின் இணைஆசிரியருமான முனைவர் **கா.ஸ்ரீதர்** அவர்களுக்கும், உடன் பயணிக்கும் கெழுதகை நண்பர் முனைவர் **சோ.ஹரிபாண்டிராஜன்** அவர்களுக்கும் நன்றிகள் பல.

முதன்மை ஆசிரியர்
தங்கமாரி சுடலை

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal,Madurai.
முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
E.ISSN : 2584-1238

பொருளடக்கம்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

01. சேகுவேரா இருந்த வீடு - யோ.கர்ணன் சிறுகதைகளில் மொழிநடை

முனைவர் **சு.சோமசுந்தரி**,
ஆய்வறிஞர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை.

DOI 10.5281/zenodo.21560641.

Abstract :

Yo. Karnan’s birth name is Yoganathan Murali. His works realistically portray the lives of Eelam Tamils; he has created poetry, short stories, and short films. This research article focuses exclusively on the short story collection *Che Guevara Iruntha Veedu* (The House Where Che Guevara Stayed), which was published after the conclusion of the Eelam Tamil struggle. The article examines the linguistic style employed in Yo. Karnan’s short stories.

Key Words : Elam Literature – Short Story – Y.Karnan – Linguistic

யோ.கர்ணனின் இயற்பெயர் யோகநாதன் முரளியாகும். இவரது படைப்புகள் ஈழத்தமிழர்களின் வாழ்வியலை எதார்த்த நிலையில் படம்பிடித்துக் காட்டுவன. கவிதை, சிறுகதை, குறும்படம் ஆகியவற்றைப் படைத்துள்ளார். ஈழத்தமிழர்களின் போராட்டம் முடிவடைந்த பின்னர் வெளிவந்த சேகுவேரா இருந்த வீடு சிறுகதைத் தொகுதி மட்டும் இந்த ஆய்வுக்கட்டுரையின் எல்லையாக அமைகிறது. யோ.கர்ணன் சிறுகதைகளில் மொழிநடையினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மொழிநடை என்பது

“நடையென்பது புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால் அவருடைய நடை திட்பமும் நுட்பமும் அமைந்ததாக இருக்கும். அவருடைய உள்ளத்தில் ஆர்வம் மிகுதியானால் நடையில் ஆற்றல் மிகுதியாகும் என்பார் மு.வ.” [1] நடை திட்பமும் நுட்பமும் வாய்ந்ததாக அமைய உள்ளத்தில் உண்மையும் உறுதியும் விளங்க வேண்டும் என்பது மு.வவின் நடைக்கொள்கையாகும்.

எழுத்தாளர்கள் சொற்களைக் கையாளும் பொழுது அவ்வக்கால மக்களுக்குப் புழக்கத்திலுள்ள சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்பார் பாரதி. “புலவர் அந்த அந்த காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்கவேண்டும்.” [2] என்பது பாரதியின் கூற்றாகும். பாரதி புதுபுதுச் சொற்களைப் பயன்படுத்துவதையும் காலத்துக்கேற்ப நடையில் சொற்களை மாற்றுவதையும் விரும்பினார். எனவே உள்ளத்தில் உறுதியும் உண்மையும் சிறந்து விளங்கினால் ஆற்றலுடன் எழுதுவதோடு புதுபுதுச்சொற்களைக் கையாளுவதன் மூலமும்

நடையை மேம்படுத்தலாம் என்று அறுதியிடலாம்.

அடைச்சொற்கள்

பாத்திரங்களை வருணிக்கும்பொழுது அடைச்சொற்களைப் பயன்படுத்துகிற பாங்கு இவரது நடையில் வெளிப்படுகின்றது. சான்றாக 'திரும்பி வந்தவள்' கதையில் பவித்ரா என்ற பாத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

"அந்த நேரந்தான் அவவுக்கொரு பட்டப்பெயரிருக்கிறது. எனக்குத் தெரியும். ஆள் பார்க்கிறதுக்கு வெள்ளையாக, அமைதியாக, ஒரு சாங்கமாக இருந்ததினால் 'பொம்மை' என்று பொடியள் கூப்பிட்டினம். "

என்று அடைகளையும் பாத்திரங்களுக்குப் பட்டப்பெயர் வைக்கின்ற உத்தியையும் காணமுடிகின்றது.

பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துதல்

நடையில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகிற பாங்கு இவரது நடையில் காணப்படுகின்றது. ஆங்கிலச் சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்தும் வடமொழிச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.

அவை இமேஜ் (பக்.7), ரெலிபோன் (பக்.7), பொசிசன் (பக்.9), பிளாக் பெல்ட்(பக்.9), ஒரிஜினல் (பக்.9), நோட்புக் (பக்.9), எக்ஸ்பீரியன்ஸ் (பக்.11), பேப்பர் (பக்.11), கவுண்டர் (பக்.13), மெனுக்கார்டு (பக்.14), இன்டரடியூஸ் (பக்.15), லோக்கல் (பக்.17), ரிப்ளை (பக்.44), புரமோசன் (பக்.51), யூஸ் (பக். 69), நைலோன் கயிறு (பக்.70), ஸ்டேட்மெண்ட்(பக்.72), ரெயினிங் (பக்.75), ஹாட்லிக் கொலிச் (பக்.76), சல்யூட் (பக்.84), பிஸ்டல்(பக்.97), மெயின்ரோடு (பக்.100), , சிக்ஸ் பேக் (பக்.109), ரியாக்சன்(பக்.109), சிற்றிசன், பிளான், பப்ளிக் ஸ்ரேற்மென்ற் (பக்.110), ரவுண்ட்அப் (பக்.112), இன்ரரசனல் (பக்.113), நோட்டீஸ் (பக்.114), ஆர்க்கியூ, கிளினாக (பக்.116), பிஸ்னஸ் (பக்.110) ஆகிய ஆங்கிலச் சொற்களையும் பம்மாத்து (பக்.121), பிரசுரம் (பக்.126) ஆகிய பிறமொழிச் சொற்களும் இவர்தம் நடையில் பயின்று வந்துள்ளன.

பேச்சுவழக்குச் சொற்கள்

எழுத்தாளர்கள் தம் நடையில் பேச்சுவழக்குச் சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் நடையில் இயல்புத்தன்மை மிகுவதோடு எதார்த்த வாழ்வியலைப் புலப்படுத்தும் உத்தியாக இவை பரிணாமம் கொள்ளும். கர்ணனின் சிறுகதையிலும் பேச்சுவழக்குச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

அவை கக்கூசு (பக்.21) , பொறுக்கி, புடுங்கி (பக்.26), பொத்துக்கொண்டு (பக்.55), சுழியன், பேமசான, மூத்திரம் (பக்.111), காவாலி (பக்.113), மண்டை, சோலி , மூஞ்சை (பக்.116), இஞ்ச (பக்.117), கூலிங்கிளாசோட (பக்.120), நச்சரிப்பு (பக்.126) ஆகியனவாகும்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

அடுக்குச் சொற்கள்

இரண்டு சொற்கள் தொடர்ந்து அடுக்கி வந்து பொருள்தரின் அது அடுக்கு மொழிநடையாகும். யோ.கர்ணனின் சிறுகதையில் அடுக்குமொழிச் சொற்கள் பலவும் இடம்பெற்றுள்ளன. அவை பொல பொலவெண்டு (பக்.68), கொஞ்சம் கொஞ்சம் (பக்.69), புடுங்கப் புடுங்க (பக்.71), கிளுகிளுப்பு (பக்.73), விழுந்து விழுந்து (பக்.77), போகப்போக (பக்.78), எழுந்து எழுந்து (பக்.80), மாறி மாறி (பக்.82), விறு விறுத்து, கிசுகிசுக்க (பக்.88), மெல்ல மெல்ல (பக்.90), துண்டு துண்டு, உடைந்து உடைந்து (பக்.95), விழ விழ, துடிக்க துடிக்க (பக்.105), திரும்பத் திரும்ப (பக்.110), மிதிமிதித்தால் (பக்.121) ஆகிய அடுக்குச் சொற்கள் கூறப்பெற்றுள்ளன.

உவமைநடை

தமிழ்ப்புலவோர் தம் எழுத்தில் உவமைகளைப் பயன்படுத்துவதன் மூலம் நடையில் சுவாரசியத்தைக் கூட்ட முடியும். உவமைகள் நடையை அழகுபடுத்துவதற்கும் எழுத்தாளன் தம் திறத்தை மேம்படுத்தவும் உதவும். கர்ணனின் நடையிலும் உவமைகள் மிளிர்கின்றன. சான்றாக கடுவன் பூனை மாதிரி (பக்.76), ஊற்றைப் போல (பக்.78), ஞாபகம் கொடிய விலங்கைப் போல (பக்.87), விலங்கினதைப் போல (பக்.105) ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இவரது உவமைகள் புதுமையான வகையில் அமைந்துள்ளன. குறிப்பாக ‘ஞாபகங்கள் கொடிய விலங்கைப் போல வந்து நின்றன’ என்பது புதிய சிந்தனை. ‘கோபம் ஊற்றைப் போல பீறிட்டுக் கிளம்பியது’ என்பது எளிமையான உவமையாகும்.

பழமொழிகள்

பழமொழிகளைப் பயன்படுத்துகிற பாங்கினையும் கர்ணனின் மொழிநடையில் காணமுடிகிறது. ‘பருவம் தப்பி பயிரிட்டால் பலன் கிடைக்காது’ (பக்.101) என்ற பழமொழியை பாவமன்னிப்பு சிறுகதையில் திருமணம் பற்றிப் பகரும்பொழுது குறிப்பிடுகின்றார்.

வசைச்சொற்கள்

வசைச்சொற்களைப் பயன்படுத்துதல் நடையில் ஒரு பகுதியாகும். யோ.கர்ணனின் சிறுகதையிலும் வசைச்சொற்கள் இடம்பெற்றுள்ளன. இனமானமற்ற பொறுக்கி (பக்.26), அடி செருப்பால (பக்.48) ஆகிய வசைச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

கர்ணனின் நடை

‘ஒரு படைப்பின் தன்மையை அளவிடும் பல்வேறு உத்திகளுள் நடையை ஆய்வதும் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஒருவர் பேசுவதைப் போன்று இன்னொருவர்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

பேச முடியாததைப் போல் ஒருவர் எழுதுவதைப் போன்று இன்னொருவரின் எழுத்து அமைவதில்லை. இதன் விளைவாக ஒவ்வொரு படைப்பாளியின் நடையும் வேறுபடுகிறது. எனவே படைப்பாளியை இனங்காணுவதற்கு அவர்களின் மொழிநடை பயன்படுகிறது.'[3] என்பார் பேராசிரியர் வீ.ரேணுகாதேவி. எனவே நடை என்பது படைப்பாளியை இனங்காண முயலுவது என்பது தெளிவாகின்றது. கர்ணனின் சிறுகதைகள் தெளிந்த நீரோடை போன்று எளிமையாக ஈழத்தமிழர்களின் பேச்சுவழக்கினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. அதிகமான வர்ணனைகள் இல்லாது உறுதியானதாக பொருள் நோக்கியதாக அமைந்துள்ளது. இவரது நடையில் சிறுகதையின் உச்சகட்டத்தை இறுதியில் வைத்து கதையின் சுவாரசியத்தை மிகுவித்துள்ளார். மொத்தத்தில் கர்ணனின் நடை இயல்பான பேச்சுவழக்கில் எளிமையுடன் எதார்த்தமான உண்மைகளை முன்வைக்கும் நடையென உறுதிப்படுத்தலாம்.

அடிக்குறிப்புகள்

1. பாரதியாரின் உரைநடைத்திறன் (முனைவர் பட்ட ஆய்வேடு), சு.சோமசுந்தரி, பக்.195
2. பாரதியாரின் உரைநடைத்திறன் (முனைவர் பட்ட ஆய்வேடு), சு.சோமசுந்தரி, பக்.195
3. அண்ணாவின் மொழிநடை, முனைவர் வீ.ரேணுகாதேவி, பக்.81

02. கவிஞர் ஞானன் படைப்புகளில் மொழியாளுமை

சூ.ஜோஸ்பின் மாலதி,
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம், வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி,**விருதுநகர்.**
மதுரை காமராஜர் பல்கலைக் கழகம்,மதுரை.
josephinemalathi@vvvcollege.org
Orcid no : https://orcid.org/0000-0001-8576-965X
DOI 10.5281/zenodo.21679301.

Abstract :

The environment in which a creator lives serves as the fundamental backdrop for their work. A creation takes shape through the creator's emotional inspiration. Forms of such inspiration—such as poetry, short stories, and plays—reach the reader in their entirety. Key factors within a work include its form, themes, style, universality, diversity, and literary quality; these elements ensure that the work endures in society across generations. Against this backdrop, the writer Gnanan has produced literary works that reflect the society of his time. His essay collection, *Nenja Oonjal*, serves as the primary source for this study, which aims to examine his command over language—a crucial aspect of his creative persona.

KeyWords : Kavingar Gnanan - Literary Works - Poetry - Short stories - plays

முன்னுரை

ஒரு படைப்பாளன் படைப்பினைப் படைக்க அடிப்படைக் காரணியாக, அவன் வாழும் சூழ்நிலை பின்புலமாக அமைகின்றது. ஒரு படைப்பு படைப்பாளனின் மனஎழுச்சியினால் ஆக்கம் பெறுகின்றது. அத்தகைய மனஎழுச்சியின் வடிவமாகிய கவிதை, சிறுகதை, நாடகம், ஆகிய படைப்பு வாசகனுக்கு முழுமையாக வந்து அடைகின்றது. படைப்பில் இடம் பெறும் வடிவம், கருத்து, நடை, பொதுத்தன்மை, பன்முகத்தன்மை, இலக்கியத் தன்மை போன்றன முக்கிய காரணிகளாக அமைகின்றன. இதனால் அவர்களது படைப்பு, காலங்கள் கடந்தும் சமுதாயத்தில் நிலைத்து நிற்கிறது. இதன் அடிப்படையில் ஞானன் என்னும் படைப்பாளர், தம் காலச் சூழலில் நின்றுகொண்டு, சமுதாயத்தைப் பிரதிபலித்துக்காட்டும் இலக்கியங்களைப் படைத்துள்ளார். அவரின் நெஞ்ச ஊஞ்சல் கட்டுரைத் தொகுப்பு முதன்மை ஆதாரமாக எடுத்துப்பட்டுள்ளது. படைப்பாளுமைகளில் ஒன்றான மொழியாளுமையை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

நூலாசிரியர் அறிமுகம்

'சங்கீத ஞான பாண்டியன்' என்னும் இயற்பெயரைப் பெற்றிருந்த ஞானன் 1942ல்பிறந்தவர். ஏறத்தாழ 37 ஆண்டுகள் அஞ்சல் துறையில் பணியாற்றியவர். 1969 முதல்கவிதைகளை இயற்றத் தொடங்கிய பின்னர், சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, வாழ்க்கைவரலாறு, தத்துவம், சிறுவர் இலக்கியம், ஆன்மீகம் என்றவாறு படைப்புப் பணி வளர்ச்சிபெற்றது. பொதுவுடைமைக் சித்தாந்தவாதியாக வாழ்ந்த கவிஞர் ஞானன், பின்பு

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

பழுத்தஆன்மீகச் செல்வராகவும், விளங்கியுள்ளார் இசைப்பயிற்சி பெற்றியிருந்த இவருக்கு. பண்கலந்த கவிதைகளைப் படைக்கும் ஞானமும் வாய்த்திருந்தது.

படைப்பாளுமை

படைப்பாளன் தன் மன உணர்வுகளைப் படைப்பில் புலப்படுத்துகிறான். அவன் தன் படைப்பை வாசகனுக்கு கொண்டு செல்ல, சிறந்த புலப்பாட்டு உத்திகளைக் கையாளுகிறான். அவற்றுள் சில அவனுடைய ஆளுமையாகப் பதிவு செய்யப்படுகிறது. அவற்றையெல்லாம் கண்டறிந்து, படைப்பாளனின் ஆளுமைப் பண்புகளைத் தோலுரித்துக்காட்ட வேண்டும். கண்ணதாசன்

"கற்பனைகள் ஆசையோடு குதித்தெழும் போது சுவையான கவிதை பிரசவமாகிறது. எண்ணங்கள் தடையின்றி, இதிலிருந்து இதுவரை என்ற வரம்பின்றிப் பிரவாகம் போல் ஓடும் போது அபூர்வமான முத்துக்கள் சிதறுகின்றன"[1]என்பார். அந்த முத்துக்கள் உருவம் பெறும் போது புதிய சொற்களாக வடிவெடுக்கின்றன.

படைப்பு முயற்சிகள் இயற்கையிலேயே படைப்பாளரின் வாழ்க்கையில் காணப்பட்டாலும்கூட அம்முயற்சிகள் உருப்பெறுவதற்குச் சில காரணிகளும் அடிப்படையாக அமைகின்றன. படைப்பாளனின் "கலையுள்ளம் பண்பட்டு, செம்மாந்த நிலை அடைவதற்குக் கலைஞனின் கல்வியறிவு, பட்டறிவு, புறச்சூழல் பாதிப்புகள், அவன் தன் சமுதாயப் பார்வையின் நீள அகல ஆழங்கள் போன்ற காரணிகளும் துணை செய்கின்றன"[2] என்பர். எனவே படைப்பாளரின் வாழ்க்கையில் இயற்கையில் அமைந்த படைப்புக்கலை இக்காரணிகளின் பாதிப்பால் மேலும் வலுப்பெற்று படைப்பு உருவாக்கம் பெறுகின்றது. இவ்விதம் உருவாகும் படைப்புகளே வெற்றியும் அடைகின்றன.

ஆளுமைப் பண்புகள் விளக்கம்

ஒரு மனிதனிடம் காணப்படும் நிலையான நடத்தைக் கூறுகளே ஆளுமைப் பண்புக் கூறுகள் எனப்படும். ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே சில சிறப்புப் பண்புகளைப் பெற்றிருப்பர். இப்பண்புகள் ஆளுமையுடன் பெரிதும் தொடர்புடையனவாகும். மேலும் இப்பண்புகளே ஆளுமையினைப் பிரதிபலித்துப் பொலிவுறச் செய்கின்றன. கவிஞர் ஞானனின் ஆளுமைப் பண்புகளாக சமூக ஈடுபாடு, சமூக அங்கிகாரம் பெற விரும்புதல், இரக்கப்படும் மனப்பாங்கு, பொதுவுடைமை, தன் கருத்தை காரண - காரியத்துடன் எடுத்துரைத்தல், எடுத்ததை நிறைவேற்ற முடியும் என்ற தன்னம்பிக்கை, தன்முனைப்புடன் செயலாற்றும் திறன், நகைச்சுவையுடன் சமூக அவலங்களை எடுத்துரைக்கும் அங்கதப் போக்கு போன்றவற்றை ஞானனின் ஆளுமை வளர்ச்சி படிநிலைகளிலிருந்து உய்த்துணர்ந்த ஆளுமைப் பண்புகளாகக் கூற இடமுள்ளது.

கவிஞர் ஞானனின் படைப்பாளுமைச் சிறப்புக் கூறுகள்

கவிஞர் ஞானன் சாதாரணக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் இள வயதிலிருந்து சமூக ஈடுபாடும் பொது அறிவு நாட்டமும் அவர் மனத்தி ல் நிரம்பியிருந்தன. இத்தன்மைகள் நல்ல சமூகச் சூழலில் இவரது ஆளுமைத் திறன்களை வளர்க்கத் துணைபுரிந்தன.

1. **மொழியாளுமை: பேச்சுவழக்கும் இலக்கியமும்**
2. **மொழித்திறன் (சொல்லாட்சி, இலக்கண அறிவு)**
3. **மரபுத் தொடர்ச்சி (சங்க இலக்கியம், பக்தி இலக்கியம்)**
4. **படைப்பு உத்திகள் (நகைச்சுவை, திரையிசைத் தாக்கம்)**
5. **மார்க்சியச் சிந்தனை**
6. தலைப்புகளில் தனித்தன்மை
7. புலப்பாட்டு உத்தியின் பயன்பாடு

போன்றவற்றை கவிஞர் ஞானனின் ஆளுமை வளர்ச்சி படிநிலைகளிலிருந்து உய்த்துணர்ந்த ஆளுமைச் சிறப்புக் கூறுகளாகக் கூற முடிகின்றது. கவிஞர் ஞானனின் செயல்பாட்டுத் தன்மைகளை எல்லை கடந்த தேவைகள் என்ற நிலையில் வைத்துப் பார்க்கலாம்.

மொழியாளுமை (Language Personality / Language Proficiency)

ஒரு மொழியைத் துல்லியமாகவும், ஆழமாகவும், ஆளுமையோடும் கையாளும் திறனைக் குறிப்பது மொழியாளுமையாகும். **மொழியாளுமை** என்பது வெறும் இலக்கணப் பிழையின்றிப் பேசுவதோ எழுதுவதோ மட்டுமல்ல. ஒரு மொழியின் சொற்களஞ்சியம், மரபுத்தொடர்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் ஆகியவற்றைச் சூழலுக்கு ஏற்ப ஆளுமையுடன் பயன்படுத்தி, கேட்பவரையோ அல்லது படிப்பவரையோ தன்வயப்படுத்தும் ஆற்றலாகும். மொழியின் மீதுள்ள ஆளுமை (Command over the language) இது பேச்சுத்திறன், எழுத்துத்திறன், வாசிப்புத்திறன், மற்றும் புரிதல் திறன் ஆகிய நான்கையும் உள்ளடக்கியது. **பேச்சுக்கலைக்குச்** சான்றாக, அறிஞர் அண்ணா மற்றும் கலைஞர் மு.கருணாநிதி ஆகியோரின் மேடைப் பேச்சுகள். அடுக்குமொழி மற்றும் இலக்கிய நயத்துடன் அவர்கள் பேசியபோது, சாதாரண மக்களும் அதைக் கேட்டு ஈர்க்கப்பட்டனர். இதுவே சிறந்த மொழியாளுமைக்குச் சான்றாகும். **எழுத்துக் கலைக்குச் சான்றாக** திருக்குறளில் திருவள்ளுவர் கையாண்டுள்ள ஆழமான சொல்லாட்சித்திறன்களைக் கூறலாம்.

மொழியாளுமைத் திறன்

ஒரு படைப்பாளியின் படைப்பாளுமை (Creative Personality) என்பது அவர்தம் அகவயமாகத் தோன்றும் சிந்தனைகளைச் சார்ந்ததெனில், அச்சிந்தனைக்கு வடிவம் தரும் புறவயக் கருவியாகத் திகழ்வது மொழியாளுமையாகும் (Language Proficiency). கவிஞர் ஞானனின் படைப்பாளுமையின் மிகமுக்கியமான தனித்துவ அம்சம் யாதெனில், அடித்தட்டு மக்களின் இயல்பான வட்டார வழக்கை (Regional Dialect) எவ்விதச் சிதைவுமின்றி இலக்கியத் தரத்திற்கு உயர்த்தியதே ஆகும். நாம் அன்றாடம் கடந்து செல்லும் எளிய செய்திகளையும், புதுப்பொருளில், புதியதொரு பார்வையில் (New Perspective) வாசகனுக்குத் தருவதாகும்.

மொழியாளுமை - கோட்பாட்டு விளக்கம் (Theoretical Definition)

ஒரு கவிஞன் தன் படைப்பில் சொற்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றை அழகியல் நயத்துடனும், தெளிவோடும், சூழலுக்குப் பொருத்தமாகவும் கையாளுவதே மொழியாளுமை

எனப்படும். இது இலக்கியப் படைப்பு மற்றும் மேடைப் பேச்சு ஆகிய இரண்டிற்கும் இன்றியமையாத அடித்தளமாகும். படைப்பாளி தான் வெளியிட விரும்பும் கருத்துகளையும், உணர்ச்சி அனுபவங்களையும் (Emotional Experiences) தன் உள்ளத்தில் தோன்றியவாறு உரைத்து, அவற்றின் இயல்புகள் மாறாமல் படிப்போரின் மனதில் அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஒருவர் இலக்கியத்தை ஆழமாக படித்து, அதில் உள்ள **கருத்து, கலை, மொழி**, மற்றும் **அழகியல்** அம்சங்களை நுணுக்கமாக உணர்ந்து, அதனை **தரமான விமர்சன அறிவுடன்** மதிப்பீடு செய்யும் அறிவுத்திறன் ஆகும். இதனை பரிதிமாற் கலைஞர்,

"இலக்கியங்களைப் புரிந்து கொள்ளும் திறமையும், அவற்றின் அழகியல் அமைப்புகளைக் கலைவாண்மையுடனும், விமர்சன ஞானத்துடனும் மதிப்பீடு செய்யும் திறனே மொழி ஆளுமை."[7] என்று வரையறுத்துள்ளார்.

இதன் மூலம், இலக்கியத்தை ஆழமாகக் கற்று, அதில் உள்ள கருத்து, கலை, மற்றும் அழகியல் கூறுகளை நுணுக்கமாக உணர்ந்து, தரமான விமர்சன நோக்குடன் (Critical Evaluation) மதிப்பிடும் அறிவுத்திறனே மொழியாளுமை என்பது தெளிவாகிறது.

வட்டார வழக்கும் மொழிப் பாதுகாப்பும் (Dialect and Language Preservation)

கவிஞர் ஞானன் எளிய சொற்களின் வழியே நுட்பமான வாழ்வியல் விழுமியங்களைத் தன் படைப்புகளில் கையாண்டுள்ளார். அவரது மொழியாளுமை மற்றும் மொழிப் பாதுகாப்பு முயற்சி ஆகியவற்றை மூன்று நிலைகளில் பகுக்கலாம்.

- **கவிஞரின் படைப்புத்திறனைத் தரப்படுத்தல் (Validation of Creative Skill):** எளிய மக்களின் மொழியையும் உன்னதமான இலக்கிய வடிவாக்க முடியும் என்பதை நிறுவுதல்.
- **சொற்களின் வேர்த் தேடல் (Etymological Exploration):** பேச்சுவழக்கில் உள்ள சொற்களின் வரலாற்றுப் பின்னணியையும் இலக்கண வேரையும் தோண்டி உண்மையை வெளிப்படுத்துதல்.
- **மொழிப் பாதுகாப்பு (Preservation of Language):** பிறமொழிச் சொற்களின் ஆதிக்கத்திலிருந்து தூய தமிழ்ச் சொற்களைப் பேணிக் காத்தல்.

எடுத்துக்காட்டாக, நகர்ப்புறச் சூழலில் புழங்கும் சென்னைத் தமிழின் பிறமொழிச் சொற்களின் தாக்கத்தைக் காட்டிலும், தென்கோடித் தமிழகத்தின் (நெல்லை/குமரி மாவட்டங்கள்) தூய தமிழ்ச் சொற்களான **'ஏனம்'** (பாத்திரம்), **'போதி'** (திண்ணை/மரத்தடி) போன்றவற்றைப் படைப்புகளில் கையாண்டுள்ளதே அவர்தம் ஆழ்ந்த மொழிப்பற்றின் வெளிப்பாடாகும்.

வாழ்வியல் பதிவும் இலக்கிய ஒப்பீடும் (Socio-Cultural Reflection and Literary Parallel)

கிராமத்து மக்களின் எதார்த்தமான வாழ்வியலைத் தமது **'நெஞ்ச ஊஞ்சல்'** என்னும் கட்டுரையில் கவிஞர் ஞானன் மிக நேர்த்தியாகப் புலப்படுத்தியுள்ளார். உறவுகளுக்குள் ஏற்படும்

ஊடலையும், கிராமத்து மனிதர்களின் எளிமையான உரையாடல் பண்பையும் 'வந்தியா' என்னும் தலைப்பில் பதிவு செய்துள்ளார்.

"நான் அவள் வீட்டுக்குப் போக மாட்டேன் அங்க போனா வந்தியான்னு கூட கேட்க மாட்டா, மூஞ்சியை திருப்பிக்குவா. மீறிப்போனா மானங்கெட்டதனம்லா..." (நெ.ஊஞ்சல்,பக். 69)

இதற்குக் கேட்கும் மற்றொரு பெண் எதிர்வினையாற்றி ஒத்தூதும் பகுதி, கிராமத்துப் பெண்களின் உடல்மொழியையும் (Body Language) பேச்சு வழக்கையும் அச்சு அசலாகப் பிரதிபலிக்கிறது.

"அப்படியா, அவ்வளோ ராங்கிக்காரியாவா இருக்கா என்ன பொம்பள அவ. வந்தியான்னு கூட கேட்கலைன்னா... கொடுக்க வேண்டாம் வாங்க வேண்டாம் வாயத் தொறந்து வந்தியான்னு கேட்டா என்ன வாய்முத்து உதிர்ந்தா போயிரும்..." (நெ.ஊஞ்சல்,பக். 69)

இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள **'வந்தியா'** என்னும் பேச்சுவழக்குச் சொல், வெறும் தற்காலக் கிராமியச் சொல் அன்று; அது சங்க இலக்கிய மரபின் தொடர்ச்சி என்பதை ஆய்வின் வழி அறிய முடிகிறது.

தொல்காப்பிய இலக்கணப் பொருத்தம் (Grammatical Conformity to Tholkappiyam)

கவிஞர் ஞானன் பயன்படுத்திய 'வந்தியா' என்ற சொல், தொல்காப்பியச் சூத்திரத்தின்படி அமைந்த வடிவமே என்பதை இலக்கணப் பகுப்பாய்வு வழி நிறுவ முடிகின்றது.

தொல்காப்பியத்தில்

"செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்,
செய்யென் கிளவி ஆகிட னுடைத்தே"[9]

என்ற நூற்பா குறிப்பிடுகிறது. மேற்கூறிய கருத்தின் அடிப்படையில் செய்யாய் என்னும் வாய்ப்பாட்டு முன்னிலை வினைச் சொல் செய் என நிற்றலும் உண்டு. அருளாய் - அருள் - பாராய் - பார் (ஆய் ஈறு கெட்டு நிற்கின்றது) செய்யாயென்னும் வாய்ப்பாட்டாகிய முன்னிலை முற்றுச் சொல் ஆயென்னும் ஈறு கெடச் செய்யென்னும் சொல்லாய் நிற்றலுடைத்து என்றவாறு, செய்யாய் என்பது 'செய்'யென விகுதிகெட்டு நிற்கும் என்ற விதியின் படி கிராமத்தில் வீடு தவறாமல் வழங்கும் வந்தியா என்ற சொல் வந்தீயா என்பதன் திரிபு என்பதும்' இச்சொல் தொல்காப்பியச் சூத்திரப்படி அமைந்துள்ளது.

இவ்விதிப்படியே, சங்க இலக்கியத்தில் பயின்றுவந்த **'வந்தீயாய்'** என்ற சொல், காலப்போக்கில் பேச்சுவழக்கில் ஈறு கெட்டு, மருவி, கிராமத்து மக்களின் நாவில் **'வந்தியா'** (வந்துவிட்டாயா / வாராய்) என உருமாறி வழங்கப்பட்டு வருகிறது.

சங்க இலக்கியச் சான்று

இதே போன்றதொரு சூழல் சங்க இலக்கியமான கலித்தொகையிலும் பயின்று வந்துள்ளது. தோழி தலைவனிடம் சென்று தூது உரைக்கும் பகுதியில் இச்சொல் இடம்பெறுள்ளதை,

"வாரி நெறிப்பட்டு இரும்புறம் தா ஆழ்ந்த
ஓரிப் புதல்வன் அழுதனன் என்பவோ

புதுவமலர் தைஇ எமர்என் பெயரால்
வதுவை அயர்வாரைக் கண்டும் மதியறியா
ஏழையை என்று அகலநக்கு
வந்தீயாய் நீ தோழி! அவனுழைச் சென்று..." (கலித்தொகை)

என்ற வரிகள் விளக்குகின்றன.

பெற்றோர் தலைவிக்கு வேறொருவருடன் திருமணம் (வதுவை) செய்ய முற்படும்போது, தோழியைத் தலைவனிடம் சென்று நிலைமையை உரைக்குமாறு அறிவுறுத்தும் இப்பகுதியில் **'வந்தீயாய்'** என்ற சொல் **'வாராய்' (வருவாயாக)** என்ற பொருளில் கையாடப்பட்டுள்ளது.

மக்களின் பேச்சுவழக்குச் சொற்களை வெறும் கொச்சைச் சொற்களாகக் கருதாமல், அவற்றின் பின்னுள்ள தொல்காப்பிய இலக்கண விதிகளையும், கலித்தொகை போன்ற சங்க இலக்கிய வேர்களையும் அடையாளப்படுத்துவதே ஒரு சிறந்த திறனாய்வாளரின் கடமையாகும். அவ்வகையில், சங்க காலத்து 'வந்தீயாய்' என்னும் சொல்லை இன்றைய 'வந்தியா'வோடு இணைத்துக் காட்டியதன் மூலம், கவிஞர் ஞானன் ஒரு சிறந்த படைப்பாளி மட்டுமல்லாமல், செம்மொழித் தமிழின் மரபுச் சங்கிலி அறுந்துவிடாமல் பாதுகாக்கும் **உன்னத மொழியாளுமை மிக்கவர்** என்பது புலனாகின்றது.

இலக்கணச்சுவை

இறைவன் மீது இடையறாது எல்லையற்ற பூரணமான அன்பைச் செலுத்திடில், அவன் தவறாது திருவருள் புரிவான் என்று பாடியதுடன், மௌனத்தைக் கடைப்பிடித்து, இறையருள் பெற்ற தாயுமான சுவாமிகள் எழுதிய பராபரக் கண்ணிக்கு ஒரு தனித்துவம் உண்டு. சொற்செட்டு மிகுந்த அந்தக் கண்ணிகள், செதுக்கிச் சேர்த்த சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட வெள்ளடிகளால் ஆனவை. இவ்வாறான கண்ணி ஒன்றிலும் 'போதி' என்ற சொல் இடம் பெற்றுள்ளதை,

"ஆதிகா லத்தில்எனை ஆண்டவனையே இப்பால்நீ
போதியெனில் எங்கேநான் போவேன் பராபரமே" (போதி.பக்.46)

என்னும் அடிகள் வழியாக அறியலாம். இதில் அடியேனை பழங்காலத்தில் தடுத்தாண்டு கொண்டருளிய நீ எளியேனை ஆண்டு கொண்டருளினை. இப்போது ஏழை எனை நீ போவாயாக என்றருளினால்நான் எங்கே போவதாம்.....? என்பதில் போதி என்ற சொல் இடம்பிடித்துள்ளது.

இச்சொல்லைப் போன்று வாதி என்ற சொல் தற்கால வழக்கில் இல்லை. நட வா என வினைப் பகுதிகளுடன் தொழிற் பெயருக்குரிய விகுதிகள் சேர்ந்து வருவது விகுதி பெற்ற தொழிற் பெயர் ஆகும்.

"தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு. உ, தி, சி, வி, இ, உள், காடு, பாடு, அணம், மதி, வரவு, ஆனை, மை, து என்பவை தொழிற்பெயர் விகுதிகளாகும்" [10] என்று புலவர் குழந்தை குறிப்பிட்டுள்ளார்.

இங்கு கவிஞர் ஞானன் மற என்ற பகுதியும் தி என்ற விகுதியும் சேர்ந்து மறதி என்ற சொல்லாகிறது என்று விளக்கி கூறியுள்ளார். போ என்ற பகுதியும் தி என்ற விகுதியும் சேர்ந்து 'போதி' என்ற சொல்லாகிறது. இதனை சென்னைப்பகுதியில் வழக்கிலிருக்கும்

"பேமானி, இஸ்துக்கினு போன்ற சொற்களைப் பற்றி சிந்திப்பதை விட தென்கோடியில் புழக்கத்தில் உள்ள ஏனம், போதி போன்ற சொற்களைக் குறித்து அசை போடுதல், சுகமான சங்கதிதான்" (நெஞ்ச ஊஞ்சல்,ப.47) என்று ஞானன் இலக்கணச் சுவையோடு விளக்கியுள்ளார். இதன்வழி அஞ்சலகப் பணியிலிருந்தாலும் தமிழில் அவருக்கிருந்த இலக்கணப்புலமையை காணமுடிகிறது.

பேச்சுவழக்குச் சொற்கள்

தற்போது நெல்லைமாவட்டக் கிராமத்து முதியவர்கள் இட்டிசைஞ்சி சொல்லைப் பயன்படுத்துகின்றனர். சான்றாக,

"ஏ! ஆத்தா அவன் வெறும் கஞ்சப்பிசினாறி. பெயலப்பா அவனைத் தொட்டுட்டு வைக்கப்படப்பைத் ;தொட்டா தீப்பிடிக்கும். இட்டிசைஞ்சி இருக்கமாட்டான்"(நெஞ்ச ஊஞ்சல்,ப.84)

என்ற சொற்றொடர்கள் அமைந்துள்ளன. இதில் இடம்பெற்றுள்ள 'இட்டிசைஞ்சி' என்பது யாருக்கு எதுவும் கொடுக்காமல் வாழும் கஞ்சத்தனத்தைக் கொண்டவன் என்ற பொருள் தருகிறது. இச்சொல் இட்டு + இசைந்து என்னும் இரு கூட்டுச் சொற்களோடு இணைந்து 'இட்டிசைஞ்சி' என்ற சொல் உருவாகி மரபுத் தொடராகியுள்ளதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். இக்கருத்தை,

"கட்டுரையில் தம் கைத்துள்போழ்தே
இட்டிசை கொண்டறன் எய்த முயன்றோர்
உள்தெறு வெம்பகை யாவது உலோபம்
விட்டிடல் என்று விலக்கினர் தாமே". [11] (பாலகாண்டம், பா.458)

என்னும் கம்பராமாயணப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

இதில் திருமால் தன் வாமன அவதாரத்தில் மாவலியிடம் மூன்றடி மண் கேட்க, மாவலி ஒத்துக்கொள்கிறான். அவனது குருவும் அமைச்சருமான சுக்கிராச்சாரியார் என்னிடம் யாசகம் கேட்டு வந்திருப்பவர் உண்மையான அந்தணர் இல்லை என்றும் திருமாலே உருமாறி வந்துள்ளார் என்றும் குறிப்பிட்டு எனவே வரம் கொடுக்காதே; சூதினுள் மாட்டிக் கொள்ளாதே' என்றும் கூறி தடுக்க முயல்கிறார். ஆனால் மாவலி வாக்கு தந்தது தந்ததுதான்; மறுப்பதற்கில்லை என்றும் அப்படியே வந்தவன் திருமாலே என்றாலும் கேட்டவன் கை கீழிருக்க கொடுப்பவன் கை மேலிருக்குமன்றோ. இது பெரும் பாக்கியம் அல்லவா? ஒருவன் கொடுக்கும் போது மற்றொருவன்

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

தடுக்கும் செயல்புரிதல் நன்றன்று என்று சொல்லி மறுத்து விடுகிறான். இங்கு இட்டிசை எனும் சொல்லிற்கு,

தானம் செய்து அடையும் தருமத்தின் பயன் என்ற நீண்ட பொருளைத் தருகிறது. ‘இசை’ என்பது பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வருகிறது. இதன் வழி இசை என்பது புகழ், இசைதல் இன்னொலி, மொழிதல் போன்ற பல பொருள்களில் வந்துள்ளதை காணமுடிகிறது.

இலக்கணப்புலமை என்பது ஒருவரின் இலக்கண அறிவை குறிப்பதாகும். கவிதையில் சொல்லை ஆழமாக உணர்ந்த ஞானத்தின் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. இலக்கணப்புலமை பெற்றோர் கவிதை படைத்தல், கவிநயம் கொண்டு செயலாற்ற முடியும். இக்கருத்தை,

"இகரமொடு அகரம் இயல்பாக வந்து
முகருமொடு நெகரும் முற்றிறந்தோர் சொல்."[12]

என்ற தொல்காப்பியரின் நூற்பா உணர்த்தியுள்ளது.

"இலக்கணப்புலவன் எழுத்தொலி நூற்கனிதன்
நவிற்றல் வல்லான் நவிலொலி யானை."[13]

என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியங்களில் ‘போ‘ என்ற சொல் போதி' என்று 'தி' இறுதி பெற்று வரும் இச்சொற்கள் சங்க காலத்தில் பழக்கத்தில் இருந்தன என்பதற்கு,

வாழ்தி (வாழ்கின்றாள்) [14]
அருளிதி (அருள்வாய்) [15]

என்பவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பின் வழக்கொழிந்த இச்சொற்களை கம்பர் இயற்றிய இலக்கியங்களைப் பயிலும் போது தனக்கு நினைவிற்கு வந்ததாகக் கூறும் கவிஞரின் கருத்தினை,

"மெல்லியல் ஒருத்திதான் விரும்பும் சேடியைப்
புல்லிய கையினள் போதி தூதுஎனச்
சொல்லுவான் உறும்உற நாணிற் சொல்லலள்
எல்லையில் பொழுதெல்லாம் இருந்து விம்மினாள்"[16]

என்ற கம்பராமாயணப் பாடல் வழியாக அறியமுடிகின்றது. இப்பாடலில் மென்மைத் தன்மைமிக்க இயல்புடைய தலைவி. தான் விரும்பும் ஒரு தோழியை அழைத்து அவள் கரம் பற்றி தன் நாயகன்பால் தூது செல்வதற்குப் 'போ' என உரைக்கும் நிலையில் போதி என்ற சொல்லைக் கம்பர் பயன்படுத்தியுள்ளதைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

கம்பராமாயணத்தில் இராமன் சீதையை மணம் முடித்தபின் அனைவரும் அயோத்திக்குத் திரும்பி வரும் காட்சியில் தசரதன், பரதனிடம்

'ஒளிதிகழும் அணிகளை உடையோனே, நீர்வளம் மிகுந்த கேகய நாட்டில் நின் மூதாதையர் நின்னைக் காண விழைகின்றனர். ஆதலால் நீ சென்று வருக' என்கிறார். இச்சிந்தனை,

"ஆணை நினது மூதாதை ஐயநின்
காணிய விழைவதோர் கருத்தன் ஆதலால்
கேணியில் வளைமுரல் கேயம் புக
பூனொளிர் மார்பநீ போதி' என்றனன்."

(நெஞ்ச ஊஞ்சல் ப.44)

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இங்கு போதி என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ளதை ஆராய்ந்து அறியமுடிகிறது.

அகராதி தரும் விளக்கம்

போதி என்பதற்கு அரச மரம், அறிவு, போதி என்னேவேல் என்று கதிரை வேற்பிள்ளை அகராதி விளக்கம் கொடுக்கின்றது. வினைமுற்று என்ற விளக்கத்தை வீரமாமுனிவர் சதுர் அகராதி குறிப்பிட்டுள்ளது. இவற்றின் அடிப்படையில் 'ஏவல்' என்ற பொருளில் போதி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

போதி என்னும் சொல் திருஞானசம்பந்தரின் தேவாரத்தில் மயிலாப்பூர் பதிகத்தில் பத்து இடங்களில் வந்துள்ளது. மயிலையில், சிவநேசச்செட்டியார் எனும் அன்பர் மகளாகிய பூம்பாவை என்பவள் அரவு தீண்டி இறந்தாள். அவளுடைய உடலை எரித்து, எலும்பையும் சாம்பலையும் ஒரு குடத்தில் வைத்திருந்தனர். அப்பொழுது அங்கு வந்த ஞானசம்பந்தரிடம் இந்த விபரத்தைக் கூறி, குடத்தைக் காட்டினார், அவர் ஈசனை நோக்கிப்பாடினார். அங்கு பூம்பாவை உயிர்பெற்றாள் என்பது புராண வரலாறு. இப்புராண வரலாற்றைப் பாடிய சம்பந்தர்,

**"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரம்அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்"**[17].

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இங்கு 'போதியோ பூம்பாவாய்' என்ற சொல்லாட்சி பயன்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

- **வாய்மொழி மரபு:** 'வந்தியா', 'இட்டிசைஞ்சி' போன்ற வட்டாரச் சொற்களை வெறும் பேச்சுவழக்காக மட்டும் பயன்படுத்தாமல், அவற்றைத் தொல்காப்பிய இலக்கண விதிகளுடன் (எ.கா: முன்னிலை வினைமுற்று - செய்யாய்) பொருத்தி ஆராய்ந்திருப்பது அவரது மொழியியல் புலமையை உறுதிப்படுத்துகிறது.

- **சொல்லாட்சி:** 'போதி' போன்ற பழந்தமிழ்ச் சொற்களைக் கம்பர் மற்றும் திருஞானசம்பந்தர் காலத்து இலக்கியத் தரவுகளுடன் ஒப்பீடு செய்து, அதன் பொருண்மையை விளக்கிய விதம், ஞானனின் படைப்புத் திறனுக்குச் சான்றாகும்.

முடிவுரை

மொழி என்பது வெறும் தகவல் பரிமாற்றக் கருவி மட்டுமல்ல; அது அந்தந்தக் காலத்தில் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் தன்னுள் பிரதிபலிக்கும் கண்ணாடி. கவிதையில் கையாளப்படும் தேர்ந்த சொற்கள் மொழியின் ஆற்றலை மெருகேற்றுகின்றன. 'தி' இறுதி பெற்று முடியும் சொற்கள், ஓம்பா ஈகை, இட்டிசைஞ்சி போன்ற சொற்கள் கவிஞரின் சொல்லாட்சித்திறனுக்கு சான்றாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

சான்றெண் விளக்கம்

1. கண்ணதாசன், *என் வாழ்க்கை என் பாடல்கள்,* ப.45.
2. இளங்கீரன், *கலாம் இதழ்,* தொகுதி VII, பக். 38-44.
3. Durkheim, E. (1895). *The Rules of Sociological Method*,Page.46
4. மீனாட்சி முருகரத்னம், இலக்கிய வரலாறு,தொகுதி ஒன்று, ப.460.
5. ஏ. சுந்தரராஜன், திராவிட இயக்கக் கொள்கைகள், ப.201
6. கண்ணகி, கவிஞர் ஞானன்,ப.10
7. பரிதிமாற்கலைஞர், இலக்கிய இதழ்,ப.69.
8. கலித்தொகை - முல்லைக்கலி பா. 114
9. தொல்காப்பியர், தொல்காப்பியம்,சொல்லதிகாரம், நூற்பா.16
10. வள்ளுவர் தமிழ் இலக்கணம்,ப.294
11. பாலகாண்டம்,பா. எண் - 458
12. தொல்காப்பியர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நூற்.8
13. சேக்கிழார், பெரியபுராணம்,ப.69
14. கலித்தொகையின் முல்லைக்கலி - பா. எண், 103
15. ஐங்குறுநூறு (5) (275) வது பாடல்
16. கம்பராமாயணம்,பாலகாண்டம், புனல் விளையாட்டுப் படலம்,ப.60

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

03. ஐங்குறுநூற்று மருதத்திணையில் பெண்ணியம்

முனைவர் **ச.மீனாட்சி,**
உதவிப்பேராசிரியர்,
முதுகலைத் தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.21679635.

Abstract :

Sangam literature plays a pivotal role in illuminating the status of women in society from the Sangam era to the present day. The Sangam period marked a societal transition where tribal life gave way to the emergence and consolidation of statehood. This societal shift dismantled the matrilineal structure and established a patrilineal one. In this patrilineal society, women were denied rights to governance and property ownership. To subjugate women, men propagated the doctrine of chastity. Feminism asserts the moral stance that women should neither be suppressed nor relegated to a subordinate position. This research paper examines the patriarchal nature of the fertile *Marutham* landscape, where women are subjugated and controlled in the name of tradition.

Keywords : Sangam literature – Feminism – Marudham – Sangam Era.

முன்னுரை

சங்க காலம் முதல் தற்காலம் வரை சமூகத்தில் பெண்களின் நிலைப்பாட்டினை வெளிக்கொணர்வதில் சங்க இலக்கியங்கள் முதன்மை வகிக்கின்றன. சங்ககாலமானது இனக்குழு வாழ்க்கையை மறைந்து அரசுடைமை தோன்றி நிலைபெற்றுக் கொண்டிருந்த சமுதாய அமைப்பாகும். இச்சமுதாயம் தாய் வழிச் சமூகத்தைச் சிதைத்து தந்தை வழிச் சமூகத்தை உருவாக்கியது. தந்தை வழிச் சமுதாயத்தில் பெண்களின் ஆட்சி உரிமை, சொத்துரிமை போன்றவை மறுக்கப்பட்டன. இந்நிலையில் பெண்களை அமுக்க ஆடவர்கள் கற்புக்கொள்கையை எடுத்தியம்பத் தொடங்கினர். எனவே பெண்ணினை அடக்கி வைத்தல் கூடாது. சார்பு நிலைப்படுத்தக் கூடாது என்ற தார்மீகக் கூற்றினை பெண்ணியம் வெளிப்படுத்துகின்றது. வளம் நிறைந்த மருதத்திணையில் பெண்ணானவள் மரபு என்ற பெயரில் அமுக்கி ஆளப்படுகின்ற ஆணாதிக்கத் தன்மையினை ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

பெண்ணியம்

பெண்ணியம் (Feminism) என்பது உலகளாவியது. பெண்களின் சமத்துவத்தையும், முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாகும். 1889 வரை உமனிசம் என்ற சொல் தான் பெண்களின் உரிமைகளையும், பிரச்சனைகளையும் போராட்டங்களையும் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது. 1894 இல் பெமினிசம் (Feminism) என்ற சொல் அறிமுகமாகியது. பெமினிசம் (Feminism) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "Femina" என்ற இலத்தீன் சொல்லே மூலச்சொல்லாகும். சமூகவியல் நோக்கில் பெமினிசம் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. கல்வியாளர்கள் பெண்ணியம் என்றே இதனைக் குறிப்பிடுகின்றனர். மேலைநாட்டுப் பெண்ணியவாதி சார்லட்பன்ட் என்பவர் தன் நூலில்,

"பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும்."[1] என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார். பெண்ணின் உரிமையை எடுத்தாளுவதற்கே இச்சொல் பயன்படுத்தப்படுகின்றது. ஆண்களை எதிர்ப்பது அன்று.

மருதத்திணையில் பெண்ணியம்

மருதத்திணையானது நிலவளம் மற்றும் நீர்வளம் காரணமாக செல்வச் செழிப்புடன் விளங்கும் ஒரு திணையாகும். மருதத்தின் உரிப்பொருள் ஊடல். ஆணின் செயல் பரத்தமை, பெண்ணின் எதிர்ச்சொல் ஊடல். மருதத்திணையினைப் பற்றி வ.சுப.மாணிக்கம் "மருதத்திணையின் உரிப்பொருளாவது ஊடல். இவ்வூடல் தலைவனது புறவொழுக்கம் காரணமாக வருவது என்று பலர் கொள்ளுவர். ஊடலுக்கு இன்றியமையாத முன்னொழுக்கம் ஊடல்."[2] என்று விளக்கம் தருகின்றார். இத்திணையின் உரிப்பொருள் "கற்பு" என்பது ஆணுக்கில்லை என்பதனை உணர்த்துகின்றது. ஆணாதிக்கச் சமுதாயம் ஒருவனுக்கு எத்தனைப் பெண்களை வேண்டுமாயினும் அனுபவிக்கும் சலுகையை வழங்குகிறது. இதனை மருத ஒழுக்கம் என்று சங்க இலக்கியங்கள் அனுமதிக்கிறது. இவ்வொழுக்கத்தால் பெண்கள் பாதிக்கப்படுகின்ற முறையினை,

- ❖ தன்னுடன் இல்லறத்தை மேற்கொண்ட கணவன் அயற் பெண்டிருடன் உறவு கொண்ட போது அவனைக் கடுமையாகக் கண்டித்து மாற்றவோ (அ) மாறாத நிலையில் புறக்கணிக்கவோ உரிமையற்ற நிலை.
- ❖ ஆணின் சபலங்களுக்காக மட்டுமே வாழ்கின்ற உரிமையற்ற பெண்களின் பரத்தமை நிலை.

என்ற நிலைகளில் சுட்டலாம். இவ்விரு நிலையும் ஆணின் சுயநலங்கருதியே நிகழ்கின்றன என்பதனை மருதத்திணையின் உரிப்பொருள் வெளிக்கொணர்கின்றது.

கற்பு நெறியால் பெண்ணை அடிமைப்படுத்துதல்

'கற்பு நிலையென்று சொல்ல வந்தால், இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்.' என்று ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பினை பொதுநிலையாக வைத்தார் மகாகவி. அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகியன பெண்ணுக்கு உரியவை என்ற போதிலும் பாரதி 'அச்சமும் நாணமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்று பெண்மையை எள்ளி நகையாடியவர்களை வன்மையாகக் கண்டித்தார். இது ஒரு புறமிருக்க காலம் காலமாக பெண்களுக்கு கற்பு நெறியானது வலியுறுத்தப்பட்டு வருகின்றன என்று கூறின் மிகையாகாது. தலைவன் பரத்தையர் பலருடன் பழகிய போதும் 'பாயல் இன் துணை' ஆக தலைவியிருக்க வேண்டும் என்பதனை,

"அணி நடை எருமை ஆடிய அள்ளல்
மணிநிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்
கழனி ஊரன் மகள், இவள்
பழன ஊரன் பாயல்இன் துணையே" **(ஐங்குறுநூறு : 96)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. கற்பு என்ற பெயரில் பெண்கள் அடிமைப்படுத்தப்படுகின்ற முறையினையும் தலைவன் எத்தகைய தவறுகள் செய்திருந்த போதிலும் 'பாயல்இன் துணை' ஆக தலைவியிருக்க வேண்டுமென ஆண் சமூகம் வலியுறுத்துகின்ற முறையினையும் இப்பாடல் பறை சாற்றுகின்றது.

ஆணாதிக்கத்தை வெளிக்கொணரல்

அக இலக்கியங்களில் தலைவன் அன்பின் ஐந்திணைகளுக்கு ஏற்ப தன் காதலை வெளிப்படுத்துகின்றான். தலைவன் தலைவியை ஒழுகுதல் வேண்டும் என்பதனை வள்ளுவர்,

"தெய்வந் தொழாஅன் கொழுநற் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"[3]

என்ற குறளில் பெருமிதமாக சுட்டுகின்றார். இருப்பினும் பெண் தன் வாழ்வில் பெருமையும் சிறப்பும் ஏற்படும் வண்ணம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற பண்பினை மறைமுகமாக வெளிப்படுத்துகின்ற முறையினை அறிய முடிகின்றது. இதே போல் ஐங்குறுநூற்றில் தலைவன் தலைவியை ஒழுகுகின்றான் என்பதை உணர்ந்த காதற் பரத்தை, தலைவியின் தோழிக்கு தலைவனின் இயல்பினை வெளிப்படுத்துகின்ற பாங்கினை,

"அம்ம வாழி பாண எவ்வைக்கு
எவன்? பெரிதளிக்கும் என்ப பழனத்து
வண்டு தாதூதும் ஊரன்
பெண்டென விரும்பின்று, அவள் தன் பண்பே" **(ஐங்குறுநூறு : 89)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. அதாவது காதற் பரத்தை, தலைவன் தன்னை விட்டு வந்து விட்டான் என்று எண்ண வேண்டாம், தலைவன் நின் தலைவியை ஒழுகுவதற்கான காரணம், 'பெண்டென விரும்பின்று, அவள் தன் பண்பே' தன் மனைவி என்ற பண்புடைமையே காரணம் ஆகும் என்கிறாள். பண்புடைமை என்பது 'தலைவன் எத்தகைய கொடுமையானவனாக இருப்பினும் அவனை வெறுக்காது கற்புடன் வாழும் தன்மையே ஆகும்' என்று குறிப்பிடுகின்றாள். தலைவன் தனது ஆணாதிக்கத்தால் தேனை உண்ணும் வண்டைப் போல பல மகளிரிடம் இன்பம் துய்ப்பவனாக உள்ளான். மேலும் தன் மனைவி மட்டும் கற்புடன் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பு குணம் உடையவனாகவும் உள்ளான் என்று ஆணின் ஆணாதிக்கத் தன்மையினை உணர முடிகின்றது.

பெண்ணின் மன அழுத்தம்

ஐங்குறுநூற்றில் தலைவனின் பரத்தமை ஒழுக்கமே பெண்ணின் மன அழுத்தத்திற்கு அடிப்படையாகிறது. உணர்ச்சிகளின் கலவையே மனிதர்கள். இன்பத்தில் மகிழ்வதும் துன்பத்தில் கலங்குவதுமே மனிதனின் இயற்கை பண்புகள். இருப்பினும் ஆண்களை விட பெண்களே எளிதில் தன் உணர்வுகளை வெளிகாட்டக் கூடியவர். எண்ணங்கள், நினைவுகள், விருப்பங்கள் என்று பலவற்றை தன் மனதில் அடக்க முயல்வதே நாளடைவில் மனஅழுத்தமாகின்றது. சில குறிப்பிட்ட சூழலில் தன்னை அறியாமலும் புலம்பலாகவும் வெளிப்படுகின்ற மன அழுத்தத்தினை பிராய்டு, "சில

அறிகுறிகள் களவுகள், வாய் தவறி வெளிப்படும் வார்த்தைகள் போன்றவற்றின் வாயிலாக அமுக்கப்பட்ட இரகசிய வேட்கைகள் மீண்டும் திரும்பும்"[4] என்ற முறையில் சுட்டுகின்றார்.

பரத்தையுடன் கூடி பின் தலைவியை பார்க்க வந்த தலைவனைப் பார்த்து, 'நான் குழந்தைப்பேறு அடைந்ததால் பேய் போன்ற விகாரமான உருவத்தைப் பெற்றுள்ளேன். ஆதலால் நீ நறுமணம் நிறைந்த பெண்டிரை நாடிச் செல்க' என்றாள். தன்னை ஒரு பொருட்டாக மதிக்கும் வண்ணம் தலைவன் இல்லாததால், தலைவி மன அழுத்தத்திற்கு ஆட்பட்டு தன்னைத் தானே வெறுக்கின்ற தன்மையினை,

"பழனப் பன்மீன் அருந்த நாரை
கழனிமருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர், நறியர் - நின் பெண்கள்
பேஎய் அணையம் யாம்சேய் பயந்தனமே" **(ஐங்குறுநூறு : 70)**

என்ற பாடலடிகள் நன்கு உணர்த்துகின்றன. பெண் தன்னைத் தானே வெறுக்கும் மனநிலைக்கு ஆண் சமூகம் அவளுடைய சிந்தனையைக் கட்டுப்படுத்தியுள்ளது அல்லது கட்டமைத்துள்ளது என்று கூறின் மிகையாகாது.

மேலும் இப்பாடலில் காலம் காலமாக பரத்தையர் அனுபவிக்கும் கொடுமை பதிவாகியுள்ளது. ஆண் தன் இன்பத்திற்காக பரத்தையை நாடிச் செல்வான். ஆனால் அந்த பரத்தை குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் அக்குழந்தை வாரிசு உரிமை கேட்டு விடும். குழந்தைப் பேறால் பெண்ணுடலில் இயற்கையாக ஏற்படும் மாற்றங்களை ஆண் விரும்பாததால் பரத்தையை குழந்தை பெற்றுக் கொள்ள இந்த ஆண் சமூகம் அனுமதிக்கவில்லை. இந்நிலை தற்காலத்தில் அழகிப் போட்டியில் தேர்ந்தெடுக்கும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையில் ஒன்றாகும்.

பெண்ணை மரபுகளால் அழுத்துதல்

மக்களின் வழி வழி மரபுகளே பண்பாடாகின்றன. மரபு என்பது பழமை அல்லது தொன்மை என்று குறிப்பிடலாம். மரபானது ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறு வேறான விதிமுறைகளை விதிக்கின்றது. பண்பாட்டு அடிப்படையில் மரபினைக் கட்டிக் காக்கும் பொறுப்பு ஆணிடம் தரவில்லை. பெண்களிடம் தான் மரபினைக் கட்டிக் காக்கும் பொறுப்பு இருப்பதாக எழுதப்படாத சட்டங்கள் வலியுறுத்தின. எனவே மரபும் பண்பாடும் ஆண் மேலாதிக்கத்தின் கட்டமைப்பு என்பதனை அறியலாம். இவ்வண்ணமே பெண் ஆனவள் அதிலும் மனைவி ஆனவள் என்றும் ஆணின் இன்பத்தை மட்டுமே எண்ண வேண்டும் என்று மரபு ரீதியாக வளர்க்கப்பட்டுள்ளாள் என்பதனை,

"கரும்பு நடுபாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்பு பசிகளையும் பெரும்புனல் ஊர
புதல்வனை ஈன்ற எம்மேனி
முயங்கண்மோ தெய்ய நின் மார்பு சிதைப்பதுவே" **(ஐங்குறுநூறு : 65)**

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. குழந்தையை ஈன்ற தலைவி தலைவனை நோக்கி, 'முதுமையான என் மேனியை தழுவ வேண்டாம்'. என்றுரைப்பது தன் கணவனின் நறுமணம் மிகுந்த மேனியானது கெடும் என்ற நோக்கில் 'எம் மேனி முயங்கண்மோ' என்கின்றாள். மேலும் தான் குழந்தைப் பேறால் முதுமையையும் உடல் வேறுபாட்டையும் அடைந்ததால் தலைவனைத் தன்னிடம் இன்பம் துய்க்க வேண்டாம் என்றும் சுட்டுகின்றாள். தலைவியின் இத்தகைய மனவுணர்வானது மருதத்திணை தலைவன் தலைவியின் பேறுகால காலத்தின் போது பரத்தையர்களை நாடுகின்ற பண்புடையவன் என்பதனையும் அதே சமயத்தில் தான் மரபினை கட்டிக்காக்கின்ற பெண்ணாகவும் திகழ வேண்டிய கட்டாயத்தில் உள்ள சூழ்நிலையையும் அறிய முடிகின்றது.

பெண்ணின் தற்சார்பினை தடுத்தல்

தற்சார்பு என்பது பிறரைச் சார்ந்திருக்காமல் தனது தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும் நிலையாகும். நமது அன்றாடத் தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்வது. பெண் பொருளாதார நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ள முனைகிறாள். "பொருளாதாரச் சார்பை ஆணிடம் பெறும் பெண், எல்லா நிலைகளிலும் ஆணைச் சார்ந்து நிற்கப் பழக்கப்படுவதால், அவளால் தனித்து இயங்க இயலாத சூழல் கைதியாகிறாள்."5 என்று அரங்க மல்லிகா தன் நூலில் குறிப்பிடுகின்றார். ஐங்குறுநூற்றுப் புலவிப்பத்தில் தலைவியின் இல்லமானது வறுமையுற்று பெருந்துயரில் ஆழ்ந்திருப்பதை,

"துணையோர் செல்வமும் யாமும் வருந்துதும்
வஞ்சி ஓங்கிய யாணர் ஊர
தஞ்சம் அருளாய் நீயே நின்
நெஞ்சம் பெற்ற இவளுமார் அழுமே!" **(ஐங்குறுநூறு : 50)**

என்ற பாடலால் அறியலாம். பெண்ணானவள் சார்பு உயிரி என்ற எண்ணத்தை வளர்க்கும் வண்ணம் 'தஞ்சம் அருளாய் நீயே' என்று பெண்ணை இழிவுப்படுத்துகின்ற அவலநிலையினை உணர முடிகின்றது. பெண்ணால் பொருளீட்ட முடியாது ஆதலால் ஆணைச் சார்ந்தே வாழ வேண்டும் என்ற கொள்கையினை ஆதரிக்கின்ற தன்மையினை அறிய முடிகின்றது.

சங்க இலக்கியங்கள் ஆயர் குல மகளிர், நெய்தற் திணை பெண்கள், குறிஞ்சி நிலம் சார் குறத்தி முதலானோர் விளைப்பொருட்களை உருவாக்குதல், விற்றல் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது. மருதத்திணை வளமானது. இருப்பினும் உழத்தியர் வயல்களில் பணிபுரிந்திருக்கின்றனர். மேட்டுக்குடிப் பெண்களால் வீட்டை விட்டு வெளியேற முடியாது என்பதனையும் இவர்கள் ஆணுடைய கைப்பாவையாகவே வாழ்ந்து வந்தனர் என்பதனை இப்பாடல் உணர்த்துகிறது.

பெண்ணினத்தை அடக்குதல்

ஆண்களும் பெண்களும் இயற்கையில் சமமானவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். தாய் வழிச் சமூகம் தந்தை வழிச் சமூகமாக மாறிய போது ஆண்கள் பெண்களை நசுக்கத் தொடங்கினர்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

தான் நசுங்குவது தெரியாமலே பெண்கள் பண்பாட்டின் பெயரால் நசுங்குகின்றனர். தலைவன் கொடியவன் ஆயினும் தலைவி தலைவனை எண்ணியே வாழ வேண்டும் என்ற எழுதப்படாத சட்டத்தினை,

“தீம்பெரும் பொய்கை ஆமை இளம்பார்ப்புத்
தாய்முகம் நோக்கி வளர்ந்திசினா அங்கு
அதுவே ஐய, நின் மார்பே
அறிந்தனை ஒழுகுமதி அறனுமாரதுவே” **(ஐங்குறுநூறு : 44)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. ஆமையின் இளம் பார்ப்பானது தன் தாயின் முகத்தை நோக்கியே வளரும். அது போல் தலைவன் கொடியவன் ஆயினும் தலைவி தலைவனை நினைத்தே வாழ வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கின்றது. தலைவியின் வாழ்க்கை இலட்சியமே தலைவனை மகிழ வைப்பது தான் என்ற மரபை ஆண் சமூகம் தெளிவாக உருவாக்கி பெண்ணினத்தை அடிமைப்படுத்துகின்ற பாங்கினை உணர முடிகின்றது.

பெண் - கட்டுப்பாட்டை மீறல்

சங்க காலப் பெண்கள் மரபினை மீறியும் சில இடங்களில் வாழ்ந்துள்ளனர். சங்கப் புலவர்கள் மரபு மற்றும் வரம்புகளை உடைத்துத் தம் காம உணர்வை தலைவி வெளிப்படுத்துவதாக தம் பாடல்களில் சித்தரித்துள்ளனர். மருதத்திணையில் தலைவியின் காம உணர்வை தோழி தலைவனிடம் வெளிப்படுத்துகின்ற பாங்கினை,

“கொடிப்பூ வேழம் தீண்டி அயல
வடிகொள் மாஅத்து வண்டளிர் நுடங்கும்
அணித்துறை ஊரன் மார்பே
பனித்துயில் செய்யும் இன்சாயற்றே” **(ஐங்குறுநூறு : 14)**

என்ற பாடலடிகளால் அறியலாம். தலைவன் தலைவியை விடுத்து பரத்தமையை நாடிச் செல்லும் வழக்கம் உடையவன். இருப்பினும் தலைவி கோபப்படாது அவனது மார்பு ஒன்றே குளிர்ந்த உறக்கத்தைச் செய்யும் இனிய சாயலையுடையது என்றுரைத்தல் தலைவனுடன் புணர வேண்டும் என்ற தலைவியின் காம வேட்கையை புலப்படுத்துகின்றது.

முடிவுரை

- ஆண் சமூகத்தை எதிர்ப்பது பெண்ணியம் அல்ல. தங்களது உரிமைகளைப் பெற பெண்கள் போராடுவதே பெண்ணியமாகும்.
- செழிப்பான திணையில் வாழக்கூடிய தலைவி, தலைவன் எத்தகைய தவறுகள் செய்திருந்த போதிலும் தலைவனை ஏற்று வாழ்கின்ற மனமுடையவளாக இருத்தல் வேண்டும் என்ற ஆணின் எதிர்பார்ப்பானது வெளிக்கொணரப்படுகின்றது.
- தான் தேனுண்ணும் வண்டு போல் இருந்தாலும் தன் தலைவி மட்டும் கற்புடன் வாழ வேண்டும் என்ற ஆணாதிக்கத் தன்மையானது புலனாகின்றது.

- தலைவி தனது உடல் நிலை மாற்றத்தால் தன்னைத் தானே வெறுக்கின்ற அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ள ஆண்சமூகத்தின் முகத்திரையினை உணர முடிகின்றது.
- மேட்டுக்குடிப் பெண்களின் பொருளீட்ட முடியாத அவல நிலையினை வெளிப்படுத்துகின்ற புலவரின் நுண்மாண் நுழைபுலத்திறன் அளவிடற்கரியது.
- மரபின் பெயரால் பெண்களை அடக்கி ஒடுக்குவதோடு தலைவனை மகிழ வைப்பதே தனது தலையாய கடமை என்று பெண்ணினத்தின் மீது திணிக்கின்ற ஆணாதிக்க சமூகத்தினை அறிய முடிகின்றது.
- பெண்களுக்கு விதிக்கப்பட்ட மரபுகள் மீறப்பட்டுள்ள முறையினையும் இவ்வாய்வுக் கட்டுரை நுட்பமாக வெளிப்படுத்துகின்ற பாங்கினை அறிய முடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. சித்து.மா.சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.13
2. வ.சு.ப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப.51
3. பரிமேலழகர், திருக்குறள்,எண்.
4. அரங்க நலங்கிள்ளி, ஃபிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு,ப.56
5. அரங்க மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்,ப.135

துணை நூற்பட்டியல்

1. அரங்க மல்லிகா - தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை.2002.
2. சாலமன்.சித்து.மா - பெண்ணியம் போட்ட பதியங்கள், கிரியேட் வெளியீடு,மதுரை,1997.
3. அரங்க நலங்கிள்ளி - ஃபிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு, வாணிதாசன் பதிப்பகம்,புதுவை,1999.

04. கலித்தொகையில் முல்லைக்கலி மக்களின் சமூகப் பண்பாட்டு விழுமியங்கள்

ரா. கோகிலவாணி,

முனைவர் பட்ட ஆய்வாளர்

பதிவு எண் : (25PHTMF002)

தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் -641043, தமிழ்நாடு, இந்தியா.

ORC ID : 0009 - 0001- 4535 - 3710

முனைவர் தா.நாகம்மாள் (SS),
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர் கல்வி நிறுவனம்,கோயம்புத்தூர்-641043, தமிழ்நாடு , இந்தியா.

ORC ID : 0009 - 0001 - 5677 - 2267

DOI 10.5281/zenodo.21680052.

Abstract:

In Sangam literature, the 'Kalithogai' poems on *agapporul* (inner life/love) provide an intimate portrayal of the daily lives of common people. The 'Mullaikkali', composed by Cholan Nalluruthiran, views 'Eru Thazhuvuthal' (bull-taming), the heroic sport of the cowherd women of the Mullai landscape, not merely as a sport, but as a practice deeply intertwined with social values, myths, romance, marriage traditions, and the code of chastity (*karpu*). Through the poems of 'Mullaikkali', one can discern the cultural identity of the Sangam-era cowherd society, specifically that the marriage of these women was traditionally arranged for the hero who successfully tamed the bull."

Keywords :

Charcoal-black bull / Dark bull - White bull - Grey bull - Virtues of chastity / Code of chastity - Hump of the bull - Cowherd woman / Ayar woman - Bull-taming / Eruthaluvuthal - Cowherd youth / Shepherd - Token of union / Sign of mating - The ocean (literally 'three waters')

ஆய்வுச் சுருக்கம் :

சங்க இலக்கியங்களில் 'கலித்தொகை' அகப்பொருள் பாடல்களின் வழி பாமர மக்களின் வாழ்வியலை மிக நெருக்கமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. சோழன் நல்லுருத்திரனால் பாடப்பட்ட முல்லைக்கலி, முல்லை நிலத்து ஆயர் மகளிரின் வீர விளையாட்டான 'ஏறுதழுவுதல்' நிகழ்வை வெறும் வீர விளையாட்டாக. மட்டும் பார்க்காமல், அதனோடு பிணைந்துள்ள சமூக விழுமியங்கள், தொன்மங்கள், காதல், திருமண மரபுகள் மற்றும் கற்பு நெறிகளைப் பேசுகிறது. சங்க கால ஆயர் சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்களையும், . அம்மகளிரின் திருமணமானது காளையின் திமிலை அடக்கும் வீரனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதாக முல்லைக்கலி பாடல்களின் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது.

திறவுச்சொற்கள்:

காரிக்காளை - வெள்ளைக் காளை - சாம்பல் நிறக் காளை - கற்பு நெறி - காளையின் திமில் - ஆயமகள் - ஏறுதழுவுதல் -பொதுவன் - புணர்குறி - முந்நீர்.

முன்னுரை:

சங்க இலக்கியங்களில் ‘கலித்தொகை’ அகப்பொருள் பாடல்களின் வழி எளிய மக்களின் வாழ்வியலை மிகத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை நாடகப் பாங்கிலான பாடல்களைக் கொண்டது. அவற்றுள் ஐந்திணைகளில் ஒன்றான முல்லை நிலத்தின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்வது ‘ஏழுதழுவுதல்’ ஆகும். சோழன் நல்லுருத்திரனால் பாடப்பட்ட முல்லைக்கலி, முல்லை நிலத்து ஆயர் மக்களின் வீர விளையாட்டான ஏறுதவுதலை வெறும் விர விளையாட்டாக மட்டும் பார்க்காமல் அதனோடு இணைந்து காதல், வீரம், கற்பு நெறி, இயற்கை வருணனைகள், திருமண முறைகள் போன்ற மரபுகளையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சமூகம் வரையறை :

சமூகம் என்பது ஒரே மாதிரியான நிலப்பரப்பில் வாழும் மக்களின் மொழி, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து வாழும் அமைப்பாகும் . “சமூகம் என்பது சமூக உறவுகளின் வலைப்பின்னல் ஆகும் . இது எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் ஒரு மாறும் அமைப்பாகும்” . மேக்ஐவர் மற்றும் பேஜ் (சமூகம் : ஓர் அறிமுக பகுப்பாய்வு) என்ற நூலில் குறிப்பிடுகின்றனர். “மனிதன் ஒரு சமூக விலங்கு .சமூகத்திற்கு வெளியே வாழும் ஒருவன் மனிதனாக இருக்க முடியாது; அவன் ஒன்னு மிருகமாக இருக்க வேண்டும் அல்லது கடவுளாக இருக்க வேண்டும்” என்று அரிஸ்டாட்டில் (அரசியல்) என்ற நூலில் குறிப்பிடுகின்றார்,

பண்பாடு அறிஞர்களின் கருத்து :

பண்பாடு என்பது தமிழர்கள் காலம் காலமாக பின்பற்றி வரும் வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், கலை, மொழி, ஒழுக்கம் ஆகியவற்றின் தொகுப்பாகும். "பண்பாடு" என்ற சொல்லை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் டி .கே. சிதம்பரநாத முதலியார் ஆவார். மனிதனின் அக உணர்வு வளர்ச்சியையும், அவனது நற்பண்புகளின் திரட்சியையும் குறிக்க இச்சொல்லை (டி.கே.சி கடிதங்கள்) என்னும் நூலில் பயன்படுத்தினார். பண்பாடு என்பது பண்படுதல். மனிதன் தன் விலங்குத் தன்மையிலிருந்து மாறி பகுத்தறிவோடும் மனித நேயத்தோடும் வாழக் கற்றுக் கொள்வதே பண்பாடு என (தமிழ்ச் சுடர் மணிகள்)என்ற நூலில் எஸ்.வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகிறார். "பண்படுதல்" என்ற வேர்ச்சொல்லில் இருந்து பண்பாடு உருவானதை விளக்கு, ஒரு சமுதாயத்தின் கலை, நாகரிகம், ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தக் கூட்டுத்தொகையே பண்பாடு என்கிறார் தேவநேயப் பாவாணர் (பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்).

ஏறுதழுவுதல் சொல்லாக்கம் :

ஏறு என்றால் ஆண் எருது அல்லது காளை என்று பொருள். தழுவுதல் என்பது அணைத்தல் அல்லது அடக்குவதைக் குறிக்கும். சீறிப்பாயும் காளையின் திமிலைப் பிடித்து, அதனுடன் போராடி அதனைத் தன் வசப்படுத்துவதே ஏறுதழுவுதல். முல்லைக்கலியில் இடம்பெறும்,

“கொல்லேற்றும் கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்”

(முல்லைக் கலி.103 பா.வரிகள் : 63-64)

என்ற வரிகளின் மூலம் கொலை செய்யும் காளைகளின் கொம்புகளுக்குப் பயந்து பின்வாங்கும் கோலையான ஆண்மகனை ஆய மகளிர் இப்பிறவியில் மட்டுமல்ல மறுபிறவியிலும் கூட கணவனாக ஏற்றுக் கொள்ள மாட்டாள்.

காளைகளின் வகைகள் :

தமிழகத்தில் பல்வேறு வகைகளான காளைகள் காணப்படுகின்றன. அதில் ஏறுதழுவுதல் விளையாட்டுக்களுக்கு, காரிக்காளை, வெள்ளைக் காளை மற்றும் சாம்பல் நிறக் காளை பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.காரிக்காளை :

தீச்சுடர் போன்ற நெற்றியைக் கொண்ட காரிக் காளை, எதிர்த்து வந்த பொதுவனைத் தன் கொம்புகளால் குத்திக் குடலைச் சரிக்கும் தோற்றம், கூற்றுவன் உயிரைக் குடிக்கும் காட்சி போல் இருந்தது.

“சுடர் விரித்தன்ன கரி நெற்றிக்காரி”

(முல்லைக்கலி.பா.எண்.101)

என்ற வரிகள் மூலம், காரிக் காளை களத்தில் இறங்கும் போது அதனுடைய கண்கள் கோபத்தால் சிவந்துள்ளன. அக் காளையின் சீற்றமானது கூற்றுவனின் உயிரைக் குடிக்க வரும் காட்சி போல் இருக்கின்றது.

மேலும் வாடிவாசல் புதினத்தில், “ **காரிக் காளையும், பனங்காய் மயிலை யும் , நெற்றிச் செகிலையும் வாடிவாசலில் பாயும் போது அவற்றின் கொம்புகளின் கூர்மையும் திமிலைப் அசைவும் மாடுபிடி வீரர்களுக்கு பெரும் சவாலாக இருக்கும்”** என்ற வரிகளின் மூலம் ஏறுதழுவுதலுக்குச் செல்லும் காளைகளின் கம்பீரத்தைப் பற்றி சீ. சு. செல்லப்பா குறிப்பிட்டுள்ளார்.

2. வெள்ளைக்காளை :

வெண்மையான நிறத்தை உடைய காளை, சிவபெருமானின் கையில் இருக்கும் மழு ஆயுதத்தைப் போலக் கூர்மையான கொம்புகளுடன் பாய்கிறது. மேலும், அது ஆகாயத்தில் இடி இடித்து மின்னலைப் பொழியும் மேகத்தைப் போல உக்கிரத்தோடு ஒலிக்கிறது.

“ **………… தந்தையைக் கொன்றானைத்**
தோளின் திருகுவான் போன்ம்”

(முல்லைக்கலி 101, 31-32)

இப்பாடல் வரிகளின் மூலம் தந்தையைக் கொன்ற பகைவனை ஒரு வீரன் தன்னுடைய தோளில் தூக்கி முறிப்பது போல காட்சிபடுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

3. சாம்பல் நிறக் காளை :

காங்கேய காளை மாடுகளின் வகைகளில் ஒன்றுதான் சாம்பல்நிறக் காளை. இதனுடைய தலை, கழுத்து , திமில், இடுப்பு மற்றும் கணுக்கால் ஆகிய பகுதிகள் கருமை கலந்த நிறத்தையுடையவையாகவும் காளையின் தோற்றமானது களத்தில் நிற்கும் போது கம்பீரமாகவும் மிடுக்காகவும் காட்சியளிக்கப்படுகின்றது.

முல்லைநில இளைஞர்களின் வீரம் :

காளையின் கொலைவெறிக்கு அஞ்சி முல்லைநில இளைஞர்கள் பின்வாங்குவதில்லை காளையின் கொம்புகளுக்குத் தங்களின் மார்பினைப் பரிசாகக் கொடுத்து, அதன் திமிலைப் பிடித்து அடக்குகின்றனர். காளையின் கொம்புகளால் குத்தப்பட்டு குடல் சரிந்தாலும், அதைத் தாங்கி நிற்கும் வீரத்தைக் கண்டு பகைவர்களும் நடுங்கும்படியாக இளைஞர்களின் வீரம் வெளிப்படுத்தப்படுகின்றது.

"............... பொதுவனைச் சாடிக்
குடர் சொரியக் குத்தி, குலைப்பதன் தோற்றம் காண்"

((முல்லைக்கலி.101, 22-23)

இப்பாடலின் மூலம், ஆயர் குல இளைஞர்கள் தங்களின் உயிரைப் பொருட்படுத்தாமலும் சோர்வடையாமலும் காளைகளின் திமிலைப் பற்றிக் கொள்கின்றனர். முரசு அதிர ,சங்கு முழங்க, இடிமுழக்கத்தைப் போன்ற சத்தத்துடன் காளைகள் பாயும் போது, அதற்கு இணையாக ஆயர் இளைஞர்கள் நாட்புறமும் சூழ்ந்து பாய்ந்து காளைகளை அடக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது. மேலும் **"மருத நிலத்தில் உழவுத் தொழிலுக்குப் பயன்பட்ட காளை, முல்லை நிலத்தில் ஒரு வீரனின் ஆண்மையையும் அவனது காதல் தகுதியையும் தீர்மானிக்கும் காரணியாக மாறியது. கொம்புகளைக் கண்டு அஞ்சும் ஒருவனை ஆயர் மகள் தன் கணவனாக ஏற்க மறுப்பதன் மூலம், சங்க காலச் சமூகம் உடலளவிலும் மனதளவிலும் வலிமையான சந்ததியை உருவாக்க விரும்பிய மரபணுத் தேர்வை (Natural Selection/Social Selection) ஏறுதழுவுதல் சடங்கின் வழி நிகழ்த்தியிருப்பதை அறிய முடிகிறது."** என்பதனை ஆ. சிவசுப்பிரமணியன் ஜல்லிக்கட்டு தொன்மம், பண்பாடு,அரசியல் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முல்லை நில மகளிரின் திருமணம் :

முல்லை நில மகளிரின் திருமண முறையானது வீரத்தை அடிப்படையாகக் கொண்டது. காளையை அடக்காத முல்லை நில இளைஞரை ஆய மகளிர்கள் திருமணம் முடிக்க மறுத்தனர்.

" கொல்லேறு சாட இருந்தார்க்கு எம் பல் இருங்
கூந்தல் அணை கொடுப்பேம் யாம் "

((முல்லைக்கலி.101, 41-42)

என்ற வரிகளின் மூலம் காளையை அடக்கும் இளைஞர்களுக்கு மட்டுமே ஆய மகளிர்களைத் திருமணம் செய்து கொடுக்கும் முறை முல்லைக்கலிப் பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது.

மேலும் ,

“நெற்றிச் செகிலை யடர்த்தாற்கு உரியவிப்
பொற்றொடி மாதரால் தோள்”

எனும் வரிகளின் மூலம் செந்நிறமுடைய நெற்றியில் திமிலைக் கொண்ட காளையை அடக்கி வெல்லும் வீரனுக்கே, இந்த அழகிய பொன் வளையல் அணிந்த ஆயர்குலப் பெண்ணின் தோள்கள் சொந்தமாகும் என்று சிலப்பதிகார நூலில் உள்ள ஆய்ச்சியர்க் குரவை காதையின் மூலம் அறிய முடிகிறது .

முல்லை நில மகளிரின் கற்பு நெறி :

ஆயர் குல மகளிரின் கற்பு நெறி என்பது உடலொழுக்கம் சார்ந்ததாக மட்டுமல்லாமல் உறுதியான காதல், வீரனின் பிரிவைத் தாங்கும் மன உறுதி, மற்றும் கார்காலம் வந்தவுடன் காளைகளை அடக்கித் தன் வீரத்தை நிலைநாட்டும் தலைவனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறாள்.

“திரு நுதல் ஆயத்தார் தம்முள் புணர்ந்த
ஒரு மணம் தான் அறியும்; ஆயின் எனைத்தும்
தெருமரல் கைவிட்டு இருக்கோ அலர்ந்த
விரி நீர் உடுக்கை உலகம் பெறினும்
அரு நெறி ஆயர் மகளிர்க்கு
இரு மணம் கூடுதல் இல் இயல்பு அன்றே”

(**முல்லைக்கலி**.114, 16-20).

இவ்வரிகளின் மூலம் குடும்பத்தில் வேறு ஒருவரைத் தலைவிக்குத் திருமணம் செய்ய எண்ணிய போது அதனை அறிந்த தலைவி தோழியிடம் தன் வீட்டின் நிலையைக் கூறித் தலைவனை விரைவாக திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்துகிறாள். இதன் மூலம் சங்ககாலப் பெண்கள் இரு ஆடவனைத் திருமணம் செய்து கொள்ளவில்லை. தான் மனதில் நினைத்த ஆடவனையே தன் கணவனாக அடையப் பெற்றனர். அவ்வாறு வாழ்ந்த பெண்கள் கற்பு நெறி தவறாமல் வாழ்ந்துள்ளனர் என்பதை இவ்வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும்,

“ **முல்லை சான்ற கற்பின் மெல்லியல்”** என்ற பாடல் வரிகளின் மூலம் முல்லை மலர் போன்ற தூய்மையான கற்பினையும், மென்மையான இயல்பினையும் கொண்டவள் பெண் என்றும் முல்லை என்றாலே அது கற்பின் அடையாளமாகச் சங்க காலத்தில் கருதப்பட்டதை நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையில் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியம், அகத்திணையியலில்,

"இருத்தலும் இருத்தல் நிமித்தமும்" என்ற நூற்பா மூலம் தலைவன் பிரிந்து சென்ற காலத்தில் அவன் குறித்த காலத்தில் வருவான் என்ற நம்பிக்கையுடன் தலைவி தன் கற்பு நெறியில் வழுவாமல் ஆற்றியிருப்பதே முல்லை நில மகளிரின் பண்பாகக் கருதப்படுகிறது.

முல்லை நில மகளிரின் காதல் :

ஆய மகளிரின் காதல் என்பது கடமை , தவம் ,ஒழுக்கம், நாணம் மற்றும் பொய் கூறாமை ஆகிய அனைத்துப் பண்புகளும் கற்பு நெறியின் இலக்கணமாகத் திகழ்கின்றன. காளையை அடக்கும் வீரன் போருக்குச் சென்று இறந்து விட்டால் கூட அவனுடைய மார்பில் விழுந்து அழுவார்களே தவிர வேறு ஒருவனை நினைக்க மாட்டார்கள் இவ்வாறு மகளிரின் காதலானது,

" முல்லைஅம் தண் பொழில் புக்கார் பொதுவரோடு
எல்லாம் புணர் குறிக் கொண்டு "

(**முல்லைக். கலி.** 101, 49-50)

என்ற பாடல் வரிகளில் முல்லை நில ஆய மகளிர்கள் அனைவரும் ஒன்றுகூடி காளைகளை அடக்கிய வீரனோடு சோலையில் தனக்கு இணையான காதலனைத் தேர்ந்தெடுத்து புணர்குறிகளை மேற்கொள்கின்றனர். இவ்வாறு வீர விளையாட்டானது காதலின் வெற்றியாகவும் மகிழ்ச்சியான இல்லறத் தொடக்கத்தையும் கூறி விவரிக்கின்றது.

முடிவுரை :

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஏறுதழுவுதலை வெறும் வீரமாக மட்டும் காட்டாமல், அதைத் தலைவியின் காதலோடும் சமுதாயத் திருமண மரபோடும் இணைத்துக் காட்டியுள்ளது. காட்டில் மலரும் முல்லைப் பூவின் தூய்மையைப் போல ஆயர் குல மக்களின் காதலும் வீரமும் தூய்மையானவை என்பதை இந்நிலத்து இலக்கியங்கள் உணர்த்துகின்றன. விலங்குகளைக் கூண்டில் அடைத்துக் கொடுமைப்படுத்தாமல் பரந்த மைதானத்தில் அதன் இயல்பான சீற்றத்தோடு மனிதன் மோதும் இந்த ஏறுதழுவுதல், தமிழர்களின் தனித்துவமான அடையாளமாகும். இவ்வாறு ஐந்தறிவு கொண்ட விலங்குகளுக்கு நம் முன்னோர்கள் முக்கியத்துவம் கொடுத்து சமூகத்தின் பண்பாடு, ஒழுக்கம், காதல் மற்றும் கற்பு நெறி ஆகியவற்றை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

துணை நூற்பட்டியல் :

1. **அரசியல்** - அரிஸ்டாட்டில், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2018.
2. **ஆய்ச்சியர் குரவை (சிலப்பதிகாரம்)** - உ.வே. சாமிநாதையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், 1892, சர்வதேச தமிழாராய்ச்சி நிறுவனம் (IITS), சென்னை.
3. **சங்க இலக்கியம் மூலமும் உரையும் (கலித்தொகை)** - அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம்.
4. **சமூகம்: ஓர் அறிமுக பகுப்பாய்வு** - மேக் ஐவர் மற்றும் பேஜ், மேக்மில்லன் பதிப்பகம், 1949.
5. **சிறுபாணாற்றுப்படை (இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்)** - உ.வே. சாமிநாதையர், பிரசிடென்சி பிரஸ், 1909, SMART MOVES JOURNAL IJELLH.
6. **ஜல்லிக்கட்டு: தொன்மம், பண்பாடு, அரசியல்** - பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன், காலச்சுவடு பதிப்பகம்.
7. **தமிழர் பண்பாட்டு வரலாற்றில் ஏறுதழுவுதல் சமூகப் பரிணாமம்** (ஆய்வேடு) - மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
8. **தமிழ்ச் சுடர் மணிகள்** - எஸ். வையாபுரிப்பிள்ளை, குமரி மலர்க் காரியாலயம், சென்னை, 1949.
9. **டி. கே. சி கடிதங்கள்** - டி. கே. சிதம்பரநாத முதலியார், பொதிகை மலைப் பதிப்பகம் (பாரி நிலையம் - சென்னை).
10. **தொல்காப்பியம் - அகத்திணையியல்** - தமிழிணையக் கல்விக்கழகம், 1948,
11. **வாடிவாசல்** - சி.சு. செல்லப்பா, காலச்சுவடு பதிப்பகம், 1959, மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் (CICT), சென்னை.

05.ஆழ்வார்கள் பார்வையில் ருக்மிணி தாயார் திருமணம்

ஆய்வாளர்

செல்வி சு.ஜெயசித்ரா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி,மதுரை.
தொடர்பு எண் ; 6369373383.

நெறியாளர்

முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி,மதுரை.

DOI 10.5281/zenodo.21704907.

Abstract:

Vaishnavism is the religious tradition that worships Lord Vishnu as the Supreme Deity. This tradition was greatly enriched by the *Nalayira Divya Prabandham*—a collection of hymns composed in Tamil by the twelve Alvars. The verses of the Alvars articulate various philosophical concepts and ethical values, such as the incarnations of Lord Vishnu, the sanctity of holy shrines, Vaishnava traditions, and the exalted role of the Divine Mother (*Thayar*) in interceding for the soul's salvation. In this context, the present study examines the marriage of Rukmini—the consort of Lord Vishnu's Krishna avatar and an embodiment of Goddess Lakshmi—from the perspective of the Alvars.

KeyWords : Vaihnavam – Aalvaargal – Rukmani - Marriage

ஆய்வுச் சுருக்கம்:

திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் வைணவம் . வைணவ சமயம் பன்னிரு ஆழ்வார்கள் தமிழ் மொழியில் அருளிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தால் ஏற்றம் பெற்றது. ஆழ்வார்களின் பாசுரங்கள் திருமாலின் அவதாரங்கள், திருத்தல மகிமை , வைணவமரபு , தாயார் வீடுபேற்றிற்காக பரிந்துரைக்கும் மாண்பு போன்ற பல தத்துவங்களையும் வாழ்வியல் விழுமியங்களையும் எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் திருமகளின் அம்சமாகக் கருதப்படும் திருமாலின் கண்ண அவதாரத் துணைவியான ருக்மிணி திருமணம் ஆழ்வார்கள் பார்வையில் இவண் ஆராயப்படுகிறது.

முகவுரை:

திருமாலின் அவதாரங்கள் பல கூறப்படினும் பத்து அவதாரங்கள் பெரும்பாலும் அனைவராலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திருமாலின் எட்டாவது அவதாரம் கண்ண அவதாரம். கண்ண அவதாரத்தில் 16,108 மனைவியரை கண்ணன் மணந்ததாகக் கூறப்படுகிறது. கண்ணனின் தேவியருள் முதன்மை இடம் ருக்மிணிக்கே உரியது. அத்தகைய ருக்மிணி திருமணத்தை ஆழ்வார்கள் காதலும் வீரமும் கலந்து பாடியுள்ளமையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

ருக்மிணி அவதாரம்:

விதர்ப்ப நாட்டு குண்டின தேசத்து இளவரசி ருக்மிணி. ருக்மிணியின் தந்தை பீஷ்மகன். ருக்மிணிக்கு ருக்மி, ருக்மண், ருக்மபாகு, ருக்மகேசன், ருக்மமாலி என்ற ஐந்து சகோதரர்கள். ருக் என்ற வடசொல்லிற்கு தங்கம் என்பது பொருள். ருக்மிணி தங்கம் போன்றவள்.

பெரிய பிராட்டியின் திருஅவதாரம் என்பதால் கருணையும் மங்களகரமும் நிறைந்தவள். சிறு வயது முதலே கண்ணன் கதைகளைக் கேட்டு வளர்ந்தவள். அவளின் பக்தி காதலாக மாறியது.

ருக்மிணியின் காதல்:

ஒவ்வொரு ஜீவாத்மாவின் இலக்கும் பரமாத்மாவை அடைய வேண்டும் என்கிறது வைணவமரபு. தாயார் வைணவ குருபரம்பரையிலே பெருமாளுக்கு அடுத்த ஆச்சாரியராக விளங்குகிறார். அன்னையாகவும் அன்பு செய்கிறாள் . இதனை ,

" எம்பெருமானே தந்தை ; நீயே எனக்குத் தாயென்று ஆனதனாலே ,
உங்கள் இருவர் தயைக்கும் இலக்காகப் பிறந்த மகனானேன் !
எம்குருவினால் உம்தாஸனாகவும் ஆனபின்னே வேறு எதுவேண்டுமென ,
உங்கள் நகைத்த முகத்துடன் கேட்பதுபோல் விளங்குகிறாய் ! " 1

என்று தேசிகர் தனது ஸ்ரீ துதியில் குறிப்பிடுகிறார். தாயார் ருக்மிணி அவதாரத்தில் கண்ணனைத் திருமணம் செய்து ஜீவாத்மாவின் இலக்கையும் அடைந்து , அடியார்களைக் கடைத்தேற்றும் புருஷகார பூதையாகவும் அருள்புரிகிறாள். கண்ணனுக்கு ருக்மிணி காதல் கடிதம் எழுதுகிறாள். அதை ஒரு அந்தணரிடம் கொடுத்து விடுகிறாள். உஞ்சவிருத்தி பிராமணர் கருடன் போல வந்தார். கடிதத்தைக் கொண்டுவந்த அந்தணரை கண்ணன் நன்கு உபசரிக்கிறான். உரக்கப்படிக்கச் சொல்கிறான்.

ருக்மிணி எழுதிய கடிதம்:

ருக்மிணி கண்ணனைப் '**புவனசுந்தரா**' என்று அழைத்திருந்தாள். ஆயிரம் நாமங்களைச் சொன்ன பீஷ்மரும் இந்த நாமத்தை மறந்தார். பெருமாளின் விபுத்துவம் , திருமேனி அழகு இரண்டையும் சேர்த்து இவ்வாறு குறிப்பிட்டிருந்தாள். "அச்சோ ஒருவர் அழகியவா" என்ற திருமங்கை ஆழ்வாரின் வருணனை ஈண்டு நோக்கத்தக்கது. பிரபுதா சக்தி போன்றவள் ருக்மிணி என்று சொல்வதுண்டு. அனைவரும் வரவேற்கும் இலக்குமி பீஷ்மகன் , வசுதேவர் இல்லங்களில் ருக்மிணியாக மிளிர்ந்தவர். கடிதத்தில் தன் அக உணர்வுகளை வெளிப்படுத்துகையில் ,

"தாமசம் வேண்டாம், தருணம் தப்பும் முன்,
சியாம சுந்தரா, சட்டென வருவீர், கோமளாங்க
உந்தன் வரவை கோரும் பெண்மணி,
பீமராஜனின் பெண் பிரிய ருக்மிணி
ஐந்து வயதிலே ஆசை கொண்டவள்
உந்தன் வரவையே , உள்ளம் வைத்தவள் ,
நந்தபால உந்தன் வரவை நாடி நிற்கிறேன்
உந்தன் வரவை நோக்கி உயிர் துறக்கிறேன் " 2

என்ற பொருளில் 7 ஸ்லோகங்களை வடமொழியில் எழுதி அனுப்புகிறாள் . ஸ்ரவண பக்திக்கு சான்றாகத் திகழ்ந்தவர் ருக்மிணி. யாதவ சிம்மம் கண்ணன் என்பது ருக்மிணி வாக்கு. நரசிம்ம துவாரகை என்றே அடையாளப்படுத்துகிறாள். நரசிம்ம அவதாரத்தில் பகவான் பிரகலாதனைக் காத்தார். கண்ண அவதாரத்தில் ருக்மிணியைக் காத்தார்.

ருக்மிணி - கண்ணன் திருமணம்:

ருக்மிணியின் அண்ணன் ருக்மிக்கு கண்ணன் மீது ஈடுபாடு இல்லை. ருக்மியின் நண்பர்கள் கம்சன் மற்றும் ஜராசந்தன் கண்ணனை எதிர்த்தவர்கள். ஆதலால் தன் மற்றொரு நண்பன் சேதி நாட்டு அரசன் சிசுபாலனுக்கு தன் தங்கையை மணமுடித்துவைக்க நினைத்து ஏற்பாடுகளைச் செய்தான். பொம்மை போல சிசுபாலன் அனைத்து திருமண சடங்குகளிலும் கலந்து கொண்டான். ருக்மிணி சுயம்வரத்தில் தன் கேசத்தைச் சரிசெய்து கொள்வது போல கண்ணனைத் தேடினாள் . குலதெய்வம் அம்பிகை கோவிலுக்குச் செல்லும்போது தன்னை அழைத்துச்செல்ல வருமாறு ஏற்கனவே கடிதத்தில் தெளிவாகச் சொல்லியிருந்தாள். அந்த நேரம் வந்தது. ருக்மிணியின் இடது கண் துடித்தது. நல்ல சகுனம் என்று நினைத்தாள். அதிரப் புகுந்தான் கண்ணன் . திருத்துழாய் நறுமணத்தையும் மார்பில் கொலுவிருக்கும் திருமகளையும் வைத்து கண்ணனை அடையாளம் கண்டுகொண்டாள் ருக்மிணி.

தாருகன் தேரோட்டிவர கண்ணன் ருக்மிணியை அழைத்துச் சென்றான். வழியில் போருக்கு அழைத்த சிசுபாலனையும் ருக்மியையும் தோற்கடித்து , பங்கப்படுத்தி , உயிர்க்கொலை செய்யாமல் ருக்மிணிக்காக மன்னித்தான் . தயையே வடிவெடுத்தவள் தாயார் . கர்காசாரியார் புரோகிதராக வீற்றிருக்க வசுதேவர் , பலராமர் , ரேவதி , கதன், துவாரகை மக்கள் , முப்பத்து முக்கோடி தேவர்கள் முன்னிலையில் ஆண்டாள் , நாச்சியார் திருமொழியில் குறிப்பிட்டதுபோல ருக்மிணி திருமணம் நடைபெற்றது.

பெரியாழ்வார் வியக்கும் ருக்மிணி:

ஆழ்வார்கள் தூய தமிழில் உருப்பிணி என்றே பதிவு செய்துள்ளனர். உலக வழக்கு ருக்மிணி என்பதாக உள்ளது. பெரியாழ்வார் 4 பாசுரங்களில் ருக்மிணி திருமணத்தைப் பதிவு செய்துள்ளார். ருக்மிணியைத் திருமணம் செய்துகொள்ள ஆசையுடன் கண்ணன் வந்தான் என்பதை ,

"உருப்பிணி நங்கையைத் தேர் ஏற்றிக்கொண்டு
விருப்புற்று அங்குஏக விரைந்து எதிர்வந்து
செருக்கு உற்றான் வீரம் சிதையத் தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப் பற
தேவகி சிங்கத்தைப் பாடிப் பற " (நா.தி.பி.309)

என்ற பாசுரத்தில் ' விருப்புற்று அங்குஏக ' என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். தேரில் அழகாக ஏற்றிச் சென்றமையையும் பாடுகிறார் . செருக்கு கொண்ட சிசுபாலனின் தலையைச் சிரைத்து பங்கப்படுத்தினான் என்று குறிப்பிட்டுள்ளார் . ருக்மிணியைப் போல பெரியாழ்வாரும் கண்ணனை சிங்கம் என்றே ஆழைக்கிறார் .

அயனும் அரனும் தேடும் பெருமாள் அழகே உருவானவள் , வாரேறுகொங்கை ருக்மிணியை தேரேற்றி , போர் செய்து , வென்று மணந்தவனே ! என்பதை,

" நீரேறுசெஞ்சடை நீலகண்டனும் நான்முகனும் முறையால்
சீரேறுவாசகஞ் செய்ய நின்ற திருமாலை நாடுதிரேல்
வாரேறுகொங்கை உருப்பிணியை வலியப் பிடித்துக்கொண்டு

தேரேற்றிச் சேனைநடுவு போர்செய்யச் சிக்கெனக்கண்டார்உளர் "

(நா.தி.பி.332)

என்ற பாசுரத்தில் அடையாளப்படுத்துகிறார். திருமகள் மார்பனே பரம்பொருள் என்ற வேதக்கருத்து இங்கு கூர்ந்துநோக்கத்தக்கது.

மாலிருஞ்சோலை அழகரைப் பாடுகையில் ருக்மியை ஓட ஓட விரட்டி ருக்மிணியின் உயிரை கண்ணன் நிலைநிறுத்தினான் என்பதை,

" உருப்பிணிநங்கை தன்னைமீட்பான் தொடர்ந்து ஓடிச்சென்று
உருப்பனை ஓட்டிக்கொண்டிட்டு உறைத்திட்ட உறைப்பன்மலை
பொருப்பிடைக் கொன்றைநின்று முறிஆழியும் காசும்கொண்டு
விருப்பொடு பொன்வழங்கும் வியன் மாலிருஞ்சோலையதே "

(நா.தி.பி.349)

என்ற பாசுரத்தில் குறிப்பிட்டு பெரிமாளின் காக்கும் தன்மையை வியக்கிறார் ஆழ்வார். ருக்மிணியின் அருளால் செல்வம் கிட்டும் என்கிறார் .

குற்றம்செய்வோரை மன்னிக்கும் இயல்பு ருக்மிணியால் கண்ணனுக்கும் வந்திருக்கிறது எனும்வகையில்,

" பலபல நாழம் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை
அலைவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன்மலை
குலமலை கோலமலை குளிர்மலை கொற்றமலை
நிலமலை நீண்டமலை திருமாலிருஞ் சோலையதே "

(நா.தி.பி.353)

என்று இழிவாகப் பேசிய சிசுபாலனின் நிலையை ஆழ்வார் எடுத்துரைக்கிறார். அவன் அற்பத்தனத்தை கண்ணன் தவிர்த்தமையையும் சுட்டுகிறார் .

நம்மாழ்வார் வணங்கும் ருக்மிணி ;

அழகான நீண்ட தோள்களை உடைய ருக்மிணி சமேத கண்ணனை வழிபட்டால் நம் தீவினைகள் அழிந்துவிடும் என்பதாக,

"ஒன்றும்நில்லா கெடும் முற்றவும் தீவினை உள்ளித்தொழுமின் தொண்டீர்
அன்றுஅங்கு அமர்வென்று உருப்பிணிநங்கை அணிநெடும்தோள் புணர்ந்தான்
என்றும் எப்போதும் என் நெஞ்சம் துதிப்ப உள்ளே இருக்கின்ற பிரான்
நின்ற அணி திருவாறன்விளை என்னும் நீள் நகரம் அதுவே "

(நா.தி.பி.3665)

மேற்கண்ட நம்மாழ்வார் பாசுரம் அமைகிறது. அவனே என் நெஞ்சில் அந்தர்யாமியாய் உள்ளான் என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார் .

ஆண்டாளுக்கு வழிகாட்டிய ருக்மிணி ;

ஆண்டாளுக்கு கண்ணஅவதாரத்திலே ஆர்வம் அதிகம். ஆண்டாளுக்கு முன்மாதிரி ருக்மிணி. ருக்மிணிக்கும் ஆண்டாளுக்கும் சில ஒற்றுமை உண்டு.

வ.எண்	ருக்மிணி	ஆண்டாள்
01	சதகோடி ஜென்மம் வாழ ஆசை	எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் கைங்கரியம்
02	கண்ணனின் பாஞ்சசன்னியம் கேட்டு அவன் வருகையை எண்ணி மகிழ்ந்தாள்	பாஞ்சசன்னியத்திடம் வினாதொடுத்தாள்
03	சாதுக்கள் மூலம் கண்ணன் கதை கேட்டாள்	பெரியாழ்வார் மூலம் கண்ணன் கதை கேட்டாள்
04	கண்ணன் ருக்மிணியைத் தேடி வந்தான்	ஆண்டாள் கண்ணனைத் தேடிச் சென்றாள்
05	மடல் எழுதித் தூது அனுப்பினாள்	பாசுரங்கள் எழுதித் தூது அனுப்பினாள்

ருக்மிணியைத் திருமணம் செய்துகொண்டதால் ‘ பெண்ணாளன் ‘ என்று கண்ணனை அழைக்கிறாள் ஆண்டாள். இதனை,

“ கண்ணாலம் கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
திண் ஆர்ந்து இருந்த சிசுபாலன் தேசு அழிந்து
அண்ணாந்து இருக்கவே ஆங்கு அவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணும் ஊர் பேரும் அரங்கமே ”

(நா.தி.பி.615)

மேற்கண்ட பாசுரத்தால் அறிய முடிகிறது. ’ கைபிடித்து ‘ என்ற சொல் சிசுபாலன் மற்ற சடங்குகளைச் செய்ததைக் காட்டுகிறது. பெண்கொடியை வதைசெய்யலாகாது என்ற ஆண்டாளின் கூற்று ருக்மிணியின் ஏக்கமே !

ருக்மிணி பிராட்டி இல்லறம்:

ருக்மிணி வரலட்சுமி விரதம் மேற்கொண்டு இலக்குமியை தரிசித்தார் என்றும் கூறுவர் . திரௌபதியின் ஐந்து குழந்தைகளையும் ருக்மிணியே வளர்த்தார். கண்ணன் - ருக்மிணியின் மகன் பிரத்யும்னன் . ருக்மி மகள் ருக்மாவதியை மணந்த பிரத்யும்னனுக்கு அனிருத்தன் என்ற மகன் உண்டு. சந்தானலட்சுமியாகிய ருக்மிணிக்கு 10 குழந்தைகள்,
மன்மதன் ஒரு மகன் என்பர் . வைணவமரபில் பிராட்டிக்கு மக்கள் அனைவரும் குழந்தைகள்.

சீதை கானகத்தில் இராமனுக்கு முன்சென்று பாதையைத் திருத்தினாள்.ருக்மிணி கண்ணனை வந்து தன்னை அழைத்துச்செல்ல வைத்தாள். ருக்மிணியிடம் ஒரு வீரம் காணப்பட்டது . சீதைக்காக இராமன் கடல் தாண்டினார் . ருக்மிணிக்காக கடலில் கோட்டை கட்டினார்.

சிரஞ்சீவியான அனுமன் கண்ண அவதாரத்தில் சீதையைத் தரிசிக்க விரும்பியபோது அலங்காரத்துடன் வந்த சத்யபாமையை சீதை என ஒப்புக்கொள்ளவில்லை . எளிமையான தோற்றத்துடன் வந்த ருக்மிணியையே சீதை என்று வணங்கினார் .

கண்ணன் பரிசு அளித்த தேவலோக பாரிஜாத மரத்தையும் விட்டுக்கொடுத்தவள் ருக்மிணி. துலாபாரத்தில் கண்ணனுக்கு நிகரானவை எவையுமே இல்லை. பக்தியுடன் சமர்ப்பிக்கும்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

திருத்துழாய் கண்ணனுக்குச் சமமாகும் என்று உலகிற்கு ருக்மிணியே உணர்த்தினார் என்பதுண்டு . குசேலனை செல்வந்தனாக்கியவள் ருக்மிணி தாயார்.

கண்ணன் ருக்மிணியிடம் ‘ நான் ஏழைப்பங்காளன் , என்னிடம் என்ன இருக்கிறது. என்னை ஏன் திருமணம் செய்துகொண்டாய் ? ’ எனக்கேட்க , ருக்மிணி மயங்கிவிழுந்தாள். பின் அவளை எழுப்பி சதுர்புஜனாகக் காட்சிதந்த கண்ணன், என்னிடம் இனி அடைவதற்கு என்ன இருக்கிறது எனக் கேட்டதாகச் சொல்லி சமாதானப்படுத்தினான். ருக்மிணி அன்பின் வடிவம் , அமைதியின் உறைவிடம்.

துர்வாசரை விருந்திற்கு அழைத்து முனிவரின் ஆணைப்படி அவரை அமரவைத்து குதிரைகளைப்போல் கண்ணனும் ருக்மிணியும் தேரோட்டினர். ருக்மிணி தாகத்திற்கு நீர் அருந்த , தன்னிடம் அனுமதி பெறவில்லை என்று அவர் சபிக்க 12 ஆண்டுகள் தம்பதியர் பிரிந்திருந்தனர். இன்றும் துவாரகைக்கு வெளியில்தான் ருக்மிணி சன்னதி உள்ளது.

ருக்மிணி தாயார் வழிபாடு:

ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்களிலும் (திருவல்லிக்கேணி, திருவாய்ப்பாடி , திருநறையூர் , திருத்துவாரகை , திருவெஃகா , திருப்பாடகம் , அரிமேய விண்ணகரம்) பிற அபிமான தலங்களிலும் (பண்டரிபுரம் , தென்னாங்கூர் , மதுரை , நம்மாழ்வார் பேட்டை , உடுப்பி) ருக்மிணி தாயார் கண்ணனோடு சேர்த்து வழிபடப்படுகிறார்.

ருக்மிணி தாயார் வழிபாட்டு நூல்கள் ;

- ஸ்ரீ ருக்மிணி அஷ்டகம்
- ஸ்ரீ ருக்மிணி ஸ்தவனம்

அசைக்க முடியாத சரணாகதியை ருக்மிணி பிராட்டி நமக்குக் கற்பிக்கிறாள். சில இடங்களில் ஏப்ரல் மாதத்தில் ருக்மிணி துவாதசி கொண்டாடப்படுகிறது . பகவானுக்கு பிரியா ஒளியாக இருப்பவள் ருக்மிணி.

ஸ்ரீ மத் பாகவதம் , விஷ்ணு புராணம் , ஹரிவம்சம் , யாதவாப்யுதயம் , மகாபாரதம் முதலிய நூல்களில் ருக்மிணி தாயார் வைபவம் இடம்பெற்றுள்ளது. பள்ளிகொண்டான் பிள்ளை ருக்மிணித் தாயார் மாலை என்ற ஒரு நூலை இயற்றியுள்ளார்.

- வைதர்பி ,
- பைஷ்மி ,
- ரகுமாயி ,
- துவாரகேஷ்வரி ,
- கிருஷ்ணப்பிரியா ,
- ருசிரானனா

என்ற திருநாமங்களாலும் ருக்மிணி தாயார் வழிபடப்படுகிறார்.

- பிருந்தாவனத்தில் இராதைக்கு ஏற்றம்,
- துவாரகையில் ருக்மிணிக்கு ஏற்றம்,
- வடமதுரையில் சத்யபாமைக்கு ஏற்றம்.

நாமதேவர் , துக்காராம் போன்றோர் வாழ்வில் கண்ணனுடன் ருக்மிணி தாயாரும் அருள்புரிந்துள்ளதாக அவர்களது வரலாறு மூலம் அறியலாகிறது.

தொகுப்புரை:

திருமகளின் அவதாரமான ருக்மிணி தாயாரை கண்ணன் அழைத்துச்சென்று திருமணம் செய்து கொண்டதை பெரியாழ்வார் வியந்தும் , நம்மாழ்வார் வணங்கியும் , ஆண்டாள் முன்மாதிரியாகக் கொண்டும் தங்களது பாசுரங்களில் பதிவு செய்துள்ளனர். ருக்மிணியின் மூலம் கண்ணனைப் புகழ்ந்து பாடியுள்ளனர் . கண்ணனின் 16,108 மனைவியரில் முதன்மையானவர் , முக்கியமானவர் ருக்மிணி தாயார் . இரக்கம் , துணிவு , பொறுமை போன்ற கல்யாண குணங்கள் கொண்டவர் ருக்மிணி தாயார் . நமக்கு செல்வம் , முக்தி கிடைக்க தாயாரை வழிபடுவோம் . உண்மையான காதலில் ருக்மிணி கொண்ட உறுதி , கண்ணன் மீதான நம்பிக்கை நமக்கெல்லாம் வழிகாட்டியாக அமைகிறது .

துணைமைக் குறிப்புகள் ;

1. வேதாந்த தேசிகர் , ஸ்ரீ ஸ்துதி , பூ ஸ்துதி , கோதா ஸ்துதி , பா.23 , பொய்கையடியான் (மொ.பெ)
2. கல்யாணி காசிநாராயணன் , அழியாத பொக்கிஷம் - பாகம் 1 - ப.72
3. முதன்மைச் சான்று : ஜெகத்ரட்சகன் எஸ், நாலாயிர திவ்யப் பிரபந்தம்(நயவுரை, ஆழ்வார்கள் ஆய்வு மையம் , சென்னை 1993

துணைமைச் சான்றுகள்:

1. வேதாந்த தேசிகர் - ஸ்ரீ ஸ்துதி , பூ ஸ்துதி , கோதா ஸ்துதி ,ஸ்ரீ மதி நிலையம் ,சென்னை , 2007 (பொய்கையடியான், மொ.பெ)
2. கல்யாணி காசிநாராயணன் - அழியாத பொக்கிஷம்- பாகம் 1,சா.ரா ஆப்எட் ,தென்காசி , 2009

06.நாட்டுப்புறவியலும் செயற்கை நுண்ணறிவும்

முனைவர் ப. துல்ஹஜீதா பேகம்
உதவிப் பேராசிரியர்,தமிழ்த் துறை,
கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி,
செட்டியார் பாளையம்,முத்தூர்,
திருப்பூர் மாவட்டம். 638105

DOI 10.5281/zenodo.21705124.

Abstract :

Artificial intelligence has emerged as an important technology tool in today's world. It plays a significant role in various fields of scientific development. This study explains how artificial intelligence is being used in the field of folklore and examines it's applications. It highlights how AI helps in preserving, analyzing, and documenting traditional knowledge, stories, and cultural practices. The research also discusses how AI contributes to the digitalization of folklore and supports innovative methods in studying and protecting cultural heritage.

KeyWords : Magnetic, Sanctum sanctorum, Database, Digital archive, Artificial intelligence, Software, Lullaby, Cultural heritage, Rituals.

ஆய்வுச் சுருக்கம்:

இன்றைய தகவல் தொழில்நுட்ப காலத்தில் செயற்கை நுண்ணறிவு பல்வேறு அறிவுத்துறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆய்வுக் கட்டுரை நாட்டுப்புறவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய இரண்டிற்கும் இடையிலான தொடர்பை விளக்குகிறது. மேலும் நாட்டுப்புற அறிவு,கலை,விழாக்கள்,மருத்துவம் போன்றவற்றை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் உதவியுடன் எவ்வாறு பாதுகாக்கலாம் மற்றும் பகுப்பாய்வு செய்யலாம் என்பதையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறது.

கலைச் சொற்கள்:

மாக்னெடிக், மூலஸ்தானம், தரவுத்தளம், டிஜிட்டல் காப்பகம், செயற்கை நுண்ணறிவு, மென்பொருள், தாலாட்டு, பண்பாட்டு மரபு, சடங்குகள்.

முன்னுரை:

நாட்டுப்புறவியல் என்பது ஒரு மக்களின் வாழ்வியலையும், பண்பாட்டையும், மரபுகளையும், மக்களின் நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும்,கலைகளையும், வாய்மொழி இலக்கியங்களையும் ஆய்வு செய்யும் ஒரு முக்கியமான துறையாகும். கிராமிய மக்களின் வாழ்க்கை முறையில் தலைமுறைகள் கடந்தும் பரம்பரையாகப்பரவிய அறிவு நாட்டுப்புற அறிவாக கருதப்படுகிறது.

இன்றைய நவீன உலகில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக செயற்கை நுண்ணறிவு பல துறைகளில் மாற்றத்தினை ஏற்படுத்தி வருகிறது. இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் நாட்டுப்புறவியல் ஆய்விலும் முக்கிய பங்கு வகிக்கத் தொ

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

டங்கியுள்ளது . நாட்டுப்புற பண்பாட்டை பாதுகாக்கவும் , பகுப்பாய்வு செய்யவும், உலகளாவிய அளவில் பரப்பவும் செயற்கை நுண்ணறிவு ஒரு சக்தி வாய்ந்த கருவியாக விளங்குகிறது . இதனைப் பற்றி விளக்கமாக ஆராய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் ஆகும்

நாட்டுப்புறவியல் பற்றி அறிஞர்கள் கருத்துக்கள்:

நாட்டுப்புறவியல் பற்றி அறிஞர்கள் பலர் தங்கள் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். நாட்டுப்புறவியல் பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்:-

டாக்டர் சா அகத்தியலிங்கம் அவர்கள் "நாட்டுப்புற இயல் என்னும் இச்சொல் ஆராய்ச்சிக்குரியகதை ,பாடல் ,விடுகதை ,பழக்கவழக்கங்கள் போன்றவற்றைக் குறிப்பிடுவதோடு அவற்றை ஆராயும் இயல்பையும் குறிக்கும் . ஆக நாட்டுப்புற வழக்காறுகளைப் பற்றிய ஆய்வுதான் நாட்டுப்புற இயல்"1 என்று கூறுகிறார்.

மேலும்,

"நாட்டுப்புற இயல் என்பது உயிரோடுள்ள புதை வடிவம் (lively fossil) அது மரணமடைய மறுப்பது. மனித சமுதாயத்தின் இலட்சக்கணக்கான ஆண்டு வாழ்வின் அனுபவங்களின் -பண்பாட்டின் அறிவியலின் படிவங்கள் என்று கூறலாம்"2 என்பார் சார்லஸ் பிளான்சிஸ் போட்டார்.

செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence) என்றால் என்ன?

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) என்பது மனிதர்களைப் போல சிந்தித்து ,கற்றுக்கொண்டு முடிவெடுத்து செயல்படும் திறனை கணினி அல்லது இயந்திரங்களுக்கு வழங்கும் ஒரு நவீன தொழில்நுட்பம் ஆகும் .

எடுத்துக்காட்டாக

1. மொபைலில் உள்ள குரல் உதவியாளர் **(voice Assistant)**
2. தானாக பேசும் **chatbot**
3. தானியங்கி கார்கள் **(self_driving car)**
4. **Google Translate**

போன்ற மொழிபெயர்ப்பு செயலிகள், இது கல்வித்துறை, மருத்துவத்துறை ,வங்கித்துறை ,விவசாயம், தொழில் துறை அதாவது மனிதர்களின் வேலைகளை எளிதாகவும் வேகமாகவும் செய்ய உதவும் எதிர்கால உலகின் முக்கியமான தொழில்நுட்பமே செயற்கை நுண்ணறிவு ஆகும்.

நாட்டுப்புறவியலில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள்:-

கிராம மக்களின் அன்றாடவாழ்வோடு பின்னிப் பிணைந்து காணப்படும் ஒரு துறையே நாட்டுப்புறவியல் துறை எனலாம் . இந்த நாட்டுப்புறவியல் துறையில் காணப்படும் வாய்மொழி இலக்கியங்களை பதிவு செய்வதில் செயற்கை நுண்ணறிவு முக்கிய இடத்தினைப்பெறுகிறது நாட்டுப்புற கதைகள் ,பாடல்கள், தாலாட்டு ,ஒலைச்சுவடி போன்றவை பெரும்பாலும் வாய்மொழி வழியாகவே பரவுகின்றன. இவைகள் காலப்போக்கில் வழக்கிழந்து கொண்டு வருகின்றன.

எடுத்துக்காட்டாக ஒரு கிராமத்தில் வாழும் மூதாட்டி பாடுகின்ற தாலாட்டுப் பாடலை செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான குரல் அடையாளம் காணும் மென்பொருள் மூலம் பதிவு செய்து அதை எழுத்து வடிவமாக மாற்றலாம். இதன் மூலம் அந்தப் பாடல் தலைமுறைகள் கடந்தும் பாதுகாக்கப்படும் .

நாட்டுப்புறக்கலைகளைப் பாதுகாத்தல் :-

நாட்டுப்புறக் கலைகளான நடனங்கள், கைவினைப் பொருட்கள், போன்றவை மறைந்து வரும் நிலையில் செயற்கை நுண்ணறிவு அவற்றைப் பாதுகாக்க உதவுகிறது .கோலாட்டம் ,கரகாட்டம் போன்றவை நாட்டுப்புற நடனங்களின் வீடியோ பதிவுகளை செயற்கை நுண்ணறிவு மூலம் பகுப்பாய்வு செய்து நடன அசைவுகளை டிஜிட்டல் வடிவில் சேமிக்கலாம். எதிர்காலத்தில் வரக்கூடிய சந்ததியினருக்கு பயிற்சி அளிக்கலாம்.

நாட்டுப்புற மருத்துவம்:-

நாட்டுப்புற மருத்துவத்தை வீட்டு வைத்தியம், நாட்டு வைத்தியம், கைமுறை வைத்தியம், கை மருந்து வைத்தியம், பாட்டி வைத்தியம், சிடுகா மருந்து என்று பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். இவற்றை எழுதப்படாத மருந்தியல் முறைகள் எனலாம்.

எடுத்துக்காட்டாக,டாக்டர் க.வெங்கடேசன் ஒரு சான்றைத் தருகிறார். "தலைவலி அதிகமானால் நாட்டுப்புற மக்கள் தோல் சீவிய ஒரு துண்டு சுக்கினையும் ஒரு துண்டு பெருங்காயத்தையும் சேர்த்து சிறிது பால் விட்டு அரைத்து தலைவலி உள்ள இடங்களில் பற்றுப்போட்டு அதன் மீது சாம்பிராணி புகையை காட்டுவார்கள். 15 அல்லது 30 நிமிடங்களில் தலைவலி நீங்கி விடுகிறது. இதனால் எந்தவித எதிர்வினையும் கூட ஏற்படுவதில்லை . இவை நாட்டுப்புற மக்களின் அறிவில் உதித்து அனுபவத்தில் தழைத்து வாழையடி வாழையென வாய்மொழியாக வாழ்ந்து வளர்ந்து வருபவை. நவீன மருந்துகள் சாதிக்க முடியாத சில காரியங்களை நாட்டுப்புற மருந்துகள் சாதித்தன."3

கிராமிய மக்களிடம் அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை மூலிகை மருத்துவம் வழக்கத்தில் உள்ளது . தற்போது கொஞ்சம்கொஞ்சமாய்மறைந்துவருகிறது . மூலிகை மருந்துகளை செயற்கை நுண்ணறிவு மூலம் தொகுத்து அவற்றின் பயன்பாடுகளை ஆய்வு செய்து எந்த மூலிகை மருந்து எந்த நோய்க்கு பயன்படுத்தப்படுகிறது என்பதை கண்டறியலாம்.

நாட்டுப்புற நம்பிக்கைகள் மற்றும் அறிவியல் அணுகுமுறை :-

மனிதனின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிப்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும். நாட்டுப்புற நம்பிக்கைகள் பல சமூக மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை. பல நம்பிக்கைகளுக்கு அறிவியல் ஆதாரமாக உள்ளது என்பது மறக்க முடியாத உண்மையாகும் .

இதற்கு சான்றாக தேவகோட்டை பி .நாராயணன் என்பவர் "ஏன் தெற்கே தலை வைத்து படுக்க வேண்டும். வடக்கே தலை வைத்து படுக்கக் கூடாது " ?④ மனித உடலில்

எலக்ட்ரோ மாக்னெட்டிக் அலைகள் உள்ளன .இவற்றிற்கு மூளை தான். உலகத்தை எடுத்துக் கொண்டால் அதன் மாக்னட்டிக் பகுதியில் மூலஸ்தானம் வடதுருவம் ஆகவே வடக்கே தலை வைத்து படுத்துக்கொண்டால் மூளையின் காந்த சக்தியும் உலகத்தின் காந்த சக்தியும் மோதிக்கொண்டு மூளை பாதிப்புக்கு ஆளாகி விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர் .

மரம் வெட்டக்கூடாது என்ற நம்பிக்கையை செயற்கை நுண்ணறிவு மூலம் சுற்றுச்சூழல் தரவுகளுடன் இணைத்து ஆய்வு செய்தால் அது சுற்றுச்சூழல் பாதுகாப்பை நோக்கமாக கொண்டது என்பதைக் கண்டறியலாம்.

நாட்டுப்புற விழாக்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு :-

கிராமிய விழாக்கள் மக்களின் பண்பாட்டு அடையாளமாக உள்ளன. இந்த விழாக்களானது சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு சாதியினருக்கும் வேறுபட்டே அமைகின்றன . விழாக்களும் ,சடங்குகளும் தற்போது வழக்கிழந்து கொண்டும் வருகின்றன. எனவே ஒரு கிராமத்தில் நடைபெறும் திருவிழாவின் வீடியோ பதிவுகளை சேகரித்து செயற்கை நுண்ணறிவு மூலம் சடங்கு முறைகளைப் பகுப்பாய்வு செய்து அதன் சமூக மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை விளக்கலாம் .

தமிழகத்தின் கிராமப்புறங்களில் நடைபெறும் திருவிழாக்கள் கூட இப்போது நவீன தொழில்நுட்பத்தின் தாக்கத்தை உணரத் தொடங்கியுள்ளன . முன்பெல்லாம் திருவிழாக்களை திட்டமிடுவது முழுவதும் மனிதர்களின் அனுபவத்தையும் நினைவுத்திறனையும் சார்ந்திந்தது. இப்போது AI மூலம் மக்கள் கூட்டமாக வருவதனைக் கணிக்க முடியும் . பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்த முடியும். காலநிலை மாற்றங்களை முன்கூட்டியே அறிந்து விழா அட்டவணையை மாற்ற முடியும் இதனால் திருவிழாக்கள் சீராகவும் பாதுகாப்பாகவும் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் நடைபெறும் கரகாட்டம் ,பொம்மலாட்டம் ,தெருக்கூத்து வில்லுப்பாட்டு போன்ற நாட்டுப்புறக் கலைகள் விழாக்களில் முக்கிய பங்கு வகிக்கின்றன .

செயற்கை நுண்ணறிவு மூலம் இந்தக் கலைகளை டிஜிட்டல் வடிவில் சேமிக்க முடியும். குரல் ,நடனம் ,இசை ஆகியவற்றை பதிவு செய்து ஆய்வு செய்ய முடியும் . மறைந்து வரும் கலை வடிவங்களை மீண்டும் உயிர்ப்பிக்க முடியும்.

முடிவுரை :-

நாட்டுப்புறவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு இணைப்பு பாரம்பரிய அறிவைப் பாதுகாக்கும் புதிய வழிகளை உருவாக்குகிறது. இது நமது பண்பாட்டு அடையாளத்தை எதிர்கால தலைமுறைக்கு பாதுகாப்பாகக் கொண்டு செல்ல உதவும் ஒரு நவீன அணுகுமுறையாகும்.

துணைமைக் குறிப்புகள்

1. சண்முகசுந்தரம். சு. நாட்டுப்புறவியல், ப.20,மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. மேலது, ப. 16.
3. டாக்டர்.வெங்கடேசன்.க., ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம், ப. 152.

4. நாராயணன்.பி, நாட்டுப்புற நம்பிக்கைகள், ப. 22.

பயன்பட்ட நூல்கள்

1. நாட்டுப்புறவியல், முனைவர். சு. சண்முகசுந்தரம்
2. நாட்டுப்புறவியல் , முனைவர். சு. சக்திவேல்
3. நாட்டுப்புறவியல் அறிமுகம், டாக்டர். தே. லூர்து.
4. தமிழர் நாட்டுப்புற மரபுகள், டாக்டர். தே. லூர்து.
5. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், டாக்டர். தே. லூர்து

****

07. ஊராளி மக்களின் இயற்கை சார் தொழில்

The natural occupation of the Uurali People's

ஆய்வாளர்:

ரா.சிவானந்தம்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.
rr.sivanantham2001@gmail.com

நெறியாளர்:

மு. கவிதா,
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு.

DOI 10.5281/zenodo.21705298.

Abstract:

Since ancient times, tribal communities have lived in harmony with nature. This study explains how the Oorali tribe integrates their way of life with the natural environment. This article examines the agricultural practices, dietary habits, and traditional medicinal systems of the Oorali people.

Key words: Nature, Food Culture, occupation, uurali, uurali people, tribes

ஆய்வுச் சுருக்கம்:

ஆரம்ப காலம் முதல் இன்று வரை பழங்குடி மக்கள் இயற்கையோடு இணைந்து தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். அதேபோல் ஊராளி பழங்குடியின மக்கள் தங்களுடைய வாழ்க்கை முறைகளை இயற்கையோடு சேர்ந்து எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதனைப் பற்றி இவ்வாய்வேடு விளக்குகிறது. ஊராளி மக்களின் வேளாண் தொழில், உணவு முறைகள், மருத்துவ முறைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

ஆய்வு நோக்கம்

ஈரோடு (மா), சத்தியமங்கலம்(பே), ஆசனூர்(ஊ) என்ற மலைப்பகுதியில் வாழும் ஊராளி மக்களின் இயற்கை சார்ந்த வாழ்வியல் மற்றும் அவர்களினுடைய இயற்கை சார்ந்த தொழில் முறைகளை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

கலைச்சொற்கள் : இயற்கை, தொழில், உணவு, ஊராளி , மருத்துவம்

முன்னுரை

தமிழர் பண்பாட்டின் அடித்தளமாக இயற்கை திகழ்கிறது. இயற்கையைப் போற்றியும் அதனுடன் இணைந்தும் வாழ்ந்த சமூகங்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பழங்குடி மக்கள். மனிதனும் இயற்கையும் ஒன்றையொன்று சார்ந்து வாழ வேண்டும் என்ற உயரிய வாழ்க்கை நெறியை பழங்குடி மக்களின் வாழ்வில் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. அதன் போக்கில் ஊராளி மக்களின் இயற்கை சார்ந்த வாழ்வியல் பற்றியும் அவர்களின் தொழில் முறைகள் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

பழங்குடி

பழங்குடிகள் என்பவர்கள் பூர்வக்குடிகள். ஆண்டு பல ஆண்டு காலமாக தாங்கள் பிறந்த நிலத்தை விட்டு வெளியில் செல்லாமல் சொந்த நிலத்திலேயே வாழுகின்ற

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

தன்மையைப் பெற்றவர்கள். பொதுவாக பழங்குடி மக்கள், மலைகளிலும் காடுகளிலும் சிறியதொரு கூடாரம் அமைத்து குழுக்களாக வாழக்கூடியவர்கள். இன்றைய நவீன உலகம் பெரியதொரு வளர்ச்சியை ஏற்படுத்திய போதிலும் தங்களின் வம்சாவளி இடங்களை விட்டுப் பிரியாமல் இன்னமும் பல மக்கள் மலைகளில் பூர்வ குடிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

“பழங்குடி என்னும் சொல் தொன்மை நிலையையும் வளர்ச்சி அடைய பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள் குழுவைக் குறிக்கின்றது. மேலும் இவர்கள் பொதுவான பெயரையும், குறிப்பிட்ட நிலப் பகுதியில் வாழும் தன்மையையும் ஒரு மொழியை பேசும் இயல்பையும் திருமணம், செய்யும் தொழில் அல்லது பணியில் சில விலக்குகளைக் கொண்டு விளக்கும் தன்மையுடையவராய் ஒருவர்க்கொருவர் கட்டுப்பாட்டுடனும் பொருட்களை பரிமாறிக் கொண்டும் வாழும் பல குடும்பங்களின் தொகுதியே பழங்குடிகள்”[1] என்று பக்தவச்சல பாரதி கூறியுள்ளார்.

பழமையான பண்பாட்டையும், பழமையான தொழிலையும் மாற்றிக் கொள்ளாமல் தொடர்ந்தும் தொன்மை மாறாமலும் பழங்குடி மக்கள் கடைபிடிக்கின்றனர். சில கிராமங்களில் நகர்புற மக்களை இவர்கள் காணும் பொழுது வியக்கத்தக்க வகையில் உற்று நோக்குகிறார்கள். நகர்ப்புற மக்களுடன் இணைந்து வாழ பெரும்பாலும் பழங்குடிகள் விரும்புவதில்லை.

ஊராளி மக்கள்

ஊராளி மக்கள் என்பவர்கள் (ST) schedule tribe - பட்டியலின வகுப்பைச் சார்ந்தவர்கள். ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பேரூராட்சி ஆசனூர் என்ற ஊராட்சியில் பழங்காலம் தொட்டு வாழ்ந்து வருகின்றனர். ஆசனூர் என்பது மலை சார்ந்த பகுதியாகும். இது ஆரம்ப காலங்களில் குக் கிராமமாக இருந்தது. ஹாசனூர் தற்போது ஈரோடு முதல் மைசூர் வரை நேரடி போக்குவரத்து சாலையை பெற்றதனால் பொருளாதார அளவிலும், தொழிலின் அளவிலும் முன்னேற்றத்தை பெற்றிருக்கிறது. ஆனாலும் ஊராளி மக்கள் பழமையான தங்களது பண்பாட்டினை மாற்றிக் கொள்ளாமல் கடைபிடித்து வருகின்றனர். பழங்குடிகள் இயற்கையை வெறும் பொருளாக கருதவில்லை. ஒரு உயிராக கருதினர். இவர்கள் மலை, காடு, ஆறு, கடல், வயல் ஆகிய அனைத்தும் மனித வாழ்க்கையோடு இணைந்திருந்தனர்.

இயற்கைக்கும் மனித வாழ்க்கைக்கும் பல தொடர்பு இருக்கிறது. இதேபோல் ஊராளி பழங்குடியின மக்கள் காடு, மலைப் போன்ற இடங்களில் தனக்கான ஒரு வாழ்க்கையை முறையை அமைத்துக் கொண்டு இருக்கையோடு சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.

ஊராளிகளின் வாழ்க்கையிலும் பருவமழை, காடு, மலை, காலநிலை ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. எந்த பருவத்தில் எந்த உணவைச் சேகரிக்க வேண்டும். எந்த மூலிகை எப்போது கிடைக்கும். என்பதனை இயற்கையிலிருந்தே கற்றுக் கொள்கின்றன.

ஊராளி தொழில் முறைகள்

காடுகளை அழிக்காமல் வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்தும் பண்பாடு இவர்களிடம் காணப்படுகிறது. தேன் சேகரித்தல், கிழங்கு தோண்டுதல்,

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

மூலிகைகள் சேகரித்தல், சிறுதானிய பயிரிடுதல், மூங்கில் பொருட்கள் தயாரித்தல் போன்றவைகளே இம்மக்களின் தொழில்கள் முறைகள் ஆகும்.(**சண்முகம்,** 30)

தேன் சேகரித்தல்

"தேனினர் கிழங்கினர் ஊரார் வட்டியர்"[2]

என்ற மலைபடுகடாம் பாடலானது, மலைகளில் வாழும் மக்கள் தேன் எடுத்த தொழில் நடத்திய முறையினை சுட்டிக்காட்டுகிறது. மலைவாழ் மக்கள் தேன், கிழங்கு, வேட்டையாடுதல் போன்ற வனவளங்களைச் சேகரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டதை புலவர் எடுத்துரைக்கிறார். இதேபோல் ஊராளி மக்களும் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தும் காடுகளின் வளத்தை பாதுகாத்து வருகின்றன.

ஊராளி மக்களின் முக்கியத் தொழிலாக தேன் சேகரித்தல் விளங்குகிறது. இதில் மலைத்தேன் காட்டுத்தேன் என இரண்டு வகை உள்ளது. மரங்கள் இருக்கும் தேன் கூடுகளில் இருந்து தேனீக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொள்வர். இதனால் தேனீக்கள் மீண்டும் தேன் சேகரித்து இயற்கைச் சுழற்சி தொடங்குகிறது. இதில் பெரிய வகை தேனீக்களும்(மலைத்தேனீ) உண்டு அவைகளை கையாளும் பொழுது மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும் இறக்கும் நிலை கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

மூலிகைகள் சேகரித்தல்

பல வகையான மருத்துவ மூலிகைகளை அறிந்து சேகரித்து பயன்படுத்துகின்றனர். காய்ச்சல், தலைவலி, சர்க்கரை நோய், புற்றுநோய், ஆண்மை சார்ந்த நோய்கள் என பல நோய்களுக்கான மருந்து இயற்கையிடம் உள்ளது. அதை நன்கு அறிந்தவர்கள் ஊராளி பழங்குடி மக்கள். இயற்கை மருத்துவ அறிவை தலைமுறை தலைமுறையாகப் பாதுகாத்து வருகின்றனர். இந்த நோய்க்கு எந்த மூலிகை எப்படி கையாள வேண்டும் எந்த அளவில் தர வேண்டும் என்று வழிமுறைகள் உள்ளது.

காய்ச்சல் - **நில வேம்பு**

தலைவலி - **துளசி மற்றும் மஞ்சள்**

சர்க்கரை நோய் - **சோத்து கற்றாழை**

புற்றுநோய் - **முள் சீத்தாபழம்**

ஆண்மை - **கிழங்கு வகைகள்** (**சாந்தி,** 45)

போன்ற இயற்க்கையில் இருந்து கிடைக்கக்கூடிய மூலிகை தாவரங்களைக் கொண்டு நோய்களைக் குணப்படுத்துகின்றனர்.

சிறுதானிய விவசாயம்

மலைச் சரிவுகளில் கேழ்வரகு, திணை, சாமை, வரகு போன்ற சிறு தானியங்களை இயற்கை முறையில் பயிரிடுகின்றனர். பழங்குடியின மக்கள் பருவ நிலைகளை நன்கு அறிந்தவர்கள். ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்ப வேளாண்மை பயிர் தொழில் செய்கின்றனர். மேலும் இவர்கள் எவ்வித இரசாயன உரங்களையும் பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்துவதில்லை. இயற்கை உரங்களான மர இலைகள், விலங்குகளின் கழிவுகள் போன்ற உரங்களை பயன்படுத்துகின்றனர்.

இதன் மூலம் பயிர்கள் நன்கு செழிப்பாக இருக்கும் அதில் உள்ள சத்துக்கள் நமக்கு நேரடியாக கிடைக்கின்றன. மேலும் மண்வளம் நன்றாக இருக்கும். (**ஆனந்த்**,35)

இயற்கை பாதுகாப்பு

ஊராளி மக்களின் வாழ்க்கையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முக்கிய இடம் பெறுகிறது. அவர்கள் இயற்கைக்கு தீங்கு விளைவிக்க கூடிய நெகிழி போன்ற பொருட்களை குறைந்த அளவில் பயன்படுத்துகின்றனர். அந்த நெகிழியை எரிப்பதோ மற்றும் தூக்கி எறிவது கிடையாது அதை மறுசுழற்சி செய்யக்கூடிய வகையில் பயன்படுத்துகின்றனர். மரங்களைத் தேவை இன்றி வெட்டுவதில்லை நீர்நிலைகளை மாசு படுத்தாமல் பாதுகாக்கின்றனர். காட்டு வளங்களை தேவைக்கேற்ப மட்டுமே பயன்படுத்துகின்றனர். இவர்கள் நிலைத்த வாழ்வியல் முறையை பின்பற்றுகின்றனர்.(**ஆனந்த்**,35)

முடிவுரை:

ஊராளி பழங்குடியின மக்களின் வாழ்க்கை முறை இயற்கையுடன் எவ்வாறு சமநிலையுடன் வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. அவர்களின் எளிமையான வாழ்க்கை முறை, இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்புணர்வு, ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள், பாரம்பரிய மருத்துவ அறிவு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த சிறந்த வாழ்வியல் பண்புகளாகும். ஊராளி மக்களின் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறை நிலையான வளர்ச்சிக்கான வழிகாட்டியாக விளங்குகிறது.

ஆய்வு மேற்கோள்கள்:

1. **தமிழக பழங்குடிகள்**, **பக்தவத்சல பாரதி** , 1990, **ப**.303.
2. **பத்துப்பாட்டு**, **மலைபடுகடாம்** , **பா**.153

தகவலாளி பட்டியல்

1. **சண்முகம்**, 30, **ஓட்டுநர்**, **ஊராளி**, **ஆசனூர்**.
2. **ஆனந்த்**, 35, **விவசாயம்**, **ஊராளி**, **ஆசனூர்**.
3. **ரமேஷ்**, 40, **கூலித்தொழில்**, **ஊராளி ஆசனூர்**.
4. **சாந்தி**, 45, **விவசாயம் ஊராளி**, **ஆசனூர்**.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

08.கூத்தராற்றுப்படையில் நிலவியல் பண்பாடு

முனைவர் போ. அனு,
இணைப்பேராசியர், தமிழ்த்துறை,
பூ சா கோ கலை அறிவியல் கல்லூரி,கோயம்புத்தூர்.
Dr.Anu.B, Associate Professor, Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore.
Mail id: anudilip027@gmail.com
ORCID: https://orcid.org/0009-0001-8998-8275
DOI 10.5281/zenodo.21705417.

Abstract

Sangam literature deeply documents the lifestyle, knowledge of nature, social structure, and cultural traditions of the Tamil society. 'Malaipadukadam' (also known as Kootharattruppadai), one of the Pathuppattu (Ten Idylls), is a distinguished literary work that elaborately describes the Topography, lifestyle, hospitality, occupational culture, and artistic traditions of the kurinji people of the Sangam era. This study examines the Topgraphical and cultural elements found in Kootharattruppadai from both literary and cultural perspectives. Specifically, it analyzes the natural landscapes of Kurinji, Mullai, and Marutham, along with the social relationships of the people inhabiting them. Furthermore, it explains how the natural environment shaped human life and culture. Through this study, it is established that 'Kootharattruppadai'serves not merely as an 'Aatruppadai' (guide-poem) text but also as a socio-cultural document that records the Topographu lifestyle of the Tamils during the Sangam period.

Keywords:

Kootharattruppadai, Malaipadukadam, Topography, Culture, Sangam Literature, Kurinji, Mullai, Marutham,Cross Culture.

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியல், இயற்கை அறிவு, சமூக அமைப்பு மற்றும் பண்பாட்டு மரபுகளை ஆழமாகப் பதிவு செய்துள்ளன. பத்துப்பாட்டில் இடம்பெறும் 'மலைபடுகடாம்' (கூத்தராற்றுப்படை) சங்ககால மலைநாட்டு மக்களின் நிலவியல் சூழல், வாழ்வியல், உணவுமுறை, விருந்தோம்பல், தொழில்சார் பண்பாடு மற்றும் கலைமரபுகளை விரிவாக எடுத்துரைக்கும் சிறப்புமிக்க இலக்கியமாகும். இவ்வாய்வு, 'கூத்தராற்றுப்படையில்' இடம்பெறும் நிலவியல் பண்பாட்டுக் கூறுகளை இலக்கிய மற்றும் பண்பாட்டியல் நோக்கில் ஆராய்கிறது. குறிப்பாக குறிஞ்சி,

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

முல்லை, மருதம் ஆகிய நிலங்களின் இயற்கை அமைப்பு, அவற்றோடு தொடர்புடைய மக்களின் வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கம், விருந்தோம்பல் மரபு, தொழில், வேளாண்மை, கலை மற்றும் சமூக உறவுகள் ஆகியவை பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும், இயற்கைச் சூழல் மனித வாழ்க்கையையும் பண்பாட்டையும் எவ்வாறு வடிவமைத்தது என்பதும் விளக்கப்படுகிறது. இவ்வாய்வின் மூலம், 'கூத்தராற்றுப்படை' வெறும் ஆற்றுப்படை நூலாக மட்டுமல்லாது, சங்ககாலத் தமிழரின் நிலவியல் சார்ந்த வாழ்வியலைப் பதிவு செய்த சமூக-பண்பாட்டு ஆவணமாகவும் விளங்குகிறது என்பது நிறுவப்படுகிறது.

கலைச் சொற்கள்:

கூத்தராற்றுப்படை, மலைபடுகடாம், நிலவியல், பண்பாடு, சங்க இலக்கியம், குறிஞ்சி, முல்லை, மருதம், விருந்தோம்பல், உணவுப் பண்பாடு.

முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழரின் தொன்மையான வாழ்க்கை வரலாற்றையும் பண்பாட்டு மரபுகளையும் உண்மைத்தன்மையுடன் பதிவு செய்துள்ளன. அவற்றுள் பத்துப்பாட்டு நூல்கள் தனித்துவமான இலக்கிய, வரலாற்று மற்றும் சமூக ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. அதில் இடம்பெற்றுள்ள 'மலைபடுகடாம்', கூத்தராற்றுப்படை என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. இந்நூல் ஒரு கூத்தன் மற்றொரு கூத்தனை வள்ளல் நன்னனிடம் வழிப்படுத்தும் ஆற்றுப்படை இலக்கியமாக அமைந்திருந்தாலும், அதன் உட்பொருளில் சங்ககால மலைநாட்டு மக்களின் இயற்கைச் சூழல், சமூக வாழ்க்கை மற்றும் பண்பாட்டு அமைப்புகள் விரிவாகப் பதிவாகியுள்ளன. தமிழர் பண்பாடு இயற்கையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையை மையமாகக் கொண்டது. திணைச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு உருவான வாழ்க்கை முறையில் உணவு, தொழில், குடியிருப்பு, வழிபாடு, விருந்தோம்பல், கலை, பொருளாதாரம் போன்ற அனைத்தும் நிலவியல் சூழலோடு இணைந்து அமைந்தன. இத்தகைய நிலவியல் சார்ந்த வாழ்வியலை மிகத் தெளிவாகப் பதிவு செய்யும் நூல்களில் 'கூத்தராற்றுப்படை' முக்கியமான இடத்தைப் பெறுகிறது. 'கூத்தராற்றுப்படையில்' இடம்பெறும் நிலவியல் பண்பாட்டுக் கூறுகளை இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து, சங்ககாலத் தமிழரின் வாழ்வியல் மரபுகள் இயற்கைச் சூழலோடு

எவ்வாறு இணைந்திருந்தன என்பதை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம் சங்க இலக்கியங்கள் வரலாற்று ஆதாரங்களாக மட்டுமன்றி, தமிழரின் சுற்றுச்சூழல் சார்ந்த பண்பாட்டு பதிவுகளாகவும் விளங்குகின்றன என்பதையும் இக்கட்டுரை அட்க்கொடிட்டுக் காட்டுகிறது.

நிலம்சார் பண்பாடு

பண்பாடு என்பது 'ஒரு குழுவினரின் வாழ்க்கை முறை. அது மொழி மற்றும் பாவனைகள் மூலம் ஒரு சந்ததியினர் பிறிதொரு சந்ததிக்கு விட்டுச் செல்கின்ற பகிர்ந்து கொள்ளப்படும் கருத்துக்களின் தொகுதிகள் மற்றும் தேசிய நடத்தைகளின் மாதிரிகள் ஆகியவற்றைக் குறிக்கும்' என்று 'பண்பாடு' என்பதற்கு பக்தவச்சல ரெட்டி அவர்கள் விளக்கமளித்துள்ளார். கலை, உணவு, பழக்கவழக்கம், நம்பிக்கை ஆகிய தனிச்சிறப்பு மிக்க கூறுகளின் அடிப்படையில் அமையும் மக்களின் வாழ்க்கைமுறையே பண்பாடு. ஒவ்வொரு இனக் குழுவுக்கும் தனிப்பட்ட சிறப்புகள் பண்பாட்டில் உண்டு. அதில், தமிழர் பண்பாடு இயற்கையோடு மிகவும் நெருக்கமானது. மக்களின் வாழ்க்கைக்கு உணவு, உடை, வீடு இன்றியமையாதன. இவற்றில் வெளிப்படும் பண்பாடே பிற இனக்குழுவிலிருந்து ஒரு இனத்தை மேம்பட்ட மற்றும் சிறப்புமிக்க இனமாக அடையாளம் காட்டும். இவை யாவுமே நிலத்தையும் தொழிலையும் சார்ந்து அமைவது ஆகும் .

"மலைகள், ஆறுகள் போன்ற இயற்கை அமைப்புகள் மிகத் தெளிவாக எல்லைவகுக்கும் தென்னிந்திய நிலத்தோற்றத்தின் பௌதிக அமைப்பு, தென்னிந்தியாவின் சிறிய அரசுகள், இன்னும் சிறிய குறுநிலத் தலைவர்கள் ஆண்ட சிறு பகுதிகள் ஆகியவற்றிற்கு இடம் தந்தது. அது மட்டுமல்லாமல் கவிதையையும் நிலவியல் பகுதிகளுக்கேற்ப மலைப்பாங்கான நிலத்துக் கவிதை, மேய்ச்சல் நிலக் கவிதை, கடற்கரைப்பகுதிக் கவிதை என்பதுபோலப் பகுக்க வாய்ப்பளித்தது". (நில அமைப்பும் தமிழ்க் கவிதையும். ப. 3) என்ற கருத்தும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. கூத்தராற்றுப்படையில் சங்க காலச் சூழலில் நிலவியிருந்த நிலம்சார் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

உணவுப் பண்பாடு

உணவுப் பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் இயற்கை வளம், பொருளாதார நிலை, தொழில், மருத்துவ அறிவு மற்றும் வாழ்வியல் மரபுகளை வெளிப்படுத்தும் அடிப்படைக் கூறாகும்.

கூத்தராற்றுப்படையில் இடம்பெறும் உணவுச் செய்திகள், சங்ககால மக்களின் வாழ்க்கை இயற்கையோடு இணைந்திருந்ததையும், நிலவியல் சூழலுக்கு ஏற்ப அவர்களின் உணவுப் பழக்கங்கள் அமைந்திருந்ததையும் தெளிவுபடுத்துகின்றன. குறிஞ்சி நில மக்களின் உணவாக தேன், கிழங்கு, தினை, பலாப்பழம், மலைத்தேன், வேட்டையாடி பெற்ற மான், காட்டுப்பன்றி போன்ற மாமிச உணவுகள் இடம்பெற்றுள்ளன. இதனை,

"தேனினர் கிழங்கினர் ஊன் ஆர்வட்டியர்
சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கி"

(மலைபடுகடாம், அடி. 152-154)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இவ்வடிகள் மலைநாட்டு மக்களின் உணவுமுறை இயற்கை வளங்களைச் சார்ந்திருந்ததை உறுதிப்படுத்துகின்றன. உணவு என்பது பசியைப் போக்கும் கருவி மட்டுமல்ல; இயற்கை வளங்களை நிலைத்த முறையில் பயன்படுத்திய வாழ்வியல் அறிவாகவும் இருந்தது. மலைப்பகுதியில் விளைந்த தினை, வரகு, அவரை, மூங்கில் அரிசி, எள் போன்ற தானியங்களும் அன்றாட உணவின் முக்கிய அங்கமாக இருந்தன. பருவமழையை நம்பிய வேளாண்மையும், காட்டு வளங்களைப் பயன்படுத்திய உணவுப் பழக்கமும் ஒன்றிணைந்த வாழ்க்கைமுறையை உருவாக்கியிருந்தன. இதன்மூலம் நிலவியல் சூழல் உணவுப் பண்பாட்டை நேரடியாக நிர்ணயித்ததை அறிய முடிகிறது.

முல்லை மற்றும் மருத நிலங்களுக்குச் செல்லும் போது உணவுப் பழக்கங்களிலும் மாற்றம் காணப்படுகிறது. முல்லை நிலத்தில் பால், மோர், வெண்ணெய் போன்ற பால் சார்ந்த உணவுகள் முக்கிய இடம் பெற்றிருந்தன. மருத நிலத்தில் நெல், அரிசிச் சோறு, புளியங்கூழ், நெய் கலந்த உணவுகள் வழங்கப்பட்டதாக நூல் பதிவு செய்கிறது. இவ்வேறுபாடுகள், நிலவியல் மாற்றத்திற்கு ஏற்ப உணவுமுறையும் மாறியதைக் காட்டுகின்றன. எனவே, *கூத்தராற்றுப்படை* உணவுப் பண்பாட்டை பதிவு செய்யும் நூலாக மட்டுமன்றி, சங்ககால தமிழரின் சுற்றுச்சூழல் அறிவு, வேளாண் திறன் மற்றும் சத்துணவு மரபுகளை வெளிப்படுத்தும் இலக்கிய ஆவணமாக விளங்குகிறது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

விருந்தோம்பல் பண்பாடு

சங்க இலக்கியங்களில் விருந்தோம்பல் அறமாகக் கருதப்படுகிறது. *கூத்தராற்றுப்படையில்* விருந்தோம்பல் என்பது தனிமனிதப் பண்பாக மட்டும் இல்லாமல், தமிழர் சமூகத்தின் உயரிய பண்பாட்டு அடையாளமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. நன்னனின் நாட்டை நோக்கிச் செல்லும் கூத்தர்களை வழியிலுள்ள குறவர்கள், ஆயர்கள், உழவர்கள் மற்றும் கானவர்கள் அன்புடன் வரவேற்று உணவும் தங்குமிடமும் வழங்குகின்றனர். விருந்தினரை உறவினராகக் கருதி உபசரிக்கும் பண்பை,

“நும் இல் போல நில்லாது புக்கு
கிழவிர் போல கேளாது கெழீஇ…”

(மலைபடுகடாம், அடி. 165-169)

என்ற பாடல்கள் விளக்குகின்றன.

இந்தப் பாடல்களில் விருந்தினரை அந்நியராகக் கருதாமல், குடும்ப உறுப்பினரைப் போல ஏற்றுக்கொள்ளும் உயரிய மனிதநேயம் வெளிப்படுகிறது. சமூக ஒற்றுமையையும் நம்பிக்கையையும் வளர்க்கும் பண்பாட்டு நெறியாக விருந்தோம்பல் விளங்கியதை இப்பாடல்கள் நிறுவுகின்றன. முல்லை நில ஆயர் மகளிர் பயணிகளுக்கு பசும்பால் வழங்குவதும், குறிஞ்சி நில மக்கள் தாங்கள் உண்ணும் உணவையே பகிர்ந்து வழங்குவதும், மருதநில உழவர்கள் வளமான உணவுகளால் விருந்தளிப்பதும் சமூக சமத்துவத்தின் வெளிப்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

“நும் இல் போல கேளாது கெழீஇ
சேட் புலம்பு அகல இனிய கூறி
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவீர்” **(மலைபடுகடாம்,** 168-169)

பாடலாடிகள், மலைமக்களின் விருந்தோம்பல் பண்பினைப் போற்றுகின்றது.

இத்தகைய செய்திகள் சங்ககால தமிழர் சமூகத்தில் பொருளாதார வளத்தைவிட அறநெறி மேலோங்கி இருந்ததைக் காட்டுகின்றன.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

தொழில்சார் பண்பாடு

கூத்தராற்றுப்படையில் தொழில் என்பது வாழ்வாதாரமாக மட்டுமன்றி, நிலவியல் சூழலோடு இணைந்த பண்பாட்டு அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மலை, காடு, மேய்ச்சல் நிலம், வயல்வெளி ஆகிய இயற்கைச் சூழல்கள் ஒவ்வொன்றும் தனித்தொழில்களை உருவாக்கியுள்ளன. குறிஞ்சி நிலத்தில் வேட்டையாடுதல், தேன் சேகரித்தல், கிழங்கு தோண்டுதல், தினைச் சாகுபடி, மூங்கில் வளங்களைப் பயன்படுத்துதல் போன்ற தொழில்கள் காணப்படுகின்றன. முல்லை நிலத்தில் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி முக்கிய தொழில்களாக இருந்தன. மருதநிலத்தில் நெல் சாகுபடி, பாசன வேளாண்மை, பண்டமாற்று வணிகம் ஆகியவை வளர்ச்சி பெற்றிருந்தன.

இனிமை வாய்ந்த நறுமணம் பொருந்திய சிறுகுடில்களில் இருந்தனர் என்பதனை,

> **“தூவோடு மலிந்த காய கானவர்**
> **செழும்பல் யானர்ச் சிறுகுடிப் படினே”(மலைபடுகடாம்,** 155- 156)

எனும் அடிகளால் அறிய முடிகிறது. பாணர்கள் செல்லும் வழியிலே மூங்கில்களை அமைத்துப் புல்லால் வேயப்பட்ட குடில்கள் அமைந்திருந்த செய்தியை,

> **“அகலுள் ஆங்கண் கழி மிடைந்து இயற்றிய**
> **புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவீர்” (மலைபடுகடாம்,** 438 - 439)

எனும் வரிகள் முன்வைக்கின்றன .இங்கு மூங்கிலும், புல்லும் கட்டடக் கலைப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் மூங்கிலையும் புல்லையும் கொண்டு குடில் அமைக்கும் தொழிலைச் செய்துள்ளனர் என்பதும் புலனாகிறது.

பன்றிகளைப் பிடிக்கக் கற்பொறி அமைத்தல், விளைநிலங்களைக் காக்க உயர்ந்த பரண் அமைத்தல் போன்ற தொழில்நுட்ப அறிவும் சங்ககால மக்களிடம் இருந்ததை *மலைபடுகடாம்* பதிவு செய்கிறது. இதன்மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்திய அறிவியல் அணுகுமுறை அவர்களிடம் இருந்தது என்பதும் புலனாகிறது.

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கலை மற்றும் கலைஞர்கள்

கூத்தராற்றுப்படை இசை, நடனம் மற்றும் அரங்கேற்றக் கலையின் வளர்ச்சியைப் பதிவு செய்யும் நூலாகும். கூத்தர், பாணர், விறலியர் ஆகிய கலைஞர்கள் சமூகத்தில் உயர்ந்த இடம் பெற்றிருந்தனர். அவர்கள் வெறும் பொழுதுபோக்கு கலைஞர்களாக அல்லாமல், அரசருக்கும் மக்களுக்கும் இடையே பண்பாட்டு தொடர்பை ஏற்படுத்தியவர்களாக விளங்கினர். நூலின் தொடக்கத்திலேயே பல்வேறு இசைக்கருவிகள் விரிவாகக் குறிப்பிடப்படுகின்றன. முழவு, யாழ், குழல், தட்டை, தூம்பு, பதலை போன்ற இசைக்கருவிகள் அக்கால இசை மரபின் செழுமையை வெளிப்படுத்துகின்றன. இயற்கையில் கிடைத்த மரம், விலங்குகளின் தோல், கொம்பு போன்ற மூலப்பொருட்களைக் கொண்டு இக்கருவிகள் உருவாக்கப்பட்டிருந்தன என்பது சுற்றுச்சூழல் சார்ந்த கலைத்திறனை எடுத்துக்காட்டுகிறது. கூத்தர்களுடன் விறலியர்களும் இணைந்து மலைவழிகளில் பயணித்து கலைநிகழ்ச்சிகளை வழங்கியமை, பெண்களின் கலைப் பங்களிப்பை வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் சங்ககாலக் கலை வாழ்க்கை இயற்கை, சமூகம், அரசாட்சி ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது என்பது தெளிவாகிறது.

தொகுப்புரை

கூத்தராற்றுப்படை வெறும் ஆற்றுப்படை இலக்கியமாக மட்டுமல்லாமல், சங்ககாலத் தமிழரின் நிலவியல், சமூக மற்றும் பண்பாட்டு வாழ்க்கையைப் பதிவு செய்த வரலாற்று ஆவணமாகவும் விளங்குகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களின் இயற்கை அமைப்பு, அங்கு வாழ்ந்த மக்களின் உணவுமுறை, தொழில், குடியிருப்பு, சமூக உறவுகள் மற்றும் பண்பாட்டு மரபுகளை நேரடியாக வடிவமைத்துள்ளது. சங்ககால உணவுப் பண்பாடு இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட நிலைத்த வாழ்வியல் (Sustainable Lifestyle) சிந்தனையை வெளிப்படுத்துகிறது. தினை, வரகு, தேன், கிழங்கு, பால், நெல் போன்ற உணவுப் பொருட்கள் இயற்கைச் சூழலோடு இணைந்த வாழ்வியலை உறுதிப்படுத்துகின்றன. விருந்தோம்பல் சங்ககாலத் தமிழரின் உயரிய அறப்பண்பாக இருந்தது. குறவர், ஆயர், உழவர், கானவர் என சமூகப் பிரிவினரிடையே மனிதநேயம், பகிர்வு மற்றும் ஒற்றுமை நிலவியதை *கூத்தராற்றுப்படை* எடுத்துரைக்கிறது. வேட்டை, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தேன் சேகரித்தல், பண்டமாற்று வணிகம் போன்ற தொழில்கள் அனைத்தும்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

நிலவியல் சூழலை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதன் மூலம் இயற்கை வளங்களைப் பாதுகாத்து பயன்படுத்திய தொழில்நுட்ப அறிவும் சங்ககால மக்களிடம் இருந்தது என்பது புலனாகிறது. இசை, நடனம், கூத்து, இசைக்கருவி தயாரிப்பு போன்ற கலைகள் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்திருந்தன. இதன் மூலம் கலை, இயற்கை மற்றும் சமூக வாழ்வு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தமை வெளிப்படுகிறது. *கூத்தராற்றுப்படை* சங்ககால நிலவியல் பண்பாட்டை மட்டுமல்லாமல், இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலைத்த வளர்ச்சி, உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரிய வாழ்க்கைமுறைகளை ஆய்வு செய்வதற்கும் முதன்மையான இலக்கிய ஆதாரமாக அமைகிறது.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் தமிழரின் தொன்மையான பண்பாட்டு நினைவகங்களாக விளங்குகின்றன. அவற்றுள் *கூத்தராற்றுப்படை* நிலவியல் மற்றும் மனித வாழ்வியல் ஒன்றோடொன்று இணைந்திருந்த சங்ககால சமூகத்தை ஆழமாகப் பதிவு செய்துள்ள சிறப்புமிக்க நூலாகும். இந்நூலில் இடம்பெறும் மலைகள், காடுகள், ஆறுகள், வேளாண் நிலங்கள், குடியிருப்புகள், பயண வழிகள் ஆகியவை வெறும் இயற்கை வருணனைகளாக அல்லாமல், மனித வாழ்க்கையை வழிநடத்திய பண்பாட்டு அமைப்புகளாகச் சித்தரிக்கப்படுகின்றன. நிலம், தொழில், உணவு, விருந்தோம்பல், கலை, பொருளாதாரம், சமூக உறவுகள் ஆகிய அனைத்தும் இயற்கைச் சூழலை மையமாகக் கொண்டு அமைந்திருந்ததை *கூத்தராற்றுப்படை* தெளிவுபடுத்துகிறது. குறிப்பாக, மனிதனும் இயற்கையும் இணைந்து வாழும் நிலைத்த வாழ்வியல் சிந்தனையை சங்ககாலத் தமிழர் நடைமுறைப்படுத்தியிருந்தனர் என்பதையும் இந்நூல் உறுதிப்படுத்துகிறது.இன்றைய உலகளாவிய சுற்றுச்சூழல் நெருக்கடிகள், உணவுப் பாதுகாப்பு, பாரம்பரிய வேளாண்மை, உயிரியல் பன்முகத்தன்மை, நிலைத்த வளர்ச்சி போன்ற ஆய்வுகளின் பின்னணியில் *கூத்தராற்றுப்படையில்* பதிவாகியுள்ள நிலவியல் பண்பாட்டுக் கூறுகள் புதிய வாசிப்புகளுக்கும் பன்னாட்டுத் தமிழாய்வுகளுக்கும் வழிகாட்டுகின்றன. எனவே, இந்நூலை இலக்கியப் பார்வையில் மட்டுமன்றி பண்பாட்டியல், சுற்றுச்சூழலியல், மானிடவியல் மற்றும் வரலாற்றியல் கோணங்களிலும் தொடர்ந்து ஆய்வு செய்வது அவசியம்.


MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

துணைநூற்பட்டியல்

- இளம்பூரணர் (உரை.). *தொல்காப்பியம் - பொருளதிகாரம்*. சென்னை: கழக வெளியீடு.
- சாமிநாதையர், உ.வே. (பதி.). *பத்துப்பாட்டு - மூலமும் உரையும்*. சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம்.
- சுப்பிரமணியன், ச.வே. *சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு*. சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
- தமிழண்ணல். *சங்க இலக்கிய ஒப்பீடு*. மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.
- தனிநாயக அடிகள். *நில அமைப்பும் தமிழ்க் கவிதையும்*. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
- பக்தவச்சல ரெட்டி. *தமிழர் பண்பாடும் மரபும்*. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- கைலாசபதி, கா. *தமிழர் பண்பாடு*. சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- Hart, George L. *Poets of the Tamil Anthologies: Ancient Poems of Love and War*. Princeton University Press, 1975.
- Zvelebil, Kamil. *The Smile of Murugan: On Tamil Literature of South India*. Leiden: E. J. Brill, 1973.
- Subrahmanian, N. *Sangam Polity*. Chennai: Ennes Publications.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

09. 19-ஆம் நூற்றாண்டில் ஈழமும் தமிழும்



Prof.Thalinjan Murugaiya,Dept.of South Asia, University of Sorbonne Paris cité, INALCO, France
M.A. B. ED (University of India) MS(finance) ; MS (Linguistique) University of Sorbonne, Paris
Vice President of France Tamil Sangam,France (Estt.1970)
பேராசிரியர் தலிஞ்சன் முருகையா
தெற்கு ஆசிய நாடுகளின் மொழியியல் துறை
உலகமொழியல்மற்றும்பண்பாட்டுஆராய்ச்சிக்கழகம்,பாரீஸ், பிரான்ஸ்.
தமிழக அரசின் மொழியியல் விருதாளர் (2023)

DOI 10.5281/zenodo.21705779.

Abstract :

Scholars from Tamil Nadu and Eelam who lived during the 19th and early 20th centuries tended to discuss and write about ancient Tamil texts and poets through a lens steeped in mythology. Meanwhile, the modern world was reluctant to accept such mythological narratives as historical fact. To alter this situation, it was necessary to reconstruct the history of the Tamils and their poets–specifically, by organizing this information within a modern historical framework. Such a framework required situating specific texts or authors within a clearly defined chronological period. Scholars trained solely in Tamil were unable to undertake this task; it required individuals proficient in Tamil, English, and other languages. The scholar who pioneered this work was Simon Casie Chetty from Sri Lanka.

KeyWords : Eelam - Tamil Legends - Tamil Literature - Ancient Tamilnadu

தமிழகத்தின் பழங்காலம் பற்றிய செய்திகளை புராணத்தன்மையிலிருந்து வரலாற்று தன்மைக்கு மாற்றியமைத்து உலகுக்கு படைத்தவர்கள் ஈழத்தமிழ் அறிஞர்கள்

பழந்தமிழ்க் கல்வி, பழந்தமிழ் நூல் பதிப்புகள் போன்றவற்றில் இலங்கையைச் சேர்ந்த அறிஞர்களின் பங்களிப்பு பெரிய அளவில் இருந்துள்ளது. ஆனால் இன்றைய நிலையில் தமிழகத்தைச் சார்ந்த கல்வியாளர்களால் அறியப்பட்ட ஈழம்சார் அறிஞர்கள் மிகச்சிலரே.

19-ஆம் நூற்றாண்டிலும் 20 நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த தமிழகம், ஈழம் சார்ந்த கல்வியாளர்கள் பழந்தமிழ் நூல்களையும் தமிழ்p புலவர்களையும் ஒரு புராண மயமாக்கப்பட்ட் பார்வையில் தான், பேசியும் எழுதியும் வந்தனர். அதே நேரத்தில் நவீன கால உலகம் இத்தகைய புராண கருத்தோட்டங்களை, உண்மைகள் என்று உலகம் ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டியது. இந்த நிலமையை மாற்றியமைக்க வேண்டுமானால், தமிழ் வரலாற்றையும் தமிழ்ப் புலவர் வரலாற்றையும் மாற்றியமைக்க வேண்டும். அதாவது, இந்தச் செய்திகளை, நவீன வரலாற்றுப் பார்வையுனூடாக ஒர் ஒழுங்கு அமைப்புக்குள் கொண்டுவரவேண்டும். அந்த ஒழுங்கு அமைப்பு ஒரு குறிப்பிட்ட நூலை அல்லது குறிப்பிட்ட ஆசிரியரை ஒரு நிர்ணயமான காலகட்டத்தினுள் வைத்து வரையறைப்படுத்த வேண்டும். இத்தகைய செயலை **அன்றைய நிலையில் தமிழ் மட்டும் பயின்ற புலவர்களால் செய்ய இயலவில்லை. தமிழும் ஆங்கிலமும் மற்ற மொழிகளும் அறிந்த மனிதர்களால் மட்டுமே இத்தகைய பணியை செய்ய இயலும் என்ற நிலை இருந்தது**. இந்தப் பணியை முதலில் தொடங்கியவர் சைமன் காசிச் செட்டி என்னும் இலங்கையைச் சேர்ந்த அறிஞர் ஆவார். **1859**இல் வெளியிடபட்ட அந்நூலின் பெயர் **தமிழ் புளூராக்** என்பதாகும். இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. ஆயினும் அந்நூலிலுள்ள எடுத்துகாட்டுப் பாடல்கள் தமிழிலேயே உள்ளன. 197 தமிழ்ப் புலவர்கள் பற்றிய குறிப்புகளைக் கொடுக்கும் இந்நூலை **பேராசிரியர் கால்டுவெல்** தமது ஒப்பியலிலக்கண நூலின் பிந்திய பதிப்பில் உசாத் துணை நூற்பட்டியலில் சேர்த்து பெருமைத் தேடித்தந்தார் ஈழத்தமிழ் அறிஞருக்கு. இந்த புளூராக நூலை தமிழில் மொழி பெயர்த்தார் அ.சதாசிவம் பிள்ளை(JR Arnold) என்ற ஈழத்து அறிஞர். அதுமட்டுமல்லாமல், இந்த நூலிலுள்ள 169 புலவர்களின் வரலாற்றுடன் கூடுதலாக 214 புலவர்களின் வரலாறுகளை இணைத்து '**பாவலர் சரித்திர தீபகம்**' (The Galaxy of tamil poets) என்னும் புதிய நூலையே உருவாக்கி விட்டார். இந்நூல் 1886 இல் வெளியிடப்பட்டது. பாவலர் சரித்திர தீபகம் தமிழ் நெடுங்கணக்கின்படி புலவர்களை வரிசைப்படுத்தி கூறுகிறது. **பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்** என்ற நூலை எழுதிய மயிலை சீனி வேங்கடசாமி என்ற தமிழக அறிஞர் இவ்விரு நூல்களையும் பயன்படுத்திகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் சொல்லபோனால், தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்களுக்கு சங்க நூற்சுவடிகள் பல வற்றை கொடுத்துதவியர் ஈழத்தமிழ் அறிஞர் **கனகசபைப் பிள்ளை** என்பது குறிப்பிடத் தக்கது.. இவர் எழுதிய **ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்ற ஆங்கில நூல் 1904 இல் வெளியிடப்பட்டது.** அதற்கு முன்பே இந்த நூல் மெட்றாஸ் ரெவ்யூ பத்திரிகையில் 1896ல் தொடராக வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நூல் தமிழ் இலக்கியத்தின் தன்மைகளையும் தமிழ் கலாச்சாரத்தின் வரலாற்றையும் முறையாக பகுத்து எழுதப்பட்ட பெருமை இந்த நூலுக்கு சேரும். இந்த நூலின் மூலம்தான் இந்தியாவைச் சேர்ந்த மற்ற அறிஞர்களுக்குத் தமிழகத்தின் பழமையையும் தமிழ் நூல்களின் பெருமையையும் சுட்டிகாட்டிய முதல் நூலாகும். **சங்க காலம் பொற்காலம்** என்ற கருத்தை முதன் முதலில் கட்டமைத்ததும் இந்த நூல்தான் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட முடியும். இதிலுள்ள கட்டுரைகள், இதழ்களில்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

வெளியிடப்பட்டபோது, சங்க நூல்களில் பல அச்சிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கனகசபைப் பிள்ளையவர்கள் தம்மிடமிருந்த ஓலைச் சுவடிகளிலிருந்துதான் பழந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தம் நூலில் இணைத்துகொண்டார் என்பது கவனிக்க வேண்டிய செய்தியாகும்.

1912-இல் ஈழத்தைச் சேர்ந்த **விசுவநாதப் பிள்ளை** திருமந்திரத்தைத் தன்னுடைய குறிப்புரையுடன் பதிப்பித்து வெளியிடுகிறார். அந்த நூலுக்கு தமிழகத்தில் உள்ள வேதராண்யத்தைச் சேர்ந்த ரமண சாஸ்திரி என்பவர் ஒரு நீண்ட ஆராய்ச்சி முன்னுரை எழுதியுள்ளார். இன்றைய நிலையிலும் திருமந்திரம் பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கு ஒரு துணையாகவும் விவாதம் செய்பவர்களுக்கு ஒர் எதிரியாகவும் அந்த முன்னுரை நிலை கொண்டுள்ளது. 1920 வாக்கில் **மட்டுநகர் எஸ் பூபாலன் பிள்ளை** என்பவர் எழுதிய தமிழ் வரலாறு 24 பக்க முன்னுரையுடன் கூடிய 332 பக்க நூலாக வெளிவந்துள்ளது. பிரிட்டிஷ் மியூசியத்தின் தமிழ் நூல் பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்த நூலைத் தமிழறிஞர்கள் யாரும் பார்த்ததாகத் தெரியவில்லை. முதன் முதலாக **தமிழ் இலக்கிய வரலாறு** எழுதிய தஞ்சை சீனுவாசப் பிள்ளையின் நூலுக்கு ஒராண்டு முன்னதாகவெ ஈழத்தமிழர் பூபாலன் பிள்ளை எழுதிய தமிழ் வரலாறு என்ற நூல் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதே காலகட்டத்தில் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய ஐங்குறுநூற்றுக்கு ஈழத் தமிழறிஞர் ஒருவர் உரை எழுதியுள்ளார் அவர் பெயர் தெரியவில்லை அந்த உரை தி.சதாசிவ ஐயர் என்பவரைப் பதிப்பாசிரியராகக்கொண்டு வெளியிடபட்ட அந்நூலின் ஆசிரியர் யாரென்று தெரியவில்லை.. உ.வே சாமிநாதையர் வெளியீடாக வந்துள்ள ஐங்குறுநூற்றில் பழைய உரை இல்லாத பாடல்களுக்கும் இவர் உரை வரைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த உரை நூல் , தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர் ஔவை துரைசாமி பிள்ளை அவர்களின் ஐங்குறூனூறு விளக்க உரைக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே வெளிவந்த இந்த நூலின் உரை போக்கு குறித்து முனைவர் சிவலிங்கராஜா குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

1.துறை சுட்டி விளக்குதல் 2.பொருள் கூறுதல்.3 சொற்பொருள் விளக்கம் கூறுதல் 4.அகப்பொருள் விளக்கம் உரைத்தல் 5.மேற்கோள் காட்டுதல் 6. இலக்கண குறிப்பு தருதல் 7.பாட பேதம் சுட்டுதல் என்பன போன்ற அமசங்களை இந்த உரை கொண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இந்த நூலை உலகதமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1999 இல் வெளியிட்டுள்ளது.

பொன்னம்பலம் பிள்ளை என்பவர் வில்லிபாரதத்திற்கு எழுதியுள்ள உரை விளக்கம், திருவிளங்கம் என்பவர் சிவஞான சித்தியார் சுபக்கப் பகுதிக்கு எழுதியுள்ள பேருரை, நவ்நீதகிருஷ்ண பாரதியாரின் திருவாசக ஆராய்ச்சிப் பேருரை, பெரும்புலவர் சி.கணேசையர் தொல்காப்பிய உரைகளுக்கு வரைந்துள்ள விளக்கங்களும் ஆராய்ச்சி முன்னுரைகளும் ஈழத்தமிழ் புலவர்களில் முதன்மையானவராக சொல்லப்படுபவரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவருமான அரச கேசரி என்பவர் மொழிபெயர்த்த காளிதாசனின் இரகு வம்சத்திற்குக் கணேசையர் எழுதியுள்ள விளக்க உரையும் பண்டித சு.அருளம்பலவானரின் பதிற்றுபத்து ஆராய்ச்சி பேருரையும் திருவாசக

விரிவுரையும் 1966, 1973 ஆகிய ஆண்டுகளில் இரண்டு பாகங்களாக வெளிவந்தன, 1954 இல் நவநீத கிருஷ்ண பாராதியாரின் திருவாசக ஆராய்ச்சி பேருரையில் மாணிக்கவாசகரின் உண்மைப் பெயர் சிவபாத்தியா என்றும் நூல் முழுவதும் அகத்துறையைச் சார்ந்தது என்றும் குறிப்பிட்டார். மேலும் நா.சிவபாதசுந்தரனாரின் புறம்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சியில் புத்துரையும் குறிப்பிட்டுச் சொல்லதக்க ஈழத்து தமிழறிஞர்களின் தமிழ்பணியாகும்.

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து தமிழகத்தில் சூரியனார் கோவில் ஆதினத்தில் இருந்த இலக்கணத் தம்பிரான்(அவர் உண்மைப் பெயர் தெரியவில்லை)என்ற சைவத் துறவி மட்டும் இல்லா விட்டால் , தமிழில் உள்ள ஒரே பேருரை என்று சொல்லப்படும் **பாஷ்ய நூலாகிய சிவஞானப்போத மாபாடியம்** என்னும் சிவஞான முனிவரின் நூல் அச்சில் வராமலே மறைந்து போயிருக்கும் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழகத்தின் பழங்காலம் பற்றிய செய்திகளைப் புராணத் தன்மையிலிருந்து வரலாற்றுத் தன்மைக்கு மாற்றியமைத்ததில் ஈழத்தமிழ் அறிஞர்களுக்குப் பெரும் பங்கு இருப்பது போலப் பழந்தமிழர் இசைதான் இன்றைய கர்நாடக இசைக்கான மூலம் என்பதை நிறுவுவதில் பெரும்பங்காற்றிய **ஆபிரகாம் பண்டிதரைப்** போல, அவரை அடியொற்றித் தன் ஆய்வுகளை வளப்படுத்தியவர் ஈழத்தைச் சேர்ந்த அறிஞர் **சுவாமி விபுலானந்தர்**. அவருடைய யாழ் நூல் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையின் உள்ளே, யாழ் ஆசிரியன் அமைதி கூறும் 25 அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாகக் கருதத்தக்கது. அத்துடன் நரம்பின் மறை எனத் தொல்காப்பியரும் **இசையொடு சிவணிய யாழின் நூல்** எனக் கோங்குவேளிரும் குறிப்பிட்ட யாழ் நூல் பொருள் இருந்த இடம் தெரியாது மறைந்துவிட்ட இந்நாளிலே, சுவாமி விபுலானந்தர் தன்னுடைய நுண்ணறிவாலும் இசைப் புலமையாலும் அதனை மீட்டு தமிழர்களுக்கு அளித்தது பெருமையுடையாதாகக் கருததக்கது.

திராவிட சொற்பிறப்பு பற்றிய ஆராய்ச்சியில் முன்னின்று பணிபுரிந்த **கிறிஸ்துவ பாதிரியார் ஞானபிரகாசரும்** இலங்கையைச் சேர்ந்தவர்தான். இவர் யாழ்பாண வரலாறு பற்றிய நூலொன்றும் எழுதியுள்ளார்.

பழந்தமிழ் பதிப்புகளில் கவனம் செலுத்தும் தமிழக ஆய்வாளர்கள் ஈழத்து பதிப்புகள் குறித்து கவனம் கொள்வதில்லை. ஆனால் தமிழ் நூல் பதிப்பு வரலாறு ஈழத்து பதிப்புகள் இன்றி நிறைவு பெறமுடியாது. சில நூல்களுக்கு தமிழக பதிப்புகளைவிட ஈழப்பதிப்புகளே சிறந்தவையாக விளங்குகின்றன. அத்தகைய சிறப்புடைய ஈழப்பதிப்புகளில் ஒன்று தஞ்சை வாணன் கோவையாகும். பொய்யாமொழிப் புலவரால் இயற்றப்பட்ட தஞ்சை வாணன் கோவை 400 பாடல்களையுடையது. இந்தப் பாடல்களுக்கு குன்றத்தூர் அஷ்டவதானி சொக்கப்ப நாவலர் என்பவர் இயற்றிய உரையும் உண்டு. நூலைப் போலவே இந்த உரையும் புகழ் பெற்றது. ஆகையால் ஏட்டுச்சுவடிகளில் இந்த நூலும் உரையும் இணைத்தே எழுதப்பட்டிருக்கும்.

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

இது முதன் முதலாக 1893ல் திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களாலும் தெய்வசிகாமணி முதலியார் அவர்களாலும் ஒழுங்கு செய்யப்பட்டு ப.மு.செல்வராசு முதலியார் அவர்களால் சென்னை அமெரிக்கன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கபட்டது . பாடதிட்டத்தில் சேர்க்கபட்ட இந்நூல் கிடைப்பது அரிதாகிவிட்டதனால் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன் சபையாரால் 1936 இல் மீண்டும் அச்சிடப்பட்டது. அதன் பதிப்பாசிரியராகச் சென்னைப் பல்கலைகழகத்தில் வித்துவான் பட்டம் பெற்ற ந.சுப்பையா பிள்ளை என்ற யாழ்பாணத்து அறிஞர் பணிசெய்துள்ளார்.

பழந்தமிழ் நூல்களை மீட்டெடுப்பு செய்ததிலும் அவற்றைத் திருத்தமாகப் பதிப்பித்துத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டதிலும் முழுப்பெருமையும் பேரறிஞர் உ வே சாமிநாதய்யருக்கு மட்டும் உரியதல்ல,. பதிப்புத்துறையில் உ.வே. சாமிநாதயருக்கு முன்னோடியாக விளங்கியவர் ஈழத்தமிழர் சி.வை தாமோதரம் பிள்ளை (1832-1901) சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலையில் பட்டம் பெற்று அந்த மாநிலக் கல்லூரியிலே தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமையைப் பெற்றவர்.. பிற்காலத்தி ல் சட்டக்கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்று வழக்கறிஞராகப் பணியாற்றினார். ஈழத் தமிழ் அறிஞர்கள் மட்டுமே தாய் மொழியான தமிழ் மொழியில் மட்டுமல்லாமல் ஆங்கில மொழியிலும் புலமைபெற்று விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. சாமிநாதயரைவிட 23 வயது மூத்தவர். சாமிநாதயரின் மரணத்திற்கு 40 வருடத்திற்கு முன்னர் மரணித்தவர். சாமிநாதயரின் சிந்தாமணி பதிப்பு வெளிவருவதற்கு முன்னரே வீரசோழியம்(1881) இறையனார் அகப்பொருள்(1883) தணிகைப்புராணம் (1883), தொல்காப்பியப் பொருளதிகாரம் (1885) முதலிய சில முக்கிய நூல்களைப் பதிப்பிட்டு வெளியிட்டவர். அவற்றைத் தொடர்ந்து கலித்தொகை (1887) இலக்கண விளக்கம் (1889) , சூளாமணி (1889) தொல்காப்பிய எழுத்ததிகாரம் (1891) தொல்காப்பிய சொல்லதிகாரம் (1892) என்பவற்றை வெளியிட்டவர். '**தமிழ் நுல்களைப் பதிப்பித்தலில் சாமிநாதயருக்கு நிகரான பெயரும் புகழும் தாமோதரம் பிள்ளைக்கு உண்டு ' என்று கமில் ஸ்வலபில் (1973 :269) செக்கொஸ்லாவாக்கிய நாட்டைச் சேர்ந்த தமிழறிஞர் குறிப்பிடுகிறார்**.

« உ.வே. சாமிநாதயருக்கு வழிகாட்டியாகவும் சிலவழிகளில் அவருக்கு மேம்பட்டவராகவும் விளங்கியவர் தாமோதரம் பிள்ளை » எனக் கைலாசபதி (1986 :24) குறிப்பிடுகிறார்.

இதுவரை பார்த்துவந்த ஈழத்து அறிஞர்களின் தமிழ்த் தொண்டில் வைணவ நூல்களோ சமண பௌத்த நூல்களோ இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1860ல் வெளிவந்த ஆறுமுக நாவலர் பதிப்பித்த திருக்கோவையார் நூலின் இறுதியில். இனி வெளிவரும் பதிப்புகள் என்ற பட்டியலில் இடம் பெற்ற வளையாபதி என்ற சமண மதம் சார்ந்த தமிழ்க் காப்பியம் வெளிவராமலேயே காணாமல் போய்விட்டது. யாழ்ப்பாணத்து சூத்திரர்களான வெள்ளாளர்களின் பெருமை பரப்பும் நூல்கள் தவிர, மற்ற தமிழ் நூல்கள் என்பன, அவர்களால் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டாலும் அவர்களால் பதிக்கப்பட்ட நூல்கள் செம்மை குன்றாது இருந்தன. பழந்தமிழ் நூல்களை சுவடிகளில் இருந்து அச்சில் பதிப்பித்ததில் '**கால்கொண்டவர் ஆறுமுகநாவலர்**

(ஈழத்தமிழர்),சுவர் எழுப்பியவர் தாமோதரம், கூரைவேய்ந்து நிலையம் கோலியவர் உ.வே.சாமிநாதயர்' என தமிழறிஞர் திரு.வி.க குறிப்பிடுகிறார்.

தமிழ் செம்மொழி என்று அரசால் அங்கீகரிக்கப்பட்டபோதிலும் அந்தச் செம்மொழிக்கானத் தகுதியைப் பெற்றுத்தரும் பழந்தமிழ் நூல்கள் பல இன்றும் செம்பதிப்புப் பெறாத அவல நிலையிலேயே உள்ளன. இன்றைய மாணவர்கள் இதற்கு உயிரூட்டுவார்களா !

உசாத்துணை

1. கைலாசபதி (1986) ஈழத்து இலக்கிய முன்னோடிகள்
2. உ வே சாமிநாதயர் என் சரித்திரம் மூன்றாம் பதிப்பு (1990)
3. தாமோதரம் பிள்ளை (1971)
4. தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழர்களின் பெரு முயற்சி இரண்டாம் பதிப்பு
5. வையாபுரிப் பிள்ளை (1968)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

10. தமிழ்ச்சிறுகதைகளில் செவ்வியல் போக்கும் - நோக்கு நுட்பமும்

சு.தமிழ்ச்செல்வன்,
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,
திருவாரூர் - 610005.
மின்னஞ்சல் – vstamil481@gmail.com
தொடர்பு எண் – 9943779890

க.இரமேஷ்,
பேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,
திருவாருர் – 610005.

DOI 10.5281/zenodo.21722793.

Abstract :

The tradition of storytelling has long existed among Tamils and continues to this day in various forms; the short story is a particularly significant genre within this tradition. Sujatha and Mauni stand out as pivotal figures among Tamil short story writers. This article examines the depth of the short story genre through the lens of narrative theory, while also analyzing the distinct perspectives and creative prowess of the authors. Specifically, it explores *Kadavul Yanthiram* (The God Machine)—which draws upon a scientific background to advocate for human rationality—and *Azhiyachudar* (The Undying Flame), a story that delves into psychological complexities.

KeyWords : Short Stories – Azhiyachudar – Kadavul Yandhiram – Sujatha – Psychology

முன்னுரை

தமிழர் மரபில் கதை கூறும் மரபு என்பது தமிழரிடையே தொன்று தொட்டு தொடர்ந்து வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக இன்றளவும் பல்வேறு வடிவங்களில் அம்மரபு தொடர்கிறது. அவ்வகையில் சிறுகதை மிகமுக்கியமான வகையாகும். தமிழ்ச்சிறுகதை படைப்பாளிகளில் சுஜாதா, மௌனி மிக முக்கியமானவர்கள். அவர்களின் அறிவியல் பின்னணியை வைத்து மனிதனிடம் பகுத்தறிவினை போதிக்கும் 'கடவுள் இயந்திரம்' என்ற சிறுகதையையும். உளவியல் சிக்கலை எடுத்துப் பேசும் 'அழியாச்சுடர்' என்ற சிறுகதையையும். நோக்குக்கோட்பாட்டின் ஊடாக சிறுகதை செறிவுகளை விரிவாக ஆராய்வதுடன். கதைகளின் மாறுபட்ட கோணத்தையும், எழுத்தாளர்களின் செய்தல் வன்மையையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நோக்கு வளர்ச்சி

தொல்காப்பிய செய்யுளுறுப்புகளில் ஒன்றான நோக்கு. படைப்பாளனையும் படைப்பினையும் மதிப்பீடு செய்யும் கருவியாக செயல்படுகிறது. தொல்காப்பியம் அடுத்து வந்த இலக்கண நூற்களில் வீரசோழியம் அணியாக சுட்டுவதோடு, இயங்கு பொருள் நோக்கு, இயங்காப் பொருள் நோக்கென்று விளக்கி கூறுகிறது. உவமையின் பொருத்தப்பாடு, தலைவன், தலைவியோடு இணைத்துப்பார்க்கதக்கது. இயங்குப்பொருள் நோக்குவுமை தலைவனையும், இயங்காப்பொருள் நோக்குவுவமை தலைவியையும், சுட்டும் இடங்களைப் பொருத்தமுடைமை சிந்தனையுடன் ஆராயவல்லது._மாறனலங்காரம் என்ற இலக்கண நூல் பரிகர அணியாக நோக்கினை எடுத்து கூறுகின்றது.

உரைத்தது போன்று உறுதொனிப் பலதொடர்மொழி

நிரைப்பன இன்றியும் நிபுணர் நுட்பம் எனாஅ (மாறன்.நூ.233)

மாறனலங்காரம் சுட்ட கூடிய நிபுணர் நுட்பம் என்பது படைப்போனின் செய்தலை, பொருத்தப்பாடுடன் இணைத்து பார்க்கதக்கது. “பரிகரம் என்னும் அலங்காரம். இதற்கு நுட்பம் என்று பெயர் உண்டு. இது நோக்கு என்னும் யாப்புக்கால் தோன்றும் என்றும் காரணம் விட்டு நீங்காத நிலைமொழியில் உண்டாகிய ஐயத்தின், காரியம் விட்டு நீங்காது வருமொழி அதற்கு உரிமையெய்தப் பாதுகாக்குதிமுடையது. எனச் சொல்பற்றியே ஓதுவர்” (தொல் – கட்டுரைகள் – ப231) ஒரு சொல்லுக்கும் அடுத்த சொல்லுக்கும் உள்ள தொடர்பு பொருத்தமுடன் அமைவதோடு மட்டுமன்றி உவமையும் கதாபாத்திரங்களின் செயல், இடம், காலம், முதலியவையும் பொருத்தமுடன் அமைய வேண்டும்.

சிறுகதை இலக்கியத்தில் நோக்கு

சிறுகதைகளுக்கு வகுக்கப்பட்ட இலக்கணம் மட்டுமின்றி கதையின் போக்கு, காலத்தையும் நிலத்தினையும் அடிப்படையாக கொண்டு இயங்குகிறது. தொல்காப்பியர் கூறும் முதற்பொருள் முக்கியமாக சிறுகதையில் அமைகிறது. நோக்கு என்பது மதிப்பீடு செய்யும் கருவி மட்டுமன்றி படைப்பினை எளிமையாக வாசகனிடம் கொண்டுசேர்க்கும் உறுப்பு. நோக்கு உறுப்பு வழி ஒரு படைப்பினை ஆய்வு செய்யும் போது. படைப்பு(சிறுகதை) அடுத்த கட்டத்திற்கு நகர்கிறது, எனவே நோக்கு உறுப்பினை நவீன இலக்கியத்திற்கு ஏற்ப மாற்றம் செய்து ஆராகின்ற போது படைப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது. சுஜாதா அவர்களின் கடவுள் இயந்திரம் கதையின் சுருக்கமாக. கடவுளை ஒரு


EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

பெட்டிக்குள் அடைத்து விற்பனை செய்ய நினைக்கு ஒரு விஞ்ஞானி, விளம்பர நிறுவனத்திற்குச் செல்கிறார். அங்கு நடைபெறும் சுவரஸ்யமான உரையாடலே இக்கதையாகும்.

சுஜாதா	கடவுள் இயந்திரம்
அடிக்கருத்து	அவன் பறந்தானா? பறப்பானா?
மையம்	அவன் பறக்கவில்லை
உவமை	கடவுளின் தன்மைகள், மின்சாரத்தோடு கடவுளை ஒப்பிடுவது பொருத்தமாக அமைகிறது.
மரபு	கடவுளின் தன்மைகள்
உள்ளடக்கம்	கடவுள் பெட்டியின் செயல்பாடு + நித்யனின் செயல்
யாப்பு	உரை
திணை+களன்+காலம்	ஆறாவது மாடி+ பகல்/நிகழ்
கூற்று+கேட்போன்	ராகவானந்தம் = நித்யன்
பயன்+மெய்ப்பாடு	பகுத்தறிவு + நகை, மருக்கை
முன்னம்	விஞ்ஞானி – சாமானியன் உரையாடல்
எச்சம்	குறிப்பெச்சம் (அவன் பறக்கவில்லை)
பொருள்	இறைநம்பிக்கையின்மை, மனிதன் தன்னை கடவுளாக நினைத்துக் கொண்டு செய்யும் செயல்கள் நிறைவேறுமா?
வண்ணம்	பாஅ
வனப்பு	விருந்து

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கடவுள் இயந்திரம் இக்கதை பகுத்தறிவை போதிப்பதை மையமாகக் கொண்டும். கடவுள் பற்றிய பல கேள்விகளுக்கு விடை அளிப்பதாகவும், அறிவியலையும் ஆன்மீகத்தையும் ஒரு சேர ஒரு கதையாக்கி ஆன்மீகத்திற்கு அறிவியலின் ஊடாக விடை காண்பதாகவும். பக்தி சிந்தனைகளை கேள்விக்குள்ளாக்குவதாகவும் இச்சிறுகதை அமைந்துள்ளது. அதற்கு கதையின் காலம், இடம், மற்றும் கதாபாத்திரங்களின் சிந்தனை முதலியவை மையத்தை அடைய வழிச்செய்கிறது. குறிப்பாக பொருத்தப்பாடு இதனால் கதைகளை வாசிக்கும் வாசகர்களுக்கு மெய்ப்பாடும் பயனும் தோன்றுகிறது.





கருத்தலகு என்பது காலத்தை அடிப்படையாக வைத்து அமைகிறது. கதைமுழுவதும் நிகழ்காலத்தில் நகர்கிற போக்காக கருத்தலகு என்பது ஒருநோக்காக அமைந்துள்ளது. களம் ஆறாவது மாடி, ஒருகதைக்கு நிலம் என்பது மிக முக்கியமான அம்சம். இங்கே ஆறாவது மாடி இல்லாமல் முதல் மாடியிலும். நித்யன் கிருஷ்ணருக்கு பதிலாக புத்தரை கூறியிருந்தாள் மையத்தில் மாற்றம் நிகழ்ந்திருக்கும். எனவே நிலத்தினைப் பொருத்தே செயல். நிலம் ஒன்றாக இருப்பினும் பொழுதினைப் பொருத்து மனிதனின் தன்மை மாறுகிறது. இக்கதை காலை நேரம் அலுவலகத்தில் நிகழ்கிறது. மதியமோ மாலையோ நிகழ்ந்து இருப்பின் நித்யன் கடவுள் பெட்டியை சோதிக்காமல் இருந்திருக்க

வாய்ப்புள்ளது. எனவே ஒருகதையை அமைக்க நிலம்,பொழுது முக்கியமாக இருக்கிறது. அதுப்பொருத்தமுடன் அமைந்துள்ளது.

முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்

இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே(தொல் – அகம் 4)

முதலாக நிலம், பொழுது அமைவதைப்போல கருவாக கடவுள் அமைகிறார். கடவுள்களின் தன்மைகள் மரபாக மக்களின் தன்மையோடு அமைகிறது. இவற்றோடு கதையின் பாத்திரங்களும். பாத்திரத்தின் செயல்களும் அமைகின்றன.



இங்கே கூற்று தோன்ற உரையாடல் களத்திற்கு பொருந்தும் தன்மையோடு மையத்தை நோக்கி நகர்கிறது. இதுவரை கடவுள் குறித்த பேச்சும் அதன் தன்மையும். கடவுளை மனிதனுக்கு தலைமுறை தலைமுறையாக கடத்தும் புத்தகமும் கதைப்போக்கில் அமைகின்றது. கடவுள் சக்தி - மின்சார சக்தி (பொருத்தப்பாடு), இரண்டு பார்க்க முடியாதது. ஆனால் உணர்க்கூடியது. நல்லவரை காப்பதற்கு. கெட்டவரை அளிப்பதற்கு. நான் யுகங்கள் தோறும் அவதரிப்பேன் என்பதனைச் சோதித்துப் பார்த்தால். கடவுள் பிறப்பார், கடவுளாய் தன்னை உணர்ந்து கொண்ட மனிதன் எவ்வாறு பிறப்பான். கடவுளின் தன்மையானது காலங்கள் தோறும் தொடர்ந்து கடத்தப்படுகிறது. சிந்தனை என்பது எவ்வாறு தலைமுறை தலைமுறையாக கடத்தப்படுகிறது என்பதையும் இக்கதை நமக்கு உணர்த்துகிறது.


மௌனி அவர்களின் அழியாச்சுடர் சிறுகதை உளவியல் சிக்கலை பேசுவதாக, அகமரபினை பின்பற்றி தலைவன்,தலைவி,பாங்கன் பெயரினை குறிப்பிடாது அமைகிறது. அவளின் நினைவு என்பது, மனித மனம் நினைவுகளின் சுரங்கம். அவன், அவள், நான் என்பது அகத்திற்கே உரிய பெயர் சுட்டாத மரபும், அவன் நினைவுகளில் அவள் என்பது நிஜத்தில்(தற்காலத்தில்) அவளில்லை என்பதை வாசகருக்குக் கடத்துகிறது. அழியாத சுடர் = நினைவுகளின் தேக்கம், சிலநினைவுகள் அழிக்க முடியாது. இதற்குக் கதையின் வரிகள் கவிதைப்போக்குடன் அமைந்திருப்பதும். இயங்காத காரணிகளான

மரத்துடன் தலைவன் தன்னை ஒப்பிட்டு பேசும் போது மரம் வானத்தில் இல்லாததை தேடுகிறது என்ற இடத்திலும். தலைவியின் கண்கள் சுரங்கத்துடன் ஒப்பிடும் போதும் சிறுகதையை வாசிக்கும் வாசகர்களுக்கு மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறது.

மௌனி	அழியாச்சுடர்
அடிக்கருத்து	அவளின் நினைவு அழியாச்சுடராக
மையம்	அவன் மனதில் என்றும் அவள்
உவமை	மரம் – மனிதனோடு ஒப்பீடு
	கண்கள் - சுரங்கம்
மரபு	தலைவன், தலைவி ,பாங்கன்
உள்ளடக்கம்	காலத்தை மையமாக கொண்டு களம் மாறுகிறது
யாப்பு	உரை
திணை+களன்+காலம்	வீடு,கோவில்+ நிகழ்- இறந்தகால
கூற்று+கேட்போன்	தலைவன்(அவன்) + பாங்கன்(நான்)
பயன்+மெய்ப்பாடு	உளவியல் சிக்கல் + இளிவரல்,அழுகை
முன்னம்	நட்பு உரையாடல்
எச்சம்	குறிப்பெச்சம் (அவளின் நினைவு கற்பனை)
பொருள்	மனிதனின் நினைவுகள் உளவியல் ரீதியாக சிக்கலை தரக்கூடிய ஒன்று. அழியாச்சுடர் போன்ற நினைவுகள்?
வண்ணம்	பாஅ
வனப்பு	விருந்து

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறாஅர் - (தொல்.அகத். 54)



இக்கதையின் கருத்தலகு என்பது காலத்தை அடிப்படையாக் வைத்து அமைகிறது. கதைமுழுவதும் (நிகழ்காலம் – இறந்தகாலம் – நிகழ்காலம்) என்ற முறையில் அமைகிறது. களம் - நிகழ்காலம் வீட்டின் ஜன்னலோரம். இறந்த காலத்தில் ஈஸ்வரன் கோயில் சன்னதி, என்று களம் காலத்தை அடிப்படையாக கொண்டு அமைகிறது. ஒன்பது வருடங்களுக்கு முன்பு "ஈஸ்வரன் கோயில் சன்னதியில் தியானம் செய்தால் மீண்டும் என்னை பார்த்தால். அவள் பார்வையின் அர்த்தம் கெஞ்சுவது போல இருந்தது என்று நினைவு கூறும் தலைவன். என்ன வேண்டுமானாலும் உனக்காக என்று சொல்லி வந்தான்" இங்கே தலைவன் தன் மனதில் அழியாத நினைவாக, அவளின் நினைவோடு இருப்பதை. 'அழியாச்சுடர்' என்ற தலைப்புடன் அமைக்கிறார். அனையாத சுடர் என்று சொல்லாது. அழியாச்சுடர் என்று கூற காரணம், சுடராக அவள் அவனின் மனதில் வாழ்கிறாள். தற்போது அவன் வயது 22. ஒன்பது வருடம் முன்பு 13 வயது. அப்போதைய நினைவு, இன்று வர காரணம். "நேற்று அவளை மீண்டும் சந்தித்தான். அவள் என்ன சொன்னாள். அவள் பேசவில்லை எல்லாம் ஒரு கனவுதான்" அவனை காணும் அவன் எங்கே? என்றவிடத்தில் அவன் அவனாக இல்லை என்பதனை, நண்பன் மூலமாக வாசகனுக்கு ஆசிரியர் விளக்குகிறார். சங்க அககவிதையைப் போல களவு வாழ்க்கையை நவீன சிறுகதையின் வடிவில் செய்திருக்கிறார்.

முடிவுரை

தொல்காப்பியர் சுட்டக்கூடிய நோக்கு உறுப்பினை உரையாசிரியர்கள், இலக்கண ஆசிரியர்கள், கட்டுரையாளர்கள் முதலியோர் சுட்டி விளக்கியதன் அடிப்படையில் நோக்கு உறுப்பினை கோட்பாடக வரையறைச் செய்து அதற்கான கூறுகளை தொல்காப்பியம் அடிப்படையில் மட்டுமன்றி நவீனமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக களம், காலம், இரண்டும் நகரமயமாக மாறுவதுண்டு காலம் நவீன அறிவியல் யுகத்தின் பின்னணியில் அமையும் விதமாக கதைகளமும் கவிதை பொருண்மையும்

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

அமைவதுண்டு. மாறுதலோடு கூடிய மரபு வழி வருகையே பரிணாமம் என்ற டார்வின் கூற்றையும். மரபுநிலை திரியின் பிரிது பிரிதாகும் என்ற தொல்காப்பியத்தின் வழியில் இக்கோட்பாட்டுக்கூறுகள் அமைகின்றது. சிறுகதைகளில் இரு வேறுபட்ட மையத்தைக் களமாக கொண்ட கதைகளுக்கு. அதன் புறக்காரணிகள் எவ்வாறு வலுசேர்க்கிறது. என்பதனை கடவுள் இயந்திரம் - அவன் பறந்தானா? பறப்பான? மனிதன் தன்னை கடவுளாக நினைத்துக் கொண்டு செய்யும் செயல்கள் நிறைவேறுமா? என்பதனை எடுத்துச்சொல்வதாக கதையின் மையம் அமைந்துள்ளது. இதில் உவமையாக கடவுளும், கடவுளின் தன்மைகளும். சில கடவுள்சார் புத்தகமும் கூறப்படுகிறது. மேலும் கதாபாத்திரங்களின் பெயரின் அர்த்தமும் ஆராய்கிறப் பொழுது, அதுவும் படைப்பவனின் செய்தல் வன்மையை உணர்த்துகிறது. உவமையாக இயங்கு பொருள் தன்மைகள். அதன் மரபின் தொடர்ச்சியாக, (15) கடவுள் இயங்கும் ஆற்றல் மற்றும் அதன் தன்மைகள். அழியாச்சுடர் - அவன் அவனாக இல்லை(நினைவுகளின் தேக்கம்) என்பதனை எடுத்துச்சொல்வதாக, கதையின் மையம் அமைந்துள்ளது. இதில் உவமையாக மரத்துடன் தன்னை ஒப்புமை செய்வதாக கதை அமைந்துள்ளது, “ஆகாயத்தில் இல்லாத பொருளை கண்ணை மூடி கைவிரித்துத் தேடித்துழாவுவது போல தோற்றமளிக்கிறது மரம்” என்ற வரிகள் மனித மனத்தின் வெளிப்பாடாக அமைகிறது. மேலும் கதாபாத்திரங்களின் பெயர் குறிப்பிடாது, அகமரபினை ஏற்று அமைந்துள்ளது. அவன்(தலைவன்), நான்(பாங்கன்), அவனின் நினைவுகளில் அவள்(தலைவி). தொல்காப்பியர் சுட்ட கூடிய நோக்கு, அனைவரின் பார்வையில் ஆராய்ந்து வளர்ந்து நவீன இலக்கியங்களில் பொருந்தும் படியாக கோட்பாடாக இக்கட்டுரையில் வளர்த்தெடுக்கப் படுகிறது.

<u>துணைநூற்பட்டியல் :-</u>

1. சண்முகம். செ.வை – (2006,மு.ப),யாப்பும் நோக்கும் ,மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 608001,
2. சுஜாதா. விஞ்ஞானச்சிறுகதைகள், உயிர்மை பதிப்பகம்,சென்னை - 2007.
   சென்னை – 14,
3. திருஞானசம்பந்தம்.ச – (2020), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம்,திருவையாறு -613204,
4. பாலசுப்பிரமணியன்.சி – (1995,மு.ப),தொல்காப்பியக் கட்டுரைகள், பாரிநிலையம், சென்னை – 600108,
5. பேராசிரியம் – (2018,மு.ப),தொல்காப்பியம்,சாரதா பதிப்பகம்,

6. ராமகிருஷ்ணன்.எஸ் - (2023,இ.ப) 100 சிறந்த சிறுகதைகள் பாகம் – 1, தேசாந்திரி பதிப்பகம், சென்னை – 600093.
7. வீரசோழியம் – பெருந்தேவனாருரை – ஸ்ரீ லலிதா விலாச புத்தகசாலை,நல்லூர்,யாழ்ப்பாணம்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

11.தேவிபாரதியின் நாவல்களில் படைப்பாக்கக் கூறுகள்

ஆய்வாளர்

ஆ. ராஜலெட்சுமி, (PHDTAM25F035),
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,
கொடைக்கானல் - 624 101
முதுகலைத் தமிழ் உயராய்வு மையம்,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி
(தன்னாட்சி),பெரியகுளம் - 625 601
மின்னஞ்சல் - rajimtwu200@gmail.com,
தொலைப்பேசி எண் - 9486828371.

நெறியாளர்

முனைவர் ஜெ. அருள் இருதய ஜெயந்தி,
இணைப் பேராசிரியர்,
முதுகலைத் தமிழ் உயராய்வு மையம்,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி
(தன்னாட்சி),பெரியகுளம் - 625 601

DOI 10.5281/zenodo.21723015.

Abstract

Tamil literary creators employ various literary elements to highlight the excellence of their works and to convey their ideas; these elements can also be termed creative techniques. In crafting novels, they utilize grammatical elements alongside literary ones. In this context, the writer Devibharathi has conveyed his ideas in his novels by employing both literary and grammatical elements. This article examines how specific elementssuch as the use of foreign language expressions, single-letter designations, elliptical compounds, repetitive phrases, onomatopoeic reduplicatives, assonance, alliteration and title content alignment are employed in novels. Creative elements are key features that contribute to the effective crafting of a literary work. Creators employ various elements in their works such as the central theme, plot structure, characters, dialogue, setting, writing style, descriptive passages, emotional resonance, narrative techniques, and the conclusion. These elements lend sweetness to the language, depth to the ideas, and knowledge to the reader. These techniques capture the reader's attention, imprint the ideas in their mind, and enhance the artistic quality and appeal of the literary work. It is evident that such creative techniques constitute essential elements of a fine literary work.

Keywords

Technique, dialogue, language, sweetness, elegance.

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய படைப்பாளர்கள் தங்களின் படைப்பின் சிறப்பை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் கருத்துக்களை சுட்டிக்காட்டுவதற்கும் பல்வேறு இலக்கியக் கூறுகளை கையாள்வர். அக்கூறுகளை படைப்பாக்க உத்திகள் என்றும் கூறலாம். நாவல்களைப் படைப்பதற்கு இல்கியக் கூறுகளோடு சில இலக்கண கூறுகளையும் மேற்கொள்வர். அவ்வகையில் எழுத்தாளர் தேவிபாரதி தன் நாவல்களில் பல்வேறு இலக்கியக் கூறுகளோடு இலக்கணக் கூறுகளையும் பயன்படுத்தித் கருத்துக்களை எதுத்துரைத்துள்ளார். அக்கூறுகளில் வேற்றுமொழி உத்தி, பெயர் கூறும் ஓரெழுத்துகள் உத்தி, உம்மைத் தொகை உத்தி, அடுக்குத் தொடர் உத்தி, இரட்டைக்கிழவி உத்தி, எதுகை உத்தி, மோனை உத்தி, தலைப்புப் பொருத்த உத்தி ஆகிய கூறுகள் நாவல்களில் எவ்வாறு அமைந்துள்ளன என இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. படைப்பாக்கக் கூறுகள் என்பது ஒரு இலக்கியப் படைப்பை சிறப்பாக உருவாக்க உதவும் முக்கிய அம்சங்களாகும். படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளில் கதைக்கரு, நிகழ்வமைப்பு, கதாப்பாத்திரங்கள், உரையாடல், பின்னணி, மொழிநடை, வருணனை, உணர்ச்சிச் சுவை, உத்தி, முடிவு போன்ற படைப்பாக்கக் கூறுகளை பயன்படுத்துவர். மொழிக்கு இனிமையையும் கருத்துக்கு ஆழத்தையும் வாசிப்பாளருக்கு அறிவினையும் அளிக்கின்றன. இவ்வுத்திகள் வாசகரின் கவனத்தை ஈர்த்து, கருத்தை மனதில் நிலைநிறுத்தி, இலக்கியப் படைப்பின் கலைநயத்தையும் சுவையையும் மேம்படுத்துகின்றன. இலக்கியப் படைப்பாக்க உத்திகள் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பின் இன்றியமையாத கூறுகளாக அமைவதை அறிந்துகொள்ள முடிகிறது.

திறவுச் சொற்கள்

உத்தி, உரையாடல், மொழி, இனிமை, நயம்.

முன்னுரை

தமிழ் இலக்கிய படைப்பாளர்கள் தங்களின் படைப்பின் சிறப்பை வெளிப்படுத்திக் காட்டுவதற்கும் கருத்துக்களை சுட்டிக்காட்டுவதற்கும் பல்வேறு இலக்கியக் கூறுகளை கையாள்வர். அக்கூறுகளை படைப்பாக்க உத்திகள் என்றும் கூறலாம். நாவல்களைப் படைப்பதற்கு இல்கியக் கூறுகளோடு சில இலக்கண கூறுகளையும் மேற்கொள்வர். அவ்வகையில் எழுத்தாளர் தேவிபாரதி

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

தன் நாவல்களில் பல்வேறு இலக்கியக் கூறுகளோடு இலக்கணக் கூறுகளையும் பயன்படுத்திக் கருத்துக்களை எதுத்துரைத்துள்ளார். அக்கூறுகளில் வேற்றுமொழி உத்தி, பெயர் கூறும் ஒரெழுத்துகள் உத்தி, உம்மைத் தொகை உத்தி, அடுக்குத் தொடர் உத்தி, இரட்டைக்கிழவி உத்தி, எதுகை உத்தி, மோனை உத்தி, தலைப்புப் பொருத்த உத்தி ஆகிய கூறுகள் நாவல்களில் எவ்வாறு அமைந்துள்ளன என இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

படைப்பாக்கக் கூறுகளின் விளக்கம்

படைப்பாக்கக் கூறுகள் என்பது **“ஒரு இலக்கியப் படைப்பை சிறப்பாக உருவாக்க உதவும் முக்கிய அம்சங்களாகும். படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளில் கதைக்கரு, நிகழ்வமைப்பு, கதாப்பாத்திரங்கள், உரையாடல், பின்னணி, மொழிநடை, வருணனை, உணர்ச்சிச் சுவை, உத்தி, முடிவு போன்ற படைப்பாக்கக் கூறுகளை பயன்படுத்துவர்” (அரங்கராசு.சு, தமிழ்ப்புதுக்கவிதை ஒரு திறனாய்வு, ப.எ - 124)** என அரங்கராசு.சு தன் திறனாய்வு நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கதைக்கரு என்பது படைப்பின் மையக் கருத்து அல்லது நோக்கம் ஆகும். நிகழ்வமைப்பு என்பது நிகழ்வுகள் ஒன்றோடொன்று தொடர்புபட்டு அமைவது. கதாப்பாத்திரங்கள் என்பது கதையை முன்னெடுத்துச் செல்லும் மனிதர்கள் அல்லது பிற உயிரினங்கள். உரையாடல் என்பது கதாப்பாத்திரங்களின் பேச்சு, அவர்களின் குணநலன்களை வெளிப்படுத்தும். பின்னணி என்பது கதை நடைபெறும் காலம், இடம், சமூகச் சூழல். மொழிநடை என்பது ஆசிரியர் பயன்படுத்தும் மொழியின் தனித்துவம் மற்றும் நடை. வருணனை என்பது இடம், இயற்கை, மனிதர்கள், நிகழ்வுகள் போன்றவற்றைச் சித்தரிக்கும் முறை. உணர்ச்சிச் சுவை என்பது மகிழ்ச்சி, துயரம், நகைச்சுவை, வீரம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துதல். **உத்திகள் என்பது குறியீடு, உருவகம், உவமை, முரண்பாடு, முன்னறிவிப்பு போன்ற கலைநய உத்திகள்.** முடிவு என்பது படைப்பின் நிறைவு. அது சிந்தனையைத் தூண்டுவதாகவோ, கருத்தை வலியுறுத்துவதாகவோ அமையும்.

இவை அனைத்தும் இணைந்து ஒரு இலக்கியப் படைப்பை முழுமையானதாகவும், வாசகர்களை ஈர்க்கக்கூடியதாகவும் மாற்றுகின்றன. மேற்கண்ட படைப்பாக்கக் கூறுகளில் ஒன்றான உத்திகள் பல்வேறு வகைகளை உள்ளடக்கியது. அவற்றில் ஒருசில உத்திகளை மட்டும் தேவிபாரதி அவர்களின் படைப்புகளில் அமைந்துள்ள விதத்தினைக் காணலாம்.

வேற்று மொழி உத்தி

படைப்பாசிரியர்கள் தங்களுடைய படைபுகள், வாசகர்களைக் கவரவும் அவர்களுக்குத் தெளிவாகக் கதைக்கருவை விளங்க வைக்கவும் எளிமையாகப் புரியவைக்கவும் எளியச்சொல் நடைப்போக்கைப் பயன்படுத்துவது இயல்பு. படைப்பாளர் ஒருவர் தமிழில் தன் படைப்பை உருவாக்கும் போது சில இடங்களில் ஆங்கிலம், மலையாளம் போன்ற பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துவர். அவ்வகையில் ஆசிரியர் தேவிபாரதி, நாவல்களில் ஆங்கில மொழியைப் பயன்படுத்தியுள்ளதைக் காணலாம்.

வேற்றுமொழி என்பது புரிதலை வெளிப்படுத்து என்றும் இயல்பான கலப்பு மொழி என்றும் தேவிபாரதி சுட்டுகிறார். 'நிழலின் தனிமை' நாவலில் 'பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரான கருணாகரன் என்பவன் ஒரு நாள் பள்ளிக்கு வந்தான். ஆசிரியர் மற்றும் மாணவர்களின் தனிப்பட்ட குறைகளையும், முறையீடுகளையும் கேட்டறிந்தான். அப்போது அவன் **"இந்த வாரம் மெட்ராஸ் போறெ மினிஸ்ட்டர்கிட்ட ஏற்கனவெ சொல்லீருக்கறெ. அதுக்கென்ன மாப்பள நம்பு ஸ்கூலுக்குச் செய்யாம வேறு ஆருக்குச் செய்ய போறம்னாரு" என்று தலைமை ஆசிரியரிடம் கூறியதைக் கூறுவதாக அமைந்துள்ளது. தலைமை ஆசிரியர், "எதற்கும் ஒரு ரிப்போர்ட் ரெடி பண்ணிச் சாயந்தர கிளார்க்கிட்டக் குடுத்துடுங்கோ. கிளர்க் ஜாயின் பண்ணியாச்சு? போன வாரமே பில்அப் பண்ணிப் புடறன்னாரே டிஈஓ" என்று தன்னைச் சுற்றி இருந்தவர்களிடம் கூறினார்(நிழலின் தனிமை,ப.**17). இவற்றில், மினிஸ்ட்டர், ஸ்கூல், ரிப்போர்ட், கிளார்க், ஜாயின், டிஈஓ போன்ற ஆங்கில வார்த்தைகளைத் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு நாவலில் வேற்றுமொழி கூறினை ஆசிரியர் கையாண்டுள்ளார்.இதே போன்று, பல கதைச் சூழலில் தனது மற்ற நாவல்களான 'நட்ராஜ் மகராஜ்' நாவலில் **'பென்ஷன், கிராஜுவிட்டி, பிஎப், ஹெல்ப்' ஆகிய சொற்களையும், 'நர்சிங் ஹோம், டாக்டர், ட்ரீட்மெண்டு, ஆயில் எஞ்சின், ரியல் எஸ்டேட் பிஸினஸ்'**என்ற சொற்களை 'நீர்வழிப் படூஉம்' நாவலிலும் (**நீர்வழிப் படூஉம்,பக்.எ-** 45 **முதல்** 48**வரை) "எஸ் இட்....? என நிமிர்ந்து உட்கார்ந்தார். வக்கீல் பிறகு குமரப்பப் பண்டிதனைப் பார்த்து "ஹேய் யூ எவர் மெட் ஹிம்?" எனச் சுத்தமான பிரிட்டன் இங்கிலீஷில் கேட்டார். மேலும் "ஐ விஸ்டு ஹேவ் எ கிளிம்ப்ஸ் ஆப் தட் ஸெயின்ட் சேஷய்யர்"என்றார் வக்கீல்**, என 'நொய்யல்' நாவலிலும்(**நொய்யல்**

- ப.எ-83) கதைச் சூழலுக்கு ஏற்ப வேற்றுமொழியைப் பயன்படுத்தியுள்ளார் ஆசிரியர். வேற்றுமொழியின் பயன்பாடு, படைப்பின் கருத்தை தெளிவாகவும் வலிமையாகவும் வெளிப்படுத்த உதவுகிறது. கதாபாத்திரங்களின் கல்வி, சமூகப் பின்னணி போன்றவற்றை இயல்பாகச் சித்தரிக்கிறது. படைப்பிற்கு யதார்த்த உணர்வையும் நம்பகத்தன்மையையும் வழங்குகிறது. பிற மொழிகளின் சொற்கள் மற்றும் கருத்துகளை அறிமுகப்படுத்தி வாசகரின் அறிவைப் பரப்புகிறது. இலக்கியத்தின் மொழிநடை, அழகு மற்றும் வெளிப்பாட்டுத் திறனை மேம்படுத்துகிறது. பல்வேறு மொழி மற்றும் பண்பாட்டு மரபுகளுக்கிடையே புரிதலையும் தொடர்பையும் வளர்க்கிறது.

பொயர் கூறும் ஓரெழுத்து உத்தி

ஓரெழுத்து உத்தி என்பது படைப்பாளர்கள் வெளிப்படையாக கூற முடியாத ரகசிய குறிப்பு என்றும் படைப்பின் ரகசிய அழகு மற்றும் வாசிப்பாளரின் ஆர்வதின் தூண்டல் என்றும் தேவிபாரதி விளக்கம் கொடுத்தார்(தேவிபாரதி அவர்களை 06.11.2025 (வியாழன்) அன்று நேர்காணல் செய்தபோதுக் கிடைக்கப்பெற்றத் தகவல்).

இலக்கியப் படைப்பாளர்கள் வாசகர்களை ஈர்க்கவும் சுவாரஸ்யத்தை உணரவைக்கவும் ஓரெழுத்து உத்தியை மேற்கொள்வர். இதனை குறியீட்டு உத்தி என்றும் கூறலாம். ஓரெழுத்து உத்தி என்பது ஒரு எழுத்து ஒரு சொல்லாகத் தோன்றி ஒரு பொருளக அமைவதாகும். தமிழில் 42 எழுத்துக்கள் ஒரு சொல்லாகவும் பொருளாகவும் உள்ளது. இதனை தொல்காப்பியத்தில்,

நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி (தொல், எழுத்ததிகாரம், நூ.43)

குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே (மேலது,நூ.44

ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொருமொழி (மேலது,நூ.45)

என்று ஓரெழுத்து மொழியைப் பற்றி தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் விளக்கியுள்ளார்.

அ -அழகு,சிவன்(வர்த்தமானன்,தமிழ்-தமிழ்அகராதி,ப.1),

ஆ - பசு,வினா(முன்னது,ப.94), ஈ -தேனீ, அழிவு, அம்பு(முன்னது,ப.163),

பூ- மலர் (முன்னது,ப.755) என்று வர்த்தமானன் தமிழ் அகராதி, ஓரெழுத்திற்கு பொருள் தருகிறது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

'நட்ராஜ் மகராஜ்' நாவலில் '943 **மாணவர்கள் பயிலும் 'தா' என்னும் கிராமத்தில் உள்ள அரசு பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக 'ந' என்பவன், 1802 ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியரால் 'ச' என்ற மலைநகரில் சாலையோரம் புளியமரத்தில் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட மாவீரன் 'காளிங்க நடராஜ' மகாராஜாவின் உயிருள்ள நேரடியான ஒரே வாரிசு என்பதை தெரிந்துகொண்ட போது, கி.பி 1999 ஆண்டுகளும் நான்கு மாதமும் ஒன்பது நாளும் கடந்திருந்தது. இரண்டு வாரத்திற்கு முன் பள்ளிக்கு கோடை விடுமுறை தொடங்கியது. 'ந' தனது இரு குழந்தைகளையும் 'செ' என்னும் நகரில் வசிக்கும் தன் மைத்துனர் வீட்டுக்கு அனுப்பிவிட்டு 'வ' என்ற தனது மனைவியோடு 'ஓ' என்னும் பெயரை உடைய சிறிய கிராமத்தில் இலவச தொகுப்பு வீடு கட்டும் பணியை தொடங்கினார்(நட்ராஜ் மகராஜ்,ப**.17). இதில் 'ந' என்ற எழுத்து நாவலின் முதன்மைப் பாத்திரத்தின் பெயராகவும் தா, ஓ என்ற எழுத்துகள் கிராமத்தின் பெயராகவும் செ,சா என்ற எழுத்துக்கள் நரகத்தின் பெயராகவும் 'வ' என்ற எழுத்து பெண் கதைப்பாத்திரத்தின் பெயராகவும் அமைந்து பொருள் தருகிறது. இது போன்று பல ஓரெழுத்துக்களைச் சொல்லாகக் கொண்டு கதைப்பின்னல்களுக்கு ஏற்ப பொருள் தரும் ஓரெழுத்து திறனை நாவல் முழுவதும் பயன்படுத்தியுள்ளார்.

படைப்பில் இதுபோன்ற ஓரெழுத்தின் பயன்பாடு வாசிப்போருக்கு ஒரு எழுத்தின் பின் இருக்கும் உண்மையானப் பெயர் என்ன? அந்த அசல் கதாப்பாத்திரம் யார்? என்று தெரிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. இலக்கியப் படைப்புகளில் ஒரே எழுத்துப் பெயர் கொண்ட கதாப்பாத்திரம் என்பது அரிதான ஒரு உத்தி. ஒரு எழுத்துப் பெயர் வாசகரின் மனதில் எளிதில் பதியும். அந்தப் பெயர் ஒரு குறிப்பிட்ட கருத்து, உணர்வு அல்லது அடையாளத்தைச் சுட்டும் குறியீடாக அமையும். முழுமையான பெயருக்குப் பதிலாக ஓரெழுத்து பயன்படுத்தப்படுவதால், அந்தக் கதாப்பாத்திரத்தைப் பற்றி வாசகருக்கு ஆர்வம் உருவாகும். குறிப்பிட்ட ஒருவரை அல்லாமல், ஒரு சமூகத்தையோ மனித இயல்பையோ பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரமாக அமையலாம். ஆசிரியரின் தனித்துவமான படைப்பாற்றலையும், சுருக்கமான வெளிப்பாட்டையும் எடுத்துக்காட்டும். எனவே, ஓரெழுத்து கொண்ட கதாப்பாத்திரம் என்பது பெயரின் சுருக்கம் மட்டுமல்ல, அது கதையின் கருத்தை ஆழப்படுத்தவும், வாசகரின் கவனத்தை ஈர்க்கவும் பயன்படும் ஒரு இலக்கிய உத்தியாகக் கருதப்படுகிறது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

உம்மைத் தொகை உத்தி

உம்மைத் தொகை என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்களுக்கு இடையில் அல்லது இறுதியில் ‘உம்’ என்னும் சொல் மறைந்து வருவது ஆகும். இலக்கியப் படைப்புகளில் கதாப்பாத்திரங்களின் உரையாடல்களில் குறிப்பிட்ட சமூகத்தின் மொழியை வெளிப்படுத்தும் போது அம்மொழியின் சிறப்பினை வெளிக்காட்டுவதற்கு இயல்பாகவே உம்மை தொகை இதனை ஆசிரியர் நாவலில்,

“நன்மதிப்பும் கருணையும்”(நீர்வழிப் படூஉம்,ப.45)

“மயிரும் சோப்புநுரையும்”(முன்னது, ப.44)

“கம்பும் சோழமும்”(முன்னது,ப.42)

“சாராயமும் கள்ளும்”(நீர்வழிப் படூஉம், ப.43)

ஆகிய சொற்கள் வழி ‘உம்’ என மறைந்து வரும் உம்தொகை உத்தியை கையாண்டுள்ளார்.

மேலும், ‘நட்ராஜ் மகராஜ்’ நாவலில் **“அவுங்களுக்குமு நம்புளுக்குமுஎன்ன தொடுப்பாமா? (நட்ராஜந மகராஜ், ப.178)”** என்ற வரிகளில் **அவுங்களுக்கும் நம்பளுக்கும்** ஆகிய பொருண்மைகளில் இரு சொல்லின் இறுதியில் ‘உம்’என்ற உச்சரிப்பு மறைந்து வரும் உம்மைத்தொகை உத்தியை ஆசிரியர் நாவலில் பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. உம்மைத் தொகை உத்தி கருத்தை சுருக்கமாகவும் செறிவாகவும் வெளிப்படுத்த உதவுகிறது. செய்யுளின் ஓசைநயத்தையும் இனிமையையும் அதிகரிக்கிறது. சொற்களுக்கு இடையே இயல்பான தொடர்பை உருவாக்குகிறது. கருத்தை வலிமையாகவும் அழகாகவும் எடுத்துரைக்கிறது. மொழிக்கு எளிமை, சுருக்கம் மற்றும் கலைநயம் அளிக்கிறது. எனவே, உம்மைத் தொகை உத்தி இலக்கியப் படைப்பில் மொழிச் செறிவு, ஓசைநயம், சுருக்கம் மற்றும் கருத்துத் தெளிவு ஆகியவற்றை மேம்படுத்தும் ஒரு சிறந்த உத்தியாக அமைந்துள்ளது.

அடுக்குத் தொடர் உத்தி

ஒரு சொல் இரண்டு, மூன்று முறை தொடர்ந்து அடுக்கி வந்து, பிரித்தால் பொருள் தருவது அடுக்குத் தொடர் எனப்படும். இதனை,

'நீர்வழிப் படூஉம்' நாவலில், **கடசி கடசி(ப.25), மாறி மாறி(ப.56), வெடிய வெடிய(ப.137)** ஆகிய சொற்களும்

'நட்ராஜ் மகராஜ்' நாவலில் **ஐஸ்ஸேய் ஐஸ்ஸேய்(ப.251), பம்பாய்மிட்டாய் பம்பாய்மிட்டாய், பொரிகடல பொரிகடல(ப.278)** போன்ற அடுக்குத்தொடர் சொற்களை நாவல்களில் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலக்கியப் படைப்பில் அடுக்குத் தொடர் உத்தி கருத்தை வலிமையாகவும் அழுத்தமாகவும் வெளிப்படுத்த வாசகரின் கவனத்தை ஈர்க்கிறது. உணர்ச்சிகளை தீவிரமாக வெளிப்படுத்தி மொழிக்கு ஓசைநயம் மற்றும் இசைநயம் அளிக்கிறது. கருத்து மனதில் எளிதில் பதிய உதவுகிறது. படைப்பிற்கு அழகும் கலைநயமும் சேர்க்கிறது. எனவே, அடுக்குத் தொடர் உத்தி, கருத்தை வலியுறுத்தி, உணர்ச்சியை ஆழமாக வெளிப்படுத்தி, இலக்கியப் படைப்பின் மொழிநயத்தையும் தாக்கத்தையும் அதிகரிக்கும் உத்தியாகும்.

இரட்டைக்கிளவி உத்தி

இரட்டைக்கிழவி என்பது பிரித்தால் பொருள் தராமல் இரு சொல் ஒன்றி ஒரே பொருள் தருவது ஆகும். உதாரணமாக **'கல கல வென சிரித்தாள்'** இதில் 'கல கல' என்ற சொல் இரட்டைக்கிழவியாக அமைந்துள்ளது. இதே போன்று,

'நீர்வழிப் படூஉம்' நாவலில் செலம்பா என்பவள் மழை காலத்தில் இரவில் வீட்டினுல் உறங்கிக் கொண்டிருந்த போதுக் குளுரால், "ஒடம்பு **கிடுகிடுன்னு நடுங்கிக்கிட்டிருந்தது**"(**நீர்வழிப் படூஉம்,ப.71)** என்றும் "அந்தப் பள்ளி மாணவி எதிர்பார்த்ததைவிட அதிகச் "**சுறுசுறுப்பானவளாகத்"** (**மேலது,ப-84)** தெண்பட்டாள் என்றும்

'நட்ராஜ் மகராஜ்' நாவலில் "பொம்மையின் கால்களில் இருந்த சலங்கையை இழுத்து **"ஜல் ஜல்"எனச் சத்தமெழுப்பினா**"(**நட்ராஜ் மகராஜ், ப.256)** என்றும் "ஏழெட்டு வயதுடைய சிறுவனொருவன் பூவரசு இலையில் ஊதல் செய்து **"பீப்பீப்பீப்" எனச்சத்தமெழுப்பிக் கொண்டிருந்தான்" (மேலது,ப.257)** என்றும் நாவல்களில் 'கிடு கிடு, சுறு சுறு, ஜல் ஜல், பீப்பீப்பீப்' ஆகிய சொற்களைக் கொண்டு இரட்டைக்கிழவி உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளதை அறியமுடிகிறது. இவ்வுத்தி முறை ஒரு செயலின் முழுமையை தருகிறது. மொழிக்கு ஓசைநயமும்

இனிமையும் கொடுத்து, நிகழ்வுகள் மற்றும் ஒலிகளை உயிரோட்டமாகச் சித்தரிக்கிறது. வாசகரின் கற்பனைத் திறனைத் தூண்டுகிறது. கருத்தை தெளிவாகவும் தாக்கமிக்கதாகவும் வெளிப்படுத்தி இலக்கியப் படைப்பின் அழகையும் கலைநயத்தையும் உயர்த்துகிறது. எனவே, இரட்டைக் கிளவி உத்தி, ஒலி மற்றும் உணர்ச்சியை இயல்பாக வெளிப்படுத்தி, இலக்கியப் படைப்பை உயிரோட்டமிக்கதாகவும் சுவைமிக்கதாகவும் மாற்றும் சிறந்த உத்தியாகும்.

எதுகை உத்தி

செய்யுள்கள், கவிதைகள், குறள்கள், வசனங்கள் போன்றவற்றில் அடுத்தடுத்த அடிகளில் அல்லது சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும். உதாரணமாக,

“கற்க கசடறக் கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்குத் தக”(குறள் - 391).

இத்திருக்குறளின் முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் முதல் சீரின் இரண்டாம் எழுத்தான ‘ற்’ ஒன்றி வந்து எதுகையாக அமைந்துள்ளது.

‘நொய்யல்’நாவலில், அருக்காணி என்பவள், அனைவருக்கும் காக்கா, குருவி கதையைப்பாடலாகப் பாடிகதைக் கூறுவாள். ஒரு நாள் அதிகமாக மழை பொழிகிறது. அம்மழையில் நனைந்த காக்கை, குருவியின் வீட்டில் அடைக்கலம் கேட்பதாகவும் அதற்கு குருவி பதில் கூறுவதாகவும் கதைப் பாடல் அமைந்துள்ளது. அப்பாடலில் இடை இடையில் எதுகை உத்தி அமைந்துள்ள வரிகளை மட்டும் காணலாம்.

....
புள்ளைங்களக் குடுக்க முடீமா?
தள்ளுங்கதவ நீக்கமாட்டெ.....
ஏழாமிளங்குருத்த எறும்பு வந்து கடிக்குமுன்னு
ஏழாவதடுக்குக்குள்ள.......
இருக்குதக்கா எங்கூடு
ஒரு ரவைக்கு உங்கூடு......
மறுக்காமக் குடு அக்கா(நொய்யல் - பக்.352 முதல் 354 வரை).

இவ்வடிகளின் முதல் சீரின் இரண்டாம் எழுத்துக்களான ‘**ள், ழா, ரு**’ஆகிய எழுத்துக்கள் இரண்டு இரண்டு அடிகளில் ஒன்றி வரும்படி எதுகை உத்தியை பயன்படுத்தி பாடலை படைத்து

கருத்துக்களை கூறியுள்ளார் ஆசிரியர். எதுகை உத்தி, உச்சரிப்பதற்கு எளிமையாகவும் கருத்தை எளிதில் மனதில் பதியவைக்கவும்

மோனை உத்தி

மோனை என்பது செய்யுளின் முதல் எழுத்து ஒன்றி வருவது ஆகும். அடிமோனை, சீர்மோனை என மோனை இரண்டு வகைப்படும். ஒவ்வொரு அடியின் முதல் எழுத்து ஒன்றி வருவது அடிமோனை. ஒரு அடியின் அனைத்து சீர்களின் முதல் எழுத்து ஒன்றி வருவது சீர்மோனை எனப்படும். உதாரணமாக,

“செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்(குறள்-26).

என்ற குறளில்‘**செ**’என்ற எழுத்து முதல் அடியின் முதல் எழுத்தாகவும், இரண்டாம் அடியின் முதல் எழுத்தாகவும் ஒன்றி வந்து அடி மோனை உத்தியாக அமைந்துள்ளது.

நொய்யல் நாவலில் காக்கையின் வேண்டுகோளுக்கு, குருவி மறுப்பு தெரிவிப்பதாக அமைந்துள்ள பாடலை காண்போம்.

“கருங்காக்கா தப்புச்சுக்கு
கண்டபக்கம் படுத்துக்கு
கதவ நா தொறக்க மாட்டே
காக்காயே நிக்காத”(நொய்யல்-ப.355).

இப்பாடலில், நான்கு அடிகளின் முதல் எழுத்தான ‘**க**’ ஒன்றி வரும்படி அடி மோனை உத்தி அமைந்துள்ளமையை அறியமுடிகிறது. இலக்கியப் படைப்புகளில் மோனை உத்தி வாக்கிய நடை அமைப்பையும் கருத்து விளக்கத்தையும், உச்சரிப்பின் ஓசை அழகையும் வெளிப்படுத்துகிறது.

தலைப்புப் பொருத்த உத்தி

நான்கு நாவல்களின் தலைப்பும் நாவல்களின் மையக் கருத்தினை முழுமையாக வெளிப்படுத்தும் தலைப்புகளாகும். நாவலின் கதையும் தலைப்பும் முழுமையான பொருத்தம் உடையவை என்று கூறியுள்ளார்(தேவிபாரதி அவர்களை 06.11.2025 (வியாழன்) அன்று நேர்காணல் செய்தபோதுக் கிடைக்கப்பெற்றத் தகவல்).

ஒரு கதையின் தலைப்பு அக்கதையின் முகப்புக்குச் சமம். தலைப்புக்கும் கதைக்குள் இருக்கும் செய்திகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உடையனவாக அமைந்திருக்க வேண்டும். பெரும்பாலான கதைகளில் கதைமாந்தர்களின் பெயர்களைக் கொண்டு கதை அமைந்திருக்கும். சில கதைகளில் தலைப்புக்கு ஏற்ப கதைப்பின்னல்கள் அமைந்திருக்கும் (நடராசன்.தி.சு, திறனாய்வுக் கொள்கைகள்,ப.எ-89) என தி.சு.நடராசன் தன் திறனாய்வுக் கொள்கைகள் என்னும் நூலில் கூறியுள்ளார். இவ்வகையில் தேவிபாரதியின் நிழலின் தனிமை, நட்ராஜ் மகராஜ், நீர்வழிப் படூஉம், நொய்யல் ஆகிய நாவல்களின் கதைத்தலைப்பும் கதைப்பின்னல்களும் ஒன்றோடு ஒன்று பொருத்தமாக அமைந்துள்ளது. குறிப்பிட்ட பகுதி என்றில்லாமல் கதையின் செய்திகள் முழுவதும் தலைப்போடு தொடர்புடையனவாக பொருத்தமாக உள்ளதால் நாவலின் தலைப்பு மட்டும் உதாரணமாக கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் படைப்பாளர் தேவிபாரதி தலைப்பு பொருத்த உத்தியை தனது படைப்பில் முழுவதுமாகக் கையாண்டு படைப்புத்திறனை வெளிக்காட்டியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

தமிழ் இலக்கியப் படைப்பாக்க உத்திகளை தேவிபாரதி, அவர்களின் நாவல்களில் தன் திறனை வாசிப்பாளர்களுக்கு வெளிப்படையாக சுட்டிக்காட்டியுள்ளமையை அறியமுடிகிறது. இலக்கியப் படைப்பாக்க உத்திகள், ஒரு படைப்பை எளிமையாகவும் அழகாகவும் தாக்கமிக்கதாகவும் மாற்றுவதை தெரிந்துகொள்ள முடிகிறது. வேற்றுமொழி, பெயர் கூறும் ஓரெழுத்துகள், உம்மைத் தொகை, அடுக்குத் தொடர், இரட்டைக்கிழவி, எதுகை, மோனை, தலைப்புப் பொருத்தம் ஆகிய உத்திகள் மொழிக்கு இனிமையையும் கருத்துக்கு ஆழத்தையும் வாசிப்பாளருக்கு அறிவினையும் அளிக்கின்றன. இவ்வுத்திகள் வாசகரின் கவனத்தை ஈர்த்து, கருத்தை மனதில் நிலைநிறுத்தி, இலக்கியப் படைப்பின் கலைநயத்தையும் சுவையையும் மேம்படுத்துகின்றன. இலக்கியப் படைப்பாக்க உத்திகள் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பின் இன்றியமையாத கூறுகளாக அமைவதை அறிந்துகொள்ள முடிகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. அரங்கராசு.சு, தமிழ்ப்புதுக்கவிதை ஒரு திறனாய்வு, மூன்றாம் உலகப் பதிப்பகம், கோவை - 2008.
2. சுப்பிரமணியன்.ச .வே, தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 2006, (எட்டாம் பதிப்பகம்).
3. [திருவள்ளுவர், திருக்குறள், அப்பர் அச்சகம், சென்னை, 2012.

4. தேவிபாரதி, நிழலின் தனிமை, காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி)லிட்,669, கே.பி.சாலை, நாகர் கோவில் - 629001.
5. தேவிபாரதி, நட்ராஜ் மகராஜ், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி)லிட்,669, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001.
6. தேவிபாரதி, நீர்வழிப் படூஉம், தன்னறம் நூல் வெளியீடு, குக்கூ காட்டுப்பள்ளி, புளியானூர் கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டம்,சிங்காரப்பேட்டை- 635307.
7. தேவிபாரதி, நொய்யல், நற்றினைப் பதிப்பகம்,(பி)லிட்டெட் எண்-136, தரைத்தளம், சோழன் தெரு, ஆழ்வார்திருநகர், சென்னை- 600087.
8. நடராசன்.தி.சு, திறனாய்வுக் கொள்கைகள், அன்னம் பி.லிமிடெட், சென்னை - 2012.
9. வர்த்தமானன், தமிழ்-தமிழ் அகராதி, வர்த்தமானன் பதிப்பகம், 21, இரமகிருஷ்ணா தெரு, தியாகராய நகர், சென்னை - 17.

தேவிபாரதி அவர்களை 06.11.2025 அன்று நேர்காணல் செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம்



12. பண்பாட்டுச் சூழலியல் நோக்கில் பூமணியின் நாவல்கள்

ஆய்வாளர்

ர. ரபிக்கா பர்வீன்,

முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்),
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி - 626 123

r.rabeekaparveen@gmail.com

நெறியாளர்

முனைவர் **ரா.செண்பகவள்ளி**,

உதவிப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி - 626 123

DOI 10.5281/zenodo.21723277.

Abstract :

Literature is an art form that reflects a society's way of life, culture, and relationship with nature; human existence and the natural environment are interdependent. Poomani is a notable figure among creators who have deeply documented rural life, the experiences of marginalized communities, and their nature-oriented lifestyles in Tamil literature. This article examines the cultural milieu–encompassing beliefs, rituals, and customs–depicted in the novels authored by Poomani.

KeyWords : Literature - Poomani - Environmental Studies

முன்னுரை:

இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறையையும் பண்பாட்டையும் இயற்கையுடனான அதன் உறவையும் பிரதிபலிக்கும் கலை வடிவமாகும். மனித வாழ்வும் இயற்கைச் சூழலும் ஒன்றையொன்று சார்ந்து இயங்குகின்றன. தமிழ் இலக்கியத்தில் கிராமிய வாழ்க்கையையும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலையும் அவர்களின் இயற்கை சார்ந்த வாழ்க்கை முறைகளையும் ஆழாகப் பதிவு செய்த படைப்பாளர்களில் பூமணி குறிப்பிடத்தக்கவர் ஆவார். பூமணி இயற்றிய நாவல்களில் இடம்பெறும் நம்பிக்கைகள் சடங்குமுறைகள் பழக்கவழக்கங்கள் போன்ற பண்பாட்டுச் சூழலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பண்பாட்டுச் சூழலியல்:

ஒரு சமூகம் பின்பற்றி நடக்கும் வாழ்வியல் நடத்தைகள் பண்பாடு எனப்படுகின்றது. ஒரு சமூகம் இன்னதன்மைத்தான பண்பாடுகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும் என்பதனை அதன் சூழலியலே தீர்மானிக்கின்றது. ஒரு சமூகம் பின்பற்றி நடக்கும் பண்பாட்டுக் கூறுகள் சிறப்புற அமைவதற்கு அதன் இயற்கை வளங்கள் நிலஅமைப்பு, நீர் வளம் முதலானவையும் முக்கியக் காரணக்கூறுகளாக

அமைகின்றன. பழந்தமிழ் இலக்கியமான சங்கப்பாடல்கள் உயர்தனிச் சிறப்புடையனவாய் விளங்குவதற்கு களமாக அமைந்தவை அதன் திணை அமைப்பு முறையாகும்.

ஒவ்வொரு நிலப்பரப்பிலும் காணப்படும் பண்பாட்டுச் சிறப்புக்கூறுகள் என்பது ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்;;டுகின்றன. ஆனால் பாடல்களைப் பாடிய புலவர்கள் அந்த

இடத்தில் இருக்ககூடிய இயற்கைச் சூழலலை பாடல்களில் புனைந்துள்ளனர். இது குறித்து "சுற்றுச்சூழல்களை எதிர்த்தும் அவற்றோடு ஒத்தியைந்தும் ஒவ்வொரு மக்கள் சமூகமும் தமது வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ளும் நிலையில் அம்மக்களின் வாழ்க்கை நிலையை ஆராயக்கூடியதாகப் பண்பாட்டுச் சூழலியல் அமைகிறது"1 என்று ஆ.தனஞ்செயன் குறிப்பிடுகின்றார்.

பூமணியின் புதினங்களில் பண்பாட்டுச் சூழலியல்:

பண்பாடு என்பது பண்படுதல் என்பதன் அடிப்படையில் தோன்றியது. மனிதன் தான் வாழக்கற்றுக் கொண்ட முறையின் படிநிலையை நோக்கினால் நமக்கு விளங்கும். உணவு, உடை, உறையுள் என இந்த மூன்றையும் முறையாகப் பயன்படுத்தும் நிலையை நாகரிகம் என்கிறோம். சாதி, சமயம் எனும் அடிப்படையில் வாழும் மனிதன் தனக்கென்று சில பழக்கவழக்கங்களைப் பண்பாடுகளை வரையறுத்து கொண்டுள்ளான். எனவே மனிதச் சமுதாயம் சமச்சீருடன் இயங்கவும், மக்கள் பண்பாட்டுடன் சகிப்புத்தன்மை உடையவர்களாகவும், இயற்கை சூழுலுடன் ஒத்தும் வாழ வேண்டும் என்ற நோக்கிலும் பண்பாட்டு சூழலியல் சார்ந்த கருத்துக்களை படைப்பாளர் புதினங்களில் பதிவுச்செய்துள்ளார்.

கல்வியியல் பண்பாடுச் சூழல்:

கல்வி ஒரு மனிதனின் அறிவைத் திறக்கும் திறவுகோலாகும். மனிதனை ஒரு முழுமையான ஆற்றல் உள்ள மனிதனாக மாற்றம் அடையச்செய்வதும் கல்வியே. மேலும் ஒரு சமுதாயதத்தை மேம்படுத்தும் ஆற்றல் உடையது கல்வி ஆகும். இதனை நாலடியாரில்,

"குஞ்சி அழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் டநவ நிலைமையால்
கல்வி அழகே அழகு"2

(நா.பா.131)

என்று கல்வியின் சிறப்பை பற்றி நாலடியார் பாடல் பாராட்டி கூறுகிறது.

கல்வி பற்றி பிளாட்டோ "நல்ல மனிதர்கள் உருவாவது மட்டுமல்லாது அவர்கள் நல்ல முறையில் செயலாற்றப் பழகிகொள்வதே கல்வி" என்கிறார்.

கல்வி பற்றி பூமணி தனிமனித மதிப்பிற்;கு பெருமை சேர்க்கும் விதமாக கல்வி விளங்குவதையும் உயர்கல்வி பெண்களுக்கு மறுக்கப்படுவதையும் தமது புதினங்களில் எடுத்துரைக்கின்றார். இதனை,

"தாத்தா தாத்தா எங்க ஊர்ல அனயம் பேரு தொப்பிவச்ச போலுசா வந்தாக நான் பத்து படிச்சுட்டு பட்டாளத்துக்குப் போவேன் அங்கயும் தொப்பி தருவாகல்ல"

"அதகாட்டி பெரிய வேலைக்குப் போகணுண்டா" (பிறகு.ப.251)

இதன் மூலம் படிப்பு வாசம் சிறிதும் இல்லாத மக்களும் தங்களின் குழந்தைகள் மற்றும் சந்ததியினர் நன்கு படித்து உயர்ந்தப் பதவிக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

கல்வியால் மட்டுமே ஒரு சமூகம் உயர்ந்த நிலையை எட்ட முடியும் என்னும் கருத்தை பூமணி பதிவு செய்துள்ளார்.

காதல் பண்பாடுச் சூழல்:

காதலும் வீரமும் தமிழ் மண்ணுக்குரிய இருபண்புகளாகும். ஒருவர் மேல் கொண்ட காதல் என்றென்றும் அழியா தன்மையுடையது எனும் கோட்பாட்டைப் பண்டைத் தமிழர் கொண்டிருந்தனர். காதலியின் அழகை வருணிக்கும் காதலன் அவளை பலவாறு பாராட்டுகிறான்.

"மணக்குதடி ஒம்மேலே
மல்லிகைப் பூவாசம்
குலுங்குதடி ஒம்மேல
குங்குமம் பூவாசம்
வீசுதடி ஒம்மேல
வில்வப் பொடி வாசம்"3

என நாட்டுப்புற மக்கள் காதலைக் குறிப்பால் உணர்த்தும் பண்புடையவர்கள் என்பதை உணர்த்துகிறது. இதே போல் பூமணியின் புதினங்களில் ஆண், பெண் மீது கொண்ட காதல் பண்பாட்டை,

"அந்த பொண்ணால இவர மறந்துட்டு இன்னொருத்தரோட சந்தோசமா வாழ முடியுமா. இல்ல இவரு பிரிஞ்சு இருந்துருவரா ஒண்ணு சேர முடியலங்கிற ஏமாத்ததுல அவங்க விபரீதாமாக முடிவெடுத்து ஒண்ணுக் கெடக்க ஒண்ணு ஆகிப்போனா அத நம்மளாளத்தான் தாங்க முடியுமா" (வரப்புகள் - 135)

வரப்பு புதினத்தில் பாண்டியன் ராஜேஸ்வரி மேல் அன்பு கொண்டு அவளைத் திருமணம் செய்ய நினைப்பதை தன் தந்தையிடம் நேரடியாகக் கூறாமல் தன்னுடன் பணியாற்றும் பழனிவேலாயுதம் மூலம் தெரியப்படுத்தி சம்மதம் பெறுகிறான் என்பதை அறிய முடிகிறது.

உணவுப் பண்பாடுச் சூழல்:

உயிரினங்கள் அனைத்தும் உயிர் வாழ இன்றியமையாதது 'உணவு' ஆகும். உணவு என்பது சூழலை அடிப்படையாகக் கொண்டது என்பதாலேயே தொல்காப்பியம் ஒரு நிலத்தின் கருப்பொருள் பட்டியலில் உணவைச் சேர்த்துள்ளது. உணவு என்பது ஈட்டல், சமைத்தல், பகிர்ந்துண்ணல் என்ற மூன்று நிலையில் சமூகத்தின் பண்பாட்டு செயல்பாடாக விளங்குகிறது.

உணவு முறைகள் பற்றி தொ.பரமசிவன் அவர்கள் "ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவர் தம் உணவுப் பழக்க வழக்கங்களைக் கூர்ந்து நோக்க வேண்டும். உணவு பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை வாழ்நிலத்தின் விளைப்பொருள்கள் சமூகப் படிநிலைகள் உற்பத்தி முறை பொருளாதார நிலை ஆகியவற்றை பொறுத்து அமையும்"4 எனக் குறிப்பிடுகின்றார். இக் கருத்திற்கேற்ப கரிசல் பகுதி மக்களும் தங்களின் சூழலுக்கேற்ப நிலங்களில் விளைவிக்கப்பட்ட தானியங்கள் மற்றும் கீரை, கிழங்கு, பருப்பு, இறைச்சி வகைகளை உண்டு உடல் ஆரோக்கியத்துடன் வாழ்ந்தனர்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

- நெல்லுச்சோற்றுணவு:

பூமணியின் புதினங்களில் குறிப்பிடக்கூடிய கரிசல் வட்டார மக்கள் நெல்லரிசை உணவாகக் சமைத்துண்டதனை,

“அரிசியைக் கல்பார்த்து அப்படியே சுருட்டி சிந்தாமல் தண்ணீரில் கழுவி உலையில் போட்டு விட வேண்டியது தான்” (வெக்.பக்.38)

என்ற வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

வழிபாட்டு பண்பாடு:

இயற்கையின் புதிரான செயலை மனிதன் உணர இயலாத நிலையில் அதனை வழிபட்டு அமைதிப்படுத்த முயன்ற போது வழிபாடு தோன்றி இருக்கலாம்.

“மாந்தர் விலங்கு நிலையின்று மாந்தர் நிலையை எய்திக் குழுவாகத் திரண்டு நின்ற போது மெல்ல சிந்திக்கத் தொடங்கியதன் வெளிப்பாடே வழிபாடு”5 என அரு.மருததுரை அவர்கள் குறிப்பிடுகிறார்.

பொங்கல் வைத்து வழிபடுதல்:

பழங்காலம் தொட்டே மக்கள் தெய்வங்களுக்கு பொங்கல் வைத்து தேங்காய், பழங்கள் வைத்து வழிபாடு செய்தனர். இதனை,

“சாமிகளுக்கு புதுத்துணி கட்டியிருந்தது கொடை நடந்திருக்கும் கோயிலுக்கு முன் பொங்கல் வைத்த கருப்புத்தடங்கள் ஏராளம்” வெ (.பக்: 161)

சிதம்பரம் கோயில் வழியே செல்லும் பொழுது தெய்வத்திற்கு பொங்கல் வைத்து பூசை செய்து வழிபாடு நடத்தியிருந்த அடையாளங்களை கண்டான் என்பதை அறிய முடிகிறது.

பூசை செய்து வழிபடுதல்:

கரிசல் வட்டார மக்கள் தெய்வங்களுக்கு பூசை செய்து வழிபாடு நடத்தியதை ‘நைவேத்தியம்’ புதினத்தில்,

“சற்று நேரத்தில் பூைஜ தொடங்கியது சங்கரய்யர் தீபாரதனையில் மணியொலியைக் கலந்தார். அவர் நெஞ்சிலிருந்து மணி வழியே ஊற்றம் ஒலிக்கு விக்ரகங்கள் செவிசாய்த்துக் குனிந்தன. “ஈஸ்வரனுக்கு காலை மாலை இருவேளை பூஜையுண்டு ஆறுகால பூஜை நடந்த காலமெல்லாம் போய்விட்டது. படிப்படியாகத் தளர்ந்து இருவேளையில் நிலைத்து விட்டது.”

(நை.வே.ப.7)

என்ற வரிகளில் தெவய்வங்களுக்கு தீப ஒளிகாட்டி ஆறு வேளைகளிலும் பூைஜ செய்து வழிபாடு செய்ததையும் பஞ்சம் ஏற்;பட்டக் காலங்களில் கூட இரு வேளை பூசை செய்து வழிபாடு நடத்தினர் என்பதனை அறியலாம்.

தொகுப்புரை:

மனிதன் சமூகத்தில் மிகமுக்கியப் பங்கு வகிக்கிறான் அந்த அடிப்படையில் அவனது எண்ணங்கள் வாழ்க்கை முறை மொழி போன்றவை அவனுடைய பண்பாட்டினை வெளிப்படுத்தக் கூடியதாக அமைகின்றது. அப்பண்பாட்டினை பின்பற்றி நடக்கும் முறையினை அவ்விடத்தின் சூழலலே தீர்மானிக்கின்றது. ஒவ்வொரு நிலப்பரப்பிலும் காணப்படும் பண்பாட்டுச்சிறப்புக் கூறுகள்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுகின்றது. அவ்வகையில் பூமணியின் நாவல்கள் பெரும்பாலும் கிராமப்புற வாழ்க்கையை மையமாகக் கொண்டவை. கிராமிய மக்கள் இயற்கையை பயன்பாட்டுப் பொருளாக மட்டும் கருதாமல் வாழ்வின் ஒரு அங்கமாகக் கருதி வாழ்கின்றனர். பூமணியின் நாவல்களில் இடம்பெறும் கிராமிய வாழ்க்கைச் சூழலில் காணப்படும் பண்பாட்டுச் சூழலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

அடிக்குறிப்புகள்:

1. ஆ.தனஞ்செயன், சங்க இலக்கியமும் பண்பாட்டுச் சூழலியலும் ப. 99
2. நாலடியார் பா. - 131
3. அரு.மருததுரை நாட்டுப்புறப் பண்பாட்டுக்கூறுகள் ப.26
4. தொ. பரமசிவம் பண்பாட்டு அசைவுகள் ப. 19
5. அரு.மருததுரை நாட்டுப்புறப் பண்பாட்டுக்கூறுகள் ப.8

துணைநூற்பட்டியல்:

- இராமலிங்கம்,மா. - நாவல் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை,முதற் பதிப்பு 1976.
- கார்திகேசு சிவத்தம்பி - தமிழ் பண்பாடும் இலக்கியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை - 98 முதற்பதிப்பு, ஆகஸ்ட் - 2011
- நடராஜன் தி.சு - தமிழின் பண்பாட்டு வெளிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட், சென்னை - 2006

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

13. மொழிபெயர்ப்புப் பதிப்புகள் - ஓர் ஆய்வு

A Study of Translation Publications

Dr. E. Esakkiammal
Assistant Professor
Department of Tamil
S.A. College of Arts &Science, Thiruverkadu,
Chennai - 600077
Orcid ID -0009-0007-7776-3160

முனைவர் ஈ இசக்கியம்மாள்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
எஸ்.ஏ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவேற்காடு,
சென்னை. 600077

DOI 10.5281/zenodo.21723390.

Abstract

Translation is a vital process that enables the transfer of knowledge, ideas, emotions, and cultural values from one language to another while preserving the original meaning and intent. It serves as a bridge between linguistic communities, promoting mutual understanding and facilitating the exchange of literary, scientific, and cultural knowledge. By making the intellectual and cultural resources of one language accessible to speakers of another, translation contributes significantly to the enrichment of languages and the advancement of global communication. In the Indian context, particularly after Independence, translation played a crucial role in fostering national integration and strengthening cultural unity among diverse linguistic communities. Institutions such as the Sahitya Akademi, the National Book Trust (NBT), and the South Indian Book Trust have been instrumental in translating and disseminating literary works and scholarly publications across Indian languages. Thus, translation remains an indispensable tool for language development, cultural exchange, knowledge dissemination, and the promotion of national and global understanding.

KEY WORDS:

Linguistic Communities, Mutual Understanding, Literary Knowledge, Scientific Knowledge, Cultural Exchange, Intellectual Resources, Accessibility, Language Enrichment, Global Communication

ஆய்வுச்சுருக்கம்:

ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒரு துறையில் இல்லாத செழுமையை ஈடு செய்ய வேறு துறைகளில் உச்சங்கள் இருக்கும். மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு. கொடுக்கல் வாங்கலாக அறிவனைத்தும் உணர்வனைத்தும் அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும். நம்மிடம் எல்லாம் உள்ளது என்ற பட்டை கட்டிய பார்வையை ஒழித்து அகன்ற பார்வையைத் தருவது மொழிபெயர்ப்பு

"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.

"ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழி பெயர்ப்பு இன்றியமையாததாகும்; உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாதர்

ஒரு மொழியில் இருக்கின்ற செய்தியை வேறு மொழிக்கு மாற்றுவது மொழிபெயர்ப்பு எனப்படும்.

- அவ்வாறு மொழிபெயர்ப்பு செய்யும் பொழுது, முதல் மொழிக்கு நிகரான செய்தி இரண்டாவது மொழியிலும் இடம்பெற வேண்டும்.
- முதல் மொழியை = "மூலமொழி, தருமொழி" என்றும் கூறுவர்.
- இரண்டாவது மொழி = "பெறுமொழி, இலக்கு மொழி" என்றும் கூறுவர்.

மொழி பெயர்ப்பு, எல்லாக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று. விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு, மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது; ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிற மொழியில் மொழிபெயர்த்தது; பல்வேறு மாநிலங்களில் இருந்த இருக்கின்ற எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது. இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம் (NBT), தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன

முன்னுரை:

தமிழில் பன்னெடும் காலமாக கருத்துக்களைப் பதிவாக்கியிட கற்பலகைகள் செப்புப் பட்டயங்கள் ஓலைச்சுவடிகள் பெரிதும் பயன்பட்டன. வந்தன, ஓலைச் சுவடிகளை எழுதலும் அவற்றை பாதுகாத்தலும் என்பது சமூக மதிப்புடன் தொடர்புடையதாகி மடத்தினர் மற்றும் உயர் சாதியினரிடம் மட்டும் வழக்கத்தில் இருந்தன. இதனால் கல்வி கற்றல், எழுதுதல் விளிம்புநிலை மக்களுக்கு முற்றிலும் மறுக்கப்பட்ட சூழல் நிலவியது. இத்தகு சூழலில், ஐரோப்பிரரின் இந்திய வருகைக்குப் பின்னர் அவர்களால் அச்சடிக்கப்பட்ட தமிழ் புத்தகம் என்பது தமிழர் வாழ்க்கையில் முக்கியமான திருப்புமுனையை ஏற்படுத்தியது. தமிழ் ஊடக வரலாற்றில் அச்சு ஊடகம் பண்டிதரிடம் மட்டும் மறைபொருளாக இருந்த தமிழை விடுவித்து மக்கள் தமிழாக்கியது. தமிழ் நூல்களுடன் நூல்களும் வெளிவருவதற்கான சூழல் பரிசீலனைக்குரியது.

இந்தியாவிற்குக் கடல் வழி கண்டறிய முயன்ற ஐரோப்பியர் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வெற்றியடைந்தனர். ஐரோப்பிய வணிகக் கம்பெனிகள், இந்திய மன்னர்களுக்கிடையிலான முரண்பாடுகளை பயன்படுத்திக்கொண்டு, துப்பாக்கி, போன்றவற்றின் வெடிமருந்து துணையுடன் இந்தியாவில் ஆட்சி , அதிகாரத்தினைக் கைப்பற்ற முயன்றன. இதே காலகட்டத்தில் கிறிஸ்தவக்

குருமார்களும் இந்தியா வந்தனர். புறநிலையில் அரசியலிலும், அகநிலையில் சமயதிற்குள்ளும் ஊடுருவ, இந்திய மக்க வழக்கிலிருக்கும் மொழிகளைக் கற்றுத் தேர்ந்திட வேண்டிய தேவையானது. ஐரோப்பியருக்கு ஏற்பட்டது இதனால்தான் இரு மொழி அகராதிகளும், புதிய இலக்கண நூல்களும் எழுதிடும் முயற்சியில் ஐரோப்பியர் ஈடுபட்டனர். ஐரோப்பிய மொழிகளில் வளமாக இருந்த உரையாடல் வடிவத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்த முயன்றனர். இத்தகைய சூழல் தமிழில் மொழிபெயர்ப்பு நூல்கள் தோன்றுவதற்கான வலுவான பின் புலத்தை ஏற்படுத்தியது.

கிறிஸ்தவ பாதிரியார்கள், தொடக்கக்காலத்தில் ஐரோப்பிய அச்சுக்கூடங்களில் தமிழ் நூல்களை அச்சடித்து, தமிழகத்தில் விநியோகித்தனர். போர்த்துக்கீசிய மன்னரான மூன்றாம் ஜானின் ஆணைக்கேற்ப போர்த்துக்கீசிய மொழியிலிருந்து Luseo Tamil Catechism என்ற நூல், 'கிறிஸ்தவ வினாவிடை' 1554ஆம் ஆண்டு தமிழில் வெளியானது. இதுவே மேலைநாட்டில் அச்சிடப்பெற்ற முதல் இந்திய நூல். இதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ ஜெபங்களையும் கருத்துக்களையும் உள்ளடக்கிய ஊயசவடைடமய என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்நூலில் தமிழ்ச்சொற்கள் ரோம லிபியில் எழுதப்பட்டிருந்தன.

என்ரிக்கோ என்றீக்கல் அடிகளும் புனித ராயப்பர் மனுவேல் அடிகளும் இணைந்து மொழிபெயர்த்த 'தம்பிரான் வணக்கம்' (Doctrina Christam) என்ற தமிழ் நூல் கேரளத்திலுள்ள கொல்லத்தில் அச்சடிக்கப்பட்டு கி.பி. 1574ஆம் ஆண்டு வெளியானது. தமிழகத்திலுள்ள வைப்புக்கோட்டை என்ற ஊரில் நிறுவப்பட்டி அச்சுக்கூடத்தில், கிறிஸ்தவ வேதோபதேசம் (Flos Sanctorum) என்ற தமிழ் நூல் அச்சடிக்கப்பட்டு இயேசு சபைப் பாதிரிமாரால் கி.பி. 1577 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. தமிழகத்தில் நிறுவப்பெற்ற அச்சுக்கூடத்தில், மேலைநாட்டிலிருந்து கொண்டு வரப்பெற்ற அவரவேற்கப்பட்டனசியந்திரங்களில் ஐரோப்பிய பணியாற்றினர். இதனால் தமிழில் அச்சு நூல்களின் எண்ணிக்கை பெருகியது. தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட கிறிஸ்தவ சமய நூல்களின் எண்ணிக்கை தொடக்கக்காலத்தில் அதிக அளவில் இருந்தன ஓலைச்சுவடிகளுக்கு மாற்றாக காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட நூல்கள் அடித்தட்டு மக்களால் விரும்பி வரவேற்கப்பட்டன.

அச்சியந்திரம் தமிழகத்திற்கு கி.பி. 16ஆம் நூற்றாண்டில் அறிமுகமானாலும், அவை ஆண்டுகளுக்கும் கூடுதலாக கிறிஸ்தவப் பாதிரியார்களின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வந்தது. கண்காணிப்பைத் தொடர்ந்து நிகழ்த்தி வந்தனர். எனவேதான் கிறிஸ்தவ பாதிரியார்களால் ஆண்ட ஐரோப்பிய நாட்டினர். தமிழர்களிடையே நிகழும் கருத்துப் பரவல், கல்வி அலுவலர்களுக்குப் பயன்படும் இரு மொழி அகராதிகள், தமிழ் இலக்கண நூல்கள்அதிக அளவில் அச்சிடப்பட்டன. மேலும் கிறிஸ்துவ சமயத்தைத் தமிழரிடையே பரப்பிட சமயப் பிரச்சார நூல்களும் அதிக எண்ணிக்கையில் வெளியிடப்பட்டன. கி.பி. 1835 இல் அங்கிலேய அரசாங்கம் இந்தியர்களும் அச்சுக்கூடம் நிறுவி, தங்களுடைய தாய்மொழியில் புத்தகங்களை அச்சடித்து வெளியிட்டுக் கொள்ள அனுமதி வழங்கியது. அச் சட்டத்தின் ஒரு பிரிவான நூல்கள் பதிப்புச் சட்டம் இந்தியா வெளியிடும் முறையினை வரையறுத்தது. நூலின் பெயர், ஆசிரியர் பெயர் பதிப்பகம், அச்சுக்கூட பதிப்பாளர்

பெயர், பதிப்பித்த இடம், பதிப்பு ஆண்டு போன்ற தகவல்களைப் புத்தகத்தின் முகப்பு அச்சடிக்கப்படாவிடில், ரூ.5000 வரை ஒறுத்தல் தொகை வசூலிக்கப்படும் என அச்சுச்கூடத்தின். உட்பிரிவு எச்சரித்தது. தமிழ்ப் புத்தகங்கள் வெளியீட்டினைக் கண்காணிக்கும் வரையில் அரசு சட்டம் இயங்கினாலும், தமிழில் பல்துறைப் புத்தகங்கள் வெளியாகும் நிலைமை ஏற்பட்டது. இச்சட்ட அமுலாக்கத்தின் பின்னரே என்பது தான் உண்மை . அரியபுத்தகத்தின் விலை குறைவு. எனவே ஓரளவு பொருளியல் வசதியுடைய தமிழர்களிடைபே புத்தகங்களை விலைக்கு வாங்கி, வாசிக்கும் பழக்கம் ஏற்பட்ட செழுக்கினை “எழுதா எழுத்து” என்று குறிக்கும் வழக்கம் தொடக்கத் காலத்தில் தமிழர்களிடையே நிலவியது

பதிப்பகங்களின் போக்குகள்:

இன்றைய கணினியுகத்திலும் அச்சு ஊடகமானது தமிழில் செல்வாக்குடன் விளங்குகிறது , மனிதகுல மலர்ச்சி யென்பது கற்றல் மற்றும் கற்பித்தல் ஆகிய இருநிலைகளிலும் ஊடகங்களைச் சார்ந்து இயங்கும். நூல்களின் பங்கு கணிசமாகவே உள்ள பொதுக் கருத்தியல் அல்லது பொதுப்புத்தியை விளங்குகிறது. புத்தகங்களை எழுதுகின்ற மொழிபெயர்ப்புப் புத்தகங்களைத் தமிழில் வெளியிடுகின்ற சுதந்திரம் கூடுதலாகும். இந்நிலையில் மொழிபெயர்ப்புப் புத்தகங்களைத் தமிழில் வெளியிடுகின்ற பதிப்பகத்தினரின் நோக்கங்கள் பலதரப்பட்டன.

அவை சில:

- பொருளீட்டுதலுக்காக வணிக நோக்கில் புத்தகம் வெளியிடுதல்
- பொருளீட்டுவதுடன் ஓரளவு லட்சிய நோக்குடனும் புத்தகம் வெளியிடுதல்
- லட்சிய நோக்குடன் புத்தகம் வெளியிடுதல்

வணிகமயமான பதிப்பகத்தினர் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியீட்டிலும் வருவாயை மட்டும் குறிக்கோணகக் கொண்டவர்கள் ஆவர். இத்தகையோருக்குப் புத்தகங்கள் வெறும் சந்தைக்கான நுகர்வும் பொருட்கள் புத்தகத்துக்காகச் சந்தையை உருவாக்க முயலுதலும், சந்தைக்கேற்ற புத்தகங்களை கண்டப்பு வெளியிட்டுப் பொருளிட்டலும் இவர்களுடைய முதன்மை நோக்கங்கள்.

மேலைநாடுகளில் வணிகரீதியில் பெரும் செல்வாக்குப் பெற்றுள்ள மூன்றாந்தரமான படைப்புகளை மூலஆசிரியர் பற்றிய குறிப்பு இல்லாமல் தழுவியெழுதித் தமிழில் வெளியிடுவதை வணிகப் பதிப்பகத்தினர் ஐக்கப்படுத்துகின்றனர். கொலை, கொள்ளை, திகில், மர்மம் நிறைந்த மலிவான ஆங்கில நாவல்களைத் தழுவித் தமிழாக்கும் போக்கு 1890 1920 ஆண்டுகளில் வலுவாக இருந்தது. ரெய்னால்ட்ஸ் கொளான்டாயில் போன்றோரின் மூன்றாந்தரமான படைப்புகள் தமிழில் செல்வாக்குப் பெறவும், அவர்களைப் பின்பற்றி வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புச்சாமி ஜே.ஆர். ரெங்கராஜு போன்றோர் தமிழில் பிரபலமடையவும் வணிகப் பதிப்பகத்தினர் முக்கியக் காரணமாக விளங்கினர்.

இன்று தமிழில் தனிமனிதனின் ஆளுமையை வளப்படுத்த முயலும் சுயமுன்னேற்ற நூல்கள் அதிக அளவில் மொழிபெயர்க்கப்படுகின்றன. உலகமயமாக்கல் காரணமாக உலகமெங்கும் சுரண்டப்படும் கோடிக்கணக்கான மக்கள் அன்றாடம் வயிறார உணவு உண்ணவே சிரமப்படும் சூழல் நிலவுகிறது. வறுமை, வேலைவாய்ப்பின்மை நிலவுவதற்குக் காரணமாக விளங்கும் சமூக அமைப்பு பற்றி அக்கறை கொள்ளாமல், எல்லாவற்றுக்குமான தீர்வு, ஒவ்வொருவருக்குள்ளும் பொதிந்துள்ளது என்று வாசகனையே மையப்படுத்தும் சுய முன்னேற்ற நூல்கள், தனிமனிதனையே எல்லாவற்றுக்கும் பொறுப்புக்குள்ளாகுகின்றன. லட்சக்கணக்கில அமெரிக்காவில் விற்பனையான நூல் என்ற அடையாளத்துடன் வெளியிடப்படும் இத்தகைய மொழிபெயர்ப்பு நூல்கள், மனிதனை சமூகத்திலிருந்து பிரிப்பதுடன், அவனைக் குற்றமனப்பான்மைக்கு உள்ளாக்குகின்றன. யோகம், தியானம், ஆன்மீக விடுதலை ஆகியவை பற்றிப் பேசும் குறிப்பிட்ட சமயச் சார்பற்ற யோகா எஸ்டர்கள் எழுதியுள்ள புத்தகங்களின் தமிழாக்கமும், தனிமனிதனை, மையமிட்ட நிலையில் வணிகரீதியில் பெரும் வெற்றி பெற்றுப் பல பதிப்புகள் வெளியாகியுள்ளன.

தமிழில் எவை மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற புரிதல் இன்றி, மேலைநாட்டுக் குப்பைகளைத் தமிழாக்கிக் “காசு” பண்ண முயலும் பதிப்பகத்தினரின் முயற்சிகள் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியனவாகும்.

எண்பதுகளில் தொடங்கி தமிழில் பரபரப்பாக விற்பனையாகும் மாத நாவல்கள், பாக்கெட் நாவல்கள், குடும்ப நாவல்கள், கிரைம் நாவல்கள் வெளியீட்டில் மறைமுக நிலையில் மொழிபெயர்ப்பு செல்வாக்குச் செலுத்துகின்றது. கொலை, கொள்ளை, பாலியல், மார்மம், திகில் போன்ற அம்சங்களைக் கலந்து எழுதப்பட்ட ஆங்கில நாவல்களைத் தழுவியெழுதி ராஜேந்திரகுமார், ராஜேஸ்குமார், சுபா, பட்டுக்கோட்டை பிரபாகர் போன்றோர் இன்று முழு வீச்சுடன் பொருளீட்டுகின்றனர். அதேவேளையில் இவர்களின் இந்நூல்கள் வாசர்களின் இலக்கிய ரசனையை மழுங்கடிப்பதுடன். அசலான தமிழ்ப் படைப்புகளின் பரவலைத் தடுத்திடவும் முயலுகின்றன. இத்தகைய மூன்றாந்தரமான தழுவல் போக்கு என்பது பதிப்பகத்தினரின் தூண்டுதல் காரணமாக பெரிய அளவில் சந்தைப்படுத்தப்படுகின்றன என்பதுதான் உண்மை.

புத்தக வெளியீடு என்பது பொருளீட்டுவதற்காகத்தான் என்ற கருத்தைக் கொண்டிருப்பினும், தரமான நால்களையும் வெளியிட வேண்டுமென்ற நோக்கமுடைய பதிப்பகத்தினர் தமிழில் கணிசமாக உள்ளனர். இத்தகையோரின் முயற்சி காரணமாகவே தமிழில் அதிக அளவில் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியாகியுள்ளன. வெகுசன ரீதியிலான புத்தகங்களை வெளியிடும் பதிப்பகம் அறிவியல் மொழிபெயர்ப்பு புத்தகத்தையும் வெளியிடுவது என்பது வரவேற்கப்பட வேண்டியதாகும். கடந்த நூற்றாண்டின் நடுவில் அல்லயன்ஸ், கலைமகள் போன்ற பதிப்பகங்கள் குறிப்பிடத்தக்க அறிவியல் மொழிபெயர்ப்பு புத்தகங்களை வெளியிட்டுள்ளன. பொ.நா.அப்புஸ்வாமி போன்ற மொழிபெயர்ப்பாளர் தொடர்ந்து அறிவியல் கட்டுரைகள் எழுதிட இத்தகைய பதிப்பகத்தினரே ஆதாரமாக விளங்கியுள்ளனர்.

சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழில் பன்முகத் தன்மையான போக்குகளை வளர்க்கும் என்ற நோக்கில் செயற்படும் பதிப்பகத்தாரின் பதிப்பு முயற்சிகள் குறிப்பிடத்தக்கவையாக விளங்குகின்றன. அரசியல், அறிவியல், சமயம், இலக்கியம் போன்ற பல்துறை நூல்களின் முக்கியமானவற்றைத் தேர்ந்தெடுத்துத் தமிழாக்கிடும் பதிப்பகத்தினரின் முயற்சிகள் காலந்தோறும் தமிழர் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டுப் பொருளீட்டுவது இத்தகைய பதிப்பகங்களின் நோக்கமன்று. முன்னர் வெளியிட்ட நூல்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடப்பினும் பதிப்பகத்தின் நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் தரமான நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவார்கள்.

இன்று நவீன இலக்கியம் என்று அறியப்படும் நாவல், சிறுகதை, நாடகம், புதுக்கவிதை உருவாக்கத்தில், மொழிபெயர்ப்புகள் பின்புலமாக விளங்குகின்றன. கி.பி. 1870 இல் வீ.விசுவநாதம் பிள்ளை மொழிபெயர்த்த ஷேக்ஸ்பியரின் 'தி மெர்ச்சண்ட் ஆப் வெனிஸ்' நாடகமானது வெனிஸ் வர்த்தகன் என்ற பெயரில் புதிய போக்கினுக்கு வித்திட்டது. இதுபோன்ற பல்வேறு மொழிபெயர்ப்பு நூல்களைச் சான்றாகக் காட்ட முடியும்.

தொடக்கக்கால மொழிபெயர்ப்புகள்

பண்டையத் தமிழகத்தில் பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலிருந்து தமிழாக்கமானது தழுவல் நிலையில் தொடங்கியது. மூலமொழியிலுள்ள கருத்தினை மொழிபெயர்ப்பாளர் தனது நோக்கத்தினுக்கு ஏற்ப மாற்றி எழுதும் போக்குத்தான் நிலவியது. அச்சியந்திரங்களில் வருகைக்குப் பின்னர் தமிழில் நூல்கள் அச்சடிக்கப்பெறமாலும், மொழிபெயர்ப்பு நூல்கள் ஒப்பீட்டளவில் பெரிய எண்ணிக்கையில் இல்லை.

தமிழைப் பொறுத்தவரையில் விவிலிய மொழிபெயர்ப்பு முக்கியமானது ,18ஆம் நூற்றாண்டில் ஜெர்மானியரான சீகன்பால்கு தொடங்கிவைந்த விவிலிய மொழிபெயர்ப்பு முயற்சியானது, ஐரோப்பிரான பிலிப் போகன் பப்ரிஷியஸ் என்ற கிறிஸ்தவ பாதிரியாரால் முழுமையடைந்து. 1796 ஆம் ஆண்டு முழுமையாக வெளியானது. இந்திய மொழிகளில் விவிலியம் முதன்முதலாக முழுமையாக விவிலியம் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழில்தான் விவிலியத்தின் புதிய ஏற்பாடு திருத்தம் செய்யப்பெற்று பிரேஷியாவைச் சார்ந்த இரேனியரின என்பவரால் 1833 ஆம் ஆண்டு தமிழில் வெளியானது.

பப்ரிஷியாஸின் விவிலிய மொழிபெயர்ப்பானது சீராக்கப்பட்டு, ஹென்றிபவர் தலைமையில் 1871ஆம் ஆண்டில் புதிய பதிப்பு வெளியிட்டது. 'பவர் வேதாகமம்' தான் இன்று வரை தொடர்ந்து கிறிஸ்தவர்களிடையே செல்வாக்குப் பெற்றுள்ளது. கடந்த 200 ஆண்டுகளுக்கும் கூடுதலாக வெவ்வேறு காலகட்டங்களிலும், இன்றும் விவிலியத்தின் மொழி பெயர்ப்பு பல்வேறு புதிய வடிவங்களைப் பெற்று வருகின்றது. தமிழின் உரைநடைக்கு வித்திட்ட விவிலிய மொழிபெயர்ப்பானது. தமிழ்மொழி வரலாற்றில் முக்கியமான பதிவாகும்.

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கி.பி. 1820இல் தொடங்கப்பட்ட சென்னைப் பாடப்புத்தகச் சங்கம் ஆங்கிலேய அலுவலர்களுக்கு தமிழ் கற்பிப்பதற்காக உரைநடை நூல்கள் எழுதுவதை ஊக்குவித்தது. இதனால் டேனியல் டிபோ எழுதிய ராபின்சன் குருசோ நாவலானது உரைநடை வடிவில் சுருக்கப்பட்டு வெளியானது. அதே நிறுவனம் வெளியிட்டுள்ள உலக சரித்திரம், இந்திய சரித்திரம் போன்ற நூல்களும் தழுவல் நூல்களாக உள்ளன.

கி.பி. 19ஆம் நூற்றாண்டில் புராணங்கள், சைவ சித்தாந்தம், சிற்றிலக்கியம், நன்னூல் போன்றவற்றைக் கற்பதும் மனனம் செய்வதும், தான் கல்வி என்று கருதிய தமிழரிடையே ஆங்கிலக் கல்வி முறையானது மாற்றத்தை ஏற்படுத்தியது. மரபு வழிப்பட்ட திண்ணைக் கல்வி, குருகுலக் கல்வி முறைக்கு மாற்றாகப் புகுத்தப்பட்ட ஆங்கிலேய முறைக் கல்வியானது, புதிய துறைகளை அறிமுகப்படுத்தியது. இதனால் பல்வேறு துறைகளில் மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழில் வெளிவருவதற்கான சூழல் ஏற்பட்டது.

தமிழில் தொடக்ககாலத்தில் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்ட பதிப்பகங்களின் பெயர்களையும், அவற்றின் நோக்கங்களையும் அறிய இயலவில்லை. தனிநாயகம் அடிகளார், மா.சு.சம்பந்தம் போன்ற ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ள தகவல்கள் தான் மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றிய தகவல்களுக்கு ஆதாரமாக விளங்குகின்றன. எனவே அறிமுக நிலையில் மொழிபெயர்ப்புகள் பற்றிய தகவல்கள் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

கி.பி. 1832இல் இரேனியல் பாதிரியார் எழுதிய 'பூமி சாஸ்திரம்' என்ற அறிவியல் நூல் தழுவலாகும். இலங்கைக்கு மருத்துவத் தொழில் செய்ய வந்த அமெரிக்கரான ஃபிகிறினால் **Anatomy, Physiology and Hygiene** என்ற நூல் தமிழாக்கப்பட்டு 'அங்காபாதி சுகரண வாதி உற்பாவண நூல்' என்ற பெயரில் 1852இல் வெளியிடப்பட்டது. வைத்தியாகரம் (The **principles and practice of Medicine**) மனுஷி அகரணம் (**Human Physiology**), மனுஷி அங்காதிபாதம் (**Human anatomy**), இந்திய பதார்த்த சாரம் (**Phamacopeia of India**) வைத்தியம் (**Practice of Medicine**) ஆகிய மருத்துவம் சார்ந்த நூல்கள் ஃபிஷ் கிறிவின் மேற்பார்வையில் பிறரின் உதவியுடன் தமிழாக்கப்பட்டு வெளிவந்தன. ஆங்கில வைத்திய முறையைத் தமிழில் போதிப்பதற்காக மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் சமஸ்கிருதச் சொற்கள் பெரிதும் பயன்படுத்தப்பட்டிருப்பினும், அறிவியல் தமிழை முன்னெடுத்துச் சென்ற வகையில் ஃபிஷ் கிறனின் முயற்சி போற்றுதலுக்குரியது.

1855இல் வெளியான இயற்கணிதம் (Algebra) 1861இல் வெளியான வானசாஸ்திரம் (Astronomy) 1571இல் வெளியான தத்துவ சாஸ்திரம் (The elements of natural Phiolsophy) 1885இல் வெளியான கால்நடை சாஸ்திரம் (Veterinary science) போன்ற மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழுக்குப் புதிய துறைகளை அறிமுகப்படுத்தின.

சேடன் பாபு ராஜகோபாலாச்சாரியார், 'யூசிலிட்டின் ஷேத்திர கணிதப் பால போதினி (Geometry) என்ற மொழிபெயர்ப்பு நூலினை 1908 ஆம் ஆண்டில், 1901ஆம் ஆண்டில் வெளியிட்டார். 1908 ஆம் ஆண்டில் சாஸ்திரம் அல்லது சிசு உற்பத்தி சிந்தாமணி' என்ற மருத்துவ நூல் கிறீனின் மொழிபெயர்ப்பில்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

வெளியானது. இவை போன்று தமிழில் வெளியான பல்வேறு தமிழில் வெளியான பல்வேறு துறை மொழிபெயர்ப்பு நூல்கள், உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியலைத் தமிழில் கற்பிக்க முடியும் என்ற நிலையை ஏற்படுத்தின. இதன் காரணமாக 1930களில் கலையியல் பாடங்களும் பின்னர் அறிவியல் பாடங்களும் பாடத்திட்டத்தில் இடம் பெற்றன. எளிய தமிழில் ஆழமான அறிவியல் கருத்துகளைப் போதிக்கும் வகையில் சுருக்கமாகவோ, தழுவியோ எழுதப்பட்ட நூல்கள் தமிழில் நிரம்ப வெளிவந்தன. ராஜாஜி. பெ.நா.அப்புஸ்வாமி, ஆர்.கே விசுவநாதன், நாராயணசாமி ஐயர், டி.எஸ்.எஸ். ராஜன் போன்றோரின் முயற்சிகள் காரணமாக தமிழில் அறிவியல் மொழிபெயர்ப்பு நூல்கள் அதிகமாக வெளிவரத் தொடங்கின.

ராஜேஸ்வரி தமிழில் அறிவியல் நூல் வெளியீட்டினை ஊக்குவிக்கும் வகையில் அறிவித்த பரிசு காரணமாக ராஜேஸ்வரி அம்மையாரின் அனுப்புராணம் (1955). வெளியான மொழிபெயர்ப்பு நூல்களில் நகப்புரெட்டியாரின் அணுக்கரு பௌதீகம் (1966) ஆகியன குறிப்பிடத்தக்கன.

கல்லூரியில் தமிழைப் பயிற்று மொழியாக்கி 1955ஆம் ஆண்டில் தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. தமிழ் வெளியீட்டுக் கழகம் மாணவர் பாடத்திட்டத்திற்காக முப்பத்தைந்து மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டது. பின்னர் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் இருநூறுக்கும் மேற்பட்ட சமூக அறிவியல் நூல்களை வெளியிட்டுள்ளது.

1980-களில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் முயற்சி காரணமாக மருத்துவம், பொறியியல் பாடங்களைத் தமிழில் போதிப்பதற்காக இருபத்தெட்டு நூல்கள் தயாரிக்கப்பட்டன. அவற்றில் பல அச்சு வடிவம் பெற்றுள்ளன.

தமிழைப் பொறுத்தவரையில், அசலாக விஞ்ஞானிகளால் எழுதப்படும் மூலநூல்கள் என்பது மிகவும் குறைவு. பெரும்பாலும் பிற மொழிகளில் எழுதப்பட்டுள்ள நான்கைந்து நூல்களை ஒப்பிட்டு நோக்கித் தொகுத்து, தேவையானவற்றை மட்டும் சுருக்கி எழுதப்படும் தழுவல் நூல்களே தமிழில் மிகுதி என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

இலக்கிய மொழிபெயர்ப்புகளில் குறிப்பிடத்தக்கன பின்வருமாறு: ஆங்கிலத்தில் ஜான் பனியன் எழுதிய பில்கிரிம் புரோகிரஸ் என்ற கவிதை நூலானது எஸ்.பவுலினால் மொழி பெயர்க்கப்பட்டுச் சுவிசேஷ பிரபல்ய மிஷன் சங்கத்தாரால் கி.பி. 1793இல் வெளியிடப்பட்டது. தாண்டவராய முதலியாரின் பஞ்சதந்திரக் கதைகள் (11:26), ஜேசுதாஸ் பிள்ளையின் பாரசீகக் கதைகள் (1840), அண்ணாசாமி முதலியாரின் அரபிக் கதைகள் (1157), ஏ.திருவேங்கடத்தின் கிரேக்க ஈசாப் நீதிக் கதைகள் (1853), அவேதக்கண்ணனின் ஆதிநந்தவனப் பிரயைம் (1863), வீ. விசுவநாதபிள்ளையின் வெனிஸ் வர்த்தகர் (1870) ஆகியனவாகும்.

மில்ட்டனின் பாரடைஸ் லாஸ்ட் கவிதை நூலானது பரதீசு உத்தியான நாசம் என்ற பெயரில் 1881இல் வெளியாகியுள்ளது. அதே நூல் 1887இல் சாமுவேல் வேதநாயகம் தாமஸினால் பூங்காவனப் பிரளயம் என்ற பெயரில் தமிழாக்கப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் பிற துறை நூல்களின் மொழிபெயர்ப்புகளைவிட இலக்கியப்படைப்புகள் இன்றுவரை தொடர்ந்து அதிக அளவில் மொழிபெயர்க்கப்படுகின்றன. உலக மொழிகளிலிருந்தும் இந்திய மொழிகளிலிருந்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட முக்கியமான நூல்களின் அட்டவணையைத் தொகுத்தாலே அவை தனி நூலாக விரியும்.

கரியா, விடியல் அடையாளம் சென்னை புக்ஸ், பாரதி புத்தகலாயம், என்.சி.பி.ஹெச் வ.உசிருநூலகம் , காலச்சுவடு, கருப்புப் பிரகிகள், மருதா, உயிர்மை போன்ற பல்வேறு பதிப்பகங்கள் மொழிபெயர்த்து வெளியிடுவதில் முனைந்து செயற்படுகின்றன. ஒவ்வொரு பதிப்பகமும் தனக்கெனக் குறிப்பிட்ட முறையில், மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட முயற்சி மெற்கொள்ளப்பட்டுள்ளது. சில முக்கியமான போக்குகள் மட்டும் தொகுத்தும் தரப்பட்டுள்ளது. கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் கூடுதலாகத் தொடர்ந்து வெளியிடப்பெற்று பல்வேறு பதிப்புகளைக் கண்டுள்ள முக்கியமான மொழிபெயர்ப்பு பற்றியும் குறிப்புகள் தரப்பட்டுள்ளன. படிசாலிதயூனியன் பதிப்பகங்களான முன்னேற்றப் பதிப்பகம், புரோகிரஸ் பப்ளிஷர்ஸ், மீர் பதிப்பகம் போன்றன தமிழில் பல்வேறு துறை சார்ந்த ரசிய நூல்களின் மொழி பெயர்ப்புகளை வெளியிட்டுள்ளன. சோவியத் யூனியனின் இடதுசாரிப் போக்கினுக்கு முக்கியத்துவம் தந்து மலிவு விலையில் வெளியிடப்பட்ட மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழக அரசியலிலும் தமிழலக்கியப் போக்கிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. மார்க்ஸ், லெனின், ஏங்கெல்ஸ், ஸ்டாலின் போன்றோரின் அரசியல் ஆவணங்கள் பல்வேறு நூல்களாகத் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. சோனியத் ரஷிய இலக்கிய மேதைகளான டால்ஸ்டாய், செகாவ், கோர்க்கி, ஷெலகோவ், புஷ்கின், லேர்மன்தல் போன்றோரின் இலக்கியப் படைப்புகளும் பெரிய எண்ணிக்கையில் தமிழாக்கப்பட்டுள்னை. தமிழ் மட்டும் அறிந்த வாசகர்கள் கூட ரஷிய இலக்கியப் பரப்பின் ஆழத்தையும் அகலத்தையும் அறிந்து கொள்ளும் வகையில் ரஷியப் பதிப்பகங்களின் தமிழாக்கங்கள் உதவின.

ஆக்ஸ்போர்டு பதிப்பகம் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள நூல்களை மிகச் சுருக்கமான அறிமுகங்கள் என்ற தலைப்பில் பலதுறை நூல்களின் தமிழாக்கங்களை அடையாளம் பதிப்பகம் வெளியிட்டு வருகிறது. பிராய்ட், பின் நவீனத்துவம், புத்தர், பௌத்தம் போன்ற பல்வேறு தலைப்புகளில் வெளியாயுள்ள நூல்கள் அறிமுக நிலையில் முக்கியமானவையாக விளங்குகின்றன.

மராத்தியிலும் கன்னடத்திலும் வெளியாகியுள்ள தலித் இலக்கியப் படைப்புகளையும் தலித் எழுத்தாளர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் தமிழாக்கி வெளியிடுவதில் விடியல் பதிப்பகத்தின் முயற்சி பாராட்டிற்குரியது.

சுற்றுச்சூழல் நோக்கில் இன்று உலகினை அச்சுறுத்தும் சுற்றுச் சூழலியல் பிரச்சனைகள் பற்றிய மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிடுவதில் 'பூவுலகின் நண்பர்கள்' அக்கறை காட்டி வருகின்றது.

மனித உரிமைகள், சட்டத்தின் நிலை, வன்முறை, சித்ரவதை, காவல்துறை, சிறைத்துறை, சிறைக் கைதிகள் போன்ற மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு நூல்களின் தமிழாக்கங்களை மக்கள் கண்காணிப்பகம்' வெளியிட்டு வருகின்றது.

அறிவியல் நூல்கள் வெளியீட்டில் பெரிய அளவில் முன்னேற்றம் இல்லை. எனினும் அவ்வப்போது சில பதிப்பகங்கள் ராக்கெட், கணினி, இண்டர்நெட், விண்டோஸ் போன்ற புத்தகங்களை வெளியிட்டு மாணவர்களுக்கு பயிற்சி தர முயலுகின்றன.

பொதுமக்கள் பயன் அடையும் வகையில் தமிழ் ஒலி பெயர்ப்பினுக்கு முக்கியத்துவம் தந்து வயரிங், மோட்டார் மெக்கானிசம், கார் ரிப்பேரிங் போன்ற நூல்களும் தமிழில் வெளியிடப்பெற்று, அத்துறை சார்ந்தோரிடம் கவனம் பெறுகின்றன.

- பங்காற்றுகின்றன. மொழிபெயர்ப்புப் பதிப்புகள்மூலம் தமிழில் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள் பின்வருமாறு:
- உரைநடை என்ற புதிய வடிவம் தமிழில் நடைமுறைப்படுத்தப்பட்டு பெரு வழக்காகிடும் சூழலை மொழிபெயர்ப்புகள் உருவாக்கின.
- நவீன இலக்கியம் தோன்றுவதற்கான பின்புலத்தை மொழிபெயர்ப்புகள் ஏற்படுத்தின.
- அறிவியல், சமூக அறிவியல் போன்றன தமிழுக்கு அறிமுகமாவதில் மொழிபெயர்ப்பும் அடித்தளமாக விளங்குகின்றது.
- அறிவியல் கருத்துகளைத் தமிழில் வெளிப்படுத்த இயலும் என்பதற்கேற்ப லட்சக்கணக்கான கலைச் சொற்கள் உருவாவதற்கு மொழிபெயர்ப்பு நூல்களே ஆதாரம்.
- உலக இலக்கியப் போக்குகளும் பல்வேறு இசங்களும் மொழிபெயர்ப்பு மூலம் தமிழுக்கு அறிமுகமாயின.
- தமிழில் எந்தவொரு புதிய கருத்தையும் வெளிப்படுத்தவியலும் என்ற நிலையை உருவாக்கியதில் மொழிபெயர்ப்புகள் முக்கியமானவை.

முடிவுரை:

பின்காலனித்துவ அரசியல் சூழல் நிலவும் தமிழகத்தில், மொழிபெயர்ப்பு நூல்கள் பற்றிப் புனையப்படும் கருத்துகளையும் விமர்சனத்திற்குள்ளாக்க வேண்டும். அப்பொழுதான் எந்த நூல்களை மொழிபெயர்க்க வேண்டும் என்ற புரிதல் தமிழ்ப் பதிப்பாளர்களுக்கு ஏற்படும் இப்புரிதல் இன்றைய காலக்கட்டத்தின் உடனடித் தேவையும் கூட.

பார்வை நூல்கள்:

- மொழிபெயர்ப்பியல் - சு. சண்முக வேலாயுதம் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)
- மொழிபெயர்ப்புக் கலை - மு. வளர்மதி (திருமகள் நிலையம்)
- மொழிபெயர்ப்புத் தமிழ் - ச. சிவகாமி (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)
- மொழிபெயர்ப்பியல்: பயணங்கள், பரிமாணங்கள் - கே. தியாகராஜன்
- மொழிபெயர்ப்பியல் ஆய்வு - முனைவர் செ. இராஜேஸ்வரி

Reference Books:

- Translation Studies - Su. Shanmuga Velayutham (International Institute of Tamil Studies)
- The Art of Translation - Mu. Valarmathi (Thirumagal Nilayam)
- Translation Tamil - Sa. Sivakami (International Institute of Tamil Studies)
- Translation Studies: Journeys and Dimensions - K. Thiagarajan
- Research in Translation Studies - Dr. Se. Rajeshwari

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

14. ஐங்குறுநூற்றில் விலங்குகளைக் குறிப்புப் பொருளாகக் கொண்ட உள்ளுறைகள்



முனைவர் கி. ராம்கணேஷ்,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641 014.
அலைபேசி- 97159 84239.

orcid no:https://orcid.org/0000-0002-2402-0861

DOI 10.5281/zenodo.21723487.

Abstract :

The structure of human life is shaped by one's lofty ideals; these originate in the mind and take form through emotion. Since one cannot express every emotion outwardly, only a select few are revealed. An animate or inanimate object may serve as a medium to express those feelings that cannot be openly displayed. This concept of conveying hidden meaning through such imagery evolved into the literary term *Ullurai* (implied imagery). Accordingly, this study focuses on *Ullurai* involving animals within the *Ainkurunuru* anthology.

KeyWords : Aingurunooru - Ancient Literature - Ullurai - Animate & Inanimate

மனித வாழ்க்கையின் அமைப்பு அவனது உயர்ந்த குறிக்கோளினை அடியொற்றியே அமைகின்றது. அஃது உள்ளத்தில் கருக்கொண்டு உணர்ச்சியால் உருவாகிறது.அனைத்து உணர்ச்சிகளையும் அவனால் வெளிக்காட்ட இயலாது சிலவற்றை மட்டுமே வெளிப்படுத்த முடியும். தன்னால் வெளிப்படையாகக் காட்ட முடியாத உணர்வுகளை ஏதேனும் ஒரு நிலையில் வெளிப்படுத்த அவனுக்குக் கருவியாக உயிருள்ள பொருளோ அல்லது உயிரற்ற பொருளோ அமையலாம். இவ்விதமாக அமையும் மறைபொருள் உள்ளுறை என்ற சொல்லாக உருப்பெற்றது. அதனையொட்டி ஐங்குறுநூற்றில் விலங்குகளைக் குறிப்புப் பொருளாகக் கொண்ட உள்ளுறைகள் என்ற தலைப்பில் ஆய்வு அமைகின்றது.

உள்ளுறை -பொருள்

உள்ளுறை என்ற சொல்லுக்கு, 'புதைந்துள்ள பொருள்', 'மறைந்துள்ள பொருள்', 'குறிப்புப் பொருள்' என்ற பொருள்களும் உண்டு. கூறப்படும் செய்தியானது வெளிப்படையாக அமையாமல், உய்த்துணரும் போது தோன்றுவதாக அமைவதே உள்ளுறையாகும். அக இலக்கியங்களுக்குச் சிறப்பு சேர்ப்பதில் உள்ளுறை முக்கியப் பங்காற்றுகிறது. எல்லாவுணர்வுகளையும் எல்லா நேரங்களிலும் யாரிடத்து வேண்டுமானாலும் வெளிப்படுத்துதல் இயலாத செயலாகும். இடம், பொருள், ஏவல் உணர்ந்தே கூற இயலும். மேலும் தான் கூறக் கருதிய செய்தியைக் வெளிப்படையாகக் சொல்ல இயலாத போதும், தான் கருதியவருக்குப் பொருள் புலனாகும்படி கூற விரும்பும் போதும் கருவியாக உள்ளுறையைப் பயன்படுத்த வேண்டும்.

சங்க அக இலக்கியங்களில் புலவர் தாம் கருதிய செய்தியைக் குறிப்பாக விளக்கும் பொருட்டு முதல், கரு, உரி - என்னும் திணை சார்ந்த முப்பொருளையும் பயன்படுத்தினர். அவற்றுள் கருத்து

வெளியீட்டிற்கு இன்றியமையாததான கருப்பொருளை உள்ளுறைக்கும் கருவியாகப் பயன்படுத்தினர். கருப்பொருள்களில் முதலிடம் பெறும் 'தெய்வம்' ஒழியப் பிற உள்ளுறைக்குக் கருவிகளாகப் பயன்பட்டன. இத்தகைய உள்ளுறை உவமையினின்றும் பிரித்துப் பார்க்க இயலாததாய், பிரித்தால் பொருள் தராததய், இரட்டைக் கிளவிக்கு ஒப்பானதாய் சுவையுடன் அமைகின்றது. இதனைத் தொல்காப்பியர்,

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்"

- (தொல். நூ.எ. 994)

என்ற நூற்பாவின் வழி புலப்படுத்துகிறார். மனிதனின் உணர்வானது எங்கு? என்ன? மறைந்து கிடக்கிறது என்பதைத் தேடும் தேடலாக அமைகின்றது. அதனால்தான மறைந்து கிடப்பதை அறிய அவனது உள்ளம் அலைபாய்கிறது. மனிதனின் வாழ்க்கை முழுவதும் தேடலாக அமைவது உள்ளுறையின்பாற்படுவதாக அமைகின்றது.

குறிப்புப் பொருளான விலங்குகள்

ஐங்குறுநூற்றில் கள்வன் பத்து, எருமைப் பத்து, குரக்குப்பத்து முதலியவை பெயரிலேயே விலங்குகளைக் குறிப்புப் பொருளாக கொண்ட உள்ளுறைப் பாடல்கள் என்பதை உணர்த்திவிடுகின்றன. அன்பு கலந்த வாழ்க்கையில் ஊடல் வருதல் இயற்கை. இஃதைத் தவிர்க்கவியலாது. களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கை ஆகிய இரண்டு நிலைகளிலும் இச்செயல்பாடு நிகழும். மருதம் முதலாவது திணையாக (ஊடலும் ஊடல் நிமித்தமும் - உரிப்பொருள்) அமைந்துள்ள ஐங்குறுநூறில் ஊடல் சார்ந்த பாடல்கள் உள்ளுறைகளாக வெளிப்பட்டுள்ளன.

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்"

- **(குறள் - 1330)**

என்னும் வள்ளுவரின் குறட்பாவும் ஊடலைப் பதிவு செய்துள்ளது. தோழியின் கூற்றாக அமையும் பாடலொன்றில்,

"வாழி யாதன் வாழி யவினி
பசியில் லாகுக பிணிசே ணீங்குக
எனவேட் டோளே யாயே யாமே
முதலைப் போத்து முழுமீனாருந்
தண்டுறை யூரன் றேரெம்
முன்கடை நிற்க வெனவேட் டேமே"

- **(ஐங். பா. எ. 05)**

அரசனையும் நாட்டையும் வாழ்த்திய பின்பு, நாங்கள் ஆண் முதலையானது தன்னுடன் வாழும் மீன்களை உண்ணும் துறையை உடைய ஊரனது தேர், பிறர் வீட்டின் முன் நிற்றலை விட்டு எம் வீட்டின் முன்பு நிற்க வேண்டும் என்று விரும்பியிருந்தோம் என்கிறாள். இப்பாடலில், 'முதலைப் போத்து முழுமீன் ஆரும் தண்டுறை ஊரன் தேர் எம் முன்கடை நிற்பதாகுக' என்னும் இரண்டு

அடியும் உள்ளுறை பொதிந்ததாகும். துறையிலே வாழ்கின்ற முதலையானது தன்னோடே இருக்கின்ற முழுமீன்களின் முதுமையைக் கருதாது அதனை உண்டொழுகும் ஊரனாக இருப்பதால் தலைவன் தன் தலைவியின் நிலையைக் கருத்தில் கொள்ளாது பரத்தையை நாடிச் சென்றான் என்பது குறிப்புப் பொருளாகும். இவ்விதமாக உள்ளே பொருளைப் பொருத்தி வைத்துத் தோழி விளம்புகிறாள்.

தாய்சாப் பிறக்கும் புள்ளிக்கள்வன்

கள்வன், அலவன் போன்ற சொற்கள் நண்டினைக் குறிக்கும். மருதநில வயல்களிலே நண்டு அதிகமாக வாழும். ஆதலால் நண்டினைக் குறிப்புப் பொருளாகக் கொண்ட பாடல்கள் கள்வன் பத்து என்னும் பகுதியில் அமைகின்றன.

“அள்ளல் ஆடிய புள்ளிக் கள்வன்
முள்ளி வேரளைச் செல்ல மூரன்
நல்ல சொல்லி மணந்தினி
நீயே னென்ற தெவன்கொ லன்னாய்”

- (ஐங். பா. எ.22)

மேற்கண்ட தலைவியின் கூற்றாக அமையும் பாடலில் தலைவன் புறத்தொழுக்கம் மேற்கொண்டு செயல்படுகிறான் எனத் தோழியிடம் தலைவி உள்ளுறை வாயிலாகக் குறிப்பிடுகின்றாள். தோழியே! சேறுபடிந்த புள்ளிகளைத் தன்னகத்தே உடைய நண்டானது முள்ளிச் செடியின் வேரில் அமைந்துள்ள வளையில் புகும் ஊரன் களவுக்காலத்தில் நன்மைதரும் சொற்களைச் சொல்லி மணந்தான். ஆனால் கற்புக்காலமாகிய இவ்வாழ்வில் மீறிவிட்டான் என உரைக்கிறாள்.

நண்டாகத் தலைவனை உவமைப்படுத்துகிறாள் தலைவி. நண்டு தன்னிடம் சேறு பொருந்தியதைக் கருதாதது போல பரத்தமை நெறியில் தன்னைப் பிறர்கூறும் அவச்சொல்லுக்கு அஞ்சாது தலைவன் பரத்தையை நாடிச் செல்கின்றான் என்பதைக் குறிப்பாகத் தலைவி உணர்த்ததுகின்றாள்.

தலைவனுக்கு வாயிலாக வந்தவர் கேட்கும்படி தோழியின் கூற்றாக அமையும் பாடலில்,

“தாய்சாய் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு
பிள்ளைதின்னு முதலைத் தவனூர்
எய்தின னாகின்று கொல்லோ மகிழ்நன்
பொலந் தொடி தெளிர்ப்ப முயங்கியவர்
நலங்கொண்டு துறப்ப தெவன்கொ லன்னாய்”

- (ஐங். பா. எ. 24)

தலைவன், தாய்சாகப் பிறக்கும் நண்டையும் பிள்ளை தின்னும் முதலையையும் உடைய ஊரினைச் சேர்ந்தவன் என்பதால் பரத்தையருள்ளும் அவர்களுக்கு இனியனாக நடக்கவில்லை என்கிறாள் தோழி. கலந்த மகளிரின் நலன் கெடுக்கும் அன்பு இல்லாமையும் இனி முயங்க இருக்கும் மகளிரின் நலம் நுகர்ந்து அதன்பின்பு பிரியும் அருளின்மையும் உடையவன் எனக்கூறித் தோழி வாயிலை மறுத்துரைக்கிறாள்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

எருமைக்கன்று வெரூஉம்

தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்ளாது இருந்தான். ஆயினும் தலைவி பரத்தமை உள்ளதென்று ஊடல் கொண்டாள். தலைவன் அவளது புலவியை நீக்கி புணர்ந்து புணர்ச்சியின் இறுதிக்கண் அவன் தனக்குள் கூறிக் கொண்டதாகப் பாடல் அமைந்துள்ளது.

"பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக்கன்று வெரூஉம்
பொய்கை ஊரன் மகளிவள்
பொய்கைப் பூவினும் நறுந்தண்ணியளே"

- (ஐங். பா. எ.97)

எருமையானது தன்கன்றை விட்டு வெளியே செல்கிறது. அங்கே ஒரு புதரினுள் செல்லும்போது அங்கிருந்த பகன்றை மலர் அதன் கொம்பில் அகப்படுகின்றது .மாலையில் வீடு திரும்பியதும் அதன் கன்றோ, தலையில் பகன்றை மலர் இருந்ததால் அதைக்கண்டு அஞ்சுகிறது. அத்தகைய பொய்கை ஊரனுக்கு மகளாகிய இவள் பொய்கையில் மலர்ந்த ஆம்பல் பூவைவிடக் குளிர்ச்சியினை உடையவள் என்கிறான் தலைவன்.

தாய் எருமையின் கொம்பில் கிடந்த பகன்றை மலரினைக் கண்டு கன்றானது வேறுபட அஞ்சியது போல் தன் தோளில் அணிந்திருந்த மாலையைப் பார்த்து பரத்தையர் அணிந்தது எனத் தவறாக உணர்ந்து ஊடல் கொள்கின்றாள் என்பது உள்ளுறையாக அமைந்துள்ளது.

"கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை" (நற். பா.எ. 260) என்னும் நற்றிணைப் பாடலிலும் எருமையைக் குறிப்புப் பொருளாகக் கொண்ட உள்ளுறை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒருவன் தவறான ஒழுக்கத்தை மேற்கொண்டு பிறகு திருந்தினாலும் கூட அவன்மீது சந்தேகப் பார்வை இருக்கும் என்பதைப் பாடல் புலப்படுத்துகின்றது.

அன்பில்லாத முதலை

தலைவன் அன்பில்லாதவனாகச் செயல்படுகின்றான் என்பதனைத் தலைவி,

"தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத்து அவன்ஊர் என்ப அதனால்
தன்சொல் உணர்ந்தோர் மேனி
பொன்போல் செய்யும் ஊர்கிழவோனே"

- (ஐங். பா. எ. 41)

என்ற பாடல்வழி குறிப்பிடுகின்றாள். தன்னுடைய குட்டியை உண்பது அன்பு இல்லாத முதலை. அத்தகைய முதலை வெண்மையான மலர்ந்த நிறைந்த பொய்கையுடையது தலைவனது ஊர் அதனால் ஊர் அதனால் அவ்வூர்க் கிழவனான தலைவன், தான் தெளவுபடுத்திய சொல்லைத் தேறியிருந்தவரின் மேனியைத் தன் பிரிவால் பொன்போன்ற பசப்பை அடையும்படி செய்கின்றான் என்றாள்.

'தன்பார்ப்புத் தின்னும் முதலை என்பது அன்பில்லாத தலைவனின் கொடுமைக்கு உவமையாகவும் உள்ளுறையாகவும் அமைந்துள்ளது.

பிறர் தோய்ந்த மார்பு

தலைவி, பரத்தையின் காரணமாகப் பிரிந்து சென்று திரும்பி வந்த தலைவனோடு புலந்து கூறுகின்றாள்.

"பொய்கைப் பள்ளிப் பலவுறு நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூர
எந்நலந் தொலைவ தாயினும்
துன்னலம் பெரும பிறர்த் தோய்ந்த மார்பே"

- (ஐங். பா. எ. 63)

என்ற பாடலில் நீர்நாய் பொய்கையைத் தான் வாழும் இடமாகக் கொண்டிருந்தும் தன்னுடலில் நாறும் புலால் நாற்றத்தினைக் கழுவிக் கொள்ளாததோடு புலால் நாறும் இழிந்த வாளை மீனையே இரையாகப் பெறுகின்றது. அதுபோன்று தலைவனும் தனது குடிப்பிறப்பிற்கேற்றபடி தூய காதல் நெறியிலே நில்லாது, இழிந்த காம இன்பமே காமுற்று தினந்தோறும் பரத்தையரை நாடி இருக்கின்றான் என உள்ளுறையால் தலைவி தலைவனைப் பழித்துக் கூறுகிறாள்.

மேலும் பிறராகிய பரத்தை தோய்ந்த மார்பினைத் தான் தீண்ட மாட்டேன் எனவும் தலைவி கூறுகின்றாள். இங்கு நீர்நாய் தலைவனின் இழிவான பரத்தமை காரணமாக அவனோடு ஒப்பிடப்படுகிறது.

சின்னமீனைப் போட்டு பெரியமீனைப் பிடித்தல்

தலைவியின் களவொழுக்கத்தை அவளின் இல்லத்தார் அறிந்தனா. ஆதலால் அவளை வீட்டிலேயே இருத்தி வைக்கப் போகின்றனர் என்பதை அவள் அறிந்தாள். மணந்து கொள்ளாமல் களவின்பத்தை மட்டும் விரும்பும் தலைவன் வீட்டு வேலியின் பக்கத்தில் இருக்க, அவன் கேட்கும்படி தோழிக்குப் பின்வருமாறு கூறுகிறாள்.

"………………………………

சூழ்கழி மருங்கின் நாள்இரை கொளீஇச்
சினைக் கயல்மாய்க்கும் துறைவன் கேண்மை
பிரிந்தும் வாழ்துமோ நாமே
அருந்தவம் முயறல் ஆற்றா தேமே"

- (ஐங். பா. எ. 111)

தோழியே நான் கூறுவதைக் கேள். சுற்றியுள்ள நீண்ட கோலில் வாழும் சினையுடன் கூடிய மீன்களைப் பாணன் தூண்டிற்கயிற்றால் இரை கொள்ளுமாறு செய்து பிடிக்கும் துறைவனின் நட்பைப் பிhயாது பெறுவதற்குரிய அரிய தவத்தைச் செய்திலே மாகலின் பிரிவுத் துன்பத்தைத் தாங்கி இங்கு உயிர் வாழ்வோம் ஆனோம் என்கிறாள்.

இப்பாடலில் பாணன் நாணிரை கொள்வித்துச் சினைக் கயலை மாய்க்கும் துறைவன் என்றது, தலைவன் தன் உறவால் இன்பம் நுகர்வித்துக் கடிது வரையாது வருத்துகின்றான் என்பதை உள்ளுறையாக வைத்துத் தலைவி பாடுகின்றாள்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

நிறைவுரை

மனித இனத்தின் உணர்வுகளை தௌ;ளிதின் வெளிப்படுத்த உள்ளுறையானது உணர்வுக்கருவியாகச் செயல்பட்டுள்ளது. மேலும் ஆறறிவு கொண்ட மனிதனாயினும் அவனது வாழ்வியலில் அஃறிணையானது தவிர்க்க இயலாத பான்மையைப் பெற்றிருத்தலையும் காண முடிகிறது. தோழியானவள் தலைவிக்கு உற்றதுணையாக அமைவதோடு மட்டுமல்லாமல் களவுக்காலத்தில் தலைவியைத் தேற்றவும், தலைவனைப் பழிக்கவும், வாயில் மறுக்கவும் எனப் பல இடங்களில் உள்ளுறையைப் பயன்படுத்தியுள்ளதை அறிய முடிகிறது. உள்ளுறை என்பது துயரத்தை புலப்படுத்துவதற்கான ஒரு வடிகால் என்பதை உணர முடிகிறது.

துணை நின்ற நூல்கள்

1. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை - ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும் - அண்ணாமலைப்பல்கலைக்கழக வெளியீடு
2. ச.வே.சுப்பிமணியன் - தொல்காப்பியம் - தெளிவுரை, கழக வெளியீடு, மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை
3. புலியூர்க்கேசிகன் - நற்றிணை - தெளிவுரை, பாரிநிலையம், 184, பிராட்Nவ, சென்னை.
4. மு. வரதராசனார் - திருக்குறள் - தெளிவுரை - கழக வெளியீடு, சென்னை.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

15.நெய்தல் நில மக்களின் வாழ்வியலும் உற்பத்தி மற்றும் வணிகமுறைகளும்

The lifestyle, production and trade practices of the people of the Neithal land

ஆ.பிரபாகரன்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண்:B1/TAM23PDEC0362/2023,
தமிழ்த்துறை. நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.(தன்னாட்சி)
பாரதியார் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது.கோயம்புத்துர்,தமிழ்நாடு,இந்தியா

முனைவர் ப. விக்னேஸ்வரி,
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை. நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி.(தன்னாட்சி) பாரதியார் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது.கோயம்புத்துர்,தமிழ்நாடு,இந்தியா

A. Prabakaran Ph.D. Research Scholar RegistrationNumber:B1/TAM23PDEC0362/2023Department of Tamil, Nehru Arts and Science College.(Autonomous),Affiliated to Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India. Gmail: nitprabakaran.a@nehrucolleges.com. Phone:9159706380 ORCID: https://orcid.org/0009-0009-3989-1529
Dr. P. Vigneshwari Associate Professor, Department of Tamil Nehru Arts and Science College (Autonomous),Affiliated to Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India. Gmail:nascvigneswari.p.@nehrucolleges.com,
ORCID: https://orcid.org/0000-0001-5023-1091
DOI 10.5281/zenodo.21723654.

Abstract ;

Sangam literature serves as a profound window into the cultural values, social structures, and economic frameworks of the ancient Tamils. Focusing on the Neithal (coastal) landscape within the Ainthinai (fivefold landscape) system, this study illuminates how human existence is fundamentally shaped by its geographical environment. It elucidates the natural topography of the coastal region alongside the daily customs, religious beliefs, and artistic expressions of its inhabitants. A detailed analysis is presented on the political categorization of coastal chieftains—such as Pulampan, Serppan, Thuraivan, and Konkan—based on their territorial jurisdiction. Furthermore, it delves into the lifestyles of communities divided by occupation, including Valaiyar (fisherfolk), Umanar (salt merchants), and Panar (bards). Key productive activities, such as deep-sea fishing, salt harvesting in the backwaters, and fish drying, are brought to the forefront, emphasizing the immense contribution of Neithal women in trading these commodities through a well-established barter system. Ultimately, substantiated by evidence from Sangam verses, the work establishes how the Neithal landscape flourished as a prosperous hub where resources from various regions converged, underscoring its indispensable role in both the domestic and maritime economy of the ancient Tamils.

Keywords: Sangam literature, Neythal landscape, tribal groups, material production, Umanar, barter trade, lifestyle of ancient Tamils.

ஆய்வுச் சுருக்கம் ;

தமிழரின் அகத்திணை வாழ்வியலில், கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தல் நிலமாகும் அங்கு வசிக்கும் மீனவர்களின் பண்பாடு சமூகக் கட்டமைப்பு மற்றும் பொருளாதார நெறிமுறைகளைச் சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நாட்டுப்புற இலக்கியங்கள் வழியாகவும் காணமுடிகிறது. நிலவியல் சூழலுக்கேற்ப மனித வாழ்வியல் கட்டமைக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு, நெய்தல் நிலத்தின் இயற்கை அமைப்பு, அங்கு வாழ்ந்த மக்களின் அன்றாட பழக்க வழக்கம், நம்பிக்கைகள், வழிபாடு, மரபு, மற்றும் கலைகள் போன்றவைகள் வரையறுக்கப்பட்டுள்ளது. நெய்தல் நிலத்தில் மீனவர்கள் பல்வேறு பெயர்களோடு வாழ்ந்துள்ளதையும் அப்பெயர்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. அதில் புலம்பன், சேர்ப்பன், துறைவன், கொண்கன் என வகைப்படுத்தப்பட்டுள்ளன, தொழில் அடிப்படையில் வலையர், உமணர், பாணர் எனப் பிரிக்கப்பட்ட குடிகளின் வாழ்வியலும் விரிவாக ஆராயமுடிகிறது. அனால் சங்க கால மீனவர்களின் பெயருக்கும் தற்கால மீனவர்களின் பெயருக்கும் மிகுந்த அளவு வேறுபாடு காணமுடிகிறது. பரதவர் என்று மீனவ சமூகத்தினரை தற்பொழுது குறிப்பிடும் பொழுது சங்க இலக்கியப்பெயர்கள் தற்பொழுது வழக்கத்தில் இல்லை என உறுதி படுத்த முடிகிறது. மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், மீன்களை காயவைத்தல், படகு செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்ட மீன்வர்கள் பொருளுறப்பத்தி முறைகளும், ஈட்டிய பொருள்களைப் பண்டமாற்று முறையில் வணிகம் செய்ததிலும் சிறந்து விளங்கியதாக அறிய முடிகிறது. ஆண்களுக்கு நிகராக கடல் சார்ந்த தொழில்களில் நெய்தல் நில மகளிரின் பங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பல்வேறு நிலப்பரப்புகளின் வளங்கள் அனைத்தும் ஒருங்கே குவியும் செல்வச் செழிப்பு மிக்க இடமாக நெய்தல் நிலம் திகழ்ந்தது, பழந்தமிழரின் உள்நாட்டு மற்றும் கடல்கடந்த பொருளாதாரத்தில் நெய்தல் திணையின் இன்றியமையாத பங்களிப்பும் அறியமுடிகிறது நெய்தல் நிலா மக்களின் வாழ்வியல் நிலைப்பாடுகளையும் அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவக்கூடிய உற்பத்தி மற்றும் வணிக முறையையும் இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

திறவுச்சொற்கள்: சங்க இலக்கியம், நெய்தல் திணை, இனக்குழுக்கள், பொருளுறப்பத்தி, உமணர், பண்டமாற்று வாணிகம், தொல்தமிழர் வாழ்வியல்.

முன்னுரை ;

மனிதர்களின் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே வாழ்ந்து வந்தனர், நிலப்பாகுபாட்டின் அடிப்படையில் அமைந்த இடங்களை வாழ்வாதாரமாகவும் வழிபாட்டு தளமாகவும் மாற்றியமைத்தனர். இவர்களின் இருப்பிடம் தொழில்முறைகளுக்கும் வாழ்வியலுக்கும் ஏற்றவாறு அமைத்துக்கொண்டனர். நெய்தல் நில மக்களின் வாழ்வு முறையும் கலாச்சார முறையும் கடலைச் சார்ந்தே விளங்கியுள்ளது. மீனவர்களை பற்றி சங்க

இலக்கியங்கள் தரவுகள் இருந்தாலும் நாட்டுபுறவியல் என்ற இலக்கியமே நெய்தல் நில மக்களின் வாழ்வியலை சம வெளி மக்களுக்கு எடுத்துக்காட்டியது. "வாழும் நிலப்பரப்பின் இயல்புகளே மக்களின் பண்பாட்டையும் வாழ்வியலையும் தீர்மானிக்கின்றன" மக்கள் வாழ்வின் இன்றியமையாக் கூறுகளாகிய உறைவிடம், உணவு, ஆடை, விருந்தோம்பல், சமூகக் கூட்டுணர்வு உள்ளிட்ட பண்பாட்டு விழுமியங்களும், தொழில் மற்றும் வாணிக நெறிமுறைகளையும் கொண்டு எதார்த்த வாழ்வியலை வாழ்ந்து வருகின்றனர் மீனவர்கள் சங்க கால மீனவர்களுக்கும் தற்கால மீனவர்களுக்கும் காலமுறைகளும், வாழ்வியல் முறைகளும் சம பங்காக ஒத்துப்போவதில்லை அவர்களின் அன்றாட வாழ்வியல் முறையும் உற்பத்தி முறையும் வணிகமுறைகளையும் சங்க இயக்கியங்கள் வழியாகவும் தற்கால மீனவர்களின் வாழ்வியல் வழியாகவும் காணமுடிகிறது . அதன் பின்னணியோடு மூன்று தலைப்புகளின் வழி நெய்தல் நிலா மக்களின் வாழ்வு முறைகளையும் அவர்களின் வணிக மற்றும் உற்பத்தி முறைகளையும் காண்போம், 1. நெய்தல் நில அமைப்பு, 2. நெய்தல் நில உற்பத்திமுறை 3. நெய்தல் நில வணிக முறை அவ்வகையில், செவ்விலக்கியங்கள் சுட்டும் நெய்தல் திணை மக்களின் பண்பாட்டு விழுமியங்களையும், அவர்களின் பொருளுற்பத்தி நெறிமுறைகளையும் நுணுகி ஆராய்வதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

நெய்தல் நில அமைப்பு :

தமிழ் பெருமக்கள் நிலத்திணையை ஐவகையாகப் பகுத்துள்ளனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாம். அதில் ஒவ்வாரு திணையும் வெவ்வேறு இயற்கை அமைப்பையும் நில அமைப்பையும் கொண்டு விளங்குகிறது. அவற்றுள் நெய்தல் என்பது பெரும் மணற்பரப்பு நிலப்பரப்புமாகும். இதனைத் தொல்காப்பியம், **“வருணன் மேய பெருமணல் உலகம்”** எனப் பறைசாற்றுகிறது. மனிதர்கள் செய்யும் தொழிலை வைத்து அவர்களின் நிலம் அடையாளம் காணப்பட்டது. அவர்களின் மரபு தொழிலை அடிப்படையாக கொண்டு தம் வாழ்விடங்களை அமைத்துக்கொண்டனர்,இவர்கள் தொழிலை தெய்வமாகவும் அதனை வழங்கும் இயற்கையை கடவுளாகவும் வழிப்பட்டனர்.மனிதர்களின் வாழ்வுமுறை இன்றுவரை இயற்கையோடு இணைந்த பிணைப்பாக காணமுடிகிறது அதனை மையப்படுத்தியே அவர்களின் வாழ்வு முறைகள் நகர்ந்து செல்கின்றன.மனிதன் இயற்கையை

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

பாதுகாப்பது போலவே இயற்கையும் மனிதனை பாதுகாத்து வருகின்றது பாதுகாத்து வருகிறது,என்பதனை அவர்களின் கடவுள் வழிபாடுகளின் மூலம் அறியமுடிகிறது. இயற்கையின் மீது மனிதனுக்கு உள்ள நம்பிக்கைகளும் சடங்கியல் முறைகளுமே இதற்குச் சான்றாகும்,

> **இயற்கைப் பொருட்களிடம் மனிதன் காட்டும் சடங்கியல் அணுகுமுறைக்கு அடிப்படைக் காரணம் அப்பொருட்கள் அல்லது உயிரினங்களால் அவன் அடையும் பயனே. (குலக்கறியியலும் மீனவர் வழக்காறுகளும், ப.xvii)**

தனஞ்செயன் குறிப்பிடுவது போலவே, மீனவர்களுக்கும் இயற்கைக்குமான நெருக்கமான தொடர்பு கூறப்பட்டுள்ளது இந்நிலப்பரப்பில் தாழை, ஞாழல், புன்னை, அடும்பு என எண்ணற்ற நறுமலர்கள் பூத்துக்குலுங்கினாலும், நெய்தல் மலரே எங்கும் செழித்திருப்பதால் இப்பெயர் நிலைபெற்றதெனக் கலைக்களஞ்சியம் சுட்டுகிறது. கடலும் நிலமும் உடலும் உயிருமென எஞ்ஞான்றும் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன. "புலவுக் கடலுடுத்த மலர்தலையுலகம்", "படுதிரை வையம்", "நளியிரு முந்நீர் ஏணியாக மண்திணி கிடக்கை", "இமிழ்திரைப் பவ்வம் உடுத்தஇப் பயற்கெழு மாநிலம்", "விரிநீர் வியனுலகம்", "எறிதரங்கம் உடுக்கும் புவனம்" என்றெல்லாம் பொய்யா நாவிற் புலவர் பெருமக்கள் கடலையும் நிலத்தையும் இயைத்துப் பாடியுள்ளனர். பௌவம் கொழித்த வெண்மணற் குவியல்கள் கரைநெடுகிலும் வெண்குன்றுகளெனக் காட்சியளிக்கும் பாங்கினைக் குன்றின் தோன்றும் குவவுமணல், குப்பை வெண்மணல் குவவு, மோட்டுமணல் எக்கர் எனச் சங்கப் பனுவல்கள் எழிலுறப் பதிவு செய்துள்ளன. நிலவியலும் இயற்கை வனப்பும் கடலைச் சார்ந்த பெருமணற்பரப்பில் கடல்வளத்தையே நம்பி வாழ்ந்த மாந்தர்களே நெய்தல் நிலத்தவர். இவர்கள் அலைவாய்க்கரையையும் உப்பங்கழியையும் ஒட்டித் தாழை வேலிகளுடன்கூடிய குடியிருப்புகளில் வாழ்ந்தனர். இவ்வூர்கள் 'பாக்கம்' எனப்பட்டன. இங்கிருந்த மாந்தர் 'பெருங்கடற் பரதவர்' என்றும், அவர்கள் வாழ்ந்த சிற்றூர்கள் 'சிறுகுடி', 'கானல் சிறுகுடி' என்றும் அழைக்கப்பட்டன. நெய்தல் நிலம் மணற்பாங்கானதும் உவர்க்கும் தன்மையுடையதுமாகும். அலைகளால் பள்ளங்களில் தேங்கும் கடல்நீர், கதிரவனின்

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கடுவெம்மையால் ஆவியாகி உப்பாகப் படிந்துவிடும். உப்பங்கழிகளில் முண்டகச் செடிகள் மலர்ந்து நிற்கும் குளிர்ந்த கடற்பரப்பே நெய்தல்.

“கானலம் சிறுகுடி” (நற்றிணை, பா. 4: 1)

“காணல் நண்ணிய காமர் சிறுகுடி” (நற்றிணை, பா. 45: 1)

“கல்லேன் சிறுகுடி” (அகநானுறு, பா. 110: 13)

“அவ்வலேப் பரதவர் காணலம் சிறுகுடி” (அகநானுறு, பா. 250: 11)

பரதவர்கள் வாழும் பகுதி மணல் சூழ்ந்த இடமாகும். அங்குள்ள ஞாழல் மரத்தின் தாழ்ந்த பூங்கொத்துகள் நிறைந்த கிளைகளில் புள்ளினங்கள் தங்கியிருக்கும்; வெள்ளை நாரைகள் ஒலியெழுப்பும்; தாழையின் முட்கள் பொருந்திய மடல் பூக்களோடு, அன்னம் போன்ற புன்னைப் பூக்களும் கலந்து நறுமணம் கமழும்.

“முழங்குகடல் திரைதரு முத்தம் வெண் மணல் இமைக்கும்
தண்ணம் துறைவன் வந்தென” (ஐங் 105: 2-3)

எனும் வரிகள், அலைகள் கொணர்ந்திட்ட முத்துக்கள் வெண்மணலில் பொன்போல மின்னும் எழிலைக் காட்டுகின்றன. மீன்வளம் மிக்க இந்நிலத்தில் வெண்காக்கைகளும் நாரைகளும் வட்டமிட்டவண்ணம் இருக்கும். உப்பேற்றிச் செல்லும் சகடங்களின் வண்டிகளின் சக்கரங்கள் மணலில் எழுப்பும் ஓசைகேட்டு நாரைகள் அஞ்சும். நாவல் மரத்திலிருந்து உதிர்ந்த பழங்களைத் தம்மினமெனக் கருதி வண்டுகள் மொய்க்கும்; அதனைச் சுவைக்க நண்டுகள் வரும் இருசாராருக்கும் பூசல் எழும் இதனைக்கண்ட நாரை வருந்த, நண்டும் வண்டும் பூசலைக் கைவிட்டு அகலும் எனப் பழந்தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வை நுண்ணிதின் பதிவு செய்துள்ளனர். மீன்பிடித் தொழிலில் ஈடுபாடு கொண்ட பரதவர் திமில், நாவாய், தோணி ஆகிய மரக்கலன்களில் கடற்பயணம் மேற்கொண்டு மீன்வேட்டையாடினர். என்பதனை

நெய்தல் நில மக்கள் கடலை ஒட்டியுள்ள வெண்மணல் திடலில் சிறு குடில்கள் அமைத்து வாழ்ந்துள்ளனர். இக்குடில்களில் அவர்கள் பெரும்பாலும் கூட்டமாகவே, ஒரே குழுவாகவே வாழ்ந்துள்ளனர். இவ்விடங்களைக் கடலுக்குச் செல்ல ஏற்றவாறும், தங்களுக்கு உகந்த இயற்கைச் சூழலோடும் பாதுகாப்போடும் பொருந்துமாறு அமைத்துக்கொண்டனர். (பிரபாகரன்.ஆ ,ப .10)

ஆய்வுக்கட்டுரையில் காண முடிகிறது. அலைகடல் பரப்பிலே திறம்பட நீந்தி, தம் உடல்வலியாலும் அறிவாற்றலாலும் பெருங்கடல் வளத்தைக் கைக்கொண்ட அவர்தம் வீரத்தைச் சங்கப் பாக்கள் போற்றுகின்றன. வலையை வீசியும், 'பறி' என்னும் கருவியைக் கொண்டும் மீன்களை வாரினர். கொடிய சுறா மீன்களைக் கூரிய உளியால் எறிந்து வீழ்த்தும் அருஞ்செயலிலும் பரதவர் பெருவிருப்பம் கொண்டிருந்தனர். பௌவத்தில் மீன்வேட்டையாடுதலும் உப்பளத்தில் உப்பு விளைவித்தலும் நெய்தல் ஆடவரின் தலையாய தொழில்களாகும். நுகர்ந்தது போக எஞ்சிய மீன்களைக் கருவாடாக உலரவைப்பதும், அவ்வாறு உலரும் மீன்களுக்குக் காவல்காப்பதும் இளமகளிரின் பணியாகும். உலர்ந்த கருவாட்டையும் விளைந்த உப்பையும் பெண்டிர் சுமந்துசென்று, மருதநிலத்து ஊர்களில் பண்டமாற்று முறையில் நெல் முதலான கூலங்களைப் தானியங்களைப் பெற்று வந்தனர். நெய்தல் மாந்தர் தம் ஒழுகலாறுகளோடு நெருங்கிய தொடர்புடைய வாழ்வியலைக் கொண்டிருந்தனர். நன்னிமித்தம், புள்வாய்ப்பாடு சகுனம் ஆகியவற்றில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்த அவர்கள், எச்செயலையும் நல்ல நாளும் பொழுதும் பார்த்தே தொடங்கினர். வலையையும் மரக்கலனையும் கடலில் இறக்க நன்னாள் தேடும் வழக்கம் அவரிடையே நிலவியது. வதவை திருமணம் முறைகளில் பொருள்கொடுத்து மணத்தலும், உடன்போக்கும், காதலுமே மேலோங்கியிருந்தன. மணமகளிர்க்கு நறுமலர் அணிவித்தலைச் சடங்காகச் செய்தனர். தற்காலத்தைப் போலவே, அக்காலத்திலும் காதலுக்குக் குடிப்பிறப்பும் பொருள்சார் ஏற்றத்தாழ்வுகளும் தடையாக இருந்ததைப் புலால் நாற்றம் வீசும் பரதவர் மகளைச் செல்வந்தர் மகன் மணக்க எழுந்த தடையைச் சுட்டும் நற்றிணைப் பாடல் வழி அறியலாம். பண்பாட்டு வரலாற்றில் ஆடல்பாடல்களும் விளையாட்டுகளும் நீங்கா இடம்பெறுவன. நெய்தல் ஆடவரும், பெண்டிரும், சிறாரும் பல்வேறு விளையாட்டுகளில் திளைத்தனர். முத்துக்களைக் கிளிஞ்சல்களில் இட்டுச் சிறுவர்களோடு மந்திகளும் விளையாடின. சிறுவர்கள் ‘கிலுகிலுப்பை’ கொண்டு ஒலியெழுப்பி மகிழ்ந்தனர். அலைவாய்க்கரையில் மணல்வீடுகட்டி விளையாடும் ‘கடலாட்டு’ நெய்தல் மாந்தரிடையே சிறப்பிடம் பெற்றது. கழியிடத்து வளர்ந்த சாயக் கோரையைப் பறித்துப் பாவை செய்து விளையாடித் தம் பொழுதை இனிதே கழித்தனர்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

சங்க இலக்கிய நெய்தல் நில இனக்குழுக்கள் ;

செவ்விலக்கியங்களான சங்கப் படைப்புகள், நெய்தல் நிலக் குடிகளைப் பரதவர், நுளையர், பரத்தியர், நுளைச்சியர், வலையர், உமணர், பாணர் என அவர்தம் தொழிலடிப்படையில் பலவாறாகப் பகுத்துரைக்கின்றன. அவ்வாறே, கடற்பரப்பின் தலைவனை அவனது ஆட்சிப்பரப்பிற்கும் தன்மைக்கும் ஏற்பப் புலம்பன், சேர்ப்பன், துறைவன், கொண்கன் எனப் பல்வேறு பெயர்களில் வகைப்படுத்துகின்றன. மனித குல வரலாற்றின் தொடக்கக் காலத்தில், மனிதன் இயற்கையின் சீற்றங்களுக்கும், கொடிய விலங்குகளுக்கும் அஞ்சித் தனித்தே வாழ்ந்து வந்தான். ஆனால், தனித்து வாழும் முறையில் உள்ள பாதுகாப்பற்ற தன்மையையும், உணவு தேடுவதில் உள்ள சிரமங்களையும் அவன் காலப்போக்கில் உணர்ந்தான். தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவும், உணவுத் தேவையை எளிதாகப் பூர்த்தி செய்யவும் அவனுக்குப் பிற மனிதர்களின் துணை தேவைப்பட்டது. இந்தத் தேடலே மனிதர்களை ஒன்றிணைத்து, ஒரு கூட்டமைப்பை உருவாக்க வித்திட்டது. இவ்வாறு உருவான ஆரம்பகாலச் சமூக அமைப்பே 'இனக்குழு' எனப்படுகிறது. தங்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, இந்த இனக்குழுக்கள் தங்களுக்குள் ஒரு வாழ்வியல் முறையை வகுத்துக் கொண்டன. இந்த வரலாற்றுப் பரிணாமத்தைச் சமூகவியல் ஆய்வாளர்கள் கீழ்க்கண்டவாறு பதிவு **செய்கின்றனர், "ஆதியில் தனியாக வாழ்ந்த மனிதன் கூட்டு வாழ்க்கைக்காக ஒரு இனக்குழு சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டான். அந்த இனக்குழுவின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு, ஓரிடம் விட்டு ஓரிடம் நாடோடிகளாக நகரும் வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டான்." (முனைவர், லலித பாலா, ப.275)**
மனித சமூகப் பரிணாம வளர்ச்சியின் மிக முக்கியமான இரண்டு காலகட்டங்களை மிகத் தெளிவாகப் சுட்டிக்காட்டுகிறது. ஆதியில் தனியாக வாழ்ந்த மனிதன்' என்பது இயற்கையோடு மனிதன் தனித்துப் போராடிய தொடக்க நிலையைக் குறிக்கிறது.

புலம்பன் ;

நெய்தல் திணைப் பாடல்கள் கடலும் கடல் சார்ந்த மக்களின் வாழ்வையும், குறிப்பாகக் காதல் சார்ந்த உளவியல் உணர்வுகளையும் ஆழமாகப் பதிவு செய்துள்ளன. நெய்தல் நிலத் தலைவனைக் குறிக்கப் புலவர்கள் பயன்படுத்திய மிகச் சிறந்த அழகிய சொல்லாட்சிகளில் ஒன்று "மெல்லம் புலம்பன்" (அல்லது மெல்லன் புலம்பன்) என்பதாகும். புலம்பன் புள்ளினங்கள் மீன்களை இரையாகத் தேடும், மென்மைத்தன்மை பொருந்திய அலைவாய்க்கரையின் தலைவன் 'புலம்பன்' எனப்படுகிறான். மென்மை வாய்ந்த கடற்பரப்பிற்குத் தலைவன் இவன் என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் வெள்ளிடைமலையாக்குகின்றன. இச்சொல், மென்மையான மணல்வெளிகளைக் கொண்ட கடற்கரைக்கு உரியவன் என்பதையும், மென்மையான இயல்புகளைக் கொண்டவன் என்பதையும் ஒருங்கே குறிக்கிறது. அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு ஆகிய எட்டுத்தொகை நூல்களில், தலைவனின் நில வளம், அவனது வருகை, பிரிவு மற்றும் அவன் வருகையால் தலைவி அடையும்

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

மாறுபட்ட உடலியல், உளவியல் மாற்றங்களை விளக்குவதற்கு இச்சொல்லாட்சி எவ்வாறு கச்சிதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் பாடல் வரிகள் மிகத் தெளிவாகப் பறைசாற்றுகின்றன,

"மெல்லன் புலம்பன் வந்தென" (ஐங் 189:3)

"புள் இறை கூரும் மெல்லம் புலம்ப!" (அகம் 10:4)

"மெல்லம் புலம்பன் பிரியின், புல்லெனப்" (நற் 38:5)

"மெல்லம் புலம்பன் வந்தமாறே" (ஐங் 120:4)

"மெல்லம் புலம்பன் பிரிந்தென, புல்லென்றன" (ஐங் 133:2)

"மெல்லன் புலம்பன் தேறி, நல்ல ஆயின" (ஐங் 166:3)

"மெல்லம் புலம்பன் மன்ற–எம்" (ஐங் 190:3)

மேற்காணும் பாடல் வரிகளை உற்று நோக்கும்போது, "மெல்லம் புலம்பன்" என்ற ஒற்றைச் சொல் நெய்தல் திணையின் மையப் பொருளான 'இரங்கலும் இரங்கல் நிமித்தமும்' பிரிவுத் துயரம் என்ற உணர்வைச் சுற்றி எவ்வாறு திறம்படப் பின்னப்பட்டுள்ளது என்பது புலனாகிறது. முதலில், "புள் இறை கூரும்" என்ற அகநானூற்று வரி, பறவைகள் தங்கும் வளமான அவனது நிலத்தின் மென்மையைச் சுட்டி நிற்கிறது. இத்தகைய மென்மையான தலைவன் தன்னை விட்டுப் பிரியும் போது "பிரியின்", "பிரிந்தென", தலைவியின் மேனி தன் பொலிவை இழந்து வாடுகிறது என்பதை "புல்லெனப்", "புல்லென்றன" ஆகிய சொற்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. தலைவனின் பிரிவே தலைவியின் அழகைச் சிதைக்கும் காரணியாக அமைகிறது. மாறாக, அதே தலைவன் மீண்டும் வந்து அன்பு மொழிகள் கூறி ஆறுதல் படுத்தும்போது "வந்தென", "வந்தமாறே", "தேறி", தலைவியின் துயரம் முற்றிலும் நீங்கி அவளது முந்தைய அழகு மீள்கிறது "நல்ல ஆயின" என்பதைப் புலவர்கள் மிக நுட்பமாகப் பதிவு செய்துள்ளனர். மேலும், அவன் உறுதியாக வந்து சேர்வான் என்ற தோழியின் அசைக்க முடியாத நம்பிக்கையை "மன்ற" என்ற சொல் உறுதிப்படுத்துகிறது. சுருக்கமாகக் கூறின், இம்மேற்கோள்கள் வெறும் அகப்பொருள் வர்ணனைகள் மட்டுமல்ல; "மெல்லம் புலம்பன்" என்ற ஒரே சொல்லாட்சியின் கீழ் தலைவனின் வருகையையும் பிரிவையும் மையமாகக் கொண்டு சுழலும் தலைவியின் உளவியல் மாற்றங்களை நெய்தல் நிலத்தின் பின்னணியில் விளக்கும் மிகச் சிறந்த இலக்கியச் சான்றுகளாகும்.

சேர்ப்பன் ;

நறுமணம் கமழும் சிறுமலர்களைக் கொண்ட கொன்றை மற்றும் ஞாழல் மரங்கள் அடர்ந்த பெருங்கடற்பரப்பின் தலைவன் 'சேர்ப்பன்' ஆவான். முட்டையிடும் பெண் ஆமையைப் போலத் தன் குடிகளைக் கண்ணும் கருத்துமாகக் காக்கும் காவலன் இவன். தமிழர் தம் அகவாழ்வை இயற்கையோடு இயைந்து பாடும் சங்க இலக்கியங்களில், கடலும் கடல் சார்ந்த இடமுமான 'நெய்தல்' திணை தனித்துவமான இடத்தைப் பெறுகிறது. நெய்தல் நிலத் தலைவனைச் சுட்டுவதற்குப் புலவர்கள் கொண்கன், துறைவன், மெல்லன்புலம்பன் எனப் பல பெயர்களைப் பயன்படுத்தியிருந்தாலும், 'சேர்ப்பன்' என்ற சொல்லாட்சி மிக ஆழமான பொருட்செறிவோடு கையாளப்பட்டுள்ளது. கடலலைகள்

வந்து சேரும் கரையை உடையவன் என்பதே 'சேர்ப்பன்' என்பதன் பொருளாகும். அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு ஆகிய நூல்களில் இச்சொல்லாட்சி வெறும் பெயராக மட்டும் அமையாமல், தலைவனுடைய நிலத்தின் தன்மையையும் நீர், கழி, மரங்கள், அவனது ஊரின் சிறப்பையும், தலைவியின் அக உணர்வுகளையும் காதல், பிரிவு, வரைவு கடாதல் வெளிப்படுத்தும் நுட்பமான குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் சங்கப் பாடல் வரிகள் மிகத் தெளிவாகப் பறைசாற்றுகின்றன:

"சிறுபல் தொல்குடிப் பெருநீர்ச் சேர்ப்பன்" (அகம் 290:8)
"சிறு வீ ஞாழற் பெருங் கடற் சேர்ப்பனை" (நற் 74:5)
"தெண் கடற் சேர்ப்பன் வாழ் சிறு நல் ஊர்க்கே?" (நற் 49:10)
"நீடு நீர்ப் பனித்துறைச் சேர்ப்பன்" (நற் 58:9)
"மலி திசைச் சேர்ப்பனொடு அமைந்த நம் தொடர்பே?" (நற் 63:11)
"செருந்தி தாய இருங்கழிச் சேர்ப்பன்" (ஐங் 112:2)
"மணி நீர்ச் சேர்ப்பனை மறவாதோர்க்கே" (ஐங் 117:4)
"தெண் கடற் சேர்ப்பனொடு வாரான்" (ஐங் 157:4)
"தண் கடற் சேர்ப்ப! வரைந்தனை கொண்மோ" (ஐங் 196:4)

மேற்காணும் பாடல் வரிகளை ஆழமாக நோக்கும்போது, நெய்தல் நிலத்தின் பரந்துபட்ட இயற்கையும், அங்கு வாழும் மக்களின் சுருங்கிய வாழ்விடங்களும் வியக்கத்தக்க வகையில் முரண்பட்டு நிற்பதைக் காண முடிகிறது. "பெருநீர்", "பெருங்கடல்" எனத் தலைவனின் நிலம் விரிந்த கடலாக வர்ணிக்கப்படும் அதே வேளையில், அவன் வாழும் பகுதி "சிறுபல் தொல்குடி", "சிறு நல் ஊர்" என்றும், அங்குள்ள மலர்கள் "சிறு வீ ஞாழல்" சிறிய பூக்களை உடைய ஞாழல் மரம் என்றும் சுட்டப்படுகின்றன. இது அகண்ட கடற்பரப்பின் முன் மனித வாழ்வின் சிறிய, ஆனால் வலிமையான இருப்பைக் காட்டுகிறது. கடல் நீரின் தன்மையைப் புலவர்கள் வெறும் வர்ணனையாக மட்டும் கூறாமல், உணர்வுகளின் குறியீடாகவே அமைத்துள்ளனர். தெளிவான மனநிலையைக் குறிக்கத் "தெண்கடற் சேர்ப்பன்" தெளிவான கடல் என்றும், நீண்ட நெடிய துயரத்தைக் குறிக்க "நீடு நீர்ப் பனித்துறை", "இருங்கழி" கரிய உப்பங்கழி என்றும், விலைமதிப்பற்ற காதலைக் குறிக்க "மணி நீர்" நீலமணி போன்ற நீர் என்றும் அடைமொழிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நெய்தல் நிலத்திற்கே உரிய செருந்தி மலர்கள் "செருந்தி தாய" தலைவனின் வளத்தை அடையாளப்படுத்துகின்றன. தலைவனோடு தலைவி கொண்ட ஆழமான பிணைப்பை "அமைந்த நம் தொடர்பே", "மறவாதோர்க்கே" உரைக்கின்றன. அதே வேளையில், தலைவனின் வருகைக்காக ஏங்கும் தவிப்பும் "சேர்ப்பனொடு வாரான்" வெளிப்படுகிறது. இதன் உச்சகட்டமாக, ஐங்குறுநூறு "தண் கடற் சேர்ப்ப! வரைந்தனை கொண்மோ" என்று தலைவனைப் பார்த்து நேரடியாகத் திருமணத்தை வரைவு வலியுறுத்துகிறது. குளிர்ந்த கடலை உடையவனே, நீ விரைந்து வந்து என் தோழியைத் திருமணம் செய்து கொள் எனத் தோழி உரிமையோடு இடித்துரைக்கிறாள். "சேர்ப்பன்" என்ற ஒற்றைச் சொல்லாட்சியோடு இணைக்கப்பட்டுள்ள

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

அடைமொழிகள் அனைத்தும், நெய்தல் நிலத்தின் சூழலியலையும் அந்த நிலம் சார்ந்த மக்களின் உளவியலையும் ஒருங்கே படம் பிடித்துக் காட்டுகின்றன. சங்கப் புலவர்கள் இயற்கையை வெறும் பின்னணியாக மட்டும் நிறுத்தாமல், தலைவனின் பண்பிற்கும் தலைவியின் காதல் உணர்விற்கும் கண்ணாடியாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதற்கு இப்பாடல் வரிகளே சிறந்த சான்றாகும்.

துறைவன் ;

கலங்கள் ஈண்டும் வளமிக்க கடற்றுறையின் தலைவன் ‘துறைவன்’ எனப் போற்றப்படுகிறான். இவன் புன்னை மரங்கள் செறிந்த கடலோரப் பகுதிக்கும், நீலவானத்து விண்மீன்கள் போல் ஒளிரும் மணற்பரப்பிற்கும் உரியவன். தமிழர் தம் அகவாழ்வை இயற்கையோடு இயைந்து பாடும் சங்க இலக்கியங்களில் நெய்தல் திணைக்கெனத் தனிச்சிறப்பு உண்டு. கடலும் கடல் சார்ந்த இடமுமான நெய்தல் நிலத்தின் தலைவன் ‘சேர்ப்பன்’, ‘கொண்கன்’, ‘துறைவன்’ எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறான். இவற்றுள் ‘துறைவன்’ என்ற சொல்லாட்சி, மீன்பிடித் தொழிலுக்கும் மரக்கலங்களுக்கும் உரிய நீர்த்துறையை ஆள்பவன் என்ற பொருளைத் தருகிறது. அகநானூறு, நற்றிணை ஆகிய சங்க நூல்களில் இச்சொல்லாட்சி, தலைவனின் நில வளம், நெய்தல் மக்களின் அன்றாட வாழ்வியல், இயற்கையின் எழில், மற்றும் களவொழுக்கத்தில் தலைவி சந்திக்கும் அகப்போராட்டங்கள் ஆகியவற்றை மிக நுட்பமாக வெளிப்படுத்தும் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் சங்கப் பாடல் வரிகள் மிகத் தெளிவாகப் பறைசாற்றுகின்றன,

"வருதிமில் எண்ணும் துறைவனொடு, ஊரே" (அகம் 190:3)

"புன்னை ஓங்கிய துறைவனொடு அன்னை" (நற் 175:5)

"நீலநிற விசும்பின் மீனொடு புரையப் பைய இமைக்குந் துறைவன்" (நற் 199:9-10)

"முன்நாள் போகிய துறைவன்" (அகம் 380:3)

‘துறைவன்’ என்ற ஒற்றைச் சொல்லின் வழியே நெய்தல் நிலத்தின் பன்முகத்தன்மையைச் சங்கப் புலவர்கள் எவ்வாறு செதுக்கியுள்ளார்கள் என்பது புலனாகிறது. "வருதிமில் எண்ணும் துறைவனொடு" என்ற அகநானூற்று வரி, நெய்தல் நில மக்களின் அன்றாடத் தொழிலைப் படம் பிடித்துக் காட்டுகிறது. மீன்பிடிக்கச் சென்று கரைக்குத் திரும்பும் படங்குகளை (திமில்) எண்ணிக் கொண்டிருக்கும் சுறுசுறுப்பான துறைமுகத்தின் தலைவன் அவன் என்பதை இது சுட்டுகிறது. இது அவனது நிலத்தின் பொருளாதாரச் செழிப்பையும், உழைக்கும் மக்களோடான அவனது பிணைப்பையும் காட்டுகிறது. "புன்னை ஓங்கிய துறைவனொடு அன்னை" என்ற வரி, நெய்தல் நிலத்தின் அடையாளமான உயர்ந்த புன்னை மரங்களைக் காட்சிப்படுத்துவதோடு, களவொழுக்கத்தில் (காதல் வாழ்வில்) ஏற்படும் ஒரு முக்கியச் சிக்கலையும் பேசுகிறது. அன்னை (தாய்) தலைவியை வீட்டை விட்டு வெளியேற விடாமல் காவல் காப்பதையும் (இற்செறிப்பு), தலைவனைக் காண முடியாமல் தலைவி தவிப்பதையும் இத்தொடர் உள்ளுறையாக உணர்த்துகிறது. "நீலநிற விசும்பின் மீனொடு புரையப் பைய இமைக்குந் துறைவன்"

என்ற நற்றிணை வரிகள் சங்க இலக்கியத்தின் உச்சகட்ட அழகியலைக் காட்டுகின்றன. இரவில் மீன்பிடிக்கச் சென்ற படகுகளில் எரியும் விளக்குகள், நீல நிற வானத்தில் மின்னும் நட்சத்திரங்களைப் போலச் சுடர்விடுவதாகப் புலவர் உவமை கூறுகிறார். இத்தகைய அழகிய இரவுப் பின்னணியைக் கொண்ட நீர்த்துறையின் தலைவன் அவன் எனத் தலைவனின் ஊர்வளம் வியந்து உரைக்கப்படுகிறது. இத்தனை சிறப்புகளை உடைய துறைவன், தலைவியைப் பிரிந்து சென்றான் என்பதை "முன்நாள் போகிய துறைவன்" என்ற அடி ஆழமான சோகத்துடன் பதிவு செய்கிறது. நெய்தல் திணையின் உரிப்பொருளான 'இரங்கல்' (பிரிவாற்றாமை) உணர்வை இந்த ஒற்றை வரி நெஞ்சில் தைக்கும்படி உணர்த்துகிறது. "துறைவன்" என்ற அடைமொழி வெறும் பெயராக மட்டும் நில்லாமல், நெய்தல் நிலத்தின் தொழில் வளம், இயற்கை எழில், சமூகச் சூழல் (அன்னையின் காவல்), மற்றும் தலைவியின் பிரிவுத் துயரம் ஆகியவற்றை ஒருங்கே விளக்கும் சிறந்த இலக்கியக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கு இப்பாடல் வரிகளே அழுத்தமான சான்றுகளாகும். ஐங்குறுநூற்றில் துறைவனின் மாண்புகள் ஞாழலும் புன்னையும் பூத்துக் குலுங்கும் துறை, கயல் மீன்கள் துள்ளும் துறை, பனிசூழ் துறை என ஐங்குறுநூறு துறைவனைப் பலவாறாக வர்ணிக்கிறது:

"ஞாழல் பூக்கும் தண்ணம் துறைவன்" (ஐங் 103:2)
"நீர்ப் படர் தூம்பின் பூக் கெழு துறைவன்" (ஐங் 109:2)
"பொன் நிறம் விரியும் பூக்கெழு துறைவனை" (ஐங் 110:2)
"சினைக் கயல் மாய்க்கும் துறைவன் கேண்மை" (ஐங் 111:3)
"ஓங்கு திரை வெண் மணல் உடைக்கும் துறைவற்கு" (ஐங் 113:2)
"கானல் அம் துறைவற்குச் சொல் உகுப்போமே" (ஐங் 136:3)
"புள் இறை கூரும் துறைவனை" (ஐங் 142:2)

மேலும் ஐங்குறுநூற்றில் (144:2 முதல் 192:2-3 வரை) தனிக்குருகு உறங்கும் துறை, கள்கமழும் துறை, இருங்கழித் துறை எனப் பல்வேறு அடைமொழிகளால் துறைவன் சுட்டப்படுகிறான். கலித்தொகையிலும் துறைவன் கடற்றுறைத் தலைவனாகவே சுட்டப்படுவதை நல்லந்துவனார் வரிகள் அறுதியிடுகின்றன:

"பாய் திரைப் பாடு ஓவாப் பரப்பு நீர்ப் பனிக்கடல்...
தூ அறத் துறந்தனன் துறைவன் என்று..." (கலி 129:8-11)

வள்ளுவமும் நெய்தல் தலைவனைத் 'துறைவன்' என்றே எடுத்தியம்புகிறது:

"துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை" (குறள் 1157)

"தண்அம் துறைவன் தணநடதமை நம்மினும்
முன்னம் அறிந்த வளை" (குறள் 1277)

கொண்கன் ;

கடற்கரையை ஒட்டிய மீன்பிடிப் பெருநிலத்தின் செல்வச் செழிப்புமிக்க தலைவன் ‘கொண்கன்’ ஆவான். ஒளிரும் கொடும்பூண்களையும், பாயும் தேரினையும் உடைய இவன், காதல் தலைவியின் அகவுணர்வுகளோடு பெரிதும் பின்னிப்பிணைந்தவன்.

"இயல்தேர் கொண்கன்" (நற் 140)

"மின்னிவர் கொடும்பூண் கொண்கன்" (நற் 187:9)

"பூப்போல் உண்கண் மரீஇய நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் தேரே" (ஐங் 101:3-4)

மேலும், ஐங்குறுநூற்றுப் பாக்கள் (104, 114, 119, 134, 137, 138, 140, 200) கொண்கனைச் செல்வக் கொண்கன், மென்புலக் கொண்கன், திண்தேர்க் கொண்கன் எனப் பலவாறாகப் புகழ்கின்றன.

திருக்குறளில் கொண்கன் ;

நெய்தல் நிலப் பின்புலத்தைக் காதல் மாந்தர்களின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும் பாடுகளமாக வள்ளுவர் திறம்படக் கையாண்டுள்ளார்:

"விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு" (குறள் 1186)
"காண்மகன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்..." (குறள் 1265)
"வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்..." (குறள் 1266)
"பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண்" (குறள் 1283)
"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து" (குறள் 1285)

வலையர் ;

கடலோரப் பகுதிகளில் மீன்வேட்டையாடும் குடிகள் ‘வலைஞர்கள்’ எனப்பட்டனர். ஊர்விட்டு ஊர்பெயரும் வாழ்வியலைக் கொண்டிருந்த பாணர்கள், மீன்விற்று வாழத் தலைப்பட்டபோது மருதநில ஊர்களில் நிலையான குடியிருப்புகளை அமைத்துக்கொண்டனர். கோடையிலும் வற்றாத நீர்நிலைகளைக் காவல் காக்கும் திண்ணியராக இவர்கள் திகழ்ந்தனர்.

"கோடை நீடினும் குறைபடல் அறியாத்
தோள்தாழ் குளத்த கோடு காத்திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேர்ப்பின்" (சிறு 272-274)

உமணர் ;

ஏர்பூட்டி உழாமலேயே, உப்பங்கழிகளில் வெண்ணிறக் கல்லுப்பை விளைவித்து வாணிகம் செய்யும் குடிமக்கள் ‘உமணர்’ ஆவர். கோடையின் வெம்மையில், பாறைகள் நிறைந்த கரடுமுரடான

பாதைகளில் சகடங்களில் (வண்டிகளில்) உப்பேற்றிச் செல்வர். உமணப்பெண்கள் சகடங்களை இழுக்கும் எருமைகளை விரட்டத் தாற்றுக்கோல் வைத்திருந்த செய்தியை அகநானூறு படம்பிடித்துக் காட்டுகிறது,

"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடி பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅத செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதர் மடமகள்" (அகம் 140:1-5)

பாணர் ;

பரதவர் கொணர்ந்த மீனையும் உப்பையும் விற்றுண்ணும் வாழ்வியலையும் மேற்கொண்டோர் ‘பாணர்’ எனப்பட்டனர்.

"குருகு நரல மனை மரத்தான் மீன் சீவும் பாண்சேரி" (மதுரை 268)

முள்ளொத்த கூரிய பற்களையுடைய பாண்மகன் பிடித்து வந்த சுவைமிகுந்த கெளுத்தி மீனைப் பெற்றுக்கொண்டு, மருதநில மாந்தர் கூலங்களைப் (தானியங்களைப்) பண்டமாற்றாக வழங்கிய செய்தியை ஐங்குறுநூறு சுட்டுகிறது,

"முள் எயிற்றுப் பாண்மகள் இன்கொடிறு சொரிந்த
அகன் பெறு வட்டி நிறைய மனையோள்
அரிகாற பெரும்பயிறு நிறைக்கும் ஊர்" (ஐங் 47:1-3

முள்போலும் கூர்மையான பற்களையுடைய பாண்மகன் பிடித்து வந்த சுவைமிகுந்த கெளுத்தி மீனைப் பெற்றுக் கொண்ட மருதநிலத்து மங்கையிடம் பயிறு, பழைய நெல், புதிய நெல்லைப் பண்டமாற்றாகப் பெற்று உணவுக்காகப் பயன்படுத்தினான் என்றும், தூண்டிலில் சிறுமீன்கள் சிலவற்றை இரையாக வைத்து பொரிய மீன்களைப் பிடிப்பது பாணான் தொழில் என்பதும் பரதவரைப் போன்று துணிவும் வீரமும் மிக்கவர்கள் பாணர் என்பதை அறியலாம்.

சங்க இலக்கிய நெய்தல் நில உற்பத்திமுறை ;

நெய்தல் நில மாந்தர்கள் மீன் வேட்டையாடுதல், மீன் உணக்கல் (வற்றலாக்குதல்), உப்பு விளைவித்தல், முத்துக்குளித்தல், சங்கு குளித்தல் எனப் பல்வகைப்பட்ட பொருளுற்பத்தி நெறிமுறைகளைத் தம் வாழ்வியலாகக் கொண்டிருந்தனர். பெளவ வேட்டையும் பரதவர் மறமும் வைகறைப் பொழுதில் பரதவர்கள் மரக்கலங்களில் (தோணிகளில்) மீன்வேட்டைக்குப் புறப்படுவர். இளையரும் முதியவருமாகிய நுளையர் தம் சுற்றத்தாரோடு பெருங்கடலில் வலைவீசி, பேராரவாரத்துடன் மீன்களைக் கரைக்கு ஈர்த்து வருவர். நெய்தல் மாந்தரின் உரம்பாய்ந்த நெஞ்சமும் அயராத உடல் உழைப்பும் அத்தொழிலில் அவர்களைச் சிறக்கச் செய்தன. அலைகடலில் நீராடி

விளையாடுவதைக் காட்டிலும், சீறும் அலைகளோடு போராடி வளம் சேர்ப்பதையே அவர்கள் பெருவீரமாகக் கருதினர். பகற்பொழுதிலும் (அகம் 340:18-19), நள்ளிரவிலும் (அகம் 220:16-18) திமிலேறி மீன்வேட்டைக்குச் செல்லும் அளப்பரிய துணிவு அவரிடையே நிலவியது. பண்டமாற்று வாணிகமும் பாணரும் ஒரு நிலப்பரப்பில் விளைந்த மிகைப்பொருட்களைக் உபரிப் பொருட்களை கொடுத்துத் தமக்குத் தேவையான பிற பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் 'பண்டமாற்று வாணிகம்' அக்காலத்தில் செழித்திருந்தது. பாணர்கள் தாம் பிடித்து வந்த மீன்களைக் கூடைகளில் சுமந்து, கொடிகள் பறக்கும் வீதிகளில் விற்றனர். மீனுக்குப் பகரமாகப் பழநெல்லினைப் பெறாது, விலைமதிப்பற்ற முத்துக்களையும் அணிகலன்களையுமே பெற்றனர் எனும் செய்தி நெய்தல் நிலத்தின் செல்வச் செழிப்பைக் காட்டுகிறது. வற்றலாக்குதலும் மகளிரின் உழைப்பும் ஆடவர்தம் தொழிலில் மகளிரும் உற்ற துணையாக விளங்கினர். விற்கப்பட்டது போக எஞ்சிய மீன்களை நெய்தல் மணல்மேடுகளிலும் உப்பங்கழிகளிலும் பரப்பி உலரவைத்தனர் (கருவாடாக்கினர்). மீன் காயவைக்கும் களத்தில், மீன்களைக் கவர்ந்து செல்ல வரும் புள்ளினங்களையும் (பறவைகளையும்), நாய்களையும் ஓட்டுவதற்குப் பெண்களின் நீட்டி ஒலிக்கும் குரல்கள் பயன்பட்டன. பரதவர் கொணர்ந்த வளைந்த இறால் மீன்களை உலரவைக்கும்போது பறவைகளை மகளிர் ஓட்டிய செய்தியை நற்றிணைப் பாடல் தெளிவுபடுத்துகிறது:

"முடிவலை முகந்த முடங்குஇறா பரவை

படுபுள் ஓப்பலின் பகல்மாய்ந் தன்றே" (நற் 49:3-4)

அதேபோன்று, புன்னை மர நிழலில் தங்கி மகளிர் கொழுமீன்களை உலர்த்திய பாங்கினை அகநானூறு எழிலுறப் பதிவு செய்துள்ளது:

"கொடுமீன் உணங்கிற் படுபுள் ஒப்பி

எக்கர்ப் புன்னை இன்நிழல் அசைஇ" (அகம் 20:2-3)

உமணரும் உப்பு வாணிகமும் உமணர் குடியிற் பிறந்த இளமகள், “நெல்லின் நேரே வெண்கல் உப்பு” நெல்லுக்கு நிகரான விலையுடையது இவ்வெண்ணிற உப்பு எனப் பகர்ந்து கூவிச் சென்றாள். புதிய ஊர்களில் நுழைகையில் அயலவர் வரவுகண்டு குரைக்கும் நாய்களுக்கு அவள் அஞ்சிய செய்தியும் பதிவாகியுள்ளது. உப்பு விற்கும் வாணிகர்களின் சகடங்களுக்குப் வண்டிகளுக்குப் பின்னால் சென்ற அவர்தம் குழந்தைகள் 'கிலுகிலுப்பை' கொண்டு விளையாடி மகிழ்ந்தனர். உமணர்கள் கூட்டம் கூட்டமாகச் சாத்தாகச் சென்று காடுமேடுகளைக் கடந்து உப்பு வாணிகம் செய்தனர். மகளிரின் விற்பனைத் திறனும் வாழ்வியலும் பழந்தமிழரின் வாழ்வியல் உழைப்பையே உயர்வாகக் கருதும் சிற்றூர்களை கிராமங்களை அடிப்படையாகக் கொண்டது. கடல்சார் தொழிலாளர்கள் பட்டினங்களில் வாழ்ந்தனர். ஆழ்கடல் சென்று பெரும்பொருள் ஈட்டினாலும், எளிமையான கூம்புவடிவக் குடில்களிலேயே கூடாரங்களிலேயே வாழ்ந்தனர். ஈட்டிய மீன்களை உள்நாட்டில் விற்றதோடு, வற்றலாக்கி வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தனர். இதன்வழி உள்நாட்டு மற்றும் கடல்கடந்த

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

வாணிகத்தில் தொல்தமிழர் தலைசிறந்து விளங்கியதை அறியலாம். விழாக்கள் நடைபெறும் தெருக்களில் பரதவர்களின் தங்கைமார் மீன்களைக் கூவி விற்றனர் என்பதைப் பின்வரும் வரிகள் சுட்டுகின்றன,

"தழை அணி அல்குல் செல்வத் தங்கையர்

விழவு அயர் மறுகின் விலை எனப் பகரும்" (அகம் 320:3-4)

மேலும், மகளிர் உப்பை விற்று அதற்குப் பகரமாக நெல்லை வாங்கியதையும் ,தலைவியின் பெற்றோர் உப்பை விற்று வெண்ணெய் பெற்று வந்ததையும் (அகம் ,குறுந் பனுவல்கள் எடுத்துரைக்கின்றன.

முடிவுரை ;

சங்க இலக்கிய நெய்தல் நில இனக்குழுக்கள் பண்பாட்டு வாழ்வியலையும், உற்பத்திமுறைகளையும் மையப்படுத்தியதாக அமைகின்றது. எல்லா நிலப்பரப்பில் உள்ள விளைப் பொருள்கள் அத்தனையும் நெய்தலில் கொட்டிக் கிடக்கிறது. எனவே நெய்தல் நிலம் மிகவும் செழிப்பு உடையதாக மாறியது. இதன்மூலம் சங்க இலக்கிய பொருளாதாரத்திர் நெய்தலின் பங்கு அளப்பறியது, என்பதை சங்க இலக்கிய தரவின் அடிப்படையில் இக்கட்டுரை விளக்குகிறது. சங்க இலக்கியங்கள் காட்டும் நெய்தல் திணை, வெறும் நிலப்பரப்பாக மட்டுமன்றித் தமிழர்களின் ஆழமான பண்பாட்டு வாழ்வியலையும், உழைப்பை அடிப்படையாகக் கொண்ட பொருளுற்பத்தி நெறிமுறைகளையும் தாங்கி நிற்கும் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்கிறது. கடலும் கடல் சார்ந்த இயற்கை வளங்களும் நெய்தல் மாந்தரின் ஒழுகலாறுகளைத் தீர்மானித்தன. பரதவர், உமணர் பாணர் உள்ளிட்ட பல்வேறு இனக்குழுக்களும், புலம்பன் முதல் கொண்கன் வரையிலான தலைவர்களும் தத்தம் தொழில்களையும் கடமைகளையும் செவ்வனே செய்து நெய்தல் சமூகத்தைக் கட்டமைத்தனர்.மீன் வேட்டம், உப்பளத் தொழில், வற்றலாக்குதல் மற்றும் பண்டமாற்று வாணிகம் ஆகியவற்றின் வாயிலாக நெய்தல் நிலம் மாபெரும் பொருளாதார மையமாக விளங்கியது. ஆடவரோடு இணைந்து மகளிரும் வாணிகத்தில் பெரும்பங்கு வகித்தது அவர்களின் உழைப்பு மேன்மையை உணர்த்துகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய பிற நிலப்பரப்புகளின் விளைபொருள்கள் அனைத்தும் வாணிகத்தின் வாயிலாக நெய்தலில் கொட்டிக்கிடந்தன. எனவே, நெய்தல் திணை மிகவும் செல்வச் செழிப்புடையதாகப் பரிணமித்தது. இதன்மூலம், பழந்தமிழரின் அக மற்றும் புற வாழ்வியலிலும், சங்கக்காலப் பொருளாதார மேம்பாட்டிலும் நெய்தல் நிலத்தின் பங்கு அளப்பரியது என்பதைச் செவ்விலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் இக்கட்டுரை தெள்ளத்தெளிவாக நிறுவுகிறது.

துணைநூற்பட்டியல் ;

1. அகநானூறு மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு. உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1920.

2. ஐங்குறுநூறு மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு. உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1920.
3. கலித்தொகை மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், சிறுவை சி. இலக்குவனார் (பதிப்.). தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி.
4. குறுந்தொகை மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு. உ.வே.சா. நூல்நிலையம், சென்னை, 1937.
5. தனஞ்செயன், ஆ., குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும். பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2006.
6. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும். பூம்புகார் பதிப்பகம், சென்னை.
7. நற்றிணை மூலமும் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரையும். தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1915.
8. பத்துப்பாட்டு (சிறுபாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி) மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், உ.வே. சாமிநாதையர் பதிப்பு. உ.வே.சா. நூல்நிலையம், சென்னை.
9. பிரபாகரன், ஆ,"சங்ககால மீனவர்களின் இருப்பிடமும் தற்கால மீனவர்களின் இருப்பிடமும், தமிழ் மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ். தொகுதி 8, இதழ் 2,ஆண்டு,2026 ப. 10.
10. லலித பாலா, முனைவர்., “தமிழ் இலக்கியங்களில் விண்ணியலும் மண்ணியலும்”, பிரணவ் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 4, சிறப்பு இதழ் 1, 2024. https://pranavjournals.com/tamil/wp-content/uploads/48-தமிழ்-இலக்கியங்களில்-விண்ணியலும்-மண்ணியலும்.pdf சென்னை-14, 2012.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

16. கம்பராமாயணத்தில் மண்டோதரியின் வாழ்வியல் துயரங்கள்

ஆய்வாளர்;

திருமதி.ஆ.கீர்த்திகா தேவி,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி,மதுரை.
தொடர்பு எண் ; 9345887079.

நெறியாளர்;

முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி,மதுரை.

DOI 10.5281/zenodo.21723731.

Abstract:

In *Kambaramayanam*, Mandodari stands out as a character who, despite being born into the *Rakshasa* clan–a lineage often associated with unrighteousness–excelled in chastity and virtuous thought. Although she was the crowned queen of Ravana and possessed every worldly comfort and pleasure, her life ultimately became a saga of profound sorrow, devoid of inner peace and happiness. This article aims to examine the lived struggles of a woman who sought the path of virtue and goodness while residing in Lanka, the very abode of evil.

KeyWords : Kambaramayanam - Mandodari - Ethics - Ravanan

ஆய்வுச் சுருக்கம் :

கம்பராமாயணத்தில் அறத்திற்கு மாறான அரக்க குலத்தில் பிறந்திருந்தாலும் கற்பிலும், நற்சிந்தனையிலும் சிறந்து விளங்கிய பாத்திரம் மண்டோதரி. இராவணனின் பட்டத்தரசியான இவளது வாழ்க்கை அனைத்து நலன்களும், உலகியல் இன்பங்களும் வாய்க்கப் பெற்றவளாக இருந்தும் மன அமைதியும் மன மகிழ்வும் இல்லாத பெரும் துயர போராட்டமாகவே முடிந்தது. தீமையின் வசிப்பிடமான இலங்கையில் இருந்து கொண்டே நன்மையை நல்வழி நாடியஒரு பெண்ணின் வாழ்வியல் துயரங்களை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக உள்ளது.

முகவுரை:

கம்பராமாயணத்தில் அறத்தின் வழியே வாழும் பல பாத்திரங்கள் இருப்பினும் அறவழி தவறி நடக்கும் அரக்கர் குலத்தில் இருந்தாலும் தன் கற்பினாலும் நற்பண்பினாலும் மிளிரும் ஒரு உன்னதப் பாத்திரம் மண்டோதரி. ராவணனின் பட்டத்தரசியான இவள் அற உணர்வும் கணவன் மீதான தூய காதலும் கொண்டவள். கம்பர் இவளது வாழ்வை ஆடம்பர அரசியின் நிலையாகக் காட்டாமல் தொடர் மனப்போராட்டங்களும், கணவனால் விளைந்த அவமானங்களும் நிறைந்த வாழ்வாக படைத்துள்ளார் இதன் வழி மண்டோதரியின் வாழ்வியல் துயரங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மாசில்லா மண்டோதரி :

மயன் என்ற அசுர தச்சனின் மகள்.இலங்கையின் பேரரசனான இராவணனின் மனைவி. சிறந்த கற்புநெறியும் சிவ பக்தியும் கொண்டவள்.பஞ்ச கண்ணியருள் ஒருத்தியாக

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

மதிக்கப்படுகின்றவள். மேகநாதன், அக்ககுமாரன் இவர்களின் தாய். அனுமன் சீதையைத் தேடிச் சென்றபோது மண்டோதரியை கண்டு சீதையே என ஐயுற்றானாம்.அந்த அளவிற்கு மண்டோதரி சந்திரனே தோற்கும் ஒளி பொருந்திய முகத்தைப் பெற்றும், நற்குணங்களால் தலைத்தோங்கியும் விளங்கினாள் என்பதை,

" மாய நந்திய வாள்முகத்து ஒரு தனி
மயன்மகள் உறைமாடம்" (கம்5\.பா.5029)

என்னும் பாடல் உணர்த்துகிறது.

மண்டோதரியின் மனத்துயரம்:

கணவனின் நெறி பிறழ்ந்த வாழ்வும், சிற்றின்ப வேட்கையுமே மண்டோதரியின் முதன்மையான துயரம் ஆகும். உலகையே வென்ற இராவணன் பிறன்மனை நாடும் பலவீனத்தைக் கொண்டிருந்தான். தேவலோகப் பெண்களையும்,பிற பெண்களையும் சிறை எடுத்து வந்த போது கற்புக்கரசியான மண்டோதரி சொல்ல முடியாத அளவு மனவேதனை அடைந்தாள் என்பதைக் கம்பர் நயம்படச் சுட்டிச் செல்கிறார்.

"வெறிகொள் பூ மயில் அனையவர்
விஞ்சயர் மகளிர் நெறி கொள் கற்பினில்
நின்றவர், அரம்பயர் முதலோர் செறி
கொள் சோலையின் கிளையோடும் சிறையுகச் செய்தான்"

(சூ. சூ. ப)

என்னும் பாடல்வழி இராவணனின் பிறன்மனை நோக்கும், பரத்தமை ஒழுக்கமும் வெளிப்படுகிறது. தன் கணவனின் அறவொழுக்கம் குன்றிய இச்செயலால் அவமானத்தையும்,அவனது அழியப்போகும் காலத்தையும் முன்கூட்டியே உணர்ந்தாள் மண்டோதரி.

சீதை மீதான மோகமும் அறிவுரையும்:

இராவணன் சீதையைக் கவர்ந்து வந்த பின், மண்டோதரியின் துயரம் உச்சக்கட்டத்தை எட்டியது.சீதையின் கற்புத்திறனை அறிந்த மண்டோதரி, இதனால் தன் கணவனுக்கும் அரக்கர் குலத்திற்கும் வரப்போகும் அழிவை உணர்ந்தாள்.

'பஞ்சு எரி உற்றது என்ன அரக்கர்தம் பரவை எல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல, விளிந்ததே; மீண்டது இல்லை;
அஞ்சினேன் அஞ்சினேன்; அச்சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால், இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?'

(இரா.சோ.ப.பா9328)

இராவணனிடம் பலமுறை சீதையைத் திருப்பி அனுப்பிவிடும்படி கெஞ்சினாள்; அறிவுரை கூறினாள். ஆனால், இராவணன் அவளது வார்த்தைகளைத் தூசியாக மதித்தான். ஒரு மனைவியாகத் தன் கணவனை நல்வழிப்படுத்த முடியவில்லையே என்ற ஏக்கம் அவளை வாட்டியது.

"அவள் அவனை மணந்து இல்வாழ்க்கையில் அமர்வாள்,அவனுடைய வாழ்க்கைத் துணையாகி மகப்பெறுவாள். அவள் அவன் திறனை ஆராயக்கூடாது. ஆனால் சுக துக்க நேரங்களில் அவற்றை அவனோடு பகிர்ந்து கொள்ள வேண்டும்.கணவனின் நெறி கேட்ட நடத்தையையும் அவள் பொறுத்துக் கொள்ள வேண்டும்"1 என மகளிர் நிலை என்னும் தலைப்பில் ந.சுப்பிரமணியம் கூறியுள்ளது மண்டோதரியின் வாழ்வோடு பொருந்தி உள்ளதை நம்மால் உணர முடிகிறது.

மகனை இழந்த தாய்மை துயரம் :

வாழ்க்கையில் எத்தனை சோகங்கள் எதிர்ப்படினும் தாம் இருக்கும்போது பிள்ளையை நிரந்தரமாக பறிகொடுப்பது போல வாழ்நாள் முழுவதும் வாட்டி வதைக்கும் ஒரு சோகம் பெரிது ஒன்று இருக்க முடியாது. தன் மகன் இந்திரஜித் இறந்துபட்டான் என்று கேட்ட மண்டோதரி தலை மீது கை வைத்து நெருப்பை மிதிப்பவள் போல பாதங்கள் உடையவராகி மகன் மீது கொண்ட பாசத்தால் துக்கம் நெஞ்சை அடைக்க கூறிய அம்பு உயிரை வாங்க ஒரு மயில் விழுந்தது போல மகன் உடம்பில் விழுந்து அழுது மூர்ச்சையாகி, துயரம் தாங்காமல் புலம்பத் தொடங்கினாள் என்ற காட்சி நம்மை உறைய வைக்கின்றது. மேலும் மண்டோதரி பின்வருமாறு புலம்பி த் தவிக்கின்றாள்.

கலையினால் திங்கள் போல வளர்கின்ற காலத்தே உன்,
சிலையினால் அரியை வெல்லக் காண்பது ஓர் தவம் முன் செய்தேன்:
தலையிலா ஆக்கை காண எத்தவம் செய்தேன்! அந்தோ!
நிலையிலா வாழ்வை இன்னும் நினைவேனோ நினைவு இலாதேன்?

(கம்.6-இரா.சோ.ப.பா.9232)

இளம்பிறைச் சந்திரனை போல வளர வேண்டிய காலத்தில் உன் தலையில்லா உடம்பை காண்பதற்கு என்ன தவம் செய்தேன்? இனி இந்த நிலை இல்லா வாழ்வை நினைக்க மாட்டேன் என்றவாறு புலம்பி துயருற்றாள்.

ஐயனே!அழகனே என் அரும்பெறல் அமிழ்தே! ஆழிக்
கையனே, மழுவனே, என்று இவர் வழிகடந்த கால
மொய்யனே! முளரி அன்ன நின் முகம் கண்டிலாதேன்,
உய்வெனோ?உலகம் மூன்றுக்கு ஒருவனே செருவலோனே.

(இரா.சோ.ப.பா.9233)

ஐயனே அழகனே அமுதம் போன்றவனே திருமாலையும் சிவனையும் வென்று எமனை போல் வலிமை உடையவனே. மூவுலகிலும் சிறந்தவனே. உன் முகத்தை காணாமல் நான் உயிர் வாழ்வது எப்படி என்று புலம்பித் தவித்தாள் மண்டோதரி.

தாள் அரிச் சதங்கை ஆர்ப்பத் தவழ்கின்ற பருவம் தன்னில்,
கோள் அரி இரண்டு பற்றிக் ககொணர்ந்தனை: கொணர்ந்து, கோபம்
மூளுறப் பொருத்தி, மாட முன்றிலில் முறையினோடு

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

மீள அரு விளையாட்டு இன்னம் காண்பெனோ, விதியிலாதேன்!

(இரா.சோ.ப.பா.9234)

கால் சலங்கை ஒலிக்க இளம் பருவத்தில் இரண்டு சிங்கங்களைப் பிடித்து முற்றத்தில் கொண்டு வந்து அவை இரண்டையும் போர் செய்யும்மாறு செய்து விளையாண்ட உன்னை இனி நான் எப்போது காண்பேனோ? என்று பலவாறாக துயர கடலில் மூழ்கி புலம்பித் தவிக்கிறாள் மண்டோதரி. இதனை "கம்பன் காவியத்தில்" என்னும் நூலில் ஈரமுடைய அந்த தாய் மகனுடைய வீர விளையாட்டையும்,வில்லாற்றலையும்எண்ணிப்பார்க்கிறாள்.மகன் இல்லாமல் தான் வாழும் வாழ்வை அவளால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை, மனம் மறுகுகிறாள் மண்டோதரி. எனவே பிள்ளையின் இறப்பில் ஒப்பாரி வைப்பது தாய்மை என்பதை தப்பாமல் பதிவு செய்கிறார் கம்பர், என்று சி.எஸ் விசாலாட்சி கூறியுள்ளது இங்கு நினைவு கூரத்தக்கது.

இராவணனின் வீழ்ச்சியும் மண்டோதரியின்இறுதிப் புலம்பலும்:

மண்டோதரியின் வாழ்வில் துயரத்தின் உச்சமாக அமைவது இராவணனின் மரணம் ஆகும். போர்க்களத்தில் மார்பில் அம்புகள் துளைக்கப்பட்டு இறந்து கிடந்த இராவணனின் உடலைக் கண்டு அவள் பாடிய புலம்பல் பாடல்கள் அவளது தூய காதலையும் துயரத்தையும் விவரிக்கிறது."கற்புடை மகளிரின் கண்ணீர், காதலன் மார்பில் பாய்ந்து, அவனது ஆயுளை முடிக்கும்"என்ற உண்மையை அவள் உணர்ந்து கதறுகிறாள். சீதையின் கற்புத் தீயே தன் கணவனை அழித்தது என்பதைப் போர்க்களத்தில் ஒப்புக்கொள்கிறாள்.இராவணனின் அகன்ற மார்பைக் தொட்டுப் பார்த்தவள், இராமனின் அம்புகள் எங்கு தேடிப் பாய்ந்தன என்று பார்க்கிறாள். இராவணனின் இதயத்தில் சீதை வீற்றிருந்தாளோ, அந்தச் சீதையைத் தேடித்தான் இராமனின் அம்பு அவனது மார்பைத் துளைத்ததோ என்று கம்பன் வரியமைப்பில் அவள் புலம்புவது அவளது மனவேதனையின் ஆழத்தைக் காட்டுகிறது.

வெள் எருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த
திருமேனி,மேலும் கீழும்,
எள் இருக்கும் இடம் இன்றி,உயிர் இருக்கும்
இடம் நாடி, இழைத்தவறோ?
"கள் இருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் "எனக் கருதி, உடல் புகுந்து,
தடவினவோ ஒருவன் வாளி?

(கம்.6.இரா.வ.ப.பா.9940)

இறுதியாக, கணவனின் பிரிவைத் தாங்க முடியாமல் அவளது உயிரும் பிரிகிறது என்பதை கம்பர்,

"என்று அழைத்தனள்,ஏங்கி எழுந்து, அவன்
பொன் தலைத்த பொரு அரு மார்பினை

தன் தழைக் கைகளால் தழுவி,தனி
நின்று அழைத்து உயிர்த்தாள், உயிர் நீங்கினாள்"

(கம்.6.இரா.வ.ப.பா.9946)

என்று கூறி அழுது எழுந்து அவன் ஒப்புமை இல்லாத வீர மார்பினை தன் கைகளால் தழுவி பெருமூச்சு விட்ட மண்டோதரி அங்கேயே உயிர் நீத்தாள்.இவ்வாறாக மண்டோதரியின் வாழ்வு துயர வாழ்வாகவே முடிகின்றது.

தொகுப்புரை:

கம்பராமாயணத்தில் மண்டோதரி என்பவள் அரக்க குலத்தின் ராணி மட்டுமல்ல.அவள் சகிப்புத்தன்மை, தூய காதல்,அற சிந்தனை ஆகியவற்றின் வடிவமாகவும் திகழ்கிறாள். கணவனின் தவறுகளை சுட்டிக்காட்டிய போதிலும் அவனை காப்பாற்ற முடியாத நிலையில், பிள்ளைகளை இழந்த சோகமும் அவளது வாழ்வை நெஞ்சை உருக்கும் துயரக் காவியமாக்குகின்றன. அரக்கக்கோட்டையில் வாழ்ந்தாலும் தன் கற்பினாலும் மாண்பினாலும் போற்றப்படும் உன்னத பிறவியாக மண்டோதரி திகழ்கிறாள்.

குறிப்புகள் :

1. சி.எஸ்.விசாலாட்சி - கம்பன் காவியத்தில், கவிதா பப்ளிகேஷன், தியாகராய நகர், சென்னை. ப. 129
2. ந. சுப்பிரமணியன் - சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட் அம்பத்தூர், சென்னை. ப. 376

முதன்மைச் சான்றாதாரம்:

1. அ. ச. ஞானசம்பந்தன் - கம்ப ராமாயணம் கம்பன் அறநிலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.

துணைமைச் சான்றாதாரங்கள்:

1. பூவண்ணன் - கம்ப ராமாயணம் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானர் பதிப்பக வெளியீடு
2. கருத்தரங்கக் கட்டுரை தொகுப்பு - துறைதோறும் கம்பன்,கபிலன் பதிப்பகம், புதுச்சேரி.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

17.சங்க இலக்கியத்தில் மழவர்கள்

ஆய்வாளர்
வெ. மாரிச்செல்வி,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவுஎண்: 22212014022007
முதுகலை மற்றும் தமிழாய்வுமையம்
ஏ.பி.சி. மகாலட்சுமிமகளிர்கல்லூரி,
தூத்துக்குடி-2.
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, -12,
தமிழ்நாடு, இந்தியா.
https://orcid.org/ 0009-0005-6432-9053

நெறியாளர்
முனைவர் **அ. விஜயலட்சுமி,**
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமிமகளிர்கல்லூரி,
தூத்துக்குடி-2.

DOI 10.5281/zenodo.21723835.

Abstract:

The Mazhavars are known through Sangam literary texts. At certain stages of their history, they lived as chieftains of small territories. As a distinct clan, they ruled over their own lands and engaged in warfare with other chieftains, such as Ori and the Aaviyar clan. In some regions, they were known for cattle raiding. The Mazhavars are also recognized as warriors. This article examines their way of life and their portrayal in Sangam literature.

KeyWords : Sangam literature - *Neithal* landscape - *Mazhavar* - ancient Tamil lifestyle.

ஆய்வுச்சுருக்கம் :

மழவர்கள் என்பவர்கள் சங்க இலக்கியப்பாடல்களின் அறியப்படுகின்றனர். இவர்கள் தங்களது வாழ்வின் ஒரு பகுதியில் குறுநில மன்னர்களாக வாழ்ந்துள்ளனர். ஓரி,ஆவியர் குடி போன்ற குறுநிலத் தலைவர்களுடன் போர் கொண்டவர்களாக தனித்த குடியினராகத் தங்களுக்கென நிலப்பகுதியினைக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். ஒரு பகுதியில் ஆநிரைக் கவர்பவர்களாக இருந்துள்ளனர். மழவர்கள் வீரர்கள் என்றும் அறியப்படுகின்றனர்.இவர்களின் வாழ்க்கை மற்றும் சங்க இலக்கிய நிலையினைக் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

முன்னுரை :

மழவர்கள் என்பவர்கள் சங்க இலக்கியத்தில் வீரர் எனும் பொருளில் இடம் பெற்றுள்ள குழுவினர் ஆவர். இவர்கள் வீரர்கள் எனும் நிலையினை அடைவதற்கு முன்பு மழவர் குடியினைச் சேர்ந்தவராகளாகவும் பிற குறுநில மன்னர்களோடு போரிட்டவர்களாகவும் இருந்துள்ளனர். தங்களுக்கென தனிப்பட்ட நிலப்பகுதியினைக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். எனினும் ஆறலைக்

கள்வர்களாக மாறி மக்களை அச்சுறுத்தியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. இவர்களின் வாழ்க்கை நிலை குறித்து சங்க இலக்கியப் பாடல்கள் வழி இக்கட்டுரை ஆராய்கிறது.

மழவர் :

சங்க இலக்கியப் பாடல்களில் மழவர்கள் எனும் குடியினர் மதுரைக்காஞ்சி, பதிற்றுப்பத்து, நற்றிணை, அகநானூறு, புறநானூறு ஆகிய பாடல்களில் இடம் பெறுகின்றனர். மழவர் என்பதற்கு 'வீரர்' என்பது பொதுப் பெயராக அறியப்படுகிறது. இவர்களை 'சிலை வீரர்கள்' என்று பாடல்கள் தெரிவிக்கின்றன. வில்லேந்திய வீரர்கள் என்று நாச்சினார்க்கினியர் மதுரைக்காஞ்சி விளக்கவுரையில் கூறுகிறார். இவர்கள் ஆநிரைகளைக் காப்பவர்களாகவும் அவற்றை கவர்ந்து சென்றவர்களிடம் இருந்து மீட்கும் கரந்தை வீரர்களாகவும் இருந்துள்ளனர். இவர்கள் ஆண்ட பகுதி மழவர் நாடு என்று அழைக்கப்படுகிறது. இது காவிறியாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. இவர்கள் குறித்து **"சோழப் பேரரசின் உள்நாட்டுத் தலைநகராகிய உறையூருக்கு மேற்கில், காவிரியாற்றின் வடகரையில் கொங்கு நாட்டிற்கு அணித்தாக மழநாடு எனவும் மழகொங்கம் எனவும் பெயர் பூண்டிருந்த ஒரு சிறு நிலப் பகுதியே மழவரின் பிறப்பிடம் என்றாலும் அவர்கள் அங்கு நிலைத்த வாழ்வு மேற்கொண்டிராது நாடோடி வாழ்வை பெரிதும் மேற்கொண்டிருந்தனர்"** (ப.29) (தமிழகத்தில் கோசர்கள்) என்று கா. கோவிந்தன் கூறுகிறார்.

"மழவர் என்பார் மழநாட்டில் வசித்தோர் ஆதல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகிறது. நாட்டினடியாகப் போந்த 'மழவர்' என்ற குடிப்பெயர் பிறகுலப்பெயரோடு இணைந்து வழங்கப்பெறாது தனித்து வழங்கிவருதலைச் சங்க நூல்களின் காண்கின்றோம். இன்னோர் அந்நாட்டில் அரசுபுரிந்துவந்த அரசர் குலத்தினராதல் தௌ;ளிது. இதனால், மழநாட்டிலுள்ள அரசர் குலத்தினரே சங்கத்துச் சான்றோர்களால் ;மழவர்' என்று வழங்கப்பெற்றுள்ளனர். இம்மழநாடு 'மழப்புலம்' என்று அழைக்கப்பெறும்" (ப.36) (**சதாசிவப்பண்டாரத்தார் ஆய்வுக்கட்டுரைகள்**) என சதாசிவ பண்டாரத்தார் தனது நூலில் கூறுகிறார்.

> **" தாயவன் யாவுக்குந் தாள்சடை மேற்றனித்திங்கள் வைத்த**
> **தூயவன் பாதந் தொடர்ந்துதொல் சீர்துளை யாற்பரவும்**
> **வேயவன் மேன்மழ நாட்டுவிரிபுனன் மங்கலக்கோ**
> **னாயவ னானாய னென்னை யுவந்தான் டருளினனே"** - (திருத். திருவந்தாதி.15)

என்ற நம்பியாண்டார் நம்பிகளது திருவாக்கினாலும் அறியப்படுகின்றது. இது மழவர் நாடு இருந்ததென்பதற்கு சான்றாய் அமைகிறது. **ஆனாயனார் புராணம்**.12,13 பாடல்களால் சோழநாட்டின்கண் மழநாடு என்றதொரு உள்நாடு இருந்தது என்பதைக் காட்டுகிறது. நாயன்மார்களுள் ஒருவராகிய ஆனாய நாயனார் பிறந்தது மழநாடு ஆகும். திருஞானசம்பந்தர் பாடிய திருப்பாச்சிலாச்சிரமும் இம்மழநாட்டில் உள்ளது. இந்நாடு கொள்ளிடத்தின் வடகரையில் ஐயன்வாய்க்கால் பெருவளவாய்க்கால் முதலிய கால்வாய்கள் ஓடும் திருச்சிராப்பள்ளியில் இருந்து பலமைல் தூரம் நீண்ட நாடாக இருக்க வேண்டும்.

மழவர் எனும் குறுநில மன்னர்கள் :

கடையெழு வள்ளல்களில் சிலர் 'மழவர்' குடியினைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். அதியமான், நெடுமான், அஞ்சி, ஓரி முதலானோர் இம்மழவர் குலத்தினைச் சார்ந்தவர்கள் என்பதை சங்க இலக்கியப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

"மழவர் பெரு மகன் மா வள் ஓரி
கை வளம் இயைவது ஆயினும்,
ஐது ஏகு அம்ம, இயைந்து செய் பொருளே." - (நற்.52:8-10)

விரும்பிய போரில் வெற்றி காணும் மழவர் குடிமகனாகிய ஓரி அரசன் கொடையாக வழங்கும் வளமை போன்ற பெருஞ்செல்வத்தை ஈட்டிப் பெறுவதாயினும் அது சிறிது என எண்ணிக்கொள் என்று பாடல் வரிகள் கூறுகின்றன. இதில் ஓரி மழவர் குடியினைச் சேர்ந்தவன் என்பதை அறிய முடிகிறது. பொதினி என்பது இக்காலப் பழனிமலை. அது ஆறு முடிகளைக் கொண்டு விளங்கும் ஆனைமலை. அதன் அரசன் முருகன். அவன் நெடுவேள் என்றும் வழங்கப்படுபவன். ஆவியர் குடி மன்னன். குதிரைமலை மக்களை மழவர் தாக்கியபோது அவர்களை விரட்டியடித்தவன். வண்டு மொய்க்கும் தலைமாலை அணிந்தவன். வீரக்கழல் அணிந்தவன் என்று நெடுவேள் போற்றப்படுகிறான். இதில் நெடுவேளின் குடி ஆவியர் குடியென்பது தெரிகிறது. ஆவியர் குடியினருக்கும் மழவர் குடியினருக்கும் இடையில் போர் நிகழ்ந்துள்ளது. பண்டைய காலங்களில் குடிகளுக்கிடையே அடிக்கடி போர் நிகழ்ந்துள்ளது. இதில் மழவர் குடிக்கும் ஆவியர் குடிக்கும் இடையில் நடைபெற்ற போரினை சங்க இலக்கியப்பாடல் காட்டுகிறது. இதன்வழி மழவர் என்றொரு குடியினர் இருந்ததும் அவர்கள் தங்களுக்கென்று குறிப்பிட்ட நிலப்பரப்பினைக் கொண்டிருந்தனர் என்பதும் தெரிகிறது.

"கி.பி ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த பல்லவ வேந்தனும் முதலாம் மகேந்திரவர்மனது தந்தையுமாகிய சிம்மவிஷ்ணு என்பான் தென்னாட்டின் மீது படையெடுத்துப் பாண்டியர், சோழர், கேரளர், மழவர் என்ற மன்னவர்களை வென்றான் என்று காசக்குடிச்செப்பேடுகள் தெரிவிக்கின்றன கி.பி எட்டாம் நூற்றாண்டில் பாண்டிநாட்டில் ஆட்சி புரிந்தவனும் அரிகேசரி பராங்குசன் மாறவர்மன் என்று செப்பேடுகளில் குறிக்கப்பெற்றவனுமாகிய முதல் இராசசிம்ம பாண்டியன் ஒரு மழவ அரசனது புதல்வியை மணந்து கொண்ட செய்தி வேள்விக்குடிச் செப்பேடுகளால் அறியக் கிடைக்கின்றது" (ப.40) சதாசிவப்பண்டாரத்தார் ஆய்வுக்கட்டுரைகள்

"யாவிர் ஆயினும், கூழை தார் கொண்டு
யாம் பொருதும் என்றல் ஓம்புமின் ஓங்கு திறல்
ஒளிறு இலங்கு நெடு வேல் மழவர் பெருமகன்" - (புறம். 88: 1-3)

உங்களைப் பின் தொடர்ந்து வரும் கூழைப்படையை வைத்துக்கொண்டு போரிட்டு வெல்வோம் என்று முனைவதை விட்டுவிடுங்கள். என் தலைவன், ஒளிரும் உயர்ந்த வேல்மழவர் (மறவர்)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

பின்னணி கொண்ட பெருமகன். முழவு போன்ற மார்பினைக் கொண்டவன் எனும் வரிகள் மழவர்கள் குறுநில மன்னர்களாக இருந்துள்ளனர் என்பதற்கு சான்றாக உள்ளது..

ஏழு, எட்டு, பத்து, பதினோராம் நூற்றாண்டுகளில் மழவர் குடியினர் சிறந்து விளங்கியுள்ளனர். அக்காலத்தில் இவர்கள் சோழர்களுக்கு அடங்கிய குறுநில மன்னர்களாகவும் படைத்தலைவர்களாகவும் விளங்கியுள்ளனர். சேர,சோழ, பாண்டிய அரசுகள் தங்களது செல்வாக்கினை இழக்கும்போது இவர்களும் தங்களது பெருமையில் சுருங்கி வழித்தோன்றல்களாக மாறியுள்ளனர்

வீரர் நிலையில் மழவர்கள் :

மழவர்கள் போர் வீரர்களில் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இவர்களைப் போர்த்துணையாகக் கொண்டிருந்தனர். இவர்களில் பெரும்பகுதியினர் குதிரைப் படைஞராகவும், யானைப் படைஞராகவும் வில் வீரர்களாகவும் இருந்துள்ளனர். போர்ப்பறைக் கொட்டிச் செல்பவர்கள் என்பதை மதுரைக்காஞ்சியடிகள் தெரிவிக்கின்றன.

“தீம்புழல் வல்சிக் கழற்கால் மழவர் . . . .” - (மது.கா.395)

புழல்வல்சி’ என்பது குழாய்ப் புட்டு. வீரக்கழல் அணிந்த போர் மறவர்களுக்குப் புழல் வல்சி உணவு வழங்கப்பட்டுள்ளது. களமர் என்னும் சொல் உழவரைக் குறிக்கும். ‘கள்ளார் களமர்’ என்பது கள்ளுண்டு போர்க்கள உழவு செய்யும் வீரர்களைக் குறிக்கும். இருசார் படைகளும் கலந்து தாக்கிப் போரிட்டன. போரில் அவர்கள் நிகழ்த்திய செயல்கள் அரியனவும், பெரியனவுமாக அமைந்திருந்தன. இதில் மழவர்கள் கழல்களை அணிந்த கால்களை உடைய மழவர்கள் என்பது குறிப்பிடப்படுகிறது.

“மைபடு பெருந்தோள் மழவ ரோட்டி” - (மது.கா.687)

கடையெழு வள்ளல்களில் ஒருவன் தோட்டிமலை நள்ளி. இவன் தன் தோட்டிமலைக் கோட்டையை நெடுஞ்செழியன் அழிக்காமல் இருப்பதற்காக ஒவ்வொரு நாளும் ஏராளமான வளங்களைக் கொண்டுவந்து தந்தான். இவன் வலிமையான தோள்களையுடைய மழவர்களை வெற்றி கொண்டு பல்வேறு திரைப்பொருட்களை மதுரையில் கொண்டு வந்து சேர்த்தான் என்பது கூறப்பட்டுள்ளது. இவ்வரிகளில் மழவர் குடியினர் வீரர்களாக இருந்த செய்தி புலனாகிறது.

“மிதி அல் செருப்பின் பூழியர் கோவே!
குவியல் கண்ணி மழவர் மெய்ம்மறை! **- (ப.ப.**21:23 - 24)

செருப்பு என்னும் பெயருடைய மலைக்குத் தலைவனான பூழிநாட்டின் தலைவன் பல வகையான போர்க்கண்ணிகளைச் சூட்டிக் கொள்ளக் கூடிய மழவர்களுக்கு கருவி போன்றவன்.

“செவ் ஊன் தோன்றா, வெண் துவை முதிரை,
வால் ஊன் வல்சி மழவர் மெய்ம்மறை” - (ப.ப.55 : 8 - 9)

சிவந்த ஊன் தெரியாதபடி சமைக்கப்பட்ட துவையினையும், தானியங்களையும், நிணம் பொருந்திய உணவாகக் கொண்ட மழவர்களுக்குக் கவசம் போன்றவன் குட நாட்டு அரசன் என்று பாடல் அடிகள் தெரிவிக்கிறது. மழவர்கள் குறுநில மன்னர்களாக இருந்து தனது நிலையில் மாற்றம் ஏற்பட்டு

மூவேந்தர்களுக்கு படையினாராக மாறியுள்ள நிலையினைப் பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. இது பண்டைய குடியின் மாற்றத்தையும் வீரர்களாக சிறந்திருந்த தன்மையினையும் காட்டுகிறது.

கள்வர்களாக மாறிய சூழல் :

மழவர்கள் ஆநிரைகளைக் கவர்பவர்களாகவும் பாலை வழியில் செல்பவர்களுக்குத் துன்பம் தருபவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை பாடல்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

"நுழை நுதி நெடு வேல், குறும் படை, மழவர்
முனை ஆத் தந்து, முரம்பின் வீழ்த்த" - (அகம்.35.4-5)

கூர்மையான வேலும் சிறுசிறு கருவிகளும் கையில் வைத்துக்கொண்டு மழவர் குடிமக்கள் ஆனிரைகளைக் கவர்ந்துவருவர். முரம்பு (தரிசு) நிலங்களில் வழிப்போக்கர்களை வில்லால் உழுது உண்ணும் வாழ்க்கையைக் கொண்ட மறவர்கள் அவர்கள் எனும் செய்தியானது மழவர்களின் ஆறலைக்கும் தொழிலை எடுத்துக்காட்டுகிறது.

"கல்லா மழவர் வில்லிடை விலங்கிய
துன் அருங் கவலை அருஞ் சுரம் இறந்தோர்" - (நற்.374.4-5)

பண்பாட்டைக் கற்காத மழவர் அம்பு (தொடை) எய்வர். அது பொருத்தமான ஆள் இலக்கில் குறி தவறாமல் பாயும். மழவர் தலையில் பூமாலை (கண்ணி) சூடியிருப்பர். அவர்களின் பாயும் அம்புப் போரிலிருந்து விலகிச் செல்ல வேண்டும். அப்படிப்பட்ட வழியில் அவர் சென்றிருக்கிறார் என்பதில் மழவர்கள் என்பார் அறியாமையுடையவர்கள் என்பதும் அவர்கள் கொலைத்தொழிலை செய்பவர்கள் என்பதையும் காட்டுகிறது.

"இரலை சேக்கும், பரல் உயர் பதுக்கைக்
கடுங்கண் மழவர் களவு உழவு எழுந்த
நெடுங் கால் ஆசினி ஒடுங்காட்டு உம்பர்" - (அகம்.91.10-12)

மழவர், கண்ணோட்டம் இல்லாத கொடிய கண்களை உடையவர். திருட்டுத் தொழில்தான் அவர்கள் செய்யும் உழவு. ஒடு மரங்கள் மிக்க ஒடுங்காடு அவர்களின் வாழ்விடம். பரல் கற்கள் அடுக்கிய பதுக்கையில் அவர்கள் வாழ்வர். அழுத்தமான புள்ளிகளைக் கொண்ட கலைமான்களும் (இருங்கேழ் இரலை) அந்தப் பதுக்கை இருப்பிடங்களில் வாழும் என்று பாடல் கூறுகிறது. மழவர்கள் பாலைத்திணையில் வாழ்பவர்களாகவும் அவ்வழிச் செல்வோரிடமிருந்து பொருட்களைப் பறித்துண்ணும் வாழ்க்கையினராகவும் உள்ளனர் என்பது அறியலாகிறது. வீரர்களாக இருந்தவர்கள் ஆநிரகைக் கவர்பவர்களாகவும் ஆறலைக்கும் கொடியவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை :

குறுநில மன்னர்களாக இருந்தவர்கள் குறிப்பிட்ட காலகட்டத்தில் மூவேந்தர்களின் படையில் சிறப்பிற்குரிய இடம்பெற்றுள்ளனர். குதிரை வீரர்களாகவும், தூசிப்படையினராகவும்

அறியப்படுகின்றனர். இவர்களை படையில் கொண்டுள்ள மன்னனின் சேனை சிறப்பு பெற்ற வீரமுடையதாய்த் திகழ்ந்துள்ளது ஆநிரைக் கவர்ந்து பாலை வழிச் செல்வோரிடம் பொருள் பறிக்கும் ஆறலைக் கள்வர்களாக இருந்துள்ளனர். இவர்கள் வழியிடங்களில் இருப்பார்கள் என்னும் அச்சத்தை மக்களிடம் தோற்றுவிக்கும் அளவிற்கு கடுமையானவர்களாக இருந்துள்ளனர். இவற்றை சங்க இலக்கியப்பாடல்களின் வழி அறிய முடிகிறது.

துணைநூற்பட்டியல் :

1. மதுரைக்காஞ்சி, பத்துப்பாட்டு மூலமும் உரையும், நச்சினார்க்கினியர் உரை, உ.வே.சா. நூல் நிலையம்,2012
2. தொல்காப்பியம், இளம்பூரணார் உரை, மணிவாசகர் பதிப்பகம்,2007
3. சதாசிவப்பண்டாரத்தார் ஆய்வுக்கட்டுரைகள், தொகுப்பு - அ.ம.சத்தியமூர்த்தி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,சி.ஐ.டி வளாகம், சென்னை, 1998
4. சங்க இலக்கியம், எட்டுத்தொகை, வர்த்தமானர் பதிப்பகம், 2003
5. தமிழகத்தில் கோசர்கள், கோவிந்தன். கா ,முதல் பதிப்பு - 1960,அருணா பப்ளிகேஷன், சென்னை - 17
6. பெரிய புராணம், சேக்கிழார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1995

18. நாட்டுப்புறக் கதைகள் - ஓர் ஆய்வு

ஏ.ஜெனிபர்,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
கிரைஸ்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கீழச்சேரி, திருவள்ளூர் மாவட்டம்.

DOI 10.5281/zenodo.21723954.

Abstract :

Folk literature is a form of literature that orally transmits a community's lived experiences, cultural traditions, beliefs, rituals, and moral values. Folk tales hold a significant place within this genre. Since the dawn of human society, people have used storytelling as a medium to pass on their experiences and truths about life to subsequent generations. Thus, folk tales are not merely works of fiction; they are regarded as cultural documents that record a society's history, culture, mindset, and philosophy of life. Tamil folk tales deeply reflect the social life, family relationships, occupations, religious beliefs, connection with nature, humanitarian spirit, and ethical values of the Tamil people. Transmitted orally from generation to generation, these stories have evolved alongside the people's daily lives. A distinctive feature of these tales–which lack a specific named author–is that they emerged as an expression of the community's collective experience.

KeyWords : Folk Literature - Stories - Life Style - Folk Tales

முன்னுரை:

நாட்டுப்புற இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் வாழ்வியல் அனுபவங்கள், பண்பாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் ஒழுக்க நெறிகளை வாய்மொழி வழியாகப் பரப்பும் இலக்கியமாகும். அவற்றுள் முக்கியமான இடத்தைப் பெறுவது நாட்டுப்புறக் கதைகளாகும். மனித சமுதாயம் தோன்றிய காலம் முதல், தமது அனுபவங்களையும் வாழ்க்கை உண்மைகளையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல மக்கள் கதைகளை ஊடகமாகப் பயன்படுத்தினர். எனவே, நாட்டுப்புறக் கதைகள் வெறும் கற்பனைக் கதைகள் அல்ல; அவை ஒரு சமூகத்தின் வரலாறு, பண்பாடு, மனப்பான்மை மற்றும் வாழ்வியல் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ள பண்பாட்டு ஆவணங்களாகக் கருதப்படுகின்றன. தமிழ் நாட்டுப்புறக் கதைகள், தமிழர்களின் சமூக வாழ்க்கை, குடும்ப உறவுகள், தொழில்கள், சமய நம்பிக்கைகள், இயற்கை உணர்வு, மனிதநேயம் மற்றும் அறவாழ்வை ஆழமாகப் பிரதிபலிக்கின்றன. இக்கதைகள் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு வாய்மொழி மரபில் பரவி, மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைந்து வளர்ந்துள்ளன. குறிப்பிட்ட ஆசிரியர் பெயர் இல்லாத இக்கதைகள், சமூகத்தின் கூட்டு அனுபவத்தின் வெளிப்பாடாக உருவாகியுள்ளன என்பது அவற்றின் தனிச்சிறப்பாகும். சு. சக்திவேல் அவர்கள், நாட்டுப்புறவியல் ஆய்வு என்னும் நூலில், **"நாட்டுப்புற இலக்கியம் மக்களின் வாழ்வியல், பண்பாடு மற்றும் சிந்தனைகளின் கண்ணாடியாக விளங்குகிறது"** என்று குறிப்பிடுகிறார். இதேபோல் தே. லூர்து அவர்கள், **"நாட்டுப்புறக் கதைகள் ஒரு சமூகத்தின் அனுபவ அறிவை தலைமுறைகளுக்குக் கடத்தும் வாய்மொழி ஆவணங்கள்"** என்று விளக்குகிறார். இக்கருத்துகள் நாட்டுப்புறக் கதைகளின் சமூக மற்றும் பண்பாட்டு முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றன.

தமிழ் இலக்கண மரபிலும் மக்களின் வாழ்வியலுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர்,

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்."
(தொல் - பொருளதிகாரம்)

என்று கூறுவதன் மூலம், மக்களின் உலகியல் வாழ்க்கையும் இலக்கிய உருவாக்கத்திற்கான அடிப்படையாக அமைகிறது என்பதை உணர்த்துகிறார். நாட்டுப்புறக் கதைகள் இவ்வுலகியல் வழக்கின் இலக்கிய வடிவமாகவே விளங்குகின்றன. இன்றைய உலகமயமாக்கல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வாய்மொழி மரபுகள் மெல்ல மறைந்து வரும் நிலையில், நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் ஆய்வு செய்தல் மிகவும் இன்றியமையாத பணியாகியுள்ளது. அவற்றில் காணப்படும் அறம், அன்பு, விருந்தோம்பல், உழைப்பு, சமூக ஒற்றுமை, பெண்மையின் பெருமை, இயற்கைப் பாதுகாப்பு போன்ற விழுமியங்கள் இன்றைய சமூகத்திற்கும் வழிகாட்டும் நெறிமுறைகளாக உள்ளன. எனவே, இவ்வாய்வுக் கட்டுரை நாட்டுப்புறக் கதைகளின் தோற்றம், தன்மைகள், நோக்கம், பொருண்மைகள், வகைப்பாடு, இன்றைய நிலை மற்றும் அவற்றில் வெளிப்படும் விழுமியங்களை ஆய்வியல் நோக்கில் ஆராய்ந்து, தமிழர் பண்பாட்டு மரபில் நாட்டுப்புறக் கதைகளின் இடத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நாட்டுப்புறக் கதைகளின் தோற்றம்:

நாட்டுப்புறக் கதைகள் மனித சமுதாயத்தின் மிகப் பழமையான வாய்மொழி இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகும். மனிதன் குழுவாக வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே தனது அனுபவங்கள், உணர்வுகள், அச்சங்கள், நம்பிக்கைகள் மற்றும் வாழ்வியல் அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் தேவையால் கதைகள் தோன்றின. எழுத்து முறை உருவாகுவதற்கு முன்னரே, இக்கதைகள் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு வாய்மொழியாகப் பரவின. இதனால் நாட்டுப்புறக் கதைகள் **“வாய்மொழி இலக்கியத்தின் முதுகெலும்பு”** என்று போற்றப்படுகின்றன. இயற்கை நிகழ்வுகளைப் புரிந்துகொள்ள முடியாத காலத்தில் மனிதன் அவற்றைத் தெய்வீக சக்திகளுடன் தொடர்புபடுத்தி விளக்கினான். மழை, இடி, மின்னல், வெள்ளம், வறட்சி, காடு, விலங்குகள் போன்ற இயற்கை நிகழ்வுகளை மையமாகக் கொண்டு பல கதைகள் உருவாயின. பின்னர் இக்கதைகள் சமூக அனுபவங்கள், வீரச் செயல்கள், குடும்ப உறவுகள், நீதிநெறிகள், அறவுரைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக வளர்ச்சி பெற்றன. சு.சக்திவேல் அவர்கள், நாட்டுப்புறவியல் ஆய்வு என்ற நூலில், “நாட்டுப்புறக் கதைகள் மக்களின் வாழ்வனுபவங்களின் இலக்கிய வடிவமாகும்; அவை மக்களின் எண்ணங்களையும் பண்பாட்டையும் பிரதிபலிக்கின்றன” என்று குறிப்பிடுகிறார். அதேபோல் தே. லூர்து அவர்கள், நாட்டார் வழக்காற்றியல் நூலில், **“நாட்டுப்புறக் கதைகள் குறிப்பிட்ட ஆசிரியரால் உருவாக்கப்படுபவை அல்ல; மக்களின் கூட்டு அனுபவமும் கற்பனையும் இணைந்து உருவாக்கிய சமூகச் சொத்தாகும்”** என்று விளக்குகிறார்.

தமிழர் வாழ்க்கை முறையில் பாட்டி-தாத்தா பேரக்குழந்தைகளுக்குக் கதைகள் கூறும் மரபு நாட்டுப்புறக் கதைகள் பரவுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தது. கிராமங்களில் இரவு நேரங்களில், அறுவடை காலங்களில், திருவிழாக்களில், மாடத்திண்ணைகளில் மக்கள் ஒன்றுகூடி கதைகள் கூறும் வழக்கம் இருந்தது. இவ்வாறு கூறப்பட்ட கதைகள் காலப்போக்கில் பல மாற்றங்களை ஏற்று, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்ப தனித்துவமான வடிவத்தைப் பெற்றன. ஆ. இராமநாதன் அவர்கள், நாட்டுப்புறவியல் ஆய்வுகள் நூலில், **“நாட்டுப்புறக் கதைகள் சமூகத்தின் வரலாறு, நம்பிக்கைகள், தொழில்கள், குடும்ப உறவுகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களைத் தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லும் வாய்மொழி ஆவணங்களாகும்”** என்று குறிப்பிடுகிறார். எனவே, நாட்டுப்புறக் கதைகளின் தோற்றம் என்பது தனி மனிதனின் தக்க தோன்றியதல்ல; மாறாக, ஒரு சமூகத்தின் கூட்டு அனுபவம், இயற்கைச் சூழல், வாழ்வியல் நெறி மற்றும் பண்பாட்டு வளர்ச்சியின் வெளிப்பாடாக உருவானது. அதனால் நாட்டுப்புறக் கதைகள் தமிழர் பண்பாட்டு வரலாற்றை அறிய உதவும் முதன்மையான ஆதாரங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றன.

நாட்டுப்புறக் கதைகளின் நோக்கம்:

நாட்டுப்புறக் கதைகள் மனித சமுதாயத்தின் வாழ்வியல் அனுபவங்களையும் பண்பாட்டு மரபுகளையும் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வாய்மொழி இலக்கியங்களாகும். இக்கதைகளின் நோக்கம் வெறும் பொழுதுபோக்கை வழங்குவது மட்டுமல்ல; மாறாக மனிதனின் ஒழுக்கநெறி, சமூகப் பொறுப்பு, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் வாழ்க்கை அனுபவங்களை எளிமையான முறையில் எடுத்துரைப்பதாகும். ஒவ்வொரு நாட்டுப்புறக் கதையும் அதன் முடிவில் ஒரு அறவுரையையோ, வாழ்க்கைப் பாடத்தையோ, சமூகச் சிந்தனையையோ வெளிப்படுத்துகிறது.

1.அறநெறியைப் போதித்தல்

நாட்டுப்புறக் கதைகளின் முதன்மை நோக்கம் அறநெறியை மக்களிடம் பரப்புவதாகும். உண்மை, நேர்மை, அன்பு, இரக்கம், பொறுமை, நன்றி, ஒற்றுமை போன்ற உயரிய பண்புகளை கதைகளின் மூலம் எளிதாகக் கற்பிக்கின்றன. குறிப்பாக, குழந்தைகளின் ஒழுக்க வளர்ச்சியில் இக்கதைகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.” (குறள் 131)

இக்குறள் ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்துரைப்பதைப் போலவே, நாட்டுப்புறக் கதைகளும் ஒழுக்கமிக்க வாழ்க்கையை வலியுறுத்துகின்றன.

2.பண்பாட்டு மரபுகளைப் பாதுகாத்தல்

ஒரு சமூகத்தின் பழக்கவழக்கங்கள், சடங்குகள், திருவிழாக்கள், நாட்டுப்புற மருத்துவம், தொழில்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதில் நாட்டுப்புறக் கதைகள் முக்கியப் பங்காற்றுகின்றன. இதனால் அவை பண்பாட்டு ஆவணங்களாக விளங்குகின்றன.

3.சமூக ஒற்றுமையை வளர்த்தல்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

நாட்டுப்புறக் கதைகள் மனித உறவுகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றன. குடும்ப ஒற்றுமை, அண்டை வீட்டாருடனான நல்லுறவு, விருந்தோம்பல், கூட்டுறவு வாழ்க்கை ஆகியவை சமூக முன்னேற்றத்திற்கு அவசியமானவை என்பதை இக்கதைகள் உணர்த்துகின்றன.

4.சமூகத் தீமைகளைச் சுட்டிக்காட்டுதல்

பேராசை, பொய், வஞ்சகம், அநீதி, மூடநம்பிக்கை போன்ற சமூகத் தீமைகளை நாட்டுப்புறக் கதைகள் விமர்சிக்கின்றன. அவற்றின் தீய விளைவுகளை எடுத்துக்காட்டி, நல்லொழுக்கம் நிறைந்த வாழ்க்கையை நோக்கி மக்களை வழிநடத்துகின்றன.

நாட்டுப்புறக் கதைகளின் தன்மைகள்:

நாட்டுப்புறக் கதைகள் என்பது மக்களின் வாழ்க்கை அனுபவங்கள், பண்பாட்டு மரபுகள், நம்பிக்கைகள் மற்றும் அறநெறிகளை வாய்மொழி வழியாக எடுத்துச் செல்லும் இலக்கிய வடிவமாகும். இக்கதைகள் தனிப்பட்ட படைப்பாளியின் படைப்பாக இல்லாமல், சமூகத்தின் கூட்டு அனுபவத்தின் வெளிப்பாடாக உருவாகியுள்ளன. காலமாற்றத்திற்கேற்ப பல்வேறு மாற்றங்களை ஏற்றுக்கொண்டாலும், அவற்றின் அடிப்படைப் பண்புகள் மாறாமல் நிலைத்திருக்கின்றன. இத்தகைய பண்புகளே நாட்டுப்புறக் கதைகளை மற்ற இலக்கிய வடிவங்களிலிருந்து தனித்துவப்படுத்துகின்றன.

1.வாய்மொழி மரபு

நாட்டுப்புறக் கதைகளின் முதன்மையான தன்மை வாய்மொழியாகப் பரவுவதாகும். எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்னரே மக்கள் தங்கள் அனுபவங்களையும் அறிவையும் கதைகளின் வழியாக அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சென்றனர். பாட்டி, தாத்தா, பெற்றோர் ஆகியோரின் வாயிலாகக் குழந்தைகளுக்குக் கதைகள் சொல்லும் மரபு இதன் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2.ஆசிரியர் பெயர் அறியப்படாமை

நாட்டுப்புறக் கதைகளுக்கு குறிப்பிட்ட ஆசிரியர் இருப்பதில்லை. அவை ஒரு தனிமனிதரின் படைப்பாக இல்லாமல், பல தலைமுறைகளாக மக்களால் உருவாக்கப்பட்டு, மாற்றப்பட்டு, செம்மைப்படுத்தப்பட்ட சமூகப் படைப்புகளாகும்.

3.எளிய மொழிநடை

நாட்டுப்புறக் கதைகள் அனைவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் வட்டார வழக்குச் சொற்களையும் எளிமையான மொழிநடையையும் கொண்டுள்ளன. இதனால் கல்வியறிவு இல்லாதவர்களும் இக்கதைகளை எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது.

4.வட்டாரத் தன்மை

ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தனித்தனி நாட்டுப்புறக் கதைகள் காணப்படுகின்றன. கதைகளில் இடம்பெறும் மொழி, பழக்கவழக்கங்கள், உணவுமுறை, தொழில்கள், நம்பிக்கைகள் ஆகியவை அந்தந்தப் பகுதியின் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துகின்றன.

5.அறநெறி போதித்தல்

ஒவ்வொரு நாட்டுப்புறக் கதையும் ஒரு அறவுரையையோ வாழ்க்கைப் பாடத்தையோ உணர்த்தும் வகையில் அமைகிறது. உண்மை, நேர்மை, அன்பு, உழைப்பு, விருந்தோம்பல், பொறுமை, தியாகம் போன்ற உயரிய பண்புகளை வளர்ப்பதே இக்கதைகளின் நோக்கமாகும்.

6.சமூக வாழ்வின் பிரதிபலிப்பு

நாட்டுப்புறக் கதைகள் ஒரு சமூகத்தின் குடும்ப அமைப்பு, தொழில், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள், உறவுமுறைகள், பொருளாதார நிலை, பெண்களின் பங்கு போன்றவற்றைத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இதனால் அவை சமூகவியல் மற்றும் மானுடவியல் ஆய்வுகளுக்கான முதன்மை ஆதாரங்களாக விளங்குகின்றன.

7.பண்பாட்டு மரபைப் பாதுகாத்தல்

நாட்டுப்புறக் கதைகள் ஒரு சமூகத்தின் பண்பாடு, நம்பிக்கைகள், திருவிழாக்கள், நாட்டுப்புற மருத்துவம், விவசாய அறிவு மற்றும் மரபு சார்ந்த வாழ்வியல் கூறுகளைப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்கின்றன.

நாட்டுப்புறக் கதைகளின் பொருண்மைகள்:

நாட்டுப்புறக் கதைகள் ஒரு சமூகத்தின் வாழ்வியல், பண்பாடு, நம்பிக்கைகள் மற்றும் அறநெறிகளைப் பிரதிபலிக்கும் வாய்மொழி இலக்கியங்களாகும். இக்கதைகள் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமே உருவாக்கப்படவில்லை; மாறாக, மக்களின் அனுபவங்கள், சிந்தனைகள், சமூக உறவுகள், ஒழுக்க நெறிகள் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை எடுத்துரைக்கும் நோக்கத்துடன் உருவாகியுள்ளன. எனவே, நாட்டுப்புறக் கதைகளில் பல்வேறு பொருண்மைகள் இடம் பெற்றுள்ளன.

1.அறமும் ஒழுக்கமும்

நாட்டுப்புறக் கதைகளின் மையக் கருத்தாக அறநெறி விளங்குகிறது. நன்மை செய்பவர் இறுதியில் வெற்றி பெறுவதும், தீமை செய்பவர் தண்டனை அடைவதும் பல கதைகளில் காணப்படும் பொதுவான அமைப்பாகும். உண்மை, நேர்மை, பொறுமை, இரக்கம், மன்னிப்பு போன்ற உயரிய மனிதப் பண்புகள் கதைகளின் வழி வலியுறுத்தப்படுகின்றன. திருக்குறள் இதனை உறுதிப்படுத்துகிறது:

> **“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
> **புறத்த புகழும் இல.”** (குறள் 39)

2.குடும்பவாழ்க்கை

குடும்ப உறவுகள் நாட்டுப்புறக் கதைகளின் முக்கியப் பொருண்மையாகும். பெற்றோர்-பிள்ளை பாசம், கணவன்-மனைவி ஒற்றுமை, சகோதர உறவு, தாய்மையின் சிறப்பு போன்றவை பல கதைகளில் இடம் பெறுகின்றன. குடும்ப அமைதியே சமூக அமைதிக்கான அடிப்படை என்ற கருத்து இக்கதைகளில் வலியுறுத்தப்படுகிறது.

3.உழைப்பும் தொழிலும்

விவசாயம், கால்நடை வளர்ப்பு, கைவினை, மீன்பிடித்தல் போன்ற பாரம்பரியத் தொழில்கள் நாட்டுப்புறக் கதைகளில் முக்கியமான இடம் பெறுகின்றன. உழைப்பே உயர்விற்கான அடிப்படை என்பதையும் சோம்பேறித்தனம் வீழ்ச்சிக்குக் காரணம் என்பதையும் இக்கதைகள் எடுத்துரைக்கின்றன.

> **“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்**

தொழுதுண்டு பின்செல்பவர்.” (குறள் 1033)

4.சமூக நீதி

சமூகத்தில் நிலவும் அநீதிகள், அதிகாரத் துஷ்பிரயோகம், செல்வந்தர்-ஏழை வேறுபாடு போன்றவை நாட்டுப்புறக் கதைகளில் விமர்சிக்கப்படுகின்றன. அதேவேளையில் நீதியும் சமத்துவமும் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்படுகிறது.

5.பெண்களின்பங்கு

நாட்டுப்புறக் கதைகளில் பெண்கள் அன்பு, தியாகம், பொறுமை, அறிவாற்றல் மற்றும் குடும்பப் பொறுப்புணர்வு ஆகியவற்றின் அடையாளமாகச் சித்தரிக்கப்படுகின்றனர். சில கதைகளில் பெண்களின் தலைமைத்துவமும் சாமர்த்தியமும் வெளிப்படுகின்றன.

6.விழுமியவாழ்க்கை

அன்பு, விருந்தோம்பல், நன்றி உணர்வு, பெரியோரை மதித்தல், நட்பு, ஒற்றுமை, நேர்மை, இரக்கம் போன்ற உயரிய மனித விழுமியங்கள் நாட்டுப்புறக் கதைகளின் அடிப்படைப் பொருண்மைகளாகத் திகழ்கின்றன. இவ்விழுமியங்களே இக்கதைகளை தலைமுறைகள் கடந்தும் உயிர்ப்புடன் நிலைநிறுத்துகின்றன.

நாட்டுப்புறக் கதைகளின் இன்றைய நிலை:

நாட்டுப்புறக் கதைகள் தமிழர் பண்பாட்டு மரபின் முக்கியமான வாய்மொழி இலக்கிய வடிவமாகும். ஒரு காலத்தில் குடும்பம், கிராமம், கோயில் திருவிழாக்கள், அறுவடைப் பண்டிகைகள் போன்ற சமூக நிகழ்வுகளில் இயல்பாகப் பகிரப்பட்ட இக்கதைகள், இன்றைய அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கத்தால் பல்வேறு மாற்றங்களை எதிர்கொண்டு வருகின்றன. இருப்பினும், அவற்றின் பண்பாட்டு மதிப்பும் கல்வி முக்கியத்துவமும் இன்றளவும் குறையவில்லை.

1.வாய்மொழி மரபின் சுருக்கம்

முன்னொரு காலத்தில் பாட்டி, தாத்தா மற்றும் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் குழந்தைகளுக்கு நாட்டுப்புறக் கதைகளைக் கூறும் மரபு நிலவியது. இன்று நகரமயமாக்கல், தனிக்குடும்ப முறை மற்றும் வேகமான வாழ்க்கை முறை காரணமாக இந்த வாய்மொழி மரபு குறைந்து வருகிறது. இதன் விளைவாக பல வட்டாரக் கதைகள் பதிவு செய்யப்படாமல் மறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தே. லூர்து அவர்கள், நாட்டார் வழக்காற்றியல் நூலில், “வாய்மொழி மரபு சிதையும்போது நாட்டுப்புற இலக்கியங்களும் அழியும் அபாயம் உருவாகிறது” என்று குறிப்பிடுகிறார்.

2.தொழில்நுட்பத்தின் தாக்கம்

தொலைக்காட்சி, இணையம், சமூக ஊடகங்கள், மின்னணு பொழுதுபோக்கு ஆகியவற்றின் வளர்ச்சியால் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கதை கேட்கும் பழக்கம் குறைந்துள்ளது. அதே நேரத்தில், இதே தொழில்நுட்பம் நாட்டுப்புறக் கதைகளை மின்னூல்கள், இணையதளங்கள், ஒலிப்பதிவுகள், காணொளிகள் மற்றும் மின்காப்பகங்கள் வழியாகப் பாதுகாக்கும் புதிய வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

3.டிஜிட்டல் பாதுகாப்பு முயற்சிகள்

பல கல்வி நிறுவனங்கள், ஆய்வு மையங்கள் மற்றும் தமிழ் அமைப்புகள் நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து, மின்னணு வடிவில் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இதன் மூலம் மறைந்து வரும் கதைகள் ஆவணப்படுத்தப்பட்டு எதிர்காலத் தலைமுறைக்குப் பாதுகாக்கப்படுகின்றன.

4.மதிப்புக் கல்வியில் பங்கு

இன்றைய கல்வி முறையில் மதிப்புக் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அன்பு, அறம், ஒற்றுமை, விருந்தோம்பல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மனிதநேயம் போன்ற விழுமியங்களை எளிதில் கற்பிக்க நாட்டுப்புறக் கதைகள் சிறந்த கற்றல் வளங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.” (குறள் 391)

இக்குறள் கல்வியின் பயன் நடைமுறையில் வெளிப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. நாட்டுப்புறக் கதைகளும் இதே நோக்கில் வாழ்வியல் கல்வியை வழங்குகின்றன.

5.எதிர்காலத் தேவை

நாட்டுப்புறக் கதைகளைப் பாதுகாக்கும் பொருட்டு அவற்றை முறையாகச் சேகரித்தல், ஒலிப்பதிவு மற்றும் காணொளி வடிவில் ஆவணப்படுத்துதல், பாடத்திட்டங்களில் இணைத்தல், ஆய்வுகளை ஊக்குவித்தல் மற்றும் வட்டார மொழி மரபுகளைப் பதிவு செய்தல் ஆகியவை அவசியமாகின்றன. இவ்வாறு செயல்பட்டால்தான் தமிழர் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி உறுதிப்படுத்தப்படும்.

முடிவுரை:

நாட்டுப்புறக் கதைகள் தமிழர் பண்பாட்டு மரபின் அரிய செல்வங்களுள் ஒன்றாகும். அவை வெறும் பொழுதுபோக்கிற்காக உருவாக்கப்பட்ட கதைகள் அல்ல; மாறாக, ஒரு சமூகத்தின் வரலாறு, வாழ்வியல், பண்பாடு, நம்பிக்கைகள், தொழில்கள், உறவுமுறைகள் மற்றும் உயரிய மனித விழுமியங்களைப் பதிவு செய்துள்ள வாய்மொழி இலக்கிய ஆவணங்களாகும். மக்களின் அன்றாட வாழ்க்கை அனுபவங்களிலிருந்து தோன்றிய இக்கதைகள் தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு பரவி, தமிழர் பண்பாட்டு அடையாளத்தை நிலைநிறுத்துவதில் முக்கியப் பங்காற்றியுள்ளன. இவ்வாய்வின் மூலம், நாட்டுப்புறக் கதைகளின் தோற்றம், தன்மைகள், நோக்கம், பொருண்மைகள், வகைப்பாடு மற்றும் இன்றைய சமூகத்தில் அவற்றின் நிலை ஆகியவை தெளிவாக ஆராயப்பட்டன. மேலும், அறம், அன்பு, விருந்தோம்பல், உழைப்பு, நேர்மை, நன்றி உணர்வு, குடும்ப ஒற்றுமை, பெண்மையின் பெருமை, இயற்கைப் பாதுகாப்பு, சமூக நீதி போன்ற விழுமியங்கள் நாட்டுப்புறக் கதைகளின் மையக் கருத்துகளாக விளங்குகின்றன என்பது வெளிப்படுத்தப்பட்டது. இவ்விழுமியங்கள் மனிதனின் தனிப்பட்ட ஒழுக்க வளர்ச்சிக்கும் சமூக நல்லிணக்கத்திற்கும் அடிப்படையாக அமைகின்றன. சு. சக்திவேல் அவர்கள் குறிப்பிடுவதுபோல், “நாட்டுப்புற இலக்கியம் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு மரபுகளின் கண்ணாடியாக விளங்குகிறது.” அதேபோல் தே. லூர்து

அவர்கள், நாட்டுப்புற இலக்கியங்கள் ஒரு சமூகத்தின் அனுபவ அறிவையும் பண்பாட்டு தொடர்ச்சியையும் பாதுகாக்கும் மரபுச் செல்வங்கள் எனக் குறிப்பிடுகிறார். இவ்வாய்வில் ஆராயப்பட்ட கருத்துகளும் இக்கருத்துகளை உறுதிப்படுத்துகின்றன. இன்றைய உலகமயமாக்கல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் வாய்மொழி மரபுகள் சவால்களை எதிர்கொண்டாலும், நாட்டுப்புறக் கதைகள் தங்களது பண்பாட்டு மதிப்பை இழக்கவில்லை. மாறாக, கல்வி, ஆய்வு, மின்னணு ஆவணப்படுத்தல் மற்றும் பண்பாட்டு பாதுகாப்பு முயற்சிகள் மூலம் அவற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்தல், ஆவணப்படுத்துதல், ஆய்வு செய்தல் மற்றும் கல்வியில் பயன்படுத்துதல் ஆகியவை தமிழர் பண்பாட்டு மரபைப் பாதுகாக்கும் இன்றியமையாத செயல்பாடுகளாகும். எனவே, நாட்டுப்புறக் கதைகள் தமிழரின் பண்பாட்டு நினைவகமாக மட்டுமன்றி, அறநெறி, சமூகப் பொறுப்பு, மனிதநேயம் மற்றும் வாழ்வியல் விழுமியங்களை நிலைநிறுத்தும் அறிவுக் கருவூலமாகவும் திகழ்கின்றன. இவற்றை ஆழமாக ஆய்வு செய்து பாதுகாப்பது தமிழியல், நாட்டுப்புறவியல், மானுடவியல் மற்றும் சமூகவியல் ஆய்வுகளுக்கு வளமான பங்களிப்பை வழங்குவதோடு, எதிர்காலத் தலைமுறையினருக்கும் தமிழர் பண்பாட்டு அடையாளத்தை உணர்த்தும் சிறந்த வழியாக அமையும்.

அடிக்குறிப்பு நூல்கள்:

1. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம்.
2. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறக் கதைகள் (தொகுதிகள் 1-15), மெய்யப்பன் பதிப்பகம், 2004.
3. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல், பாரி நிலையம்.
4. சரசுவதி வேணுகோபால், நாட்டுப்புறவியல் கோட்பாடுகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
5. திருக்குறள் - பரிமேலழகர் உரை, பல பதிப்பகங்கள் வெளியிட்ட பதிப்புகள். தொல்காப்பியம் - இளம்பூரணர் உரை, பல பதிப்புகள் கிடைக்கின்றன.

19. விளிம்புநிலை மக்களின் வாழ்வியல்

ஆய்வாளர்

வி.சித்ரா,
(பதிவு எண்: 23212014022003)
முழு நேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி - 628002
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது.
அபிஷேகப்பட்டி திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
Email ammu2202ams@gmail.com
Phone No. 7502984117

நெறியாளர்

முனைவர் சு.மேரி சுபா செல்வராணி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி - 628002

DOI 10.5281/zenodo.21724082.

Abstract

Society is a structure composed of various strata. Socio-economic disparities play a primary role in creating social inequality. Society establishes distinctions of high and low status, a framework that gives rise to caste-based oppression. Within this context, the *Vannar* community is primarily engaged in the occupation of cleaning clothes. Their services—washing, cleaning, and dyeing garments for other social groups—have long been utilized. The *Vannar's* skill in removing dirt from fabrics is truly commendable. In Tamil culture, the onset of menstruation signifies a girl's transition toward the fulfillment of womanhood; the task of cleaning the blood-stained cloth resulting from this event falls to the *Vannar*. Even today, the services of the *Navithar* (barber) and *Vannar* communities remain integral to funeral rituals in villages and small towns. This study examines the insights provided by A. Sivasubramanian in his book, *Tamizhaga Vannar Varalarum Vazhakkarum* (History and Traditions of the Vannars of Tamil Nadu), regarding the lives of these workers and the specific associations each caste maintained with the *Vannar* community.

Keywords : Vannar - Society - Tamil Culture - A.Sivasubramanian -Navithar

ஆய்வுச்சுருக்கம்

சமுதாயம் என்பது பல்வேறு அடுக்குகளைக் கொண்ட ஓர் அமைப்பாகும். சமூகப் பொருளாதார முரண்பாடுகள் சமுதாய ஏற்றத்தாழ்வை உருவாக்குவதில் முதன்மை வகிக்கின்றன. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டைச் சமூகம் ஏற்படுத்துகிறது. இதன் அடிப்படையில் சாதிய ஒடுக்குமுறைகள் ஏற்படுகின்றன. இதில் வண்ணான் என்னும் சமூகப் பிரிவினர் துணியை சுத்தம் செய்யும் தொழிலை முதன்மையாகக் கொண்டுள்ளனர். மற்ற சமூகப் பிரிவினரின் துணிகளை வெளுப்பதற்கும், சுத்தப்படுத்துவதற்கும், துணிகளுக்கு வண்ணம் பூசுவதற்கும், வண்ணான்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளனர். துணிகளின் அழுக்கைப் போக்கும் வண்ணாரின் ஆற்றல் பாராட்டுக்குரிய ஒன்றாகும். ஒரு பெண் தாய்மையில் முழுமையடைகிறாள் என்பதே பூப்பு என்ற

சொல் உணர்;த்தும் தமிழர்களின் பண்பாடாகும். பெண்களுக்கு பூப்பில் ஏற்படும் ரத்தக்கறைப் படிந்த துணியை சுத்தப்படுத்தும் பணி வண்ணானுக்கு உள்ளது. இறப்புச் சடங்குகளில் நாவிதர், வண்ணார் ஆகியோரின் பணி இன்றளவில் கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு சாதியும் தனக்கென வண்ணார்களை கொண்ட தொழிலாளர்களின் வாழ்வியலைப் பற்றி ஆ.சிவசுப்ரமணியன் தனது 'தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறும்'என்ற நூலில் குறிப்பிட்டுள்ளதை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

முன்னுரை

மனிதன் நாடோடிகளாக, வேட்டையாடும் சமூகமாக இருந்து பின்னர் படிப்படியாகக் குழுக்களாக உருவாகி, விவசாயம் கற்று ஓரிடத்தில் நிலைபெற்று, கிராமம், நகரம், நாடு என்ற நீண்ட வளர்ச்சியைக் கடந்து வந்துள்ளான். மனிதகுலம் காலத்துக்குக் காலம் வாழ்க்கை அனுபவங்களைக் கற்று தன் அறியாமையிலிருந்தும், தவறுகளிலிருந்தும் தன்னைப் படிப்படியாக உயர்த்திக் கொண்டே வருகிறது. இந்த படிப்படியான கற்றலே தொழில்நுட்ப வளர்ச்சி என்றும், அறிவியல் வளர்ச்சி என்றும், சமூக நீதி என்றும், சமூக சட்ட திட்டங்கள் என்றும், தனி மனித உரிமை என்றும், மனித வாழ்க்கைக்கான பொதுநெறிகளாக நமக்கு வழிகாட்டிகளாக அமைகின்றன.

விளிம்புநிலை மக்கள்

விளிம்பு நிலை மக்கள் என்ற சொல் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் அடித்தள மக்கள் என்பதனையே குறிக்கின்றன. விளிம்பு நிலை மக்கள் எனப்படுவோர் சமூகத்தின் படிநிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட எந்த இடமும் இல்லாமல், தங்களுடைய உரிமைக்காக போராடுபவர்களாவர்.

"இந்திய தேசிய இந்துத்துவ மேலாதிக்க வளையத்திற்குள் கட்டுண்டு கிடைக்கிறவரை விளிம்புநிலை மக்கள் விடுதலை பெற முடியாது. இந்தியத் தேசியத்தை விடுத்து இந்துத்துவத்தை மட்டும் எதிர்ப்பது என்பதும் இவர்களது விடுதலைக்கு வழி வகுக்காது. மாறாக இந்திய தேசியத்தையும் இந்துத்துவத்தையும் ஏக காலத்தில் எதிர்த்து அதன் ஆதிக்கப்பிடியிலிருந்து விடுபடும்போது மட்டுமே விளிம்பு நிலை மக்கள் உள்ளிட்ட அனைத்து தேசிய இனமக்களும் விடுதலை பெற முடியும்"[1]

என்று இராஜேந்திரச்சோழன், 'வல்லினம் என்ற இலக்கிய இதழில்' சுட்டிக் காட்டியுள்ளார். விளிம்பு நிலையினராகக் கருதப்படுவோர் தங்களுக்கென எந்த உரிமையும் பாராட்டுவதில்லை. தங்களது இப்போதைய இருப்பை நியாயப்படுத்துவதாகவே அவர்களது தொன்மப்புராணங்களும் வாழ்வும் நிலைகளும் அமைகின்றன. இந்த மக்கள் ஒட்டுமொத்தச் சமூக அமைப்பையே முழுவதுமாக நிராகரிப்பர்.

"சமூக மாற்றத்திற்கான வாய்ப்பு விளிம்புநிலையினருக்கு மிகவும் அரிது. ஒரு வேளை ஒட்டுமொத்தச் சமூக மாற்றம் நிகழ்வது பெரிய அல்லது மைய சமூகம் முற்றாக விளிம்புநிலைக் குழுக்களைத் தன்வயப்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமானால் நிகழலாம். கூர்ந்து நோக்கங்கால் பெரும்பான்மை சமூகங்கள் சிறப்பானவை இந்த சேரி வாழ் மக்களின் விளிம்பு நிலை அடையாளமாக அமைவதை உணர வேண்டும்"[2] என்று ஆ.செல்லப்பெருமாள் நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும்,

“ஒவ்வொரு விளிம்பு நிலைக் குழுவுக்குள்ளும் ஒருங்குத் தன்மை காணப்படும். எடுத்துக்காட்டாக, அலிகளை ஒரு விளிம்புநிலைக் குழுவாக அடையாளப்படுத்தினால் அவர்களுக்கிடையே இன்னொரு குழுவான பழங்குடிகள் தத்தமக்குள் எந்த வித ஏற்றத்தாழ்வும் கிடையாது”3 என்று விளிம்பு நிலையினரின் அடையாள வெளிப்பாடுகள் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியங்களில் விளிம்பு நிலை மக்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் தொல்காப்பியம் தொடங்கி தலித் இலக்கியம் தோன்றிய வரையிலான ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய பதிவுகள் காணப்படுகின்றன. அவற்றினைச் சுட்டிக்காட்டுவது விளிம்பு நிலை மக்கள் பற்றிய அடையாளங்களை விளக்கப் பயன்படுகின்றது.

“சமூகவியல் நோக்கில் தமிழிலக்கிய வளர்ச்சியினை மதிப்பீடு செய்தல் வேண்டும். இலக்கிய வரலாற்றினைத் தனியே இலக்கியத்தின் வரலாறாகக் கொள்ளாது இலக்கிய வழி வரலாறாகக் கொள்ள வேண்டும்”4 என்று சிவத்தம்பி குறிப்பிடுகிறார். சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டோரின் கொடுமைகளைப் பதிவு செய்யும் இலக்கியங்கள் தலித் இலக்கியங்களின் முன்னோடிகள் ஆகும். சமுதாயம் தான் சாதிப்பிரிவினைகளைப் பார்க்கிறதே தவிர தெய்வமோ இயற்கையோ சாதி வேறுபாடுகளைப் பார்ப்பதில்லை.

“சாதி இல்லை பேதம் இல்லை
ஆதி பரஞ்சோதி - அம்மே
வாந்தி பேதி வியாதி - இந்தச்
சாதிக் கெல்;லாம் நடக்குதம்மா
உன் தவறா நீதி”5

தெய்வமோ, கொள்ளை நோய்களோ சாதி பார்த்து வருவதில்லை.

இந்திய தேசியத்தின் மையப்பகுதியைச் சென்றடைய வேண்டுமெனில் விளிம்பு பகுதியிலுள்ள மேடுகளை உடைத்துத்தான் ஆக வேண்டும்”6 என்று காமராசு குறிப்பிடுகின்றார்.

விளிம்புநிலை மக்கள் என்ற சொல்லை அ.மார்க்ஸ்,

“மரபு வழி நமக்குக் கையளிக்கப்பட்டுள்ள இலக்கியத் தொகுதியில் விளிம்புநிலை மக்கள் குறித்த மேட்டிமைச் சக்திகளின் பார்வையினூடான பதிவுகள் மட்டுமே நமக்குக் கிடைக்கின்றன. மிகச் சமீபகாலம் வரை விளிம்புநிலை மக்களின் குரல்கள் இங்கு பதிவு செய்யப்படவில்லை. இலக்கியச் செயற்பாடு என்பதே மேட்டிமைச் சக்திகளின் புலமாகவே வரலாற்றில் வரையறுக்கப்பட்டிருந்தது. விளிம்பு நிலையினர் அவற்றிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருந்தனர். விளிம்புநிலையில் உள்ள ஒருவர் தப்பித் தவறி இலக்கியப் புலத்திற்குள் நுழைய நேரிட்டால் அவர் தன்னுடைய பாலியல் அடையாளங்கள், புவியியல் சார்ந்த கூறுகள், சாதி சார்ந்த மொழி முதலானவற்றை உதறுவதுதான். சுருங்கச் சொல்வதானால் தனது இன்னிலை இருப்பைக் குற்றம் சார்ந்ததாக உணர்ந்து உதறி மேட்டிமை இருப்பு ஒன்றை (கற்பிதமாக) வரித்துக் கொண்டு மேட்டிமை மொழி /உத்தி /விதிகள்/ இலக்கியப் புனிதத் தொகுதிகள் (Canon) ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு இலக்கியத் தளத்திற்கு நுழைய வேண்டும்”7 என்று கூறுகிறார்;.

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

இலக்கியப்பதிவுகள் மையங்களாகிய மேலாண்சாதிகள் சார்புடைய மக்கள் வாழ்வைத்தான் பதிவு செய்துள்ளன. விளிம்புநிலை மக்களின் வாழ்வு மற்றும் மொழி பற்றிய பதிவுகள் வரலாறுதோறும் தவிர்க்கப்பட்டே வந்துள்ளன என்று கூறுகிறார்.

சங்க இலக்கியங்களில் புலையர்கள்:

தொல்காப்பிய காலத்தில் தோன்றிய தமிழ் மக்களுக்கிடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வு சங்க காலத்தில் பண்பாட்டு ஏற்றத்தாழ்வாக வளர்ந்து சாதிய தோற்றத்திற்கு வழிவகுத்தது. நிலவுடைமைச் சாதிகள், வணிக சாதிகள், கைவினைச் சாதிகள், கீழ் தொழில் சாதிகள் என்று நால்வகைச் சாதிகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. கீழான தொழில் செய்யும் சாதியினர் என்போர் துடி அறைவோர், புலையர் போன்றோர்களாகத் தென்படுகின்றனர். இவர்கள் இழிசினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதை,

“கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று” (புறம் ப.82)
“துடி எறியும் புலைய
எறிகோல் கொள்ளும் இழிசினர்” (புறம் ப.287)

என்ற சங்கப் பாடல்களின் மூலம் அறியலாம்.

சங்க இலக்கியமான கலித்தொகையில்,

“நாடி நின் தூது ஆடி, துறை செல்லாள், ஊரவர்
ஆடை கொண்டு, ஒலிக்கும், நின் புலைத்தி
காட்டு என்றாளோ
கூடியார் புனல் ஆடப் புணை ஆய மார்பினில்
ஊடியார் எறிதர, ஒளிவிட்ட அரக்கினை?” (கலித்தொகை 72:14)

என துணி வெளுக்கும் தொழில் செய்யும் பெண் புலைத்தி என்று குறிப்பிடப்படுகிறாள்.

சங்க காலத்தில் புலையர்கள் இன்றைய புரோகிதர்களைப் போல ஈமச்சடங்குகளில் பெரும் பங்காற்றியதாக அவர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து இருந்தது. பொருளாதிக்கச் சாதியினரின் அழுக்குத் துணிகளையும், தீட்டுத்துணிகளையும் துவைத்து கஞ்சி கலந்து காயவைத்து மடிப்புக் கலையாமல் கொடுத்து வந்த பெண்மணி ‘**புலைத்தி**’ என்றழைக்கப்பட்டாள்.

சங்ககால பொருள் ஆதிக்கச் சாதியினர் தம்முடன் வாழ்ந்த தமக்கு உதவியாய் இருந்த சிறுப்பான்மையினரான ஏவல் தொழில் செய்வோர்களை இழிவாக நடத்தினர். ஆனால் முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழக்கின்ற பொழுது வரும் வறுமையின் கொடுமையாய் கோயில், அரசு, குடிவகுப்பு என்ற ஆதாரங்களுடன் வாழும் தனிவுடைமையாளர்களின் உடைமைகளைக் கொள்ளை அடித்துச் சென்று பகிர்ந்துண்ணும் எயின வேடர்களை இந்த மேலாதிக்கச் சமூகத்தினர், புலையர்கள் என்று அழைக்கவில்லை. இதனை ராஜ்கௌதமன்,

“கால்நடைகளை, பிற விலங்குகளை (சாத்து) வேட்டையாடிப் பங்கு போட்ட எயின வேடர்களைப் புலையர்கள் என்று கூறவில்லை. அவர்கள் பசுவை அறுத்துச் சுட்டுத் தின்றாலும் கூட புலையர் எனக் கூறவில்லை. அவர்களிடம் ஆயுதங்கள் இருந்தன. தனியுடைமை

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

நாகரிகத்தின் மீது ஆயுதமேந்திப் போரிட்ட இவர்களைக் கண்டு அஞ்சினார்கள். ஆனால், வேளாண்மைத் தனிவுடைமை சமுதாயத்திற்குள் வாழ்ந்து கொண்டு தோற்கருவிகள் முழக்கியவர்களும் ஈமச்சடங்கில் பங்கு பெற்றவர்களும் பிறர் துணிகளைச் சலவை செய்தவர்களும் புலையர் இழிசினர் எனத் தூற்றப்பட்டனர்”8 என்று விளக்கும் இக்கருத்து ஏற்புடையதாக அமைகிறது.

தொழிலாளர்கள்:

உழைக்கும் மக்கள் தொழில் உற்பத்தியில் ஈடுபட்டுத் தங்களது உழைப்பின் பயனாக வருவாய் பெறுகின்றனர். சமுதாயத்தில் உழைக்கும் மக்கள் முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டு, அவர்கள் கொடுக்கும் கூலியைப் பெற்று வாழ வேண்டிய நிலையில் உள்ளதால் எப்போதும் வறுமையில் இருக்கின்றனர்.

“உழைக்கும் இனம் என்பது தொழிற்துறையில் ஈடுபட்டுக் கூலி பெறுபவர்களை மட்டுமின்றி உடலுழைப்பைச் செலுத்தும் தொழிலாளர்கள், பணித்துறையினர், உடலுழைப்பற்றத் தொழிலாளர், வேளாண்மைத் தொழிலாளர், நிரத்தரமற்ற பணியாளர், வேலை பெறத்தகுதி பெற்றும் வேலையில்லாமல் தவிப்பவர்கள், வறுமையில் உள்ளோர் ஆகியோரை உள்ளடக்கும்”9 என்று தொழிலாளர் பற்றி வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது. அதேபோல் கார்ல் மார்க்ஸ் அவர்கள்,

“உற்பத்திச் சாதனங்கள் தம்மிடமிருந்து பறிக்கப்பட்டதால், தமது உழைப்பையே மூலதன உரிமையாளருக்கு விற்றுப் பிழைக்கும் நிலைக்குத் தாழ்த்தப்பட்டதாக முதலாளித்துவ உற்பத்தி முறையில் சுரண்டலுக்கு உட்படுத்துகிற வர்க்கமே தொழிலாளி வர்க்கம்”10 என்று கூறுகிறார். நம் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தில் இன்றியமையாத இடம் என்றால் அது உழைப்பு தான். இதனை,

“தொழிலாளர் என்பது நேரடியாகவோ அல்லது ஒரு முகவர் இயந்திரத்தைச் சுத்தப்படுத்துவதற்கும், உற்பத்தி நடைபெறும் இடத்தைத் தூய்மையாக்கவும், உற்பத்திக்குத் தொடர்புடைய அல்லது சார்புள்ள விவகாரத்தில் கூலிக்காக பணியில் அமர்த்தப்படும் ஒரு நபரைக் குறிக்கும்”11 என்று ஏ.எஸ்.நடராஜன் குறிப்பிடுகிறார்.

பாரதிதாசன் தொழிலாளர் என்பவர்,

“பாடுபடும் பாட்டாளி
கடின உழைப்புத் தொழிலாளி”12 என்று குறிப்பிடுகின்றார்.

வண்ணான்:

வண்ணான் என்ற சொல் ‘**வண்ணம்**’ என்ற சொல்லிருந்து பிறந்தது. இதற்கு ‘**நிறம்**’ அல்லது ‘**சுத்தம்**’ என்று பொருள். வண்ணார்கள் துணிகளைச் சலவை செய்து சுத்திகரிக்கும் தொழிலைச் செய்யும் சமூகத்தினர் ஆவர். துணிகளைத் துவைத்து, சுத்தப்படுத்தி, நிறம் பார்த்துத் தரும் தொழிலை மேற்கொண்டதால் இவர்களுக்கு ‘வண்ணான்’ என்ற பெயர் உருவானது.

வண்ணார்கள் புரத வண்ணார், புறத்து வண்ணார், புறஏகாலி, பற வண்ணார் எனப் பல்வேறு பெயர்களில் சுட்டப்படுபவர்கள். இவர்கள் தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட தலித் என்று அடையாளப்படுத்தப்படுவதால் இவர்கள் இரட்டைத் தீட்டு முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

தீண்டத்தகாதோர் என்பவர்கள் தொட்டால் தீட்டு என்பது உயர்சாதி மற்றும் ஆதிக்க சாதி சமூகம் உருவாக்கி வைத்துள்ள ஒரு அமைப்பு. இதன்படி தீண்டத்தகாதோர் என்று இவர்களால் ஒதுக்கப்பட்ட சமூகத்தவர்களுக்கு இவர்கள் அழுக்குத் துணிகளைச் சுத்தம் செய்வதால் மேலும் ஒரு தீட்டு இவர்களுக்குக் கூடுகிறது. பற வண்ணார் சமூகத்தவர் "பார்த்தாலே தீட்டு" என்ற வகையில் ஒதுக்கப்பட்டு கொடுமையான வகையில் சமூக அவலத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவர்கள் சுயமரியாதையையும், தன்மானத்தையும் சிதைத்துத் தாக்கும் வகையில் பல்வேறு சமூக தாக்குதல்களுக்கு உள்ளாகுகின்றனர்.

துரும்பர் என்ற சாதியின வண்ணார்கள் பார்த்தாலே தீட்டு என்னும் வகையில் கடுமையான தீண்டாமையைப் பின்பற்றினர். இதனால் வண்ணார்கள் பகலில் வெளியே வரக்கூடாது என்ற கட்டுப்பாட்டை துரும்பர் சாதி இந்துக்கள் விதித்திருந்ததனால் இரவில் மட்டும்தான் அவர்கள் வெளியே நடமாடினார்கள்.

துணி வெளுத்தல்:

ஆதி காலத்தில் சாதியைச் சார்ந்த தொழில்கள் மக்களுக்குக் கட்டாயப்படுத்தப்பட்டது. தொழில் முறைகள் சாதிக்கேற்பப் பகுக்கப்பட்டு அவரவர்க்கு என்று ஒதுக்கப்பட்டு, தொழில் சார்ந்த தீண்டாமையும் தொழிலில் புகுத்தப்பட்டது. கீழ்நிலைப் பணிகளைச் செய்வோர் "**தீண்டத்தகாதோர்**" என நினைப்பதுடன் வாழ்வதற்கான உரிமையும் மறுக்கப்படுகிறது. அந்த வகையில் அழுக்குகளைத் தூய்மை செய்தல், அடிமையாக இருத்தல், ஏவலர்களாக இருத்தல், பண்ணைக் கூலி விவசாயி அடிமைகளாக இருத்தல் போன்ற கீழ்மைப்படுத்தப்பட்டத் தொழில் முறைகளில் துணிகளை வெளுத்தல் என்ற தொழிலும் அடங்கும். இத்தொழிலைச் செய்வோரை "வண்ணான்" என்றழைப்பர். இவர்கள் காலங்காலமாகத் தீண்டப்படாதவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

வண்ணான் என்ற இனத்தவர்கள் துணி வெளுப்பதை முதன்மைத் தொழிலாகவும், துணைத் தொழிலாகப் பிறப்பு, இறப்புச் சடங்குகள் செய்தல், வீட்டு வேலைகளைச் செய்தல், ஏவலராக இருத்தல் போன்றத் தொழில்களையும் செய்து வருகின்றனர்.

ஊர்ச்சோறு எடுத்தல்:

வண்ணார்கள் நாள் முழுவதும் ஆற்றங்கரையில் துணிகளைத் துவைத்து, வெள்ளாவி வைத்து தூய்மைப்படுத்தி, காய வைத்து ஊர் மக்களுக்கு அவர்கள் உடை அணிந்து வாழ உதவுகின்றனர். இவர்களின் உழைப்பிற்குப் பதிலாக ஊர் மக்களிடம் வீடு வீடாகச் சென்று பெறுகின்ற உணவு **"ஊர்ச்சோறு எடுத்தல்"** ஆகும்.

நாள்தோறும் மாலையில் ஊரில் வீடு வீடாகச் சென்று சோறும் குழம்பும் இவர்கள் பெற்றுக் கொள்வார்கள் அன்றைக்கு இரவு சாப்பிட்டது போக எஞ்சிய உணவை நீர் ஊற்றி வைத்து தங்களின் வளர்ப்புப் பிராணிகளான கழுதை, நாய், ஆடுகளுக்கு உணவாகக் கொடுக்கின்றனர்.

வண்ணான் தொழிலின் நிலை:

வண்ணார்கள் ஊர்ச்சோறு எடுக்கச் செல்லும்போது,

"வீட்டுக்கார மனிதர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் கையைக் கழுவாமல் எச்சில் கையாலேயே சோறு எடுத்துப் போடுவதுண்டு. இன்னும் சிலர் குழந்தைகள் அல்லது வீட்டில்

உள்ளவர்கள் சாப்பிட்டு மீதம் வைத்த உணவையும் கலந்து போட்டு விடுவர்”13 பல வேளையில் திட்டிக்கொண்டே உணவு வழங்குவர். இது ஒரு மனிதாபிமானமற்ற செயல், அசிங்கமானது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சில வண்ணான் சாதி மக்கள் வாழுகின்றனர்.

சிறுமியொருத்தி பூப்பெய்தியதும் அச்செய்தி அவ்வீட்டிற்குத் துணி வெளுக்கும் வண்ணார் வீட்டுக்குத் தெரிவிக்கப்படும். அவ்வண்ணாரின் வீட்டிலிருந்து வரும் பெண் பூப்புக்குருதி படிந்த ஆடையைப் பார்த்து அச்சிறுமி பூப்படைந்து விட்டாள் என்று உறுதி செய்த பின்னரே அச்செய்தியை நெருங்கிய உறவினருக்கும், தாய்மாமனுக்கும் அறிவிப்பது அவ்வீட்டு வண்ணாரின் கடமையாகும்.

மாதப் பூப்பின் போது அவர்கள் பழைய துணிகளைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்தது. கறைபடிந்த அத்துணிகளைத் துவைத்து மீண்டும் பயன்படுத்தி வந்தனர். பூப்புக் குருதி கறையும் துர்நாற்றமும் கொண்ட துணிகளையும் உடுத்தியிருந்த சேலைகளையும் பொட்டலமாகக் கட்டி வீட்டின் கொல்லைப் பகுதியில் வைத்து விடுவர். ஊர்ச்சோறு எடுக்க வரும்போது அதனை வண்ணான் சாதி பெண்களிடம் துவைப்பதற்காக எடுத்துச் செல்லுமாறு கூறுவர். மறுநாள் காலையில் வீட்டுக்காரப் பெண் அந்தத்துணிகளைக் குச்சியால் தள்ளி நகர்த்துவார்கள். கையால் அந்தத் துணிகளை அவர்கள்; சுமந்து செல்ல வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. ‘**மூட்டு துணி**’ என்று தமிழகத்தின் வட மாவட்டங்களிலும,‘**தீட்டுத் துணி, தீண்டல் துணி**’ என்று தென் மாவட்டங்களிலும் அழைக்கப்பட்ட துணியை வெளுத்துத்தரும் பணி என்பது வண்ணார் மீது திணிக்கப்பட்ட கொடுமையான பணியாகும். அழுக்குத் துணிகளை மட்டுமின்றி நெய்து வந்த புதிய பருத்தித் துணிகளை வெள்ளை நிறமாக்கும் பணியிலும் வண்ணார்கள் ஈடுபட்டிருந்தனர்.

வாழ்க்கை வட்டச் சடங்கில் வண்ணான்:

“தாய் வீட்டிற்குப் பேறுகாலத்திற்குச் செல்லும் பெண், குழந்தை பெற்றவுடன் அச்செய்தியை அவள் புகுந்த வீட்டிற்கு உடனே தெரிவிப்பது மரபு. இதன் பொருட்டு இச்செய்தியைத் தெரிவிக்க வண்ணார் சமூகத்தையே பயன்படுத்தி வந்துள்ளனர். இவ்வாறு செய்தி சொல்லுதலை ‘மாராயம் சொல்லல்’ என்று குறிப்பிடுவர்”14

ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறந்ததும் அச்செய்தியை அவளது கணவன் வீட்டிற்குத் தெரிவிப்பது அந்த ஊரிலுள்ள வண்ணானின் வேலை. இதனால் குழந்தை பிறந்த நேரம், பெண் குழந்தையா, ஆண் குழந்தையா என்னும் தகவலை பெண்ணின் வீட்டிற்குச் சொல்வதற்கு வண்ணானுக்கு செலவுக்கு பணம் கொடுத்து அனுப்பி விடுவர்.

வேறு ஊரிலிருந்து நல்லச் செய்தி சொல்ல வரும் வண்ணானுக்கு மட்டுமே பெண் வீட்டில் உள்ளவர்கள் நன்கு உபசரித்து விருந்தளித்து, பணமோ அல்லது பொருளோ தந்து அவனை அனுப்பிவிடுகின்றனர். உள்ளூர் வண்ணான்களுக்கு இவ்வித உபசரிப்புகளை அவர்கள் செய்வதில்லை.

தொழிலாளர்களின் உடல் வேதனைகள்:

வண்ணார் தொழிலாளர்கள தினமும் அயராது உழைக்கின்றனர்.

“வீட்டு வளப்பம் மருமகனுக்குத் தெரியும்
ஊர் வளப்பம் வண்ணானுக்குத் தெரியும்”15

என்ற பழமொழிக்கு ஏற்ப ஊரின் வளமானது அந்த ஊரின் வண்ணானுக்குத் தெரியும்.

சேற்றுப் புண், மூச்சிறைப்பு வண்ணார்களின் தொழில்வழி நோய்களாகும். நீர்நிலைகளில் செம்புக் பூச்சி அல்லது ஈர்ப்பேன் என்ற சிறிய பூச்சிகள் கடித்த இடத்தில் நீண்ட நேரம் கடுப்பு ஏற்படும்.

“பல ஆண்டுகளாக இத்தொழிலின் ஈடுபட்டு வருவதன் விளைவால் கைவிரல்கள் மடங்கிப் போய் ஊனமடைகின்றன. தொடர்ச்சியாகத் தண்ணீரும் காரமும் படுவதால் கைவிரல் இடுக்குகளில் புண்கள் ஏற்பட்டு, அது நிரந்தரமான ஒன்றாக நிலைத்து விடுகிறது. குனிந்தே தொடர்ந்து வேலை செய்வதால் முதுகுத் தண்டு பாதிக்கப்படுவதும், கூன் விழுவதும் நேர்கிறது”16 போன்ற வேதனைகளை அனுபவிக்கின்றனர்.

கடினமான தொழில்களுள் சலவைத் தொழிலும் ஒன்று. கடும் வெய்யிலிலும், மழையிலும், குளிரிலும், சலவைத் தொழிலைத் தொழிலாளர்கள் செய்வதினாலும், சலவைத் தொழிலுக்கு இன்றியமையாத இராசாயனப் பொருள்களான சோடா, சலவைத்தூள், சல்பூரிக் அமிலம் போன்ற வகைகளை கையாளுவதினால் காசம், சயம் மற்ற கொடிய வியாதிகளால் அகால மரணம் அடைகிறார்கள்.

இறப்புச்சடங்கில் வண்ணான்:

இறப்புச் செய்தியை இறந்தவரின் உறவினர்களுக்குச் சென்று தெரிவிக்கும் கடமை வண்ணார்கள் மீது விதிக்கப்பட்டிருந்தது. இறந்தவரின் உடலைச் சுமந்து செல்ல வைக்கோல் அடைத்த துணியால் மெத்தை தயாரிப்பதும், அதற்கான துணியைக் கொண்டு வருவதும், வண்ணாரின் கடமையாக இருந்தது. பிணத்தை எடுத்துச் செல்லும்போது நடைமாத்து விரிப்பதும் வண்ணாரின் கடமையாக இருந்தது.

சுடுகாடு அல்லது இடுகாட்டைச் சென்றடைந்ததும், இறந்தவரின் உடலைச் சுமந்து வந்த பாடை அல்லது தேரிலிருந்து சடலத்தை இறக்கி வைப்பது வண்ணாரின் பணியாகும். அமங்கலச் சடங்குகளில் வண்ணார், நாவிதர் இருக்க வேண்டும் என சில வகுப்பினர் விரும்புகின்றனர். இந்நிலை வண்ணார்கள் மீது செலுத்தும் ஒடுக்குமுறைகளில் ஒன்றாகி விடுகிறது.

வண்ணாரும் கழுதையும்:

ஒரு நல்ல செயலை மேற்கொள்ள நினைக்கும் போது, கழுதை கத்தினால் அது, நல்ல சகுனம் என்ற நம்பிக்கையுண்டு. புதுமனைப் புகுவிழாவின் முதல்நாள் இரவு, கழுதையைப் புதிய வீட்டில் கட்டிவைத்தால் அவ்வீடு செழிப்புடன் திகழும் என்று வண்ணான்கள் நம்புகின்றனர்.

“கழுதையின் பின்னால் நடந்து சென்றால் காத்து கருப்பு அண்டாது. கழுதை முகத்தில் விழித்தால் நன்மை நிகழும்”17 என்று நம்புகின்றனர். உவர் மண் வாங்கி வருவதற்கும், அழுக்கு மூட்டைகளை நீர்த் துறைக்குக் கொண்டு செல்வதற்கும், துவைத்த துணிகளை வீட்டிற்குக் கொண்டு வருவதற்கும் கழுதையை வண்ணார் பயன்படுத்துகின்றனர். ஊர்ச்சோறு எடுக்கும் போது மிஞ்சும் சோறை கூழ் போல் கரைத்து அதற்குக் கொடுப்பர். கம்பங்கஞ்சி கழுதைக்கு விருப்பமான உணவாகும்.

உடம்பில் சதை பிடிப்பில்லாமல் மெலிந்திருக்கும் குழந்தைகளுக்குக் கழுதைப் பால் கொடுத்தால் உடல் தேறும் என்ற நம்பிக்கையுண்டு. குழந்தைகளுக்கு ஏற்படும் சீர்தட்டலைப்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

போக்கும் மருந்தாகக் கழுதையின் மூச்சும் பயன்படுத்தப்படுகிறது. தற்போது சலவைத் தொழிலில் கழுதையின் பங்களிப்பு பெரிதும் குறைந்து விட்டது.

தற்போதைய நிலை

சுத்தம் செய்தல், தோட்ட வேலை, அழுக்குத்துணி துவைத்தல், மலம் கழிந்த இடங்களைச் சுத்தம் செய்தல், முடி திருத்துதல், பூக்கட்டுதல், கூட்டுதல், பெருக்குதல், பிணம் எரித்தல், புதைத்தல், குழி தோண்டுதல், விவசாயக் கூலி வேலை, கட்டிட வேலை போன்ற வேலைகளே கீழான வேலைகளாக அடையாளப்படுத்தப்பட்டு, அவற்றை விளிம்புநிலை மக்களிடம் இச்சமூகம் ஒப்படைத்துள்ளது.

தற்காலத்தில் மருந்துவமனைகள், தொழிற்கூடங்கள், கல்விநிலையங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், வங்கிகள் போன்ற எண்ணற்றத் தொழிற்முறைகள் வந்துவிட்டபோதும் கழிப்பிடங்களைக் கழுவுதல், அலுவலகத்தைப் பெருக்குதல் சுத்தப்படுத்துதல், தேநீர் வாங்கி வருதல், எடுபிடி வேலை போன்ற கீழான வேலைகளுக்கு அடித்தட்டு மக்களே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

பழைய சமூக அமைப்புடன் ஒப்பிடும்போது பாரம்பரியத் தொழிலின் கொடுமை. இழிவு ஆகியவற்றில் இருந்து ஓரளவுக்கு வண்ணார் சமூகம் விடுதலை பெற்றுள்ளது. சமைத்த உணவுப்பொருள், தானியம் என்பனவற்றிற்கு மாற்றாகப் பணவடிவில் ஊதியம் பெறும் வழக்கம் அறிமுகமானது.

'**சலூன்**', '**பார்பர் ஷாப்**' என்ற பெயரில் அழைக்கப்பட்ட முடிதிருத்தம், '**லாண்டரி**' என்ற பெயரிலான சலவை நிலையம் ஆகியன சேவை பெறுவோரைத் தம்மிடத்துக்கு வரும்படி செய்தன. சமைத்த உணவுப்பொருள், தானியம் என்பதற்குப் பதிலாக ஊதியத்தைப் பணமாகப் பெறுகின்றனர். வீடு தேடி வந்து ஊழியம் செய்யும் முறை மெல்லமெல்ல மறைந்தது. பிணத்தை எரிக்கும் முறையில் மின்சாரத் தகனமேடை, எரிவாயு தகனமேடை என்ற புதிய எரியூட்டு முறை அறிமுகமாகி உள்ளது. பல வண்ணான்கள் விவசாயத் தொழிலுக்கும், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றனர்.

முடிவுரை

விளிம்பு நிலை மக்கள் கல்வி நிலையில் உயர்வடைந்தால்தான் சமூகத்தில் உயர்ந்த நிலைக்குச் செல்ல முடியும். விளிம்பு நிலையினரின் விடுதலை என்பது சமூகம் பொருளாதாரம், அரசியல், கல்வி ஆகிய நிலைகளில் மேம்பாடு[1] அடைவதன் வாயிலாகச் சாத்தியப்படும். சாதி வண்ணான், ஊர் வண்ணான் என்ற பெயர்களில் குறிப்பிட்ட சாதியினர் அல்லது ஊரவர்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகளில் வண்ணாரின் பணி இன்றும் ஆங்காங்கே இடம் பெறுகிறது. இதிலிருந்து மீள்வது வண்ணார் சமூகத்தின் பண்பாட்டு விடுதலைக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

அடிக்குறிப்பு

1. இராஜேந்திர சோழன், இந்திய தேசியக் கதையாடலும் விளிம்பு நிலைத் தேயங்களும் ப.74
1. ஆ.செல்லப்பெருமாள், விளிம்பு நிலையினரின் அடையாள வெளிப்பாடுகள் பக்-7,8

2. மேலது ப.7
3. கா.சிவத்தம்பி, தமிழ் இலக்கிய வரலாறு ப.5
4. கி.வா.ஜெகந்நாதன் (தொ.ஆ) மலையருவி ப.313
5. இரா.காமராசு விளிம்புநிலை வாழ்வியல் ப.எ.5-6
6. அ.மார்க்ஸ், விளிம்புநிலை ஆய்வுகளும் தமிழ்க் கதையாடல்களும் ப.எ.22)
7. ராஜ்கௌதமன், தலித் பண்பாடு ப.90
8. நா.பாலுச்சாமி வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 2 ப.19
9. கா.மார்க்ஸ் இ.ப.எங்கல்ஸ், ரா. கிருஷ்ணையா தேர்வு நூல்கள் தொகுதி -2, ப.226
10. டி.எஸ். நடராசன் தொழிலாளர் நலச்சட்டம் ப.3
11. பாரதிதாசன், தேனருவி ப.143
12. ஆ.சிவசுப்ரமணியன், தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறும் ப.10
13. மேலது ப.44
14. மேலது ப.8
15. மேலது ப.14
16. மேலது ப.111

துணைநின்ற நூல்கள்

1. நா.பாலுச்சாமி, வாழ்வியல் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். முதற்பதிப்பு - 1986.
2. ஆ.சிவசுப்ரமணியன், தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-டீ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600098.
3. பாரதிதாசன், தேனருவி, பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 1978.
4. ராஜ்கௌதமன், தலித் பண்பாடு, கௌரி பதிப்பகம், புதுவை, முதற்பதிப்பு - 1993.
5. இராஜேந்திர சோழன், இந்திய தேசியக் கதையாடலும் விளிம்பு நிலைத் தேயங்களும், பாரதி புத்தகாலயம், சென்னை.
6. ஆ.செல்லப்பெருமாள், விளிம்பு நிலையினரின் அடையாள வெளிப்பாடுகள், காவ்யா வெளியீடு, சென்னை.
7. கா.சிவத்தம்பி, தமிழ் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு - 2004.
8. கி.வா.ஜெகந்நாதன் (தொ.ஆ), மலையருவி, தஞ்கை சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சை, முதற்பதிப்பு - மார்ச் - 1958.

20. இலக்கியங்களின் ஆய்வுகள்

முனைவர்.**தி.மணிமேகலை**
தமிழ் ஆய்வு துறை,
பாரதியார் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
(தன்னாட்சி) தேவியாக்குறிச்சி.
DOI 10.5281/zenodo.21724192.

Abstract

Literature serves as a mirror reflecting a society's culture, history, civilization, way of life, thought processes, emotions, and values. Literary works stand as vital sources for understanding the evolution of a language and the lives of the people. Just as the creation of literature is significant, its analysis is equally indispensable. Literary analysis involves the scientific examination of a work's themes, artistic merit, linguistic style, characterization, social background, historical significance, and cultural elements.

Keywords : Literature - Research Works - History - Civilization - Values

முன்னுரை

இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் பண்பாடு, வரலாறு, நாகரிகம், வாழ்க்கை முறை, சிந்தனை, உணர்வு மற்றும் விழுமியங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். ஒரு மொழியின் வளர்ச்சியையும், மக்களின் வாழ்வியலையும் அறிய இலக்கியங்கள் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. இலக்கியங்களைப் படைப்பது எவ்வளவு முக்கியமோ, அவற்றை ஆய்வு செய்வதும் அதே அளவுக்கு இன்றியமையாததாகும். இலக்கிய ஆய்வு என்பது ஒரு படைப்பின் கருத்து, கலைநயம், மொழிநடை, பாத்திர அமைப்பு, சமூகப் பின்னணி, வரலாற்றுச் சிறப்பு, பண்பாட்டுக் கூறுகள் ஆகியவற்றை அறிவியல் முறையில் ஆராய்வதாகும்.

இலக்கிய ஆய்வின் பொருள்

இலக்கிய ஆய்வு என்பது ஒரு இலக்கியப் படைப்பை ஆழமாகப் படித்து, அதன் உள்ளடக்கம், நோக்கம், படைப்பாளரின் சிந்தனை, சமுதாயத் தாக்கம், மொழி, நடை, கலைத்திறன், ஆற்றல், தொலைநோக்கபார்வை, மொழி பெயர்க்கும் திறன் போன்றவற்றை பகுப்பாய்வு செய்வதாகும். இது ஒரு நூலின் சிறப்புகளையும் குறைகளையும் நடுநிலையுடன் எடுத்துரைக்கிறது.

இலக்கிய ஆய்வின் நோக்கங்கள்

- இலக்கியத்தின் உண்மையான கருத்தைப் புரிந்துகொள்வது.
- ஆசிரியரின் படைப்புத் திறனை மதிப்பிடுவது.
- சமூக, அரசியல், பொருளாதாரச் சூழல்களை அறிதல்.
- மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சியை ஆய்வு செய்தல்.
- புதிய ஆய்வுக் கருத்துகளை உருவாக்குதல்.
- பண்பாட்டு மரபுகளைப் பாதுகாத்தல்.
- பல்வேறு கட்டுரை ஆய்வு .இலக்கியங்களை அறிதல்.
- உலக இலக்கியத்தில் முக்கியத்துவத்தை உணர்தல்.

இலக்கிய ஆய்வின் வகைகள்

1. வரலாற்று ஆய்வு

இலக்கியம் தோன்றிய காலம், அரசியல் சூழல், சமூக அமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். சங்க இலக்கியங்கள் இவ்வகை ஆய்விற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

இலக்கியம் ஒவ்வொன்றும் சிறப்பு பண்புகளையும் பொதுப் பண்புகளையும் கொண்டுள்ளது என்பதே நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஓர் இலக்கியத்தின் தனித்திறன் வேறு முழுவதும் பிரிந்து நிற்கும் தனிமை நிலை அல்லது பிரிவு நிலை என்பது வேறு. ஒவ்வொரு மனிதனும் தனிப்பண்புகள் உடையனமாக இருப்பது போலவே இலக்கியங்களும் உள்ளன. ஆனால் ஒவ்வொரு மனிதனும் மனித இனத்தோடு தன் பால் உறுப்பினரோடும் தேசத்தோடும் வகுப்போடும் தொழிலோடும் சார்ந்து பண்பொற்றுமை உடையவனாக காட்சியளிக்கின்றான். அதுபோலவே இலக்கியமும் பிறக்கலை படைப்புகளும் பண்புகளால் ஒற்றுமைப்பட்டுத் திகழ்கிறது என்பதை ஆய்வு மூலம் வெளிப்படுகிறது.

2. ஒப்பியல் ஆய்வு

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இலக்கியங்களை ஒப்பிட்டு அவற்றின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்வதாகும். எடுத்துக்காட்டாக திருக்குறளையும் உலக அறநூல்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்யலாம்.

உலக இலக்கியமும் ஒரு மொழி இலக்கியமும் முறையை முதலும் சினையும் ஆகும். அம் முழுமையில் இவ் உறுப்பினை இயைத்து நோக்குவதே இன்றைய ஒப்பீடு எனலாம்.

3. சமூகவியல் ஆய்வு

இலக்கியத்தில் இடம்பெறும் சமூகப் பிரச்சினைகள், மனித உறவுகள், சாதி, சமயம், பெண்களின் நிலை, பொருளாதார வேறுபாடுகள் போன்றவற்றை ஆய்வு செய்வதாகும். உலகில் உள்ள பலமொழி இலக்கியங்களை ஒப்பீட்டு நோக்கும் போது மொழி நடைக்கும் நாட்டை எல்லைகளுக்குக் அப்பால் அவற்றில் ஓர் இன இயல்புகள் காணப்படுகின்றன என்பது புலனாகும். மனித இன வரலாற்றிலும் சமுதாய மாறுபாடுகளிலும் உலகெங்கும் உள்ள நாடுகளில் ஒரு தன்மையான வளர்ச்சி பணிகள் காணப்பட்டு வந்துள்ளன.

4. உளவியல் ஆய்வு

பாத்திரங்களின் மனநிலை, உணர்வுகள், சிந்தனைகள், செயல்பாடுகள் ஆகியவற்றை உளவியல் கோணத்தில் ஆராய்கிறது. மனித இனத்தார் அனைவராலும் படைக்கப்பட்ட எல்லா இலக்கியமும் மனித இனம் அனைத்திற்கும் பொது உரிமையாகும். அம் மனித இனப்பொதுமையை கண்டறிய உதவும் முதன்மை வாய்ந்த கருவியும் இலக்கியங்களே ஆகும். இலக்கிய வெளிப்பாடு உலக மனித இனம் அனைத்தினதும் பொது இயல்புகளின் வெளிப்பாடு என்பதே ஒருவர் நன்கு உற்று நோக்கி அறிதல் வேண்டும் ஆனால் இவ் வெளிப்பாடு வெவ்வேறு மொழிகளில் வாயிலாக வெவ்வேறு வகையில் வெவ்வேறு கூற்று முறைகளாக ஏற்பட்டு தவீர வேண்டிய நிலை உள்ளது

5. **பெண்ணிய ஆய்வு**

பெண்களின் வாழ்க்கை, உரிமைகள், சமத்துவம், சமூகத்தில் அவர்களின் பங்கு ஆகியவற்றை மையமாகக் கொண்டு செய்யப்படும் ஆய்வாகும். நமக்கு இங்கு காப்பியங்களில் அமைந்துள்ள சிலப்பதிகாரத்தில் கண்ணகியை பற்றியும் மணிமேகலை காப்பியத்தில் மணிமேகலை பற்றியும் சீவக சிந்தாமணியில் மெய்ப்பொருளில் பறந்து சென்ற விசையை பற்றியும் கம்பராமாயணத்தில் சீதையே தேடிச் செல்வது பற்றியும் மிக அழகாககொண்டு செய்யப்படும் ஆய்வாகும்.

6. **மொழியியல் ஆய்வு**

இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள், இலக்கண அமைப்பு, மொழிநடை, வட்டார வழக்குகள் ஆகியவற்றை ஆராய்கிறது. சிற்றிலக்கியங்கள் மக்களின் சமூக மற்றும் அன்றாட வாழ்வியலை பதிவு செய்வதோடு அதனுடன் இணைந்த அறிவில் அறிவையும் ஆகியவற்றை ஆராய்கிறது. மொழிகளில் அறிவின் தாக்கம் ஏற்பட்ட பிற்பாடு அது மொழி விளக்க இயலாக வளர்ச்சி பெற்றது.

7. **பண்பாட்டு ஆய்வு**

ஒரு காலகட்டத்தின் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள், வழக்கங்கள், கலைகள், விழாக்கள் ஆகியவற்றை இலக்கியத்தின் மூலம் ஆராய்கிறது. சங்க கால முதல் தற்காலம் வரை ஐந்திணை சூழலில் பலவகை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று வரை அவற்றின் ஆளுமை மக்களின் வாழ்க்கையில் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர்களின் வாழ்வியலை சிறப்பிக்கவும் இயற்கையின் சிறப்பினை உணரவும் உணவுகள் நிலங்களையும் சூழ்நிலையும் பாடல்களின் பாடு பொருளாகி அதற்கு மக்கள் வாழ்க்கை முறை அடிப்படையாக அமைந்தது என்பதை ஆராய்கிறது.

தமிழ் இலக்கிய ஆய்வின் வளர்ச்சி

தமிழில் இலக்கிய ஆய்வுகள் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தொடங்கியுள்ளன. சங்க இலக்கியங்களுக்கு உரை எழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோர் ஆய்வுப் பணியில் பெரும் பங்களிப்பு செய்துள்ளனர்.

நவீன காலத்தில் உ.வே.சாமிநாதையர், மு.வரதராசனார், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், கா.சிவத்தம்பி உள்ளிட்ட பல அறிஞர்கள் தமிழ் இலக்கிய ஆய்வை உலக அளவில் உயர்த்தியுள்ளனர்.

சங்க இலக்கிய ஆய்வுகள்

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் பழந்தமிழ் வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன. அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்ற நூல்கள் காதல், வீர வாழ்க்கை, அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றன. இந்நூல்களின் மூலம் பழந்தமிழர் வாழ்க்கை முறையை அறிய முடிகிறது.

அற இலக்கிய ஆய்வுகள்

திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு போன்ற அற இலக்கியங்கள் மனித வாழ்க்கைக்கான ஒழுக்க நெறிகளை எடுத்துரைக்கின்றன. திருவள்ளுவரின் மனிதநேயம், சமத்துவம், அறவாழ்வு ஆகியவை பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

காப்பிய இலக்கிய ஆய்வுகள்

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெருங்காப்பியங்கள் சமூக நீதி, சமயச் சிந்தனை, பெண்களின்

உயர்வு, அறநெறி போன்ற கருத்துகளை எடுத்துரைக்கின்றன. கண்ணகியின் நீதிப் போராட்டம் உலகளவில் ஆய்வுக்குரிய பொருளாக உள்ளது.

பக்தி இலக்கிய ஆய்வுகள்

தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்கள் இறைநம்பிக்கை, பக்தி, மனிதநேயம், ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. இந்நூல்கள் சமய வரலாற்றுக்கும் பண்பாட்டு ஆய்வுக்கும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன.

நவீன இலக்கிய ஆய்வுகள்

சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன், புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், அகிலன், சுஜாதா உள்ளிட்ட எழுத்தாளர்களின் படைப்புகள் தேசியம், பெண்விடுதலை, சமூக மாற்றம், அறிவியல் சிந்தனை, மனித உரிமைகள் போன்ற பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இலக்கிய ஆய்வின் முக்கியத்துவம்

- தமிழ் மொழியின் தொன்மையை உணரச் செய்கிறது.
- சமூக மாற்றங்களைப் புரிந்துகொள்ள உதவுகிறது.
- புதிய ஆய்வாளர்களை உருவாக்குகிறது.
- இலக்கியங்களைப் பாதுகாக்க உதவுகிறது.
- பண்பாட்டு அடையாளத்தை நிலைநிறுத்துகிறது.
- கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைக்கு வலுசேர்க்கிறது.

இன்றைய காலத்தில் இலக்கிய ஆய்வுகள்

டிஜிட்டல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இலக்கிய ஆய்வுகள் புதிய பரிமாணத்தை அடைந்துள்ளன. மின்னூல்கள், இணைய நூலகங்கள், மின்னணு கையெழுத்துப் பிரதிகள், கணினி மொழியியல், செயற்கை நுண்ணறிவு போன்றவற்றின் உதவியால் ஆய்வுகள் விரிவடைந்து வருகின்றன. உலகம் முழுவதும் உள்ள தமிழ் ஆய்வாளர்கள் இணையவழி ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முடிவுரை

இலக்கிய ஆய்வு என்பது ஒரு மொழியின் உயர்வையும், சமூகத்தின் வளர்ச்சியையும் வெளிப்படுத்தும் அறிவியல் சார்ந்த பணியாகும். தமிழ் இலக்கியங்கள் உலகின் மிகப் பழமையான இலக்கிய மரபுகளில் ஒன்றாக விளங்குகின்றன. அவற்றின் ஆய்வுகள் மூலம் தமிழரின் பண்பாடு, நாகரிகம், சிந்தனை, அறம், அறிவியல் நோக்கு ஆகியவை உலகிற்கு எடுத்துக்காட்டப்படுகின்றன. எதிர்கால தலைமுறையினருக்கு தமிழின் பெருமையை எடுத்துச் செல்ல இலக்கிய ஆய்வுகள்

தொடர்ந்து வளர வேண்டும். எனவே, இலக்கிய ஆய்வு என்பது கல்வித் துறைக்கு மட்டுமல்லாமல், சமூக முன்னேற்றத்திற்கும், பண்பாட்டு பாதுகாப்பிற்கும், மொழி வளர்ச்சிக்கும் இன்றியமையாத ஒன்றாகும்.

துணைமை நின்றவை

1. தமிழாய்வு - நோக்குநூல் அடைவு (பெ. மாதையன், மணிவாசகர் பதிப்பகம்).
2. தமிழ் அகராதியியல் ஆய்வடங்கல் (இரா. திருநாவுக்கரசு, 1992 வரை).

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

21. புறநானூற்றில் மூதின்முல்லை

லா. உமாரோஸ்லின்
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
ஏ.பி.சி, மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-628002
அலைபேசி எண்: 8248033324

DOI 10.5281/zenodo.21724291.

Abstract

Sangam literature plays a pivotal role in vividly portraying the lives of ancient Tamils. It serves as a historical repository that elucidates the character traits and social conditions of the people of that era. These literary works recount details concerning both the inner life (*Akam*) and the outer life (*Puram*) of the society. The concept of *Purathinai*–a classification system–codifies the conduct of ancient Tamils regarding warfare. The *Purananuru*, a seminal *Puram* anthology, celebrates the valor of great emperors, military commanders, and warriors. It reveals that valor was the very lifeblood of the ancient Tamils. The text records that martial spirit was not the exclusive domain of men; it documents instances of women displaying similar valor in times of war–a quality celebrated as *Magalir Maram* (women's valor). The *Purapporul Venpamalai*, a grammatical treatise on *Puram* themes, classifies this specific phenomenon as *Muthin Mullai*. Based on this context, the present article examines the theme of *Muthin Mullai* as depicted in the *Purananuru*.

Keywords : Sangam Literature - Puranaanooru - Muthin mullai - Magalir Maram

முன்னுரை

தொன்மை தமிழர்களின் வாழ்க்கையை நம் கண்முன்னே காட்சிப்படுத்துவதில் சங்க இலக்கியங்கள் முதன்மை பெறுகின்றன. பழந்தமிழரின் பண்பு நலன்களையும் சமூக வாழ்க்கை நிலையையும் எடுத்துரைக்கும் வரலாற்றுப் பெட்டகமாகவும் விளங்குகின்றன. சங்ககால இலக்கியங்கள் மக்களின் அகம், புறம் சார்ந்த செய்திகளை எடுத்துரைக்கின்றன. பழந்தமிழர்கள் போர் செய்த நிலையை முறைபடுத்தி கூறுவது 'புறத்திணைகள்' என்று அறியப்படுகிறது. புற நூலான புறநானூற்றில் பேரரசர்கள், படைத்தலைவர்கள், வீரர்களின் வீரச்சிறப்பு போற்றப்படுகிறது. 'வீரம்' பண்டையத் தமிழர்களின் உயிர் நாடியாக காணப்பட்டதைப் புறநானூறு வழி அறியமுடிகிறது. மறம் ஆண்களுக்கு மட்டுமன்று 'மகளிர் மறம்' என்று போற்றப்படுமளவுக்கு பெண்களும் போர் நிகழ்வுகளில் மறத்தன்மையுடன் நடந்துகொண்டதை புறநானூறு பதிவு செய்கிறது. புறத்துறைகளுக்கு இலக்கணம் வகுத்த புறப்பொருள் வெண்பாமாலை இந்நிகழ்வை 'மூதின் முல்லை' என்று குறிப்பிடுகிறது. அந்த அடிப்படையில் 'புறநானூற்றில் மூதின் முல்லை' என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராய்கிறது.

புறத்திணைகளும் புறநானூறும்

புறத்திணையானது தொல்காப்பியத்தில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், காஞ்சி என்ற ஏழு புறத்திணைகளாகக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியத்தினை அடிப்படையாகக் கொண்டு பன்னிரு பாட்டடியலும், பன்னிரு பாட்டியலை வழிநூலாகக் கொண்டு புறப்பொருள் வெண்பாமாலையும் இயற்றப்பட்டது. புறப்பொருள் வெண்பாமாலை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி,

நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்ற பன்னிரெண்டு புறத்திணைகளாக பகுத்துக்கூறுகிறது. ஒவ்வொரு திணைக்கும் பலதுறைகள் காணப்படுகிறது. புறநானூறு பண்டையத் தமிழர்களின் போர், வீரம், வெற்றிச்சிறப்பு போன்ற புறம் சார்ந்த வாழ்க்கையைத் தொல்காப்பியம் மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணைகளின் வழி எடுத்துரைக்கிறது.

மூதின் முல்லை

மூதின் முல்லை என்பது வாகைத்திணையின் புறத்திணைக்குரிய ஒரு துறையாகும். போர்ச்சூழல் சார்ந்து தும்மை திணையிலும் மூதின் முல்லை காணப்படுவதாக புறநானூறு 288 - இல் துறை விளக்கம் கொடுக்கப்படுகிறது. போர் செய்யும் வீரக்குடி பற்றி குறிப்பிடும் துறையாக உள்ளது. "மறக்குடி நோக்கில் மூதின்முல்லை, ஏறாண்முல்லை, வல்லாண்முல்லை எனப் புறப்பொருள் வெண்பாமாலை துறைகள் கூறும். தொல்காப்பியத்தில் மறக்குடி நோக்கில் துறைகள் கூறவில்லை" என்று குறிப்பிடப்படுகிறது. (வாகைத்திணை, கோ.சிவகுருநாதன்,ப.139) மறக்குடி நோக்கில் தொல்காப்பியத்தில் துறைகள் இடம்பெறாததை இக்குறிப்பின் வழி அறியமுடிகிறது. "பன்னிருபடலம் "கணிவன் முல்லை" எனத் துறை கூறி முல்லைக் குறியீட்டைத் தொடங்குகிறது. பன்னிரு படலத்தை முதனூலாகக் கொண்ட புறப்பொருள் வெண்பாமாலை முல்லைக் குறியீட்டை மிகுதியாக ஆள்கிறது." (வாகைத்திணை, கோ.சிவகுருநாதன், மணிவாசகர் பதிப்பகம், லிங்கி தெரு, சென்னை - 600 001, முதற்பதிப்பு, மே, 1992, ப.139) முல்லை என்ற குறியீடு முதலில் பன்னிருபடலத்தில் தொடக்கம் பெறுவதை இக்குறிப்பின் வழி அறியமுடிகிறது.

புறப்பொருள் வெண்பாமாலை அரசமுல்லை, பார்ப்பனமுல்லை, கணியன் முல்லை, மூதின் முல்லை, ஏறாண் முல்லை, வல்லாண் முல்லை, காவல் முல்லை, பேராண் முல்லை, மறமுல்லை, குடை முல்லை, கண்படை முல்லை, சால்பு முல்லை போன்ற துறைகளில் முல்லை என்ற குறியீட்டை பயன்படுத்துகிறது. இத்துறைகளில் முல்லை என்ற குறியீடு "வரையறுத்த ஒரு பொருளுக்கே அன்றி, வீரம், வெற்றி, பிறநிலைகள் என அனைத்திற்கும் பொது மையாதாகின்றது" (வாகைத்திணை, கோ.சிவகுருநாதன், ப.139) இவற்றில் மூதின் முல்லை வீரம் தொடர்பான துறையாக உள்ளது. புறப்பொருள் வெண்பாமாலை மூதில் - மூது - இல்- மூத்த இல்லாலாகிய என்று பொருள் தருகிறது. மூதின்முல்லை என்பதற்கு

"அடல் வேல் ஆடவர்க்கு அன்றியும் அவ் இல்
முடவரல் மகளிர்க்கும் மறம் மிகுந்தன்று" (பு.பொ. வெ.மா, கொளு-174)

தொன்மைகுடியில் தோன்றிய ஆடவர் மட்டுமன்று மறப்பெண்களின் மாண்பினைக் கூறுவது மூதின் முல்லை என்ற பொருளைத்தருகிறது. இக்கொளுவுக்குரிய செய்யுள் பின்வருமாறு

" வந்;த படை நோனாள் வாயின் முலை பறித்து
வெந்திறல் எஃகம் இறைக் கொளீஇ - முந்தை
முதல்வர் கல் தான்காட்டி மூதில் மடவாள்
புதல்வனைச் செல்க என்றாள் போருக்கு" (பு.பொ. வெ.மா, செ-175)

தொன்மைமிக்க மறக்குடியில் பிறந்தவள், தன் நாட்டின் மேல் பகைவர் போருக்கு வந்துள்ளதை அறிந்து பொறுக்கமாட்டால் தன் மார்பகத்தில் பால் குடிக்கும் புதல்வனைப் பறித்து எடுத்தாள், வலிமையான வேலினை அவன் கையில் கொடுத்துப் போர்களம் கூட்டிச் செல்லும் போது நடுகல் காட்டிச் செல்க என்று கூறுவாள் என்று இப்பாடல் விளக்கம் தருகிறது. மறக்குடியில் பிறந்த மகளிர் வீரத்தினைப் பற்றி குறிப்பிடுவது மூதின்முல்லை என்பதை இப்பாடலின் வழி அறயமுடிகிறது.

புறநானூற்றில் மூதின் முல்லை

புறநானூற்றில் ஏறாண் முல்லை, மூதின் முல்லை, வல்லாண் முல்லை போன்ற முல்லை குறியீட்டு திணைகள் இடம்பெறுகின்றன. அவற்றில் மூதின்முல்லை துறையில் 279, 288, 306, 308, 312, 326, 327, 328, 329, 330, 331, 332, 333, 334, 335 போன்ற பதினைந்து பாடல்கள் அமைந்துள்ளன.

மறக்குடி மகளிர்

புறத்திணை நூலான புறநானூற்றில் போர் நிகழ்வுகள் அதிகமாக இடம்பெறுகின்றன. அந்நிகழ்வுகளில் வீரத்துடன் செயல்படும் பெண்கள் பற்றி குறிப்பிடுகிறது. மறக்குடி பெண்ணின் வீரத்தை நினைக்கும் பொழுது அச்சம் வருகிறதை ஒக்கூர் மாசாத்தியார் என்ற பெண்பாற் புலவர்,

"கெடுக சிந்தை; கடிது இவள் துணிவே;
மூதின் மகளிர் ஆதல் தகுமே;
மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை,
யானை எறிந்து களத்து ஒழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்
....மயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒரு மகன் அல்லது இல்லோள்,
"செருமுக நோக்கிச் செல்க" என விடுமே" (புறம் -279)

இவளுடைய துணிவு கெடுவதாக, முன்னர் நடந்த போரில் இவள் தந்தை போர்க்களம் சென்று பகைவரின் யானையை வீழ்த்தி தானும் இறந்தான். நேற்று நடந்த போரில் கணவன் திரளான ஆநிரைகளைக் காத்து அப்போரில் இறந்தான். இன்றைய நாளில் போர் பறை கேட்டு தனக்கு ஒருவனேயன்றி வேறு மகன் இல்லாத நிலையில் அவன் மிகச் சிறியவனானதால் தலைக்கு எண்ணேய் தடவி வாரி, கையில் வேலைக்கொடுத்து போர்க்களம் நோக்கி செல்க என ஏவினாள் என்று இப்பாடல் விளக்கம் தருகிறது. தன் குடும்பத்தில் தந்தையையும் கணவனையும் அடுத்தடுத்த போரில் இழந்தும் கூட தனக்கென்று ஆதரவாக உள்ள ஒரே மகனையும் போருக்கு அனுப்ப வேண்டும் என்ற பெண்ணின் மனதில் தாய்பாசத்தை விட போர்க்குணம் மேலோங்கி இருப்பதை கண்ட புலவர் அவளது துணிவை நினைத்து அச்சம் கொள்வதாகக் குறிப்பிடுகிறார்.

மார்பில் வேல் வாங்கி சாய்ந்த வீரனின் மனைவி பெருமிதத்தில் ஆரத் தழுவுவதற்கு செல்லும் காட்சி பற்றி புறம் 288- இல் கழாத்தலையார் எடுத்துரைக்கிறார். கணவனின் மீளாத்துயரில் தன் எதிர்காலத்தை நினைந்து வருந்தாமல், பெருமிதம் கொள்ளும் பெண்ணின் பண்பு சிறந்த வீரத்திற்கு சான்றாக புறம் எடுத்துரைக்கிறது. மறக்குல பெண்ணொருத்தி போருக்கு சென்ற தன் கணவன் பகை ஒழித்து விரைந்து நாடு திரும்ப வேண்டும் என்று தன் குடி முன்னோர்களின்

நடுகற்களை வணங்கிய நிலையைப் புறம் - 306- இல் அள்ளூர் நன் முல்லையார் குறிப்பிடுகிறார். இறந்த கணவனைப் பெருமையுடன் பார்க்கும் மனைவியின் வீரத்தன்மை இப்பாடலில் சுட்டிக்காட்டப்படுகிறது. மார்பில் வேல் பாய்ந்து கிடக்கும் தன் கணவனின் செயல் போற்றும் மனைவியைப் பற்றி புறம் 308 - இல் கோவூர்கிழார் பாடுகிறார். மகனை பெற்று வளர்த்து வெளியே அனுப்புதல் என் முதன்மையான கடமை. சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடமை. வேல்வடிதத்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடமை. அவனுக்குப் போர்பயிற்சிகளைக் கற்றுக்கொடுத்தல் வேந்தனுக்குக் கடமை. போர்களத்தில் வாளை சுழற்றி பகை மன்னன் களிற்றைக் கொன்று மீண்டு வருதல் வளர்ந்த அந்த காளையின் கடமை என்று தன் பழந்தமிழ் குடியின் கடமைகளை ஒரு பெண் கூறுவது போன்று புறம் -312 இல் பொன்முடியார் எடுத்துரைக்கிறார். பொருள்வயிற் பிரிவு, பாசறைப்பிரிவு, கல்விப்பரிவு போன்றவற்றால் தலைவனின் பிரிவைத் தாங்க இயலாத பெண்களின் ஆற்றாமையைச் சங்க அக இலக்கியங்கள் பதிவுசெய்கின்றன. கணவனின் குறுகிய காலப்பிரிவை தாங்க இயலாதப் மென்மையானவள், போர்த்தொழிலில் இறந்துப்பட்ட கணவனை நினைத்து பெருமைப்படும் அளவுக்கு வீரம்மிகுந்தவளாக விளங்குவதைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி அறியமுடிகிறது.

விருந்துப்படைத்தல்

மறக்குடி மகளிரது வீரம் மட்டுமன்று கொடைப்பண்பையும், விருந்தினருக்கு உணவளிக்கும் பண்பையும், கணவனின் மறப்பண்பையும் வியந்து போற்றும் பாடல்களும் இத்துறையில் அமைந்துள்ளது.

“…படைமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் மிதவை,
யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு
வருவிருந்து அயரும் விருப்பினள்….
பொன்செய் ஓடை பெரும் பரிசிலனே ” (புறம் - 326: 8-12)

சிறார்கள் மடுக்கரையிலிருந்து பிடித்து வந்த உடும்பு இறைச்சியைச் சமைத்து தயிர் கூழையும் சேர்;த்து பாணரோடு கலந்து உண்ண வேண்டும் என்ற விரும்பம் கொண்டவள். கணவன் பகைவரை போரில் வென்று வேந்தர்களின் யானை பொற்பட்டங்களைக் கொண்டு வந்து பாணர்களுக்குப் பரிசிலாக வழங்குபவனாக உள்ளவன் என்று மறக்குடி பெண்ணின் விருந்தோம்பல் பண்பும், கணவனின் கொடைப்பண்பு பற்றியும் இப்பாடலில் கூறப்படுகிறது.

“எருது கால் உறா அது, இளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாணர் உண்டு, கடை தப்பலின்…
வரகு கடன் இரக்கும் நெடுந்தொகை..” (புறம் - 327)

எருது காலால் மிதித்து எடுக்காது, இளைஞர்கள் தாமே மிதித்து எடுத்த விளைவு குறைந்த வரகுக்குவியலில் கொடுக்க வேண்டிய கடமையுள்ளோருக்குக் கொடுத்தது போக எஞ்சியதைப் பசியோடு வந்த பாணர்க்கு வழங்க, அவர்களும் பெற்றுச் சென்றனர். பிறகு அவனைச் சார்ந்த

சுற்றத்தினர் பசியால் வாடாது காக்கும் பொருட்டுத் தன்னூரிலுள்ள நல் மனம் இல்லாதோரிடமிருந்து கடனாக வரகு பெற்ற நெடுந்தகை அத்தலைவன் என்று இப்பாடல் விளக்கம் தருகிறது. வரகும் தினையும் சேர்ந்து இறைச்சி துண்டுகளுடன் நெய் கலந்த சோறை தருபவன் தலைவன் என்று புறம் - 328 குறிப்பிடுகிறது. அனைத்தும் கொடுத்துத் தீர்ந்த காலத்தும், தன் இல்லத்தை நாடி வந்த இரவலர்க்கு விதை தினையை உணவாக்கி அளிக்கும் மனைவியின் சிறப்பினை கூறுகிறது புறம் 333. புறம் 329, 330, 331, 334 போன்ற பாடல்களும் இரவலர்க்கு விருந்து படைத்தலின் சிறப்பு பற்றி கூறுகிறது. போர்த்தொழில் சார்ந்தவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதும் வீரத்தன்மையுடையன என்பதை இப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

வேல் பெருமை

வல்லான் மறவன் ஒருவனது வேலின் சிறப்பை வியந்து கூறும் விதமாக பாடல் இடம்பெற்றுள்ளது.

“மங்கல மகளிரோடு மாலை சூட்டி,
இன்குரல் இரும்பை யாழோடு ததும்பத்,
தெண்ணீர் படுவினும் தெருவினும் திரிந்து,” (புறம்;; - 332 : 5-7)

தலைவனாகிய மறவனின் கைவேல் பிற வீரர்களின் வேல் போன்றுதன்று மங்கல மகளிர் வாழ்த்த, யாழோடு பல்லிசை முழங்க ஊர்வலம் வந்து பகைவர் நாடு நடுங்க போர் முனைக்குச் செல்லும். குறிதப்பாது கொல்லும் மறவனின் வேலைப் போற்றும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது. போர்த்தொழிலுக்கு பயன்படுத்தப்படும் ஆயுதங்களைக் கண்டு அஞ்சாமல், அவ்வாயுதங்களை போற்றும் பெண்களின் செயல் வீரம் மிகுந்ததாக இப்பாடல் பதிவுசெய்கிறது.

நடுகல் அன்றி கடவுள் இலவே

மறக்குடியின் முன்னோர்களுக்;குரிய நடுகல் வணங்குதலை விட சிறந்த தெய்வம் வேறு இல்லை என்பதை இத்துறை குறிப்பிடுகிறது.

“துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை
ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலலே” (புறம்;; - 335 : 10- 12)

தமிழ்குடிகளுள் தொன்மையானவர்களாக துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று இந்நால்வரை புறநானூறு சுட்டிக்காட்டுகிறது. களிறு எறிந்து விழுந்து காளை போன்றவனுக்கு எழுப்பபடும் நடுகல். இதுதான் மறக்குடியினர் வழிபடும் கடவுள். இதைத் தவிர வழிபடுவதற்கு உகந்த கடவுளாக அவர்கள் வேறு எதைனையும் ஏற்பது இல்லை. வீரர்கள் வழிபாடுதான் தெய்வ வழிபாடு என்று கொள்வர் என்று இப்பாடல் விளக்கம் தருகிறது. இங்கு போர்த் தொழிலுக்குப் பயன்படுத்தக்கூடிய இசைக்கருவிகள் இசைப்போரும், போரில் வெற்றிப்பெற்ற தலைவனைப் புகழ்ந்து பாடும் பாணர்களையும் மூத்தக்குடிகளாக குறிப்பிடப்படுகிறது. நடுகல் வீரர் தவிர்த்த வேறு தெய்வம்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

இல்லை என்ற அளவிற்கு வீரத்தின் மீது பற்று கொண்டவர்களாக தமிழ் மறக்குடியினர் வாழ்ந்து வந்ததாக மூதின்முல்லை பாடல் குறிப்பிடுகிறது.

முடிவுரை

மூதின் முல்லை என்பது புறத்திணைகளுள் ஒன்றான வாகைத்திணையின் உட்துறையாக விளங்குகிறது. போர்ச்சூழல் சார்ந்து சில இடங்களில் தும்பைத்திணையின் துறையாக அமைந்துள்ளது. புறநானூற்றில் மூதின் முல்லை என்ற துறையில் பதினைந்து பாடல்கள் காணப்படுகிறது. மறக்குடி பெண் தன் குடும்பத்தில் தந்தை, மற்றும் கணவனை அடுத்தடுத்;த போரில் இழந்த போதும் மறுநாள் தன் ஒரே மகனை அனுப்பும் துணிவு அச்சம் கொள்ளும் அளவுக்கு மிகுந்து இருந்ததாக குறிப்பிடப்படுகிறது. மார்பில் வேல் வாங்கி சாய்ந்த வீரனின் மனைவி பெருமிதத்தில் ஆரத் தழுவ விழைவது, வீரம் மிகுந்த செயலுக்குச் சான்றாக புறநானூறு பதிவு செய்கிறது. இறந்த கணவனைப் பெருமையுடன் பார்க்கும் மனைவியின் வீரத்தன்மை பற்றியும் அறியமுடிகிறது. ஒரு சிறந்த வீரனை இவ்வுலகிற்கு கொடுப்பது ஒரு தாயின் கடமையாகவும், வேல்வடித்து, போர்பயிற்சி அளித்து சிறந்த போர்வீரனாக மாற்றுவது மறக்குடி மக்களின் கடமைகளாகக் குறிப்பிடப்படுகிறது. வீரத்துடன் போர்குணம் கொள்வது மட்டுமன்று, தலைவன் போரிலிருந்து பெறப்பட்ட பகைவர்களின் பொன்பட்டயங்களில் பெரும் பரிசுகளைத் தன்னை சுற்றியுள்ள இரவலர்களுக்கும் பாணர்களுக்கு வழங்குவதும், சிறந்த கொடையாக போற்றப்படுகிறது. மறக்குடி மகளிர் பாணர்களுக்கும் இரவலர்களுக்கும் வரகு, தினை, தயிர் கூழை, இறைச்சி கலந்த நெய் சோறு போன்ற உணவுகளைக் கொண்டு உணவு படைத்தும், வறுமைநிலையிலும் வரகு கடன் பெற்றும் விதை தினையை உணவாக்கி கொடுக்கும் விருந்தோம்பல் பண்பு கொண்டு வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகிறது. மறவர்கள் போருக்கு பயன்படுத்தும் வேலுக்கு மங்கல விழா எடுத்து இசைப்பாடி பல்லிசையோடு சிறப்பு செய்பவர்கள் என்பதை அறியமுடிகிறது. போர் தொழிலுக்கு சிறப்பு செய்த துடியன், பாணன், பறையன், கடம்பன் போன்றோர்களை மூத்த குடிகளாக போற்றும் மரபை கொண்டவர்கள். நடுகல் வீரரைத் தெய்வமாக போற்றம் மரபும் கொண்டவர்களாக மறக்குடி மக்கள் இருந்துள்ளதையும் புறநானூறு மூதின்முல்லை துறை வழியாக அறியமுடிகிறது.

துணைநூல்பட்டியல்

1. இராமசுப்பிரமணியம்.வ.த, புறநானூறு (மூலமும் உரையும்), திருமகள் நிலையம், சென்னை- 600 017.
2. சிவகுருநாதன். கோ, வாகைத்திணை, மணிவாசகர் பதிப்பகம், லிங்கி தெரு, சென்னை - 600 001, முதற்பதிப்பு, மே, 1992,
3. சுபாஷ் சந்திரபோஸ்.ச, புறப்பொருள் வெண்பாமாலை (உரை), வெளியீடு: இயல், தஞ்சாவூர்,- 613 001.
4. பாலசுப்பிரமணியன்,கு.வெ, சங்க இலக்கியம் புறநானூறு (மூலமும் உரையும்), நீயு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை -600 098.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

22. திருக்குறளின் முதல் அதிகாரத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் வழி இறைநிலையை உணர்தல்

முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை
உதவிப்பேராசிரியர்,
எம்.என்.எம் ஜெயின் பொறியியல் கல்லூரி,
துரைப்பாக்கம், சென்னை - 97,
தொடர்பு : 9840275531
DOI 10.5281/zenodo.21724377.

Abstract

The first chapter of the *Tirukkural* is traditionally entitled *Kadavul Vazhthu*, meaning “Invocation to God.” However, neither the word *Kadavul* nor *Vazhthu* occurs in its ten couplets. The term *Iraivan* appears only in couplets five and ten, while the other verses employ descriptive expressions such as *Aadhi Bhagavan*, *Vālarivan*, *Malarmisai Ēginān*, *Vēnduthal Vēndāmai Ilān*, *Porivāyil Aindhaviththān*, *Thanakkuvamai Illāthān*, *Aravāzhi Anthanan* and *Enkunaththān*. This raises a fundamental question: does the chapter praise a deity belonging to a particular religious tradition, describe an enlightened human state, express the fundamental order of nature, or refer to a primordial reality preceding the differentiation of life, matter and consciousness?

In his *Thirukkural Meipporulurai*, Pavalareru Perunchithiranar renames the chapter *Aramuthal Unarthal*, meaning “Realising the Primordial Source of Virtue.” This title shifts the focus from a personal God to an ethical and natural first principle, and from devotional praise to intellectual and experiential realisation. Of particular importance is his interpretation of *Bhagavan* as a state related to differentiation and *Aadhi Bhagavan* as the primordial condition prior to all divisions. Thus, the divine is understood not merely as an external creator but as the undivided original reality from which life, matter, consciousness and moral order emerge.

This study takes the two volumes of Perunchithiranar’s *Thirukkural Meipporulurai* as its primary sources. The views of classical and modern commentators, other Tamil scholars, and philosophers on the nature of divinity are used as supplementary sources. Through these materials, the study examines whether the divine state envisioned by Tiruvalluvar culminates in a personal God, represents a constellation of exalted human qualities, or signifies a primordial truth of virtue that must be realised and lived.

Keywords: Tirukkural, Aramuthal, Divine State, Aadhi Bhagavan, Primordial Reality, Nature, God, Divinity, Perunchithiranar.

ஆய்வுச் சுருக்கம்

திருக்குறளின் முதல் அதிகாரம் மரபுவழியாகக் “கடவுள் வாழ்த்து” என அழைக்கப்படுகிறது. ஆனால் அவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பத்துக் குறள்களிலும் “கடவுள்”, “வாழ்த்து” ஆகிய சொற்கள் இடம்பெறவில்லை. “இறைவன்” என்னும் சொல் ஐந்தாம் மற்றும் பத்தாம் குறள்களில் மட்டுமே வருகிறது. ஏனைய குறள்களில் “ஆதிபகவன்”, “வாலறிவன்”, “மலர்மிசை ஏகினான்”, “வேண்டுதல் வேண்டாமை இலான்”, “பொறிவாயில் ஐந்தவித்தான்”, “தனக்குவமை இல்லாதான்”, “அறவாழி அந்தணன்”, “எண்குணத்தான்” ஆகிய பண்புநிலைப் பெயர்களே இடம்பெற்றுள்ளன. ஆகவே, இவ்வதிகாரம் ஒரு குறிப்பிட்ட சமயக் கடவுளைப் புகழ்கிறதா, உயர்ந்த மாந்தநிலையை உணர்த்துகிறதா, இயற்கையின் மூல இயக்கத்தைக் குறிக்கிறதா அல்லது உயிர்-பொருள் பகுப்புகளுக்கு முற்பட்ட முழுமுதல் இருப்பைப் பேசுகிறதா என்பது ஆய்வுக்குரிய வினாவாகிறது.
பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமது *திருக்குறள் மெய்ப்பொருளுரை* நூலில் “கடவுள் வாழ்த்து” என்பதற்குப் பதிலாக “அறமுதல் உணர்தல்” என்று இவ்வதிகாரத்திற்குப் பெயரிடுகிறார். “கடவுள்” என்னும் ஆளுமை சார்ந்த கருத்திலிருந்து “அறமுதல்” என்னும் இயற்கை-அறவியல் மூலநிலைக்கும், “வாழ்த்துதல்” என்னும் சமயச் செயலிலிருந்து “உணர்தல்” என்னும் அறிவுச் செயலுக்கும் அவர் உரையை நகர்த்துகிறார். குறிப்பாக, “பகவன்” என்பதைப் பாகுபாட்டிற்கு உட்படும் நிலையாகவும், “ஆதிபகவன்” என்பதை உயிர், பொருள், உணர்வு, அறிவு முதலிய பகுப்புகள் தோன்றுவதற்கு முற்பட்ட முழுமுதல் நிலையாகவும் அவர் விளக்குவது தனித்துவமான மெய்யியல் வாசிப்பாகிறது.
இவ்வாய்வு பெருஞ்சித்திரனாரின் *திருக்குறள் மெய்ப்பொருளுரை* இரு பகுதிகளையும் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு, பழைய மற்றும் புதிய உரையாசிரியர்களின் கருத்துகள், பிற தமிழறிஞர்கள், மெய்யறிஞர்களின் கருத்துகள் முதலினவற்றில் இடம்பெறும் இறைமை குறித்த கருத்துகள் ஆகியவற்றைத் துணை ஆதாரங்களாகப் பயன்படுத்துகிறது. இதன்மூலம் திருவள்ளுவரின் இறைநிலை ஓர் ஆளுமைக் கடவுளில் முடிவுறுகிறதா, உயர்ந்த மாந்தப் பண்புகளின் தொகுப்பாக அமைகிறதா அல்லது உணர்ந்து வாழ வேண்டிய அறமுதல் மெய்ம்மையாக விளங்குகிறதா என்பது ஆராயப்படுகிறது.

திறவுச் சொற்கள்

திருக்குறள், அறமுதல், இறைநிலை, ஆதிபகவன், பகுநிலை, மெய்ப்பொருள், இயற்கை, கடவுள், இறை, தெய்வம், பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

முன்னுரை:

திருக்குறளின் முதல் அதிகாரத்தைத் திறப்பது கடவுளைப் பற்றிய ஒரு முடிந்த விடையன்று; “உலகிற்கும் உயிருக்கும் முதல் எது?” என்ற அடிப்படையான மெய்யியல் வினாவாகும். “கடவுள் வாழ்த்து” என்ற அதிகாரத் தலைப்பு நம்மை முன்கூட்டியே ஒரு சமயக் கடவுளை நோக்கி அழைத்துச் செல்லக்கூடும். ஆனால் குறட்பாக்களைத் தலைப்பிலிருந்து பிரித்துப் படிக்கும்போது அவை ஒரு குறிப்பிட்ட கடவுளின் பெயர், உருவம், பிறப்பு, அவதாரம், கோயில், புராணம் அல்லது வழிபாட்டுச் சடங்கு எதையும் குறிப்பிடவில்லை.

“கடவுள்” என்ற சொல்லும் “வாழ்த்து” என்ற சொல்லும் பத்துக் குறள்களிலும் காணப்படவில்லை. “இறைவன்” என்ற சொல் குறள் 5 மற்றும் குறள் 10 ஆகிய இரண்டில் மட்டுமே வருகிறது. மற்ற இடங்களில் ஓர் உருவத்தின் பெயருக்குப் பதிலாகப் பண்புகளே அமைந்துள்ளன. இதனால் இவ்வதிகாரம் “யார் கடவுள்?” என்ற வினாவைவிட “இறைநிலை என்பது எத்தகையது?” என்ற வினாவையே முதன்மைப்படுத்துகிறது.

“கடவுள் வாழ்த்து” என்னும் அதிகாரப் பெயர் திருவள்ளுவரால் அமைக்கப்பட்டதா என்பது உறுதியாகத் தெரியவில்லை என்று க. பூரணச்சந்திரன் குறிப்பிடுகிறார். அதிகாரப் பெயர்களும் இயல் பிரிவுகளும் உரையாசிரியர் மரபில் மாறியுள்ளன என்பதையும் அவர் சுட்டுகிறார். குறிப்பாக, அதிகாரத் தலைப்பில் உள்ள இரு சொற்களுமே பாடல்களில் இல்லாததால் அப்பெயர் மறுபரிசீலனைக்குரியது என்கிறார்.

எனினும், பாடல்களில் “கடவுள்” என்ற சொல் இல்லாததால் மட்டும் திருவள்ளுவர் எவ்வித இறைமையையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நேரடியாக முடிவு செய்வதும் போதாது. ஏனெனில் “ஆதிபகவன்”, “வாலறிவன்”, “அறவாழி அந்தணன்”, “எண்குணத்தான்”, “இறைவன்” ஆகிய தொடர்கள் ஏதோ ஓர் உயர்ந்த மூலநிலையைச் சுட்டுகின்றன. அந்த மூலநிலை என்ன என்பதில்தான் உரைகளுக்கிடையிலான வேறுபாடு தோன்றுகிறது.

2. **“கடவுள் வாழ்த்து” முதல் “அறமுதல் உணர்தல்” வரை**

பெருஞ்சித்திரனார் தமது மெய்ப்பொருளுரையில் இவ்வதிகாரத்திற்கு **“அறமுதல் உணர்தல்”** என்று பெயரிடுகிறார். இந்தப் பெயர்மாற்றம் வெறும் சொல் மாற்றமன்று; முழுமையான சிந்தனை மாற்றமாகும்.

இப்பெயரில் மூன்று கூறுகள் உள்ளன:

அறம் - முதல் - உணர்தல்.

“அறம்” என்பது இங்கு தனிமனித நல்லொழுக்கம் என்ற குறுகிய பொருளில் மட்டும் அமைவதில்லை. இயற்கை எவ்வாறு இயங்குகிறதோ, உயிர் எவ்வாறு உருவாகி வளர்கிறதோ, மனித அறிவு எவ்வாறு தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்கிறதோ, அவற்றின் அடிப்படையில் உள்ள பொதுமையான ஒழுங்கையும் அது குறிக்கிறது.

“முதல்” என்ற சொல்லுக்கு “படைத்தவர்” என்ற ஒரே பொருள் இல்லை. மண் என்பது குடத்தின் மூலப்பொருள்; குயவன் குடத்தைச் செய்பவர்; வரிசையில் முதலில் நிற்பவர் வரிசைமுதல். அதுபோல, “அ” எழுத்து மற்ற எழுத்துகளைப் படைக்கவில்லை; எழுத்து வரிசையில் முதலில் நிற்கிறது. எனவே, “ஆதிபகவன் முதற்றே உலகு” என்பதற்கு ஆதிபகவன் உலகைப் படைத்தவர் என்ற பொருள் மட்டுமே கொள்ள முடியாது. உலகின் தொடக்கம், அடிப்படை மூலநிலை அல்லது அனைத்திற்கும் முதன்மையான நிலை என்ற பொருள்களும் இதில் அடங்கலாம்

“உணர்தல்” என்பது வணங்குதல் அல்லது புகழ்தல் என்பதிலிருந்து வேறுபட்டது. வணங்குதல் வெளிப்புறச் செயல்; உணர்தல் அகநிலை மாற்றம். வாழ்த்துதல் சொல் சார்ந்தது; உணர்தல் அறிவு, அனுபவம், வாழ்க்கை ஆகிய அனைத்தையும் சார்ந்தது.

இதனால் பெருஞ்சித்திரனாரின் தலைப்பில் நிகழும் மாற்றத்தைப் பின்வருமாறு விளக்கலாம்:

கடவுளைப் புகழ்தல் → அறத்தின் மூலநிலையை உணர்தல்

ஒருவரை வணங்குதல் → ஓர் உண்மையை வாழ்வில் அறிதல்

சமய நம்பிக்கை → மெய்ப்பொருள் ஆராய்ச்சி

பெருஞ்சித்திரனார் “இறைமை” என்ற கருத்தை ஆராயும்போது, அதை மனித உருவத்துடன் உடனடியாக இணைக்காமல், உலகம், இயற்கை, பொருள், ஆற்றல், உயிர், உணர்வு, அறிவு

ஆகியவற்றோடு தொடர்புபடுத்துகிறார். அவரது உரையில் இயற்பியல், உயிரியல், உளவியல், மெய்யியல் ஆகிய துறைகளுக்கிடையில் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியும் காணப்படுகிறது. எனவே "அறமுதல்" என்பது மனிதனுக்கு வெளியே கட்டளை இடும் ஓர் ஆட்சியாளரைக் குறிப்பதன்று; உயிரும் உலகும் ஒழுங்காக இயங்குவதற்கான அடிப்படை இயல்பைக் குறிக்கிறது.

"கடவுள் வாழ்த்து" என்ற மரபுப் பெயர் இறைவனை முன்னிலைப்படுத்துகிறது. "அறமுதல் உணர்தல்" என்ற பெருஞ்சித்திரனாரின் பெயர் அறத்தையே முன்னிலைப்படுத்துகிறது. இந்த மாற்றத்தில், கடவுள் அறத்திற்கு ஆணையிடுபவர் அல்ல; அறமே இறைநிலையை உணர்த்தும் அடையாளமாகிறது.

கடவுள் வாழ்த்து அதிகாரமென்பது கடவுளின் பொது இயல்பையும் சிறப்பு இயல்பையும் கூறுவதாக ச. தண்டபாணி தேசிகர் விளக்குகிறார். மேலும், அறவழியில் மனிதர் நிற்றலே நிறைந்த வழிபாடு என்ற வ.சுப. மாணிக்கனாரின் கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இதன்மூலம் மரபுவழி இறைநம்பிக்கை உரைகளுக்குள்ளும் அறத்திற்கும் இறைநிலைக்கும் இடையேயான நெருக்கம் ஏற்றுக்கொள்ளப்படுவது தெரிகிறது.

அதனால், "அறமுதல் உணர்தல்" என்பது மரபு முழுவதையும் மறுக்கும் பெயரல்ல; மரபுரைகளுக்குள் மறைந்துள்ள அறமையத்தை மிகத் தெளிவாக முன்னிலைப்படுத்தும் புதிய பெயராகக் கொள்ளலாம்.

3. அறமுதல்: இயற்கை, உயிர், அறிவு, அறம் ஆகியவற்றின் மூலநிலை

பெருஞ்சித்திரனாரிடம் அறம் என்பது மனிதனுக்காக மட்டும் உருவாக்கப்பட்ட கட்டளை அல்ல. உலகின் இயற்கை இயக்கத்தில் இருந்து மனிதன் உணர்ந்து கொள்ள வேண்டிய நெறியாகும். விதைக்கப்பட்ட விதை தன் இயல்பின்படி முளைக்கிறது; நெருப்பு தன் இயல்பின்படி சுடுகிறது; நீர் பள்ளத்தை நோக்கிப் பாய்கிறது; உயிரினம் தன்னைக் காத்து வளர்க்க முயல்கிறது. இவை அனைத்தும் இயற்கையின் ஒழுங்கைக் காட்டுகின்றன. மனிதன் அறிவுடையவனாக இருப்பதால் அந்த ஒழுங்கை உணர்ந்து, தன் செயல்களைப் பொறுப்புடன் அமைத்துக் கொள்ள வேண்டும். இந்த இயற்கை ஒழுங்கு மனித வாழ்க்கையில் அறமாக வெளிப்படுகிறது.

எனவே பெருஞ்சித்திரனாரின் அமைப்பில்:

இயற்கையின் ஒழுங்கு → உயிரின் இயக்கம் → உணர்வின் வளர்ச்சி → அறிவின் தெளிவு → மனித அறம்

என்ற தொடர்ச்சி காணப்படுகிறது.

இங்கு அறம் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றன்று. அதேவேளை "இயற்கையில் நடப்பது அனைத்தும் அறமே" என்றும் கூறப்படவில்லை. மனிதனுக்கு அறிவும் தேர்வும் உள்ளதால், இயற்கை ஒழுங்கை அறிந்து, பிற உயிர்களின் வாழ்வை மதித்து, தன் செயல்களின் விளைவுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வதே அறமாகிறது.

"அறமுதல்" என்பதற்கு இரண்டு அடுக்குகள் உள்ளன:

1. **அறத்தின் முதல்:** மனித அறவாழ்விற்கு அடிப்படையான உண்மை.
2. **அறமாக வெளிப்படும் முதல்:** உலகின் மூலநிலையே மனித அறிவில் அறமாக வெளிப்படுதல்.

இந்த இரண்டாவது பொருளே பெருஞ்சித்திரனாரின் உரையை ஆழமாக்குகிறது. அறம் என்பது இறைமையிலிருந்து தனியே பெறப்படும் கட்டளை அல்ல; அறமுதலின் இயல்பே அறமாக மனித வாழ்வில் வெளிப்படுகிறது.

இதனால் வள்ளுவரின் இறைநிலை, "எதை நம்ப வேண்டும்?" என்ற வினாவைவிட "எவ்வாறு வாழ வேண்டும்?" என்ற வினாவோடு நெருங்குகிறது. முதல் அதிகாரத்தின் ஒவ்வொரு குறளும் இறைநிலையின் பண்பைக் கூறுவதோடு, அப்பண்பை உணர்ந்த மனிதனின் வாழ்வுப் பயனையும் கூறுகிறது. கல்வி பயன் பெறுகிறது; துன்பம் குறைகிறது; இருவினைப் பற்றுதல் நீங்குகிறது; புலன்கள் ஒழுங்குபடுகின்றன; மனக்கவலை மாறுகிறது; பிறவியெனப்படும் அறியாமைச் சுழற்சியைக் கடக்க முடிகிறது.

அறமுதலை உணர்தல் என்பது வெறும் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதன்று. அறிவு, ஒழுக்கம், புலனடக்கம், பற்றின்மை, மனத்தெளிவு ஆகிய நிலைகளில் வாழ்வதாகும். எனவே பெருஞ்சித்திரனாரின் தலைப்பு முதல் அதிகாரத்தின் பொருளை வழிபாட்டிலிருந்து வாழ்க்கைக்கு நகர்த்துகிறது.

4. ஆதிபகவன்: பகுநிலைக்கு முற்பட்ட முழுமுதல் இருப்பு

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

– *திருக்குறள்,* குறள் 1

பெருஞ்சித்திரனாரின் உரையில் “அகரம்”, “முதல்”, “ஆதி”, “பகவன்”, “உலகு” ஆகிய ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாக ஆராய்கிறார்.

மரபுரைகள் பொதுவாக “எழுத்துகளுக்கு அகரம் முதலாக இருப்பதுபோல உலகிற்கு இறைவன் முதலாக இருக்கிறார்” என்று விளக்குகின்றன. மணக்குடவரும் பரிமேலழகரும் உலகு ஆதிபகவனை முதலாக உடையது என்று கூறுகின்றனர். பரிமேலழகர், ஆதிபகவன் “இயற்கை உணர்வால் முற்றும் உணர்ந்தவர்” என்னும் கருத்தையும் சேர்க்கிறார்.

ஆனால் இங்கு “முதல்” என்பது “படைத்தவர்” என்று வெளிப்படையாகக் கூறவில்லை. அகரம் மற்ற எழுத்துகளைச் செதுக்கி உருவாக்கும் கைவினைஞன் அல்ல. உயிரெழுத்துகளில் அது முதலாகவும், பல ஒலிகளுக்குள் அடிப்படையாகவும் உள்ளது. அதுபோல, ஆதிபகவன் உலகிற்கு வெளியே நின்று உலகை உருவாக்கிய ஒருவரா, அல்லது உலகின் அனைத்து நிலைகளுக்கும் அடிப்படையான மூலமா என்பது ஆய்வுக்குரியது.

பெருஞ்சித்திரனார் “பகவன்” என்பதனைச் சமய வழக்கிலுள்ள “பகவான்” என்ற உருவக் கடவுள் பெயராக மட்டும் எடுத்துக்கொள்ளவில்லை. அவர் தரும் குறுவிளக்கத்தில்:

“பகவன் - பகுக்கக்கூடியவன்; பாகுபாட்டுக்குரியவன்.”

என்ற பொருள் முன்வைக்கப்படுகிறது. “ஆதி பகவன்” என்பது:

முதல் பகுநிலைக்குரியவன் அல்லது பாகுபாட்டு நிலைக்கு முற்பட்டவன்

என்று விளக்கப்படுகிறது.

இதனை “பிரபஞ்சம் பகுக்கப்படும் முன் வாழ்ந்த ஒருவர்” என்று புரிந்து கொள்ளக் கூடாது. அப்படிப் புரிந்தால் மீண்டும் காலத்திற்குள் நிற்கும் ஓர் ஆளுமை உருவாகிவிடும். பெருஞ்சித்திரனாரின் கருத்தை மெய்யியல் மொழியில் இவ்வாறு கூறலாம்:

உயிர்-உயிரல்லது, பொருள்-ஆற்றல், உடல்-உணர்வு, நான்-உலகம் ஆகிய வேறுபாடுகள் தோன்றுவதற்கு முன்பிருந்த பகுக்கப்படாத முழுமுதல் இருப்பே ஆதிபகவன்.

அறிவால் நாம் உலகைப் பகுக்கிறோம். இது நிலம், இது நீர், இது உயிர், இது உயிரற்றது, இது நான், இது பிறர் என்று பெயரிட்டு வேறுபடுத்துகிறோம். ஆனால் இவ்வேறுபாடுகளுக்கு முன்னால்

அனைத்தும் ஒரே மூலநிலையிலிருந்து தோன்றியவை என்ற மெய்யியல் சாத்தியத்தை “ஆதிபகவன்” குறிக்கிறது.

இதனால் “ஆதி” என்பது காலத்தில் மிகப் பழையவர் என்று மட்டும் பொருள்படாது. காலம், இடம், உயிர், பொருள் ஆகிய பகுப்புகளுக்கே அடிப்படையான நிலை என்றும் பொருள்படுகிறது. “பகவன்” என்பது பகுத்துக் கொடுக்கும் ஆளுமை என்ற பொருளைக் காட்டிலும், பகுப்புகள் வெளிப்படுவதற்கான மூலநிலை என்ற பொருளை அடைகிறது.

இதுவே இக்கட்டுரையின் முதன்மைக் கருதுகோள்:

> **பெருஞ்சித்திரனாரின் மெய்ப்பொருளுரையில் ஆதிபகவன் என்பது உலகிற்கு வெளியில் இருக்கும் படைப்பாளி அல்ல; உலகம் பல்வேறு நிலைகளாக வெளிப்படுவதற்கு முற்பட்ட முழுமுதல் இறைமை.**

இந்த விளக்கம் “கடவுள் ஒருவர் இருக்கிறாரா?” என்ற கணக்கியல் வினாவைக் கடந்து செல்கிறது. “ஒருவர்”, “பலர்” என்பவை ஏற்கெனவே பகுக்கப்பட்ட உலகிற்கு உரிய எண்ணிக்கைகள். பகுப்பிற்கு முற்பட்ட முழுமுதல் நிலையை “ஒருவர்” என்றும் “பலர்” என்றும் முழுமையாக வகுக்க முடியாது. எனவே பெருஞ்சித்திரனாரின் இறைமை ஒருமைக் கடவுள் கோட்பாட்டுடன் சில ஒற்றுமைகளைப் பெற்றாலும், அது ஓர் ஆளுமையைவிட “மூல இருப்பு” என்ற நிலைக்கு நெருக்கமாகிறது.

க. பூரணச்சந்திரன் இதற்கு மாறுபட்ட விளக்கத்தை முன்வைக்கிறார். அவர் “பகவன்” என்பதை முற்றுந்துறந்த முனிவர் என்றும், “ஆதிபகவன்” என்பதை காலத்தாலும் குணத்தாலும் முதன்மையான உயர்ந்த மனிதர் அல்லது அருகதேவர் என்றும் காண்கிறார். அகரம் எழுத்துகளைப் படைக்காததுபோல், ஆதிபகவனும் உலகைப் படைத்தவர் அல்ல; வரிசையில் முதலான உயர்ந்த முனிவர் என்பதே அவரது கருத்து.

இதனால் முதற்குறளுக்கு மூன்று முக்கிய வாசிப்புகள் அமைகின்றன:

- உலகைப் படைத்த முழுமுதற் கடவுள்;
- காலத்தால் முற்பட்ட உயர்ந்த முனிவர்;
- பகுப்புகளுக்கு முற்பட்ட முழுமுதல் இருப்பு.

இவற்றில் மூன்றாவது வாசிப்பே பெருஞ்சித்திரனாரின் தனித்துவமான மெய்ப்பொருள் விளக்கமாகிறது.

5. பத்துக் குறள்களில் வெளிப்படும் இறைநிலை

5.1 மூலமும் தூய அறிவும்

குறள் 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. - குறள் எண்: 1

முதல் குறள் இறைநிலையை உலகின் “முதல்” எனக் கூறுகிறது. அது எப்படிப்பட்ட முதல் என்பது திறந்த நிலையில் உள்ளது. பெருஞ்சித்திரனார் அதனைப் பகுப்புகளுக்கு முற்பட்ட மூல இருப்பாகப் பார்க்கிறார்.

குறள் 2

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். - குறள் எண்: 2

“வால்” என்பது தூய்மை, வெண்மை, கூர்மை ஆகிய பொருள்களைத் தரும். “வாலறிவன்” என்பது தூய, குற்றமற்ற, முழுமையான அறிவுநிலை. கற்ற அறிவு அந்தத் தூய அறிவுநிலையை நோக்கிச் செல்லாவிட்டால் அதன் பயன் என்ன என்ற வினாவை வள்ளுவர் எழுப்புகிறார்.

இங்கு “தொழுதல்” என்பதை வெறும் கைகூப்புதல் எனக் கொள்ளுதல் குறுகிய விளக்கம். கற்ற அறிவு தன் ஆணவத்தை விட்டுத் தூய அறிவின் முன்னிலையில் பணிவடைவதே “தொழுதல்” எனக் கொள்ளலாம். பெருஞ்சித்திரனாரின் பார்வையில் அறிவு உண்மையை உணர்வதற்கான கருவியாக வேண்டும்; மனப்பாட அறிவாக மட்டும் நிற்கக்கூடாது.

இதனால் இறைநிலையின் முதல் இரு பண்புகள்:

- அனைத்திற்கும் அடிப்படையான மூலநிலை;
- மாசற்ற முழுமையான அறிவுநிலை.

5.2 நிலைத்த வாழ்வும் சார்பின்மையும்

குறள் 3

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார். - குறள் எண்: 3

“மலர்மிசை ஏகினான்” என்பதற்கு உரைமரபுகள் பல பொருள்களை வழங்குகின்றன. பரிமேலழகர் அன்பர்களின் உள்ளமலரில் புகுந்தவன் என்று விளக்குகிறார். சமண வாசிப்புகள் மலர்மீது நடந்த அருகனை நினைவுகூர்கின்றன. க. பூரணச்சந்திரன் “மலர்” என்பதை மலர்தலை உலகம் அல்லது பூமி என்று கொண்டு, பூமியில் வாழ்ந்த உயர்ந்த சான்றோனாகக் காண்கிறார். மலர்மிசை என்பதனை மனத்தில் அற உணர்வை ஏகியவர்கள் என்கிறார் பெருஞ்சித்திரனார். மலர் மனத்திற்கான உருவகமாகக் காண்கிறார்

பெருஞ்சித்திரனார் உரையில் “சேர்தல்” என்பது உடல் அருகாமையைவிட உணர்வு ஒன்றுதலைச் சுட்டுகிறது. “மாணடி சேர்ந்தார்” என்பவர் அந்த உயரிய இயல்பைத் தமது வாழ்வின் அடிப்படையாகக் கொண்டவர்கள். அவர்கள் “நிலமிசை நீடுவாழ்வர்” என்பது உடல் அழியாமல் என்ற பொருளில் அல்ல; அவர்களின் அறவாழ்வு மக்களின் நினைவிலும் சமூக விளைவிலும் நிலைத்திருக்கும் என்ற பொருளையும் ஏற்கிறது.

குறள் 4

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு

யாண்டும் இடும்பை இல. - குறள் எண்: 4

வேண்டுதல் என்பது விருப்பு; வேண்டாமை என்பது வெறுப்பு. இவ்விரண்டும் மனத்தின் சார்புகளை உருவாக்குகின்றன. இறைநிலை விருப்பு-வெறுப்புகளால் இழுக்கப்படாத சமநிலை. அந்தச் சார்பற்ற நிலையுடன் தம்மை இணைத்துக் கொள்பவர்களுக்கு, எந்தச் சூழலிலும் துன்பத்தின் மனச்சுமை குறைகிறது.

இதன் பொருள் அவர்களுக்கு உடல் நோயோ, இழப்போ, துன்ப நிகழ்வுகளோ வராது என்பதன்று. நிகழ்வை எதிர்கொள்ளும் மனம் விருப்பு-வெறுப்பால் சிதைவடையாது என்பதாகும். இவ்வாறு இறைநிலை ஒரு அற்புதப் பாதுகாப்பாக அல்லாமல், மனச் சமநிலையின் மூலமாகிறது.

5.3 இருவினை கடந்த ஒழுக்கமும் புலனடக்கமும்

குறள் 5

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. - குறள் எண்: 5

இங்குதான் முதல் முறையாக "இறைவன்" என்னும் சொல் வருகிறது. நல்வினை, தீவினை ஆகிய இரண்டும் பற்றுதலுடன் செய்யப்படும்போது விளைவுச் சுழற்சியை ஏற்படுத்துகின்றன. "இருள்சேர்" என்பது அறியாமையுடன் இணைந்த வினைகளைக் குறிக்கிறது. இறைநிலையின் மெய்ப்பொருளைப் புரிந்து வாழ்பவர் செயலைச் செய்வார்; ஆனால் அதன் பலனைத் தம் அகந்தைக்கான உடைமையாக்க மாட்டார்.

"பொருள்சேர் புகழ்" என்பது வெறும் பெயர்ப் புகழன்று; இறைநிலையின் உண்மைப் பண்புகளைப் புரிந்து ஏற்றுக்கொள்ளுதல். பெருஞ்சித்திரனார் பார்வையில், இறைநிலையைப் புகழ்தல் என்பது அதன் இயற்கை-அறவியல் உண்மையை உணர்ந்து வாழ்தலாகிறது.

குறள் 6

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க

நெறிநின்றார் நீடுவாழ் வார். - குறள் எண்: 6

"பொறிவாயில் ஐந்து" என்பவை மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்வாயில்கள். "அவித்தல்" என்பது அழித்தல் அல்ல; அவற்றின் கட்டுப்பாடற்ற ஓட்டத்தைத் தணித்து ஒழுங்குபடுத்துதல்.

எல்லாவற்றையும் கடந்த உருவமற்ற கடவுளுக்குப் புலன்கள் எவ்வாறு இருக்கும் என்ற வினாவை க. பூரணச்சந்திரன் எழுப்புகிறார். ஆகவே "ஐந்தவித்தான்" என்பது புலன்களை வென்ற உயர்ந்த மனிதர் அல்லது துறவியின் பண்பாக இருக்கலாம் என்பது அவரது விளக்கம்.

பெருஞ்சித்திரனார் வழியில் இதனை இரு நிலைகளில் புரிந்துகொள்ளலாம். "ஐந்தவித்தான்" என்பது இறைநிலையை உணர்ந்த சான்றோரின் பண்பு. அதேசமயம் புலன்களை ஒழுங்குபடுத்தி, பொய்யற்ற ஒழுக்கத்தில் நிற்பதே இறைநிலையை அடையும் நடைமுறை.

எனவே வள்ளுவரின் வழிபாடு புலன்களை மறுக்கும் துறவல்ல; அவற்றின் அடிமையாகாமல் வாழும் விழிப்புணர்வு.

5.4 ஒப்பின்மை, அறப்பெருக்கு, எண்குணம்

குறள் 7

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்

மனக்கவலை மாற்றல் அரிது. - குறள் எண்: 7

“தனக்குவமை இல்லாதான்” என்பது மற்றொருவருடன் ஒப்பிட முடியாத மூலநிலையைக் குறிக்கலாம். அனைத்தும் அதிலிருந்து வெளிப்பட்டவை எனில், அதற்கு வெளியே நின்று அதனுடன் ஒப்பிடத்தக்க இன்னொன்று இருக்க முடியாது.

மனக்கவலை பெரும்பாலும் “நான்” என்பதைத் தனியான, பாதுகாப்பற்ற, பிறரிடமிருந்து வெட்டப்பட்ட ஒன்றாகக் கருதுவதிலிருந்து பிறக்கிறது. தன்னைப் பெரும் இயற்கைத் தொடர்ச்சியின் ஓர் அங்கமாக உணரும்போது தனிமை, அச்சம், அளவற்ற எதிர்பார்ப்பு ஆகியவை தளர்கின்றன. இதனையே “தாள்சேர்தல்” என மெய்யியல் நிலையில் விளக்கலாம்.

குறள் 8

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்

பிறவாழி நீந்தல் அரிது. - குறள் எண்: 8

இக்குறளில் இறைநிலைக்கும் அறத்திற்கும் நேரடியான தொடர்பு நிறுவப்படுகிறது. “அறவாழி” என்பது அறக்கடல்; அளவிட முடியாத அறப்பெருக்கு. “அந்தணன்” என்பதனைச் சாதிப் பெயராக மட்டும் கொள்ள முடியாது. திருவள்ளுவரே:

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்

செந்தண்மை பூண்டொழுக லான். - குறள் எண்: 30

என்று அறவோனையே அந்தணன் என வரையறுக்கிறார்.

எனவே “அறவாழி அந்தணன்” என்பது அறத்தையே பேரியல்பாகக் கொண்ட இறைநிலை. இங்கு கடவுள் முதலில் வந்து அறத்தை உருவாக்கவில்லை; அறத்தின் பெருங்கடலாக இருப்பதே இறையின் அடையாளம்.

“பிறவாழி” என்பதை மறுபிறப்புச் சுழற்சியாக மட்டும் அல்லாமல், ஆசை, அச்சம், அறியாமை, பற்று ஆகியவற்றால் மீண்டும் மீண்டும் உருவாகும் துன்பச் சுழற்சியாகவும் படிக்கலாம். அறமுதல் உணர்வின்றி அந்தச் சுழற்சியிலிருந்து நீந்திக் கரையேறுதல் அரிது.

குறள் 9

கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை. - குறள் எண்: 9

கண் இருந்தும் காணாமலும், செவி இருந்தும் கேளாமலும் இருப்பின் அவற்றால் பயன் இல்லை. அதுபோல், உண்மையை உணராத தலைக்கு அறிவுப் பயன் இல்லை என வள்ளுவர் கூறுகிறார்.

“எண்குணத்தான்” என்பதற்கு சைவம், வைணவம், சமணம் ஆகிய மரபுகள் வெவ்வேறு எட்டுக் குணங்களைத் தருகின்றன. சிலர் “எண்ணப்படும் எல்லா நற்குணங்களையும் உடையவன்” என்றும் பொருள் கூறுகின்றனர். இவ்வாறான பல சமய விளக்கங்களைப் பலசமயத்தவரும் தங்கள் இறைக் கோட்பாட்டிற்கு இத்தொடரைப் பொருத்தியுள்ளனர்.

க. பூரணச்சந்திரன், முதல் எட்டுக் குறள்களில் கூறப்பட்ட பண்புகளின் தொகுப்பே “எண்குணம்” என்றும், அவற்றை உடைய உயர்ந்த மாந்தரைக் குறிக்கலாம் என்றும் கூறுகிறார்.

பெருஞ்சித்திரனார் “எண்குணத்தான்” என்பதற்கு மரபுரைகள் கூறும் “எட்டுக் குணங்களை உடையவன்” என்ற பொருளை ஏற்கவில்லை. “எண்” என்னும் முன்னொட்டு இங்கு “எளிமை” என்னும் பொருளைத் தருவதாகக் கொண்டு, “எளிய இயல்பினை உடையவன்”, “அன்பார்களுக்கு எளிவந்தவன்”, “எல்லார்க்கும் எளியவன்” என்று விளக்குகிறார். எனவே, உயர்ந்த அறமுதல் நிலை மனித அறிவிற்கு எட்டாத, அணுக முடியாத ஒன்றன்று; எல்லாரும் அணுகி உணரக்கூடிய எளிய இயல்புடையது என்பதே “எண்குணத்தான்” என்னும் தொடரின் சிறப்புப் பொருளாகிறது.

5.5 வாழ்க்கைக் கடலைக் கடத்தும் இறைநிலை

குறள் 10

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார்.- குறள் எண்: 10

இக்குறளில் மீண்டும் “இறைவன்” என்னும் சொல் வருகிறது. “அடி சேர்தல்” என்பது உடல் உறுப்பான காலடியில் இருப்பது அன்று. ஒரு கொள்கையை அடிப்படையாக ஏற்றல், அதில் மனத்தை நிலைநிறுத்தல், அதன் வழி வாழ்தல் ஆகிய பொருள்களைத் தருகிறது.

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

“பிறவிப் பெருங்கடல்” என்பதற்கு சமய மரபில் பிறப்பு-இறப்பு சுழற்சி என்று பொருள் கூறப்படுகிறது. ஆனால் வாழ்வியல் நிலையில், அறியாமை, ஆசை, வெறுப்பு, பற்று, குற்றம், துன்பம் ஆகியவை ஒன்றிலிருந்து ஒன்று பிறக்கும் முடிவற்ற சுழற்சியாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

அறமுதல் உணர்ந்தவர் தமது தனிப்பட்ட ஆசைகளை மட்டுமே வாழ்க்கையின் மையமாகக் கொள்ளமாட்டார். தம்மை இயற்கை, உயிர்கள், சமூகம் ஆகியவற்றோடு இணைந்தவராக உணர்வார். அதுவே பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கான படகாகிறது.

6. கடவுள், இறை, தெய்வம்: சொற்பொருளும் இயற்கை மெய்யியலும்

இன்றைய பொதுவழக்கில் “கடவுள்”, “இறைவன்”, “தெய்வம்” ஆகிய சொற்கள் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் திருக்குறளின் சொல் ஆளுகையில் அவை ஒரே பொருளைத் தருவதாகத் தோன்றவில்லை.

கடவுள்

“கடவுள்” என்பதற்கு “கடந்து உள்ளவர்” என்ற விளக்கம் வழங்கப்படுகிறது. மேலும் “கடவுதல்” என்பது இயக்குதல், செலுத்துதல் என்னும் பொருளையும் தருகிறது. இச்சொல் திருக்குறளில் இடம்பெறவில்லை என்பது முக்கியமானது. இதனால் திருவள்ளுவர் இறைமையை மறுத்தார் என்று கட்டாயமாக முடிவு செய்ய முடியாவிட்டாலும், “கடவுள்” என்ற சொல்லின் வழக்கமான புராண-சமயப் பொருளை அவர் தவிர்த்திருக்கலாம் என்ற கருதுகோள் எழுகிறது.

க. பூரணச்சந்திரன், உயிர்களுக்கும் மனிதருக்கும் அப்பால் நின்று அவற்றை இயக்கும் அதீத சக்தியை “கடவுள்” என்ற சொல் குறிக்கிறது என்றும், அத்தகைய கருத்தை வள்ளுவர் ஏற்காததால் அவர் அச்சொல்லைப் பயன்படுத்தவில்லை என்றும் கருதுகிறார்.

இறை - இறைவன்

“இறை” என்பது அரசன், தலைவன், உரிமையாளர், உயர்ந்த நிலை, அடைக்கலம் ஆகிய பொருள்களில் தமிழிலக்கியங்களில் வழங்குகிறது. திருக்குறளில் அரசனைக் குறிக்கும் இடங்களிலும் “இறை” பயன்படுத்தப்படுகிறது. முதல் அதிகாரத்தில் வரும் “இறைவன்” என்பது ஆளுமைக் கடவுளா, உலகின் இறுதி நிறைநிலையா அல்லது உயர்ந்த அறவோனா என்பது உரையின் அடிப்படையில் மாறுகிறது.

பெருஞ்சித்திரனாரிடம் அது முழுமுதல் இறைமையைக் குறிக்கிறது. க. பூரணச்சந்திரனிடம் அது மனிதன் அடைய வேண்டிய இறுதி உயர்நிலையை அடைந்த சான்றோரைக் குறிக்கிறது. மரபுரைகளில் அது கடவுளைக் குறிக்கிறது.

தெய்வம்

திருக்குறளின் முதல் அதிகாரத்தில் "தெய்வம்" என்ற சொல் இல்லை. ஆனால் குறளின் பிற இடங்களில் அது வருகிறது:

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

– *திருக்குறள்*, குறள் 50

இங்கு மனிதன் அறநெறியில் வாழ்ந்து தெய்வநிலைக்கு உயர்வது கூறப்படுகிறது. எனவே "தெய்வம்" என்பது பிறப்பிலேயே மனிதனுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்று மட்டும் வள்ளுவர் கருதவில்லை; அறவாழ்வால் மனிதன் பெறும் உயர்நிலையாகவும் அது அமைகிறது.

"தெய்வம்" என்ற சொல்லுக்கு இயற்கைசார் வேர்ச்சொல் விளக்கத்தை

தேய் → தேவ் → தேவு

தேவு → தேவன்

தேவு → தேவி

தேய்த்தலால் வெப்பமும், வெப்பத்தால் தீயும், தீயால் ஒளியும் தோன்றிய இயற்கை அனுபவத்திலிருந்து "தேய்", "தீ", "தேவு", "தெய்வம்" ஆகிய சொற்கள் வளர்ந்தன என்று செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலி விளக்குகிறது.

இந்தக் கருதுகோள் இக்கட்டுரைக்கு ஒரு முக்கியமான பார்வையை அளிக்கிறது: தொடக்க மனிதனுக்கு "தெய்வம்" என்பது கண்ணுக்குத் தெரியாத ஆளுமையைவிட, ஒளி, தீ, சூரியன், மழை போன்ற உயிர்வாழ்வின் இயற்கை ஆற்றல்களைக் குறித்திருக்கலாம். பின்னர் அவ்வாற்றல்களின் பெயர்கள் ஆளுமைப்படுத்தப்பட்டிருக்கலாம்.

இதன்மூலம் சொற்களின் வளர்ச்சி பின்வருமாறு அமைந்திருக்கலாம் என்ற ஆய்வுக் கருத்து முன்வைக்கப்படுகிறது:

இயற்கை ஆற்றல் → வாழ்வளிக்கும் பண்பு → போற்றத்தக்க நிலை → தெய்வப் பெயர் → ஆளுமைக் கடவுள்

பெருஞ்சித்திரனாரின் "அறமுதல்" கருத்து இவ்வளர்ச்சியின் தொடக்கநிலையை மீண்டும் கண்டடைகிறது. அதாவது, பெயரிடப்பட்ட தெய்வங்களுக்குப் பின்னால் உள்ள இயற்கை, உயிர், அறிவு மற்றும் அறத்தின் மூலத்தை நோக்கச் செய்கிறது.

7. பல்வேறு உரைவாசிப்புகளும் உலக மெய்யியல் ஒப்புநோக்கும்

திருக்குறளின் முதல் அதிகாரம் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் முதலிய பல மரபுகளால் தத்தம் நோக்கில் விளக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கப் பன்மையே வள்ளுவரின் சொற்கள் ஒரு குறிப்பிட்ட சமய எல்லைக்குள் அடங்காத தன்மையைக் காட்டுகிறது.

க. பூரணச்சந்திரனின் விளக்கம் இதிலிருந்து வேறுபடுகிறது. அவரது பார்வையில் பத்துக் குறள்களும் கடவுளின் பண்புகளாக அல்லாமல், மனித நிலையிலிருந்து உயர்ந்த சான்றோரின் பண்புகளாக அமைந்துள்ளன. "பொறிவாயில் ஐந்தவித்தான்" "அறவாழி அந்தணன்" போன்ற தொடர்கள் மனிதனாக இருந்து புலன்களை அடக்கி அறநிலைக்கு உயர்ந்தவர்களையே சுட்டுகின்றன என்று அவர் கூறுகிறார்.

பெருஞ்சித்திரனார் இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்டதையும் கடந்ததையும் போன்ற பார்வையை முன்வைக்கிறார். அவரிடம் இறைநிலை முழுமுதல் இருப்பாக உள்ளது; ஆனால் மனிதன் அதை உணர வேண்டியது புலனடக்கம், அறிவு, அறவொழுக்கம் ஆகியவற்றின் வழியாகவே. ஆகவே இறைமை உலகிற்கு அப்பாற்பட்டதுமன்று; ஒரு வரலாற்று மனிதருக்குள் மட்டும் அடங்குவதுமன்று. உலகிலும் உயிரிலும் அறிவிலும் அறத்திலும் வெளிப்படும் மூலநிலை.

8. இறுதி இறைநிலை கருத்தாக்கம்

திருக்குறளின் முதல் அதிகாரம் ஒரு குறிப்பிட்ட சமயக் கடவுளின் பெயரையோ, உருவத்தையோ, புராணத்தையோ வழங்கவில்லை. சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தர் ஆகிய எந்தப் பெயரும் நேரடியாக இடம்பெறவில்லை. அவதாரம், கோயில், சிலை, வேள்வி, பலி, படையல், பூசை, மந்திரம் ஆகிய சமயச் செயல்களும் கூறப்படவில்லை. மாறாக, உலகின் முதல், தூய அறிவு, விருப்பு-

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

வெறுப்பின்மை, இருவினை கடந்த நிலை, புலனடக்கம், பொய்யற்ற ஒழுக்கம், ஒப்பின்மை, அறப்பெருக்கு, மனக்கவலை நீக்கம் ஆகிய பண்புகளே முன்வைக்கப்படுகின்றன.

இதனால் முதல் அதிகாரத்தின் இறைநிலை குறித்துப் பின்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன:

ஒன்று: "கடவுள் வாழ்த்து" என்ற தலைப்பு மரபு வழங்கிய பெயராக இருக்கலாம்; "கடவுள்", "வாழ்த்து" ஆகிய சொற்கள் பாடல்களில் இல்லாததால் அத்தலைப்பை ஆய்வின்றி இறுதியானதாகக் கொள்ள முடியாது.

இரண்டு: பெருஞ்சித்திரனார் வழங்கும் "அறமுதல் உணர்தல்" என்ற பெயர், அதிகாரத்தின் மையத்தை வழிபாட்டிலிருந்து அறவுணர்வுக்கு மாற்றுகிறது.

மூன்று: அவரது விளக்கத்தில் "ஆதிபகவன்" என்பது ஒரு குறிப்பிட்ட புராணக் கடவுள் அன்று. உயிர், பொருள், உணர்வு, அறிவு முதலிய பகுப்புகளுக்கு முற்பட்ட முழுமுதல் இருப்பாக அது விளங்குகிறது.

நான்கு: இந்த முழுமுதல் உலகிற்கு வெளியே நின்று உலகை இயக்கும் ஆளுமையாக மட்டும் கருதப்படவில்லை. உலகிலும் இயற்கையிலும் உயிரிலும் அறிவிலும் அறத்திலும் வெளிப்படும் மூலநிலையாகப் புரிந்துகொள்ளப்படுகிறது.

ஐந்து: பத்துக் குறள்களிலும் கூறப்படும் இறைப்பண்புகள் மனிதன் வாழ்வில் அடைய வேண்டிய பண்புகளாகவும் அமைந்துள்ளன. வாலறிவு, பற்றின்மை, புலனடக்கம், பொய்யற்ற ஒழுக்கம், அறப்பெருக்கு ஆகியவற்றை மனிதன் தன்னுள் வளர்த்தல் வேண்டும்.

ஆறு: க. பூரணச்சந்திரன் இப்பண்புகளை உயர்ந்த மாந்தர் அல்லது சமணச் சான்றோரின் இயல்புகளாகப் பார்க்கிறார். மரபுரைகள் அவற்றை முழுமுதற் கடவுளின் பண்புகளாகப் பார்க்கின்றன. பெருஞ்சித்திரனார் அவற்றை முழுமுதல் இறைமையின் இயல்புகளாகவும், மனிதன் உணர்ந்து அடைய வேண்டிய அறநிலைகளாகவும் ஒருங்கிணைக்கிறார்.

ஏழு: "தெய்வம்" என்ற சொல்லைத் தீ, ஒளி, கதிரவன் முதலிய இயற்கை ஆற்றல்களுடன் இணைக்கும் சொல்லாய்வுகள், தமிழரின் தொடக்க இறைமை இயற்கை அனுபவங்களிலிருந்து வளர்ந்திருக்கலாம் என்ற மாற்றுக் கருதுகோளை வழங்குகிறது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

எட்டு: வள்ளுவரின் இறைநிலையை “இந்து கடவுள்”, “சமணக் கடவுள்”, “பௌத்த ஞானி” என்று ஏதேனும் ஒரு பெயருக்குள் முழுமையாக அடைப்பது கடினம். பாடல்களின் திறந்த பண்புமொழி பல்வேறு வாசிப்புகளுக்கு இடமளிக்கிறது.

முடிவுரை:

இவ்வாய்வின் இறுதி முடிவை இவ்வாறு தொகுக்கலாம்:

> **பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பார்வையில் திருக்குறளின் முதல் அதிகாரம் வணங்கப்பட வேண்டிய ஓர் ஆளுமைக் கடவுளைப் பற்றியதன்று; உலகும் உயிரும் அறிவும் அறமும் தோன்றுவதற்கான முழுமுதல் நிலையையும், அந்த அறமுதலை மனிதன் தன் அறிவாலும் அறவாழ்வாலும் உணர வேண்டியதையும் பற்றியதாகும்.**

“கடவுள் யார்?” என்பது இங்கு இறுதி வினாவன்று.

> **“உலகின் முதல் என்ன? அந்த முதல் மனித வாழ்வில் அறமாக எவ்வாறு வெளிப்படுகிறது? அதனை நாம் எவ்வாறு உணர்ந்து வாழ்வது?”**

என்பதே முதல் அதிகாரம் எழுப்பும் ஆழமான வினா.

அந்த வினாவிற்குப் பெருஞ்சித்திரனார் தரும் விடை:

> **இறை என்பது வெளியே தேடப்பட வேண்டிய ஒருவர் அல்ல; இயற்கை, உயிர், அறிவு, அறம் ஆகியவற்றின் மூலமாக உணரப்பட வேண்டிய அறமுதல் நிலை.**

துணைநூற்பட்டியல்

1. **பாவலரேறு பெருஞ்சித்திரனார்.** *திருக்குறள் மெய்ப்பொருளுரை - உரைச் சுருக்கம்: முதற்பகுதி, பொது முன்னுரை.* முதல் பதிப்பு: 10.03.1997; இரண்டாம் பதிப்பு: 02.04.2006. தென்மொழிப் பதிப்பகம், பாவலரேறு தமிழ்க்களம், மேடவாக்கம், சென்னை - 601 302. பக்கங்கள்: 288.
2. **பாவலரேறு பெருஞ்சித்திரனார்.** *திருக்குறள் மெய்ப்பொருளுரை - உரைச் சுருக்கம்: இரண்டாம் பகுதி, குறட்பாக்கள் 1 முதல் 100 வரை.* முதல் பதிப்பு: 10.03.1997; இரண்டாம் பதிப்பு: 02.04.2006. தென்மொழிப் பதிப்பகம், பாவலரேறு தமிழ்க்களம், மேடவாக்கம், சென்னை - 601 302.

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

3. **க. பூரணச்சந்திரன்.** “திருக்குறள் கடவுள் வாழ்த்து.” இணையக் கட்டுரை, 14 ஏப்ரல் 2023.

4. **கணிஞன்.** “கடவுள் வாழ்த்து - அதிகார விளக்கம்” மற்றும் உரைத்தொகுப்புகள். *குறள் திறன்* இணையத்தளம்; (kuralthiran.com)

5. மணக்குடவர் (உரை). *திருக்குறள் மூலமும் மணக்குடவர் உரையும்*. சென்னை: நோபில் அச்சியந்திரசாலை, 1925.

6. பரிமேலழகர் (உரை); கோ. வடிவேலு செட்டியார் (பதிப்பாசிரியர்). *திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்*. மதுரை: மதுரைப் பல்கலைக்கழகம், 1976.

7. மு. வரதராசனார். *திருக்குறள் தெளிவுரை*. 122ஆம் பதிப்பு. சென்னை: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1994.

8. ஞா. தேவநேயப் பாவாணர். *திருக்குறள்: தமிழ் மரபுரை*. 4ஆம் பதிப்பு. சென்னை: பூம்புகார் பதிப்பகம், 2018.

9. செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் அகரமுதலி (https://sorkuvai.tn.gov.in/)

23. தமிழ் இலக்கியத்தில் நீர் பாசன முறைகள்

ஜெ.பாண்டியராஜன்
உணவு மற்றும் மேலாண்மைத்துறை உதவிப்பேராசிரியர்
ஸ்ரீசௌடாம்பிகா அகாடமி உணவு மேலாண்மை கல்லூரி
அருப்புக்கோட்டை.

DOI 10.5281/zenodo.21724446.

Abstract

Among the five elements of nature, water is indispensable for the sustenance of living beings. Recognizing the importance of water, ancient Tamils devised and precisely employed various irrigation methods to harvest rainwater and river water for agriculture. Tamil literature, spanning from the Sangam era to later periods, documents these irrigation practices.

Keywords : Tamil Literature - Ancient Tamilnadu - Rain Water

இயற்கையின் ஐம்பூதங்களில் உயிரினங்களின் இயக்கத்திற்கு மிக இன்றியமையாதது நீர் ஆகும். பழந்தமிழர்கள் நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மழை நீரையும் ஆற்று நீரையும் தேக்கி வைத்து வேளாண்மைக்குக் கொண்டு சேர்க்கும் பல்வேறு நீர் பாசனமுறைகளைத் துல்லியமாகப் பயன்படுத்தியுள்ளனர்.சங்க இலக்கியங்கள் தொடங்கி பிற்கால இலக்கியங்கள் வரை தமிழர்கள் நீர் பாசனமுறைகளை பதிவு செய்துள்ளனர்.

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு" (குறள் 20)

என்ற வள்ளுவரின் கருத்துப்படி தமிழர் நாகரிகம் பண்பாடு ஆற்றங்கரையிலே தோன்றின. பருவமழை பொய்க்கும் காலங்களில் விவசாயம் தடையின்ற நடைபெற பழந்தமிழர்கள் நீர்ப் பாசன கட்டமைப்புகளை உருவாக்கினர் என்பதை இவ்வாய்வு கட்டுரை வழி காண்போம்.

இலக்கியங்கள் காட்டும் நீர் பாசனம்

தொல்காப்பியம் மற்றும் புறநானூறு போன்ற இலக்கியங்களில் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவம் மற்றும் நுட்பங்களைப் பற்றிய தகவல்கள் உள்ளன."குடபுலவியனார் பாண்டிய நெடுஞ்செழியனுக்கு அறிவுரை கூறும்போது பருவ மழையை நம்பி இருக்காமல் நீர்பாசனத் திட்டத்தின் மூலம் நீரைச் சேமித்து விவசாயம் செய்ய அறிவுறுத்தினார் என்பதை

"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவுஎனப்படுவதுநிலத்தோடுநீரே"(புறம்18)

இப்பாடல் வழி அறிய முடிகின்றது. நீர் நிலைகள் இயற்கையாகவே தானாக உருவானதும் உள்ளன. செயற்கையாக மனிதனால் உருவாக்கப்பட்டவையும் உள்ளன. ஏரி,குளம், ஆற்றுப்பாசனம், கிணற்றுப்

பாசனம், மழைநீர் சேகரிப்பு என பழங்கால மக்களால் இவை உருவாக்கப்பட்டவை. மேலும் கிணற்றில் இருந்து நீர் இறைக்கும் பாசனக் கருவிகளைப் பற்றி கபிலர்

"அறைக் கண்ணும் கேணியும் கவடு உற்று
வீழ்ந்த நெறிக் கண் மாப் போல நெறி அழிய ஓடி"
(கலித்தொகை - மருதக்கலி பா.37)

மாடுகளை கொண்டு கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் முறை மற்றும் ஏற்றம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பழந்தமிழர்கள் விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சிய முறையை இப்பாடலில் பதிவு செய்துள்ளதை அறிய முடிகின்றது.

ஆற்று நீர் பாசனம் மற்றும் அணைத்தொழில்நுட்பம்

பழங்காலங்களில் ஆறுகளில் வரும் வெள்ளநீரை வீணாக்காமல் தடுப்பதே முதன்மை பாசனமாக இருந்தது.

"விசும்பின் துளிவீழின் அல்லால் மற்று ஆங்கே
பசும்புல் தாலை காண்ப தரிது (குறள் 16)

என்று வள்ளுவர் வான்பொழியும் நீரே உயிர்ப்பு என்று கூறியுள்ளார். அதுமட்டுமல்ல மழைநீரைச் சேமித்து, சேமித்த நீரை திறம்படப் பயன்படுத்துவதன் மூலமே வேளாண்மை பெரிதும் நடைபெற்றது. இந்த மழைநீரை ஏரி, குளங்களில் சேமித்து வைப்பது பற்றி சிலம்பில் இளங்கோவடிகள்

"இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்
பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித்து ஆண்ட மன்னவன்"
(சிலம்பு- காடுகாண்காதை 27-29)

இப்பாடலடியில் முறையாக பெய்யும் மழைநீரினை ஏரி, குளங்களில் சேமித்து அவற்றை வளம் பெறச் செய்யும் மன்னனின் கடமையை பற்றி கூறியுள்ளதை அறிய முடிகின்றது. மேலும் மணிமேகலையில் அறவாணர் தொழுத காதையில் பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய் பெருங்குளங்களில் ஒரு புறம் உள்ள சுருங்கை வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தரும் என்பதை,

"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல" (சிலம்பு வரிகள் 79- 80)

இதன் வழி அறியலாம். இவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் ஏரி, குளங்களிலிருந்து நீர் வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்ததையும் அறிய முடிகின்றது.

பதிணென்கீழக்கணக்கில் குளம் அமைப்பு

பதிணென்கீழ்க்கணக்கு நுல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம் குளம் அமைக்கும் முறையை காரியாசான் கூறியுள்ளார்.அதில் பொதுக்கிணறு அமைத்தல், மதகுகள்,

வரத்துக்கால், மிகைநீர் வெளியேறும் கலிங்கு, தூம்பு போன்றவைகளை அமைப்பவர் சொர்க்கத்துக்கு போவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.நீர் வரத்துக்கால் நன்கு அமையாத குளம் இருந்தால் அதனால் பயன் குறையும்.தாய்ப்பால் அருந்தாத குழந்தையும், கல்வி அற்ற நிலையில் உள்ளவர்களும் எப்படி சிறக்க முடியாதோ, அதுபோல் வரத்து வாய் நன்கு அமையாத குளமும் இருக்கும் என்று

"வாய்நன் கமையாக் குறனும் வியிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும்
சேய் மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட்டார்"(பா.எண்.83)

திரிகடுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல கண்மாய்களையும்,குளங்களையும் காத்து நின்ற அதாவது முறையாகப் பராமரித்த செய்தியை

"பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே" (அகம்.பா.எண்.25)

அகநானூறு வெளிப்படுத்துகிறது.

மணிமேகலையில் நீர் பாசனம்

இரட்டை காப்பியங்களான மணிமேகலையின் பன்னிரண்டாம் காதையான "அறவாணர் தொழுத காதை" என்ற பகுதியில் "சுருங்கை" எனும் அதாவது பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய். இது பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒரு புறம் உள்ள சிறிய சுருங்கை வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தரும் என்பதை

"பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்
உளமலி உவமையொடு உயிர்கொளப் புகும்" (பா.வரி 84-87)

குறிப்பிடுகின்றது. மேலும் 1600 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தின் ஏரிகளிலும், குளங்களிலும் இருந்து நீர் வெளியேற்றும் மதகு அமைப்பு சுருங்கைகளாக இருந்தன. இதனை"குமிழித்தூம்பு" என்று வழங்கி வந்தனர். இவ்வாறாக பழந்தமிழர்களின் அறிவியல் சார்ந்த நீர் பாசன நுட்பத்தை அறிய முடிகின்றது.

தொகுப்புரை

தமிழ் இலக்கியங்களின் வழியே ஆராயும் போது, பழந்தமிழர்களின் நீர் பாசன முறைகள் வெறும் வாழ்வாதாரத்திற்கானதாக மட்டுமில்லாமல் உயர் தொழில்நுட்ப அறிவியலோடு கலந்திருந்ததை அறிய முடிகிறது. இலக்கியங்கள் காட்டும் இந்த நீர் பாசனப் பண்பாட்டையும், நீர் சேமிப்பு நுட்பங்களையும் இன்றைய நவீன சூழலுக்கு ஏற்ப நாம் மறுசீரமைப்பு செய்து பயன்படுத்துவது எதிர்கால தலைமுறைக்கு பயனுள்ளதாக அமையும்.

துணைநூற்பட்டியல்

1. மு.வரதராசனார்,(உ.ஆ),திருக்குறள்,பாரிநிலையம்,சென்னை .
2. துரைச்சாமிபிள்ளை,ஔவை சு.(உ.ஆ),புறநானூறு,சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
3. நச்சினார்கினியர்(உ.ஆ),கலித்தொகை, உமா பதிப்பகம்,சென்னை.
4. சுப்பிரமணியன் ச.வே(உ.ஆ),சிலப்பதிகாரம்,மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்.
5. புலியூர் கேசிகன் (உ.ஆ),மணிமேகலை,கௌராபதிப்பகம்,சென்னை.

24.திருமந்திரத்தில் மருத்துவமும் பகுத்தறிவு சிந்தனையும்

முனைவர் ரா.விஷ்ணு பிரியா
தமிழ் உதவிப்பேராசிரியர்
இளநிலைதமிழ்த்துறை
அய்ய நாடரர் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி),சிவகாசி.

DOI 10.5281/zenodo.21724513.

Abstract

Thirumoolar's *Thirumandiram* stands not merely as a work of devotional literature or philosophy, but also as a guide for human well-being. It serves as a foundational text for Saiva Siddhanta and constitutes the tenth volume of the *Panniru Thirumurai* (the twelve-volume canon of Tamil Saivite hymns). Its unique synthesis of devotion, philosophy, and medicine is unparalleled. This research paper specifically examines how Thirumoolar emphasizes the importance of the physical body–incorporating medical insights–and articulates rational thought that challenges superstition within the *Thirumandiram*.

Keywords : Thirumoolar - Thirumandiram - Saiva siddhanatam - Philosophy - Human Being

பக்தி இலக்கியமாகவோ தத்துவநூலாகவோ மட்டுமல்லாமல் மனிதர்களின் நல்வாழ்விற்கான வாழ்வியல் வழிகாட்டியாகவும் திகழ்வது திருமூலரின் திருமந்திரம் ஆகும். இந்நூல் சைவ சித்தாந்தத்தின் மூலமாகவும், பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகவும் விளங்குகிறது. இது பக்தியும், தத்துவமும், மருத்துவமும் புதைந்து இருக்கும் சிறப்பினை வேறெதிலும் காணமுடியாது. குறிப்பாக உடம்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அதில் மருத்துவத்தையும், மூடநம்பிக்கைகளைச் சாடும் பகுத்தறிவுச் சிந்தனையையும் திருமூலர் திருமந்திரத்தில் பதிவு செய்துள்ளதை இவ்வாய்வு கட்டுரை வழி காண்போம்.

உடம்பே ஆலயம்

திருமூலர் ஆன்மீக ஞானி மட்டுமல்ல சிறந்த உடற்கூற்று வல்லுநராகவும், சித்த மருத்துவராகவும் , உடலின் இயக்கம்,நோய்க்கான காரணங்கள், நோயைத் தீர்க்கும் வழிகள் குறித்தும் அவர் நுட்பமாக திருமந்திரத்தில் பாடியுள்ளார். மண்ணுலகில் மனிதன் இன்புற்று வாழவும், வீடு பேறு அடையவும் உடல் முக்கியமானது. அவ்வுடம்பை அழியாமல் காப்பதே மருத்துவத்தின் முதற்படி என்பதை

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானஞ் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்"(பா.எண்.724)

இப்பாடல் வழி உடம்பை பேணிக் காப்பது ஆன்மாவை அடைவதற்குக் கட்டாயம் என்ற மருத்துவ அடிப்படையை திருமூலர் வலியுறுத்துகிறார்.அது மட்டுமல்லாது மனித உடலில் இருந்து வெளியே சென்று உள்ளே வரும் மூச்சுக்காற்றை நெறிப்படுத்தப் பழகினால் உடலில் உள்ள நோய்கள் நீங்கும். முதுமை வராமல் இளமையோடு வாழலாம் என்ற சுவாச மருத்துவத்தை

"புறப்பட்டுப் புக்கப் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நினைய வல்லார்க்கு
உறப்பில் பிணிகளும் உலாக் குதிரை
இறப்பதே இல்லை இளமையு மாமே" (பா.எண்571)

இப்பாடலின் வழி விளக்குகின்றார் திருமூலர்.

நோய் குறிகளை அறிதல்

நோய் அறிதல் என்பது பெருங்கலையாகும். உடலில் முக்குண மாறுபாடுகளினால் நோய்கள் ஏற்படுகின்றன என்பது திருமூலரின் கருத்தாகும். வள்ளுவர்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின் (குறள் 942)

அளவறிந்து உண்பதன் அவசியத்தை வலியுறுத்தியது போன்றே திருமூலரும் நிறைந்த வாயுவும், அக்கினியும் சேர்ந்து கருவண்ணமாகவும் அக்கினியும் பித்தமும் கலந்து செவ்வண்ணமாகவும் சேறு போன்ற கபத்தினால் வெண்ணிறமாகவும் நாவில் தோன்றும் என்கிறார் திருமூலர்.

"மேவியவன்னத்தால் விளங்கியது இச்சடம்
பாவியே கொன்று பழியுறு மன்னந்தான்
ஆன் மிதந்தப்பிலையுற்று நோயாகும்
காவிலிவை யெல்லாங் கண்டு கொளன்னமே" (பா.எண.61)

அளவு மீறிய உணவினால் உடலில் பல பிணிகளும் உருவாகும் என்பதை இப்பாடல் வழி அறிய முடிகின்றது.

சாதி ஒழிப்பும் சமத்துவமும்

பகுத்தறிவின் முதற்படி மனிதர்களைப் பிறப்பால் சமமாக நடத்துவதாகும். மூட நம்பிக்கைகளும் சடங்குகளும் மலிந்திருந்த காலத்தில் மனிதன் சிந்தித்து வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். சாதி மதப் பிரிவினைகள் மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கையான தடைகள் என்பதை

" ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே
நினைமின் நமனில்லை நாணாமே" (பா.எண்.2104)

இப்பாடல் உணர்த்துகின்றது.

வெற்று சடங்கும் உருவ வழிபாடு எதிர்ப்பும்

பகுத்தறிவாதிகள் சடங்குகளையும், குருட்டு நம்பிக்கைகளையும், ஆடம்பர வழிபாடுகளையும் எதிர்ப்பவர்கள். அதன் வழி திருமூலர் சித்திரங்கள் வரையப்பட்ட மாடங்களைக் கொண்ட கோயில்களில் இருக்கும் இறைவனுக்கு ஒன்றை வழங்கினால் அது நடமாடும் மனிதனுக்குப் போய்ச் சேராது. ஆனால் பசியோடு நடமாடும் ஏழை மனிதனுக்கு வழங்கினால் அது கோயிலில் உள்ள இறைவனுக்கு கொடுத்ததாகும்.

"படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஆங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே" (பா.எண்.1857)

இப்பாடல் வழி ஏழைகளை புறக்கணிக்கும் சடங்கினை திருமூலர் எதிர்த்து சாடியுள்ளதை அறிய முடிகின்றது.

மனிதாபிமானம்

மதங்கள் கடவுளை அச்சத்திற்குரிய ஒரு பொருளாகவும்,தண்டனை வழங்கும் அதிகாரமாகவும் கட்டமைத்த போது திருமூலர் கடவுள் என்ற கோட்பாட்டை "அன்பு" என்ற பொது பண்பிற்குள் திருமூலர் கூறியுள்ளார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்

அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே(பா.எண்.270)

இப்பாடலில் அன்பு வேறு, கடவுள் வேறு என்று கூறுபவர்கள் அறிவற்றவர்கள். மனித நேயத்தின் உச்சக்கட்டமான அன்பே கடவுள் என்பதை உணர்ந்தால் மனிதன் தானே தெய்வ நிலையை அடைவான் எனக் கூறுவதோடு மூடநம்பிக்கையையும் நீக்குவதை அறிய முடிகின்றது.

தொகுப்புரை

திருமந்திரம் ஆன்மீக நூல் மட்டுமல்லாது வாழ்வியல் வழிகாட்டி நூலும் ஆகும். மனித உடலின் மகத்துவம், பிணி அறியும் தன்மை, உள்ளத்தை பேணும் தன்மை போன்றவற்றோடு மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்ட பகுத்தறிவின் கூறுகளும் திருமந்திரத்தில் பரவிக் கிடந்ததை அறிய முடிகின்றது. அதுமட்டுமல்லாது மனிதனைத் தனக்குள்ளே தேடச் செல்லும் அறிவு நூல் திருமந்திரம்.

பார்வை நூல்கள்

1. திருமூலர்(மூலமும் உரையும்), திருமந்திரம், சைவ சித்தாந்த கழகம், சென்னை.
2. முனைவர் நா.சுப்பு ரெட்டியார், திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள், உமா பதிப்பகம், சென்னை.
3. டாக்டர் த. கோவேந்தன், தமிழர் மெய்யியல் மற்றும் சித்த மருத்துவ வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

25.பியாஜேயின் அனிமிசக் கோட்பாடும் பிள்ளைத்தமிழில் அம்புலிப் பருவமும்

ஆய்வாளர்
திருமதி ந. தமிழரசி ,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி ,
பொள்ளாச்சி-642 001.
tamilgokult@gmail.com, - 9578052748

நெறியாளர்
முனைவர் ஆ.மகாலட்சுமி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்து கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி -642 001.

Piaget’s Theory of Animism and the *Ambuli* Stage in *Pillai-Tamil*

Mrs.N.Tamilarasi,
Full time Ph.d scholar,
Nallamuthu Gounder Mahalingam College, Department of Tamil, Pollachi-642 001
ORCID : 0000-0002-2450-4671

Guide: Dr.A.Mahalakshmi,
Assistant Professor, Department of Tamil,
Nallamuthu Gounder Mahalingam College,
Department of Tamil, Pollachi-642 001
ORCID : 0000-0001-5234-0750

DOI 10.5281/zenodo.21738931.

Abstract

Literature serves as a testament to human life. *Sitrilakkiyam* (minor literary genres) represents the literature of the Nayak period; among these, *Pillai-Tamil* is a genre centered on the child. It involves composing verses that celebrate a deity, a king, or a patron as the central figure. Tradition dictates that *Pillai-Tamil* be composed across ten stages, spanning from the third to the twenty-first month of a child's life. Numerous psychological traits are evident in a child's developmental stages from birth onwards. Psychology has now evolved into a major, distinct field of study. This article aims to analyze and compare these psychological aspects with the stages depicted in *Pillai-Tamil*.

Keywords

Ambuli, Animism, Cognition, Structure, Schema, Self-assertion, Sama, Dana, Bheda, Danda.

ஆய்வுச்சுருக்கம்

இலக்கியங்களே மனித வாழ்வின் சான்றாதாரங்களாக விளங்குகின்றன. நாயக்கர் கால இலக்கியங்களாக சிற்றிலக்கியங்கள் விளங்குகின்றன. இதில் குழந்தையை மையமாகக் கொண்டு எழுந்ததே பிள்ளைத்தமிழ் இலக்கியம் ஆகும். இறைவன், அரசன், வள்ளல்

ஆகியோரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடுவதாகும்.; குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் தொடங்கி இருபத்தொன்றாம் மாதம் வரை பத்துப் பருவங்களில் பிள்ளைத்தமிழ் பாடுதல் மரபு. ஒரு குழந்தை பிறந்தது முதல் அதன் வளர்நிலைப் பருவங்களில் எண்ணற்ற உளவியல் கூறுகள் காணப்படுகின்றன. உளவியல் துறையானது தற்போது தனிப் பெருந்துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. அத்தகைய உளவியல் கூறுகளைப் பிள்ளைத்தமிழின் பருவங்களோடு ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரையானது அமைகிறது.

திறவுச்சொற்கள்

அம்புலி, அனிமிசம், அறிதிறன் , கட்டமைப்பு, ஸ்கீமா ,தன்முனைப்பு , சாமம் , தானம் , பேதம், தண்டம்.

முன்னுரை

சிற்றிலக்கியங்களில் பிள்ளைத்தமிழ் இலக்கியமானது தனிப் பெருஞ்சிறப்புடையது. பத்துப் பருவங்களை உடைய இலக்கியத்தில் ஏழாம் பருவமாக அம்புலி பருவமானது விளங்குகிறது. உயிருள்ள குழந்தையுடன் உயிரற்ற சந்திரனை விளையாட வருமாறு அழைப்பதே அம்புலி பருவமாகும். இது சாம, பேத, தான, தண்டம் என்ற பகுதிகளாக அமைந்துள்ளன. இப்பகுதிகளைப் பியாஜேயின் அரிதிறன் கட்டமைப்புப் படி நிலையில் உள்ள செயலுக்கு முற்பட்ட நிலையுடன் ஒப்பிட்டு ஆய்வதாக இக்கட்டுரையானது அமைகிறது.

ஜூன் பியாஜே

உளவியல் துறையில் இன்றியமையாத அறிஞராக ஜூன் பியாஜே விளங்குகிறார். இவர் ஸ்விட்சர்லாந்து நாட்டு அறிஞர் ஆவார். உளவியலில் இவரது கொள்கையானது அறிதிறன் வளர்ச்சிக் கொள்கை எனப்படுகிறது. “நெய்சா என்ற அறிஞரின் கருத்துப்படி புலன் உறுப்புகள் மூலம் பெறப்படும் செய்திகளைத் தொகுத்தல், சுருக்கி அமைத்தல், விரிவுபடுத்தல், நினைவு கூறுதல் என்ற உளச் செயல்களின் அடிப்படையில் ஆராய்ந்து அவை பற்றி அறிந்து கொள்ளுதல் அறிதிறன் (cognitive ability) எனப்படும். வெளி உலகத்தைப் பற்றித் தெரிந்து

கொள்ள உதவும் உளச் செயல்களை அறிதிறன் (cognitive process) செயல்கள் எனப்படும். இத்தகைய அறிதிறன் செயல்கள் அனைத்தும் நமது புலன் காட்சி, கவனம், சிந்தனை, ஆராய்ந்தறிதல், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல், நினைவு ஆகிய செயல்களுக்கு அடிப்படையாக அமைகிறது." (உளவியல் நோக்கில் கற்றலும் மனித மேம்பாடும்,ப.115) இந்த அறிதிறன் வளர்ச்சியானது தொடர்ச்சியானதாக மட்டும் இன்றி பல படிநிலைகளில் நிகழ்கிறது.

அறிதிறன் கட்டமைப்பு (ஸ்கீமா)

குழந்தை தனது அன்றாட வாழ்வில் நிகழும் பலவற்றை காணும் போது அவை மனப்பதிவுகளாக மாற்றம் பெறுகின்றன. "குழந்தை ஒரு பொருள், மனிதர் அல்லது நிகழ்வினைத் தனது சுற்றுச்சூழலில் சந்தித்து வினைபடும்போது, கற்றல் அனுபவம் உண்டாகிறது. அதாவது ஒரு பொருளைப் பற்றி அறிய அதை உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ கையாள வேண்டும். இவ்வகைச் செயல்கள் வரிசையாகத் துவக்கப்பட்டு மனதில் பதிவுபெறுகின்றன. இம்மனப்பதிவை ஸ்கீமா அல்லது அறிதிறன் கட்டமைப்பு என்று பியாஜே அழைக்கிறார்." (மேலது,ப.116) இவ்வாறு குழந்தை தான் கண்ட மற்றும் அனுபவித்த நிகழ்வுகளே அறிதிறன் கட்டமைப்பாக மாற்றம் பெறுகிறது.

பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சிப்படிநிலைகள்

குழந்தையின் அறிதிறன் வளர்ச்சியைப் பியாஜே நான்கு படிநிலைகளாகக் குறிப்பிடுகிறார். அவை,

"1. புலன் இயக்க நிலை (பிறப்பு முதல் இரண்டு வயது வரை)

2. செயலுக்கு முற்பட்ட நிலை (இரண்டு முதல் ஏழு வயது வரை)

3. புலன{டான செயல்நிலை அல்லது பருப்பொருள் நிலை (ஏழு முதல் பதினொன்று வயது வரை)

4. கருத்தியல் நிலை (11 வயதுக்கு மேல்)" (மேலது,ப-118)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

என்பவை ஆகும். இந்தப் படிநிலைகளானது குழந்தையின் கீமா அதாவது அறிதிறன் கட்டமைப்பு உருப்பெரும் தன்மைக்கேற்ப வளர்ச்சி அடைகிறது. இந்த அறிதிறன் வளர்ச்சியானது ஆரம்பத்தில் உடல் இயக்க நிலையில் இருந்து தொடங்குகிறது. பின்பு அவை மன இயக்க நிலைகளை நோக்கி நகர்கிறது.

செயலுக்கு முற்பட்ட நிலை

செயலுக்கு முற்பட்ட நிலையில் புலத்தூண்டல்களானது குழந்தைகளிடம் உடனடியாக காணப்படும். மேலும் முன்பு பார்த்தவை தான் அனுபவித்தவை பற்றிய சாயல்களும், இந்நிலையில் குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்குத் துணை புரியும். மொழியின் வளர்ச்சியானது இந்நிலையிலேயே குழந்தைக்குத் தொடங்குகிறது. “உயிரற்ற ஜடப் பொருள்களையும் உயிருள்ளவையாக பாவித்தல் (animism) என்ற பண்பானது இந்நிலையில் வளர்கிறது. பொருள்கள் உருவம், இடம் மாறினாலும் அவற்றின் அளவு குறையாது என்னும் கருத்து உணரப்படாது. தாய் தந்தையரை சர்வ வல்லமைப் படைத்தவர்களாகவும், எங்கும் நிறைந்திருப்பவர்களாகவும் இந்நிலையில் கருதுகின்றனர்". (மேலது,ப-120,121) இந்நிலையில் உள்ள குழந்தைகளின் வயதை பியாஜே இரண்டு முதல் ஏழு வயது எனக் குறிப்பிட்டுள்ளார். அம்புலிப் பருவத்தில் உள்ள குழந்தைக்கு பதினெட்டு மாதங்களையே குறிப்பிடுகின்றனர். இருப்பினும் இவ்விரு நிலையில் உள்ள குழந்தைகளின் பண்பானது பொருந்தி வருகிறது.

அம்புலிப் பருவம்

சிற்றிலக்கியங்களில் பிள்ளைத்தமிழபனது பெருஞ்சிறப்புப் பெற்ற நூலாகத் திகழ்கிறது. தான் விரும்பிய ஒருவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடுவதே இந்நூலின் சிறப்பாகும். சாமானிய மக்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பிள்ளைத்தமிழ் இலக்கியங்களானது உருப்பெற்றுள்ளன. தற்போது வரை நூற்றுக்கும் மேற்பட்ட பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் பாடப்பெற்றுள்ளன. இந்நூலானது பத்துப் பருவங்களை உள்ளடக்கியது. இதில் அம்புலிப் பருவமே பாடுவதற்குக் கடினமான பருவம் என்பதைப்

பிள்ளைத்தமிழுக்கு அம்புலி புலி என்ற பழமொழி விளக்குகிறது. உயிருள்ள குழந்தையானது உயிரற்ற நிலவை அழைத்து விளையாடுவதாக இப்பருவமானது அமைகிறது. குழந்தையைப் புரிந்து கொள்ள இருவகை உறவுகளை அறிஞர் குறிப்பர் அவையாவன “புறவய நோக்கு, அகவய நோக்கு என்பனவாகும். புறவய நோக்கு என்பது குழந்தையின் உயரம், எடை, பருமன், நிறமைகள் போன்றவற்றைக் குறிப்பதாகும். அகவய நோக்கு என்பது குழந்தையின் நோக்கில் உலகம் எத்தகையது எனக் காண்பதாகும்.” (அப்புள்ளாச்சாரி.2006) அம்புலிப் பருவம், குழந்தையைத் தாய் அறிய முற்படும் அகவய நோக்காக அமைகிறது

சாமம்: குழந்தைக்கும் நிலவுக்கும் உள்ள ஒற்றுமையைக் கூறி நிலவை விளையாட அழைப்பது இப்பகுதி ஆகும்.

பேதம்: குழந்தைக்கும் நிலவுக்கும் உள்ள வேற்றுமையைக் கூறி குழந்தை உயர்ந்தது என்று கூறுவது இப்பகுதியாகும்.

தானம்: குழந்தையோடு விளையாட நிலவு வந்தால், நிலவுக்கு பலப் பொருள்களைப் பரிசாகத் தருவேன் என்று பாடுவது இப்பகுதி ஆகும்.

தண்டம் : குழந்தையோடு விளையாட நிலவு வரவில்லை எனில் அதற்காக நிலவுக்கு தண்டனை கொடுப்பது இப்பகுதியாகும். இவ்வாறாக அம்புலிப் பருவமானது சாமம், பேதம், தானம், தண்டம் என்ற நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சாம உத்தியும் - தன்முனைப்புச் சிந்தனையும்

குழந்தையும் சந்திரனும் சமம் ஆவர். இருவரிடமுமே ஒத்தத் தன்மைக் காணப்படுகிறது என்பதே இப்பகுதியாகும். குழந்தையாகிய வல்லியம்மை மனிதர்களின் ஆணவ மல இருளை நீக்குகிறாள். சந்திரன் புற இருளை நீக்குகிறான். இதை,

> **“சகசவிருள் நீக்குதலால் அங்கினிய அஞ்சொலியோ டொத்துள்ளாய்**
> **ஆதலால் அம்புலீ ஆடவாவே" (முயங்கு,வல்,பிள்,தமிழ்,பா.63)**

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. இங்கு நீக்குதல் என்ற பொருளால் உயிருள்ள அன்னையும், உயிரற்ற சந்திரனும் ஒரு தன்மை உடையவர்களாகின்றனர். இங்கு குழந்தையாகிய அன்னை நிலவுக்கு உயிர் இருப்பதைப் போன்று உணர்கிறார். இது குழந்தையின் தன் முனைப்பு நிலையைக் குறிக்கிறது. *“சாமம் என்னும் பாடுபொருள் குழந்தையின் ஒப்பார் குழுவைக் குறிக்கிறது. அதாவது ஒத்த வயதும் ஒத்த நிலையிலும் உள்ள பிள்ளைகள் ஒன்றுடுவதால் ஒப்பார் குழு உருவாகிறது. இது கற்றல் கற்பித்தல் முறைக்கு உரிய உளவியல் என்பர். என்ற கருத்து உருவாகிறது. பேதம், தானம் என்பவை ஒப்பார் இனம் வகையில் நோக்கும்போது, ‘சாமம்’ என்பதில் உளவியலாகக் கற்கும் குழந்தைக்கு ஒப்பார் குழுவாக (peer group) நிலவைத் தாய் அறிமுகம் செய்து வைக்கிறாள்.”* (விக்னேசு.ப.163) புலன் இயக்க நிலையில் இருந்து வளர்ந்த குழந்தையானது குறியீட்டு நிலைக்கு மாறுவது இந்நிகழ்வாகும். தான் பார்க்கும் பொருள் தன்னுடனே பயணிக்கிறது. அதன் தன்மை குறித்தோ, பயன் குறித்தோ அறியும் நிலை அக்குழந்தைக்கு இல்லை என்பது புலனாகிறது.

பேத உத்தியும் - மையப்படுத்துதலும்

நிலவின் குறைகளைச் சுட்டிக் காட்டுதலாகும். ஒரு பொருளின் ஒரு குறிப்பிட்டப் பண்பை மட்டுமே குழந்தை அறிந்திருக்கும் நிலையாகும். நிலவின் வளர்ச்சி, தேய்வுப் பற்றி அறிவியல் ரீதியாகக் குழந்தை அறிந்திருக்காது. நிலவைப் பற்றித் தாய்க் கூறியதைப் பற்றிய அறிவு நிலையிலேயேக் குழந்தையின் அறிதிறன் வளர்ச்சியானது அமைந்திருக்கும். குழந்தையானது தான் நோக்கும் ஒரு பொருளில் உள்ள வேற்றுமையை அறிய இயலாத நிலையாகும். அன்னை தனது குழந்தையுடன் நிலவை ஒப்பிட்டு அவற்றின் உயர்வு, தாழ்வு பற்றிக் குறிப்பிடுவது இப்பகுதியாக அமைகிறது. இதை,

“பதிபிரிந் துறுமாதர் குழுவெலா முன்னைப் பழிப்பார்க

ளிவளை நித்தம் விரைமலர்க டூய்ப்பணிவ

ராதலா னிற்கதிக மேன்மையுடை யாளெனற்கு விளம்புமை

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

யஞ்சிறிது மில்லையிவ ளைப்போல

மேவுதுணை நிற்கில்லைகா ணரைநிமிட மும்பொறா துறைசுருதி

முதல்வியுட னம்புலீ யாடவாவே (பவானி பிள்.தமிழ்,பா-67)

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன. கல்வி, வணிகம், போர் இவற்றுள் ஏதேனும் ஒரு காரணமாகக் கணவனைப் பிரிந்த மகளிர் சந்திரனைப் பழிப்பார்கள். ஆனால் நித்தமும் அன்னையாகிய வேதநாயகி அம்மையை குவளை மலர்த் தூவிப் பணிவார்கள். ஆதலால் சந்திரனை விட அன்னையானவள் உயர்ந்தவள் என்பதால் அவளுக்கு நிகர் வேறு யாருமில்லை என்று வேறுபாடு கூறுவதால் இது பேத உத்தியாக அமைகிறது. சிவபெருமானின் தலையில் ஒரு சிறு இடத்தில் மட்டுமே சந்திரன் தங்குகிறான் ஆனால் என் அன்னையோ சிவபெருமானின் உடம்பில் செம்பாதியாக இருப்பதை,

“தளஞ்சேர் நல்லுயிர் தாமனைத்துமா யிருப்பளிவள்

தண்டமிழ்க்கட வுள்முருகன்

தாள்பணிந்து வழிபடும் முருகநாதர் சிரத்தொருகூறு

தயங்குமிவள் தனுப்பாதியள் அளஞ்சேர் அம்பூண்டி அன்னையுனை

அழைக்கின்றாள் அம்புலீ ஆடவாவே” (முய.பிள்,பா-65)

என்ற பாடல் குறிப்பிடுகிறது. மேலும் சந்திரன் வளர்த்தல், தேய்தல் என்ற தன்மையை உடையவன். அவ்வாறு வளரும் பிறைகளானது பதினாறு மட்டுமே ஆனால் அன்னை வளர்ப்பதோ அறுபத்து நான்கு கலைகள் என்பதை,

“வளைஞ்சர் கலைகளில் உயர்ந்திடுவாய் தேய்ந்திடுவாய்

வன்கலைகள் நிறைந்திடுவள் வளர்ந்தாலும் கலைகள்

பதினாறு உனக்கென்று வளர்கலைகள் அறுபத்து நான்கு” (முய,பிள்,பா.65)

என்ற வரிகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு நிலவுடன் ஒப்பிடப்படும் குழந்தையே உயர்ந்தது என்று கூறுவது அம்புலிப் பருவமாகும். இதில் பியாஜேயின் மையப்படுத்துதல் பண்பானது

அமைந்துள்ளது. குழந்தைக்கு நிலவு மட்டுமே தெரியும். அதன் குறிப்பிட்டப் பண்பு பற்றியோ, அறிவியல் தன்மை பற்றியோ அறிந்திருக்காது. அதன் உண்மைத்தன்மைப் பற்றிய அறிவு நிலையில் இல்லாமல் தன் தாய் கூறிய நிலையிலேயே, குழந்தையானது நிலவை அணுகுவது இந்நிலையாகும்.

தான உத்தியும் - தன்முனைப்பும்

இலக்கியங்களில் நிலவானது சிறந்த உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிலவைத் தன் காதலனாகக், காதலியாக, மனைவியாகக் கற்பனை உவமையில் பயன்படுத்தியுள்ளனர். அவ்வகையில் குழந்தைத் தன்னுடன் விளையாட வரும் தோழமையாகக் கற்பனை செய்து கொள்கிறது. நிலவை அன்புடன் ஆசை வார்த்தைகள் கூறி அழைப்பது தான உத்தியாகும். நீ கேட்டது எல்லாம் அன்னை தருவாள் அவளோடு அம்புலி ஆடவா என்று சந்திரனை அழைப்பதாக,

“இனிதுநீ வேட்டவை யெலாமருள வெண்ணியே யிப்போது
நினையழைத்தாள் சகலவுயிர் கட்டுமே
தாயாகி யாண்டரு டயாபரி கலாநிதியெனத் தங்குநின் மீதுவகை
மிகவுறுவ ளாதலாற் றாழ்க்காது மீக்கொளுறு
மனமகிழ்வி னொடுகருணை யுறு சுருதி
முதல்வியு னம்புலீ யாடவாவே” (பவாநி,அம்புலி,பா.68)

என்ற பாடல் வரிகள் அமைந்துள்ளன. குழந்தை தான் விரும்பும் பொருளின் மேல் அதிக ஈர்ப்புடன் இருக்கும் நிலையே தன்முனைப்பாகும். அவ்வாறு தான் விரும்பும் பொருளானது உயிர் உள்ளதா உயிர் அற்றதா என்று ஆராயாமல் தான் விரும்பும் பொருளுடன் அதிக ஈர்ப்போடு அணுகுவதே இந்நிலையாகும். இதில் குழந்தையானது அதிக தன் முனைப்புடன் செயல்படும். அதனால் தன்னோடு விளையாடப் பொருளைக் கொடுத்து நிலவை அழைக்கிறது.

தண்ட உத்தியும் - தர்க்கமின்மையும்

சந்திரனை அன்னை விளையாட அழைக்கிறாள். அவ்வாறு நீ வாராதிருந்தால் அன்னையுடைய சாபம் உன்னை அடையும். இதை,

"நன் மொழியாள் அழைத்திட நண்ணிநீவா ராதிருந்தால்
நனிசாபம் உனை அடையும்" (பூங்.பிள்.தமிழ்,அம்புலி,பா-10)

என்ற பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. சிறுவனாகிய நீ வரவில்லை எனில் அன்னையின் கோபத்திற்கு ஆளாகும் என்பதை

"எந்தாயுனை நந்தியழைத் திட்டாளேன் என்றெண்ணாது
எண்ணிநீவரின் நண்ணிடுநன்மை சிந்தைசெய்
தழைக்கின்றாள் சிறுவநீவா ராதிருந்தால் சீறிலுண்டாம்
ஊறுதானறிவை சினவாதிவள் இருக்கச்சீக் கிரத்தேநீ
வந்திடுவாய் சிலம்பன்தாய் விரும்பி யழைக்க அந்திநி றவண்ணன்
அருந்தேவி அன்னையுடன் அம்புலீ ஆடவாவே (முய,பிள்.அம்,பா.70)

என்ற பாடல் குறிப்பிடுகிறது. இவ்வாறு உயிர் இல்லாத சந்திரனைச் சிறுவனாக எண்ணி அழைப்பதும் அச்சந்திரனுக்குத் தண்டனை வழங்குவதும் இந்நிலையாகும். பூமியில் உள்ள குழந்தை வான்வெளியில் உள்ள நிலவை அழைத்து தண்டனை வழங்குவது உண்மையில் நிகழாத ஒன்றாகும். இது குழந்தையின் தர்க்க ரீதியற்ற நிலையைக் காட்டுகிறது.

முடிவுரை

பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் குழந்தைப் பருவ உளவியலோடு தொடர்புடையது புலனாகிறது. குழந்தையானது பிறந்தது முதல் அதன் ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் குழந்தை உளவியலானது வெளிப்படுகிறது. அதில் குழந்தையின் எண்ணங்கள் மட்டுமின்றி அக்குழந்தையை வளர்க்கும் தாயின் மனநிலையானது வெளிப்படுகிறது.. அம்புலிப் பருவத்தில் குழந்தைக்கு முதன் முதலில் தாயானவள் நிலவை ஒரு விளையாட்டுப் பொருளாக அறிமுகப்படுத்துகிறாள். அந்த அம்புலிக்கு உயிர் கொடுத்து தன் குழந்தையுடன் விளையாட

அழைக்கும் போதும் உளவியல் தன்மை வெளிப்படுகிறது. இது அக்குழந்தையின் தாயின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது. தனது குழந்தையானது பூமியில் அல்லாமல் எட்டாத தூரத்தில் உள்ள வான்வெளியிலும் தனது குழந்தையானது பயணிக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட பருவமாக அம்புலி பருவமானது விளங்குகிறது. தாய் தனது குழந்தையை உயர்ந்த எண்ணங்களை நோக்கியே வளர்த்தெடுக்கிறாள் என்பதும் புலப்படுகிறது. இந்த அம்புலிப் பருவத்தில் உள்ள குழந்தையின் மனநிலையையும் வளர்ச்சியையும் பியாஜேயின் அறிதிறன் வளர்ச்சிக் கோட்பாட்டுடன் ஒத்துப் போகிறது.

துணை நின்ற நூல்கள்

1.நாகராஜன்,கி,பேராசிரியர். *உளவியல் நோக்கில் கற்றலும் மனித மேம்பாடும்.* ஸ்ரீராம் பதிப்பகம், சென்னை 600093, முதற்பதிப்பு – 2013.

2.சென்னியப்பனார்,ந,இரா,முனைவர். *அருள்தரு பூங்கோதையன்னை பிள்ளைத்தமிழ்.* பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கோவை – 21, முதற்பதிப்பு – 2025.

3.பழனியப்பன்,அ, புலவர், (உ.ஆ). *பவானி வேதநாயகியம்மை பிள்ளைத்தமிழ்.* சம்பூர்ணம் பதிப்பகம், ஈரோடு – 638 312, முதற்பதிப்பு – 2006.

4.சென்னியப்பனார்,ந,இரா,முனைவர். *அருள்தரு முயங்கு பூண்முலை வல்லியம்மை பிள்ளைத்தமிழ்.* திருமுருகநாதசுவாமி அறக்கட்டளை, திருமுருகன் பூண்டி, முதற்பதிப்பு – 2004.

5.விக்னேசு,சு. *பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையில் படைப்பாளியின் உளவியல்.*

சர்வதேச தமிழ் ஆய்விதழ், னுழுஐ : DOI : 10.34256/irjt224S1821,2002.

6.அப்புள்ளாச்சாரி. *குழந்தை உளவியல்.* சாந்தா பதிப்பகம்,சென்னை, முதற்பதிப்பு -2006.

References

1. Nagarajan, K. (Professor). *Learning and Human Development from a Psychological Perspective*. Sriram Publications, Chennai 600093, First Edition – 2013.

2. Chenniyappanar, N. R. (Dr.). *Arultharu Poongothai-annai Pillai-tamil*. Panniru Thirumurai Research Centre, Coimbatore – 21, First Edition – 2025.

3. Palaniappan, A. (Pulavar) (Ed.). *Bhavani Vedhanayaki-ammai Pillai-tamil*. Sampoornam Publications, Erode – 638 312, First Edition – 2006.
4. Chenniyappanar, N. R. (Dr.). *Arultharu Muyangu Poonmulai Valli-ammai Pillai-tamil*. Thirumuruganatha Swamy Trust, Thirumurugan Poondi, First Edition – 2004.
5. Vignesu, S. *The Psychology of the Creator in the Pillai-tamil Literary Genre*. International Research Journal of Tamil (IRJT): DOI: 10.34256/irjt224S1821, 2002.
6. Appullachari. *Child Psychology*. Shantha Publications, Chennai, First Edition – 2006.

26. பாரதியின் பாடல்களில் கலைமகள் வழிபாடு

ஆய்வாளர்

மு.கீர்த்தனா,
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண்: 23212014022004,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தமிழாய்வு மையம், தூத்துக்குடி - 628002.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

நெறியாளர்

முனைவர் ர.செல்வலதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தமிழாய்வுமையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி - 628002, தமிழ்நாடு, இந்தியா

DOI 10.5281/zenodo.21739037.

Abstract:

In the songs of Bharati, the worship of Kalaimagal encompasses the veneration of deities representing various attributes–such as the Goddess of Arts (Kalaimagal), Thirumagal (Goddess of Wealth/Lakshmi), Malaimagal (Goddess Parvati), and the embodiments of education, prosperity, and valor. He has composed verses celebrating her form as she sits upon a white lotus. Deeply devoted to Shakti worship, Bharati has sung praises of Shakti in various manifestations, including Kalaimagal, Parasakti, and Kali; the worship of Kalaimagal holds a prominent place among these. This research paper examines the manner in which Bharati worshipped Kalaimagal and analyzes the nature of the appeals he addressed to her.

Keywords : Bharathiyar - Kalaimagal - Thirumagal - Malaimagal -

ஆய்வுச் சுருக்கம் :

பாரதியின் பாடல்களில் கலைமகள் வழிபாடு என்பது கலைகளின் கலைமகள், திருமகள், மலைமகள், கல்வி, செல்வம், வீரம், சரஸ்வதி, இலட்சுமி, பார்வதி தெய்வங்களை போற்றுவதாகும். வெண் தாமரையில் வீற்றிருக்கும் அவளது உருவத்தைப் போற்றும் பாடல்களைப் பாடியுள்ளார். சக்தி வழிபாட்டில் ஆழ்ந்தவர் பாரதி, கலைமகள், பராசக்தி, காளி போன்ற வடிவங்களில் சக்தியைப் புகழ்ந்து பாடியுள்ளார். கலைமகள் வழிபாடு சிறந்து விளங்குகிறது. கலைமகளைப் பாரதி துதித்த வண்ணத்தை அவருடைய வேண்டுகோள்களின் தன்மை பற்றி விளக்கும் விதத்தில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

முன்னுரை

கலைமகள் அளவிட முடியாத அறிவை வழங்குபவள். வெள்ளைத் தாமரை, வீணை, இசை, மழலை மொழி, கல்விக்கான வழி அவளே என்று பாரதி பாடுகிறார். பாரதிக்கு கலைமகள் தெய்வம் மட்டுமல்ல. அறிவின் வடிவம், கலைகளில் தாய், கல்வி மற்றும் ஞானத்தின் இருப்பிடம், ஆன்மீக உயர்விற்கு வழிகாட்டுபவள், கலைமகள் வழிபாட்டில் பாரதி எடுத்துரைக்கும் கருத்துக்களை விளக்கும் விதத்தில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

இயற்கையோடு இணைந்த தெய்வம் :

தமிழ் மக்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலிய பஞ்சபூதங்களை வழிபடுகின்றனர். இவை அனைத்தும் இயற்கையைச் சார்ந்தவை. இயற்கையின் ஒவ்வொரு அங்கத்தையும் தெய்வமாகப் போற்றும் வழிபாடுகள் தமிழர் பண்பாட்டில் காணப்படுகின்றன. பாரதி இயற்கையோடு இணைந்து கலைமகளிடம் வேண்டுகிறார்.

"எங்ஙனம் சென்றிருந்தீர் ? - எனது
இன்னுயிரே ! என்றன் இசையமுதே
திங்களைக் கண்டவுடன் - கடல்
திரையினைக் காற்றினைக் கேட்டவுடன்
கங்குலைப் பார்த்தவுடன் - கடல்
காலையில் இரவியைத் தொழுதவுடன்
பொங்குவீர் அமிழ்தெனவே - அந்தப்
புதுமையிலே துயர் மறந்திருப்பேன்"1

(பாரதியார் கவிதைகள் க.வே.பா.எண்.1)

என்னுடைய இனிய உயிரே! நாத அமிர்தமே! எங்கே போயிருந்தாய்? சந்திரனைப் பார்த்தவுடன் சமுத்திரத்தின் அலையோசையும், காற்றின் கீதத்தைக் கேட்டவுடன் மனதில் நிரம்பியிருக்கும் கலைமளே! இயற்கைச் சூழலில் அமைந்த புதுமையில் என்னை மறந்தேன். இவ்வாறு பாரதி இயற்கையை சார்ந்த வடிவங்களாக கலைமகளை பாவிக்கிறார்.

ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்தமேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின் பெறு துருத்தியும்
ஆறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும், புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்"2

என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுகிறார்.ஊர்கள் தோறும் விரும்பிய வண்ணம் விழாவெடுக்கும் இடங்களிலும் வெறியர் களங்களிலும் அன்பர்களின் உள்ளங்களிலும் எழுந்தருளியிருக்கும் வேலன் உறைந்திருக்கும் இடங்களாக இயற்கைத் தலங்கள் அமைந்துள்ளது.

இயற்கையோடு தெய்வம் இணைந்திருப்பதை உணர்ந்து பாரதி பாடுகிறார். தெய்வத் துணையை அவர் விரும்புகிறார். காணும் காட்சிகள் அனைத்தும் இறைசக்தியுடன் உற்று நோக்குவது அவரது இயல்பாக உள்ளதை அறிய முடிகிறது.

நாவில் ஞானம் வேண்டுதல் :

ஞானமுள்ள நாவானது ஞானத்தைப் புகட்டும் நூல்களைக் கற்று பகட்டான பேச்சைக் குறைத்து உண்மையான ஞானத்தைப் பேசுகிறது. கலைமகள் அனைத்து உயிர்களின் நாவிலும் வீற்றிருப்பதால் அவளுடைய அருள் மூலம் நாக்கு ஞானம் பெறுகிறது.

"மாதமொர் நான்கநீர் - அன்பு

வறுமையிலே எனை வீழ்த்திவிட்டீர்
பாதங்கள் போற்றுகின்றேன் - என்றன்
பாவமெலாங் கெட்டு ஞானகங்கை
நாதமொடு எப்பொழுதும் - என்றன்
நாவினிலே பொழிந்திட வேண்டும்
வேதங்களாக்கிடுவீர் - அந்த
விண்ணவர் கண்ணிடை விளங்கிடுவீர்"3

(பாரதியார் கவிதைகள் க.வே.பா.எண்2)

மறைகளை உருவாக்கியவளே! அந்த வானவர்களின் அறிவு விழிகளில் பொருந்தியிருப்பவளே! நான்கு மாதங்கள் உன் நேசம் கிடைக்காத வறுமையான நிலையில் என்னைத் தளர வைத்தாய். உன் திருவடிகளை நான் வணங்குகின்றேன். என்னுடைய தீவினைகள் எல்லாம் அழிந்து, கவித்துவமாகிய கங்கை எந்நாளும் என் நாவினில் இசையோடு வெளிபட்டுக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு பாரதி கலைமகளிடம் மனம் ஒன்றி கேட்கிறார்.

"பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக"4

என்று தேவராய சுவாமிகள் கந்த சஷ்டி கவசத்தில் குறிப்பிடுகிறார். தாய் தன் பிள்ளைகளுக்கு பாலூட்டி வளர்ப்பது போல, பக்குவம் பெற்ற உயிர்களுக்கு ஞானத்தை அருளுகிறாள். வாக்கு, சொல் ஆகியவற்றிற்கு பாரதியின் எழுத்துக்கள் அனைத்தும் கலைமகள் அருளால் உருவானவை. அவரது கவித்திறனும் புலமையும் தெய்வீகம் நிறைந்தது, தன்னுடைய இளம் வயதில் எட்டயபுரப் புலவர்களால் கலைமகள் எனும் பொருளுடைய "பாரதி" பட்டம் அருள் வாக்குகள் பெற்றதனால் வழங்கப்பட்டது என்பதை உணர முடிகிறது.

இசையின்பம் நிறைந்த தெய்வம் :

இசையும் கலைமகளும் பிரிக்க முடியாதவை. சரஸ்வதி தேவி கலைமகளின் தெய்வம். இசை, கல்வி, அறிவு ஆகியவற்றின் அதிபதி. வீணை வாசிப்பதன் மூலம் பிரபஞ்சத்தை அழகாக மாற்றுகிறார். ஞானத்தை வெளிப்படுத்துகிறார். இசையின் பிறப்பிடமாகத் திகழ்கிறாள்.

"மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மே வடிவாகிப் பெற்றாள்"4

(பாரதியார் கவிதைகள், வெ.தாமரை ப.எண் 2)

மங்கையர் இனிய குரலில் இசைக்கின்ற பண்களில் பொருந்தியிருக்கிறாள். குழந்தைகள் பேசுகின்ற மழலை மொழியில் குடி கொண்டு இருப்பவள். இனிய கானம் இசைக்கும் குயிலின் குரலில்,

கிளியின் நாவினில் உறைபவள். குற்றம் குறை இல்லாத வேலைப்பாடு உடைய ஓவியங்கள், கோயில் கோபுரங்கள் ஆலயங்கள் ஆகிய எல்லாவற்றின் அழகிலும் பொருந்தி இருப்பாள். ஆனந்தமே உருவானவள் இவ்வாறு கலைமகளை மிகுதியானப் பக்தியுடன் போற்றிப பாடுகிறார்.

"வீணையில் கானத்தை எழுப்பியே எந்தன்
வீணான சஞ்சலத்தைப் போக்கிடும் தாயே
வித்தைகளைக் கற்க விழைந்திடுவோரை
விதம் விதமாய் அத்தனையும் கற்றிடச் செய்வாய்"6

வீணையில் இசை எழுப்பி வீணாக புலம்பிக் கொண்டிருக்கும் சஞ்சலத்தைப் போக்குபவள். பல வித்தைகள் கற்க விரும்புகின்ற மக்களுக்கு அனைத்து விதமான கல்வியை கற்பிக்கக்கூடிய ஞானம் படைத்தவளாக கலைமகள் விளங்குகிறாள் என்று சரஸ்வதி பாமாலையில் அமைந்துள்ள இப்பாடல் வரிகள் விளக்கம் தருகின்றது.

பாரதியின் பாடல்களளுக்கு உத்வேகம் அளிக்கும் தெய்வமாகக் கலைமகள் திகழ்கிறாள். பாரதி கலைகளை விரும்பும் தீவர ரசிகராகவும் அவற்றை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் அறிவுப் பாலமாகவும் திகழ்ந்தார்.

முடிவுரை

பாரதி, கலைமகளை தெய்வமாக மட்டும் காணாமல் கல்வி, கலை மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான உத்தேவ சக்தியாகக் கண்டார். கலைமகளை அறிவின் வடிவமாகக் கொண்டு பயனிப்பதே இககட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

துணைநூற்பட்டியல்

1. சுந்தர சண்முகனார் (உ.ஆ),திருமுருகாற்றுப்படை (மூலமும் தெளிவுரையும்),பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014, முதற்பதிப்பு டிசம்பர் 1974
2. தேவராய சுவாமிகள், கந்த சஷ்டி கவசம், (சண்முகக் கவசம் கந்தகுரு கவசம்), பாபா பப்ளிகேஷன்ஸ், சென்னை - 600 078 முதற்பதிப்பு - ஆகஸ்: 1982
3. **www.tamil.sloleas.blogspot.com**

27. இளம் எழுத்தாளர் விருது பெற்ற புதினங்களில் இடம்பெயர்தலின் தாக்கங்கள்

ஆய்வாளர்

சி.தேவி,

பதிவு எண்:23212014022005,

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்,

ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-2.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது.

நெறியாளர்

முனைவர் கு.நீதா,

நெறியாளர் மற்றும் இணைப்பேராசிரியர்,

முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்,

ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,

தூத்துக்குடி-2.

DOI 10.5281/zenodo.21739157.

Abstract :

Migration involves people leaving their hometowns for other locations in search of education, employment, security, and an improved lifestyle. It drives urban expansion in new areas and brings about profound social and economic changes in the lives of the migrants. This article aims to examine the internal and external crises experienced by individuals in society, with migration as the primary factor.

Keywords : Young Writers - Education - Employment - Security - Lifestyle

ஆய்வுச் சுருக்கம்

இடம்பெயர்தல் என்பது மக்கள் கல்வி, வேலைவாய்ப்பபு, பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட வாழ்க்கை முறைக்காகத் தங்கள் சொந்த ஊரைவிட்டு வேறு இடங்களுக்குச் செல்வதாகும்;. இது புதிய இடங்களின் நகர்ப்புறப் பெருக்கம் மற்றும் குடியேறும் மக்களின் வாழ்க்கையில் ஆழமான சமூக, பொருளாதார மாற்றங்களை உருவாக்குகிறது. இடம்பெயர்தலை முதன்மைக் காரணியாகக் கொண்டு சமுதாயத்தில் மனிதனுக்கு ஏற்படுகின்ற அகப்புற நெருக்கடிகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

மனிதன் எப்பொழுது தோன்றினானோ, அப்பொழுதே இடம்பெயர்வு தோன்றிவிட்டது. இடம்பெயர்தல் என்பது ஓரிடத்திலிருந்து நிலைத்திருந்த வாழ்க்கையைப் பிறிதொரு இடத்திற்கு நகர்த்திச் செல்லுவதாகும். இயக்கம் என்பது மானிடத் தத்துவம். பூமி சுற்றுவதால் உலகம் நிலைத்திருக்கிறது. மனிதன் இயங்கினால் தான் வாழ்க்கை. விருப்பு வெறுப்புக்கு இடமில்லாமல் இடம்பெயர்தலானது வாழ்க்கைச் சக்கரம் போலச் சுழன்று கொண்டே இருக்கின்றது.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

இடம்பெயர்தல்

மக்கள் பல்வேறு காரணங்களுக்காக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதை இடப்பெயர்வு என்கிறோம். சங்க காலத்தில் இடப்பெயர்வு என்பது மக்களின் வாழ்க்கை முறை, திணைக்குடிகளின் நிலப்பரப்பு மாற்றம் மற்றும் புலம்பெயர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும்.

“ஓதலும் பகையும் தூதும்
பொருளொடு புரைதீர்ந்த கிளவியும்
பொருட்படை மூன்றே”1

என்று தொல்காப்பியர், மக்கள் பிரிவின் மூலம் இடம்பெயர்தல் என்பது மரபாக இருந்து வந்துள்ளன என்பதை விளக்கியுள்ளார்.

“மனித இடம்பெயர்வு என்பது உலகின் வரலாறு. நிகழ்காலம் அந்த வரலாற்றின் பிரதிபலிப்பு”2 என்று ரஸ்ஸல் கிங் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

தற்பொழுது இடம்பெயர்தல் என்பது புவியியல், சமூக மற்றும் கலாச்சாரப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டது. இடப்பெயர்வு என்பது வெறும் பயணத்தோடு மட்டுமல்லாமல் மண், மொழி, பண்பாடு இழப்பு மற்றும் புகலிடத்து வாழ்க்கை அமைப்பு முறை என்று பன்முகத்தன்மை கொண்டதாக விளங்குகிறது.

இடம்பெயர்தலுக்கான காரணிகள்

சிறந்த வேலைவாய்ப்பு, கல்வி, திருமணம் மற்றும் போர், வறுமை அல்லது இயற்கைப் பேரிடர்களிலிருந்து தப்பித்தல் போன்ற காரணங்களுக்காக மக்கள் இடம்பெயர்கின்றனர்.

உள்நாட்டு இடப்பெயர்வு

ஒரு நாட்டின் எல்லைக்குள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கோ அல்லது கிராமப்புறத்திலிருந்து நகரத்திற்கோ வேலைவாய்ப்பு மற்றும் கல்விக்காக மக்கள் இடம்பெயர்தலைக் குறிப்பதாகும்.

சர்வதேச இடப்பெயர்வு

சிறந்த வேலைவாய்ப்பு, தொழில் அல்லது பாதுகாப்பு கருதி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்று குடியேறுதல் ஆகும்.

விலங்குகளின் இடப்பெயர்வு

பருவநிலை மாற்றங்கள் உணவு, நீர் மற்றும் இனப்பெருக்கம் அல்லது சாதகமான தட்பவெப்ப நிலைகளைத் தேடி குறிப்பிட்ட கால இடைவெளியில் பறவைகள், மீன்கள், மற்றும் விலங்குகள் குறிப்பிட்ட காலங்களில் மேற்கொள்ளும் நீண்ட தூரப் பயணமாகும்.

விலங்குகள் ஊருக்குள் வருதல்

தங்களின் வாழிடம் சுருங்குவதால் யானை, புலி போன்ற வனவிலங்குகள் உணவு மற்றும் தண்ணீருக்காக மனிதர்கள் வாழ்கின்ற பகுதிக்குள் நுழைந்துவிடுகின்றன.

விலங்குகள் மக்கள் வாழிடங்களுக்குள் நுழைவதினால் மனித விலங்கு மோதல்கள் ஏற்பட்டு உடைமை இழப்பு மற்றும் உயிர்ச்சேதங்கள் ஏற்படுகின்றன. அறிவியல்

ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி ஒவ்வொரு நாளும் 50 முதல் 100 வகை விலங்குகள் அதன் இருப்பிடம் அழிக்கப்படுவதன் காரணமாக அழிந்து வருகின்றன. ஒரு குறிப்பிட்ட விலங்கு அல்லது பூச்சி இனங்கள் அழியும்போது அதனைச் சார்ந்திருக்கும் மற்ற உயிரினங்களின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகின்றன.

பொருளாதாரத் தாக்கங்கள்

மக்களின் பொருளாதாரத் தாக்கங்கள் என்பது தனிநபர்களின் வருமானம், வேலைவாய்ப்பு,மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கை முறை ஆகியவற்றை நேரடியாகப் பாதிக்கின்ற காரணிகளாகும்.

"சுரேஷ், சக்தியெல்லாம் இராசபுரம் விடுதியில் இடம் கிடைக்காவிட்டாலும் வேறு வழியின்றி தெரிந்;தவர் ஒரு சிலரோடு சென்று எப்போது வெளியே துரத்தப்படுவோம் என்ற பயத்திலேயே தங்கிக் கொண்டிருந்தனர்."(பருக்கை,ப.42) இளைஞர்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்குக் கல்வியின் பொருட்டு இடம்பெயர்கின்றனர். மூன்று வேளைகளும் உணவு கிடைப்பதில் அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்றது. தாங்கள் படிக்கின்ற கல்லூரியில் பருவத்தேர்வுக்கான காலம் நெருங்கிவிட்ட போதிலும் அவர்களால் தங்குவதற்கு ஓர் அறையை ஏற்பாடு செய்து கொள்ள இயலாமல் நண்பர்களின் அறைகளிலும் சிற்றுண்டி விடுதிகளிலும் இரவில் தங்கிக் கொள்கின்றனர் என்பதை பருக்கை புதினம் வெளிப்படுத்துகிறது.

"கொள்ள வீடு போச்சு...பாத்தீங்கல்லே நம்ம வீட்டை... எம்மேல உள்ள ஆத்திரத்துல வீட்டைச் சுத்தமா இடிச்சுத் தரைமட்டமா ஆக்கிட்டாங்கே..."(சேவல்கட்டு,ப.34) கிராமங்களில் நடத்தப்படுகின்ற சேவல்கட்டில் இரு தரப்பினருக்கிடையே சிறிய சச்சரவு ஏற்படுகிறது. இதனைத் தொடர்ந்து அவர்கள் வாழ்கின்ற வீடுகளும் ஆடு, மாடு போன்ற விலங்கினங்களும் தாக்கப்படுகின்றன. இதனால் ஆறுமுகம், வேறு இருப்பிடம் அமைத்துக் கொள்;ள இயலாமல் ஊரின் ஒதுக்குப்புறத்தில் கோழிகளுடன் தானும் ஒரு சிறிய பகுதியில் தங்கிக் கொள்கின்றார். வாராவாரம் நடைபெறுகின்ற சந்தையில் கோழிகளையும், அதன் முட்டைகளையும் விற்றுத்தான் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார். மேற்கூறியபடி எதிர்பாராமல் நடைபெறுகின்ற இடம்பெயர்தலானது முதியவர்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் சிக்கலை ஏற்படுத்துகிறது.

சமூகத் தாக்கங்கள்

பூர்வீகமாகக் குடியேறிய பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்தல் என்பது இன்றைய உலகில் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. சமீபத்திய ஆண்டுகளில் மக்களின் இடம்பெயர்வு ஒரு முக்கிய மனித உரிமைப் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. உள் அல்லது வெளி சக்திகளால் சமூகங்கள் இடம்பெயர்வது சூழலியல் மாற்றங்களையும் சுற்றுச்சூழல் சீரழிவையும் ஏற்படுத்துகிறது. இடம்பெயர்வு என்பது வறுமையைத் தொடர்வதோடு குறிப்பாக, பழங்குடியின மக்களை அதிகமாகப் பாதிக்கின்றது.

"காடுகள் வாழ்ந்த இடத்தில்
வீடுகள்
மிருகங்கள் வாழ்ந்த இடத்தில்

மனிதர்கள்”3

என்று அப்துல்ரகுமான் தனது காடு கவிதையின் வாயிலாக இயற்கை வளங்களும் விலங்கினங்களும் அழிக்கப்படுவதைச் சாடியுள்ளார்.

“பருத்திப்போட்டில் சுனைகள் அதிகமென்பதால் கோடைக்காலத்தில் இடம்பெயரும் யானைகள் பெரும்பாலும் அந்தப் பகுதியில்தான் தஞ்சமடையும். அந்த இடத்தை ஆக்ரமித்துத்தான் புதிய தோட்டம் வளர்ந்து கொண்டிருந்தது.” (கானகன்.ப.134)

யானைகள் வழக்கமாக வந்து செல்கின்ற இடங்களில் புதிய தோட்டம் உருவாகியதால் அவை முதலில் ஒதுங்கிச் சென்றன. பின்னர் கோடைகாலம் ஆரம்பித்தனால் யானைகள் கோபம் கொண்டு தோட்டத்திற்குள்ளும் மக்களின் இருப்பிடங்களுக்குள்ளும் புகுந்து அவற்றை அழித்தன.

“நாளைக்கு அறுப்பு முடியட்டும். யாரும் குடிசையைக் கலைக்க வேணாம். கொஞ்ச நாளைக்கு வேணும்னா நம்ம பகல்ல இங்கயும் ரவைக்கு உறங்கறதுக்கு மட்டும் மலையடிவாரத்துக்குமா போயிருவோம்.” (கானகன்,ப.33) கஞ்சாத்தோட்ட முதலாளிகள் பளியர் குடியினரின் குடிசைகளை ஆக்ரமித்துக் கொள்ளத் திட்டம் தீட்டுகின்றனர். வன அதிகாரிகளின் எச்சரிக்கையின்படி, காடுகளில் எதற்கும் அஞ்சாமல் சுதந்திரமாக சுற்றித் திரிகின்ற பளியர்கள் விலங்குகளைப் பார்த்துப் கொண்டு தங்கள் இருப்பிடங்களைவிட்டு நகர்ந்து செல்கின்றனர். இத்தகையக் கட்டாயமான இடம்பெயர்தலானது காடுகளில் வாழ்கின்ற பழங்குடிகளையும் விலங்கினங்களையும் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து துரத்தி அவர்களின் உரிமைகளை இழக்கச் செய்கின்ற செயலாகும்.

உளவியல் தாக்கங்கள்

குடும்பத்தின் முக்கிய உழைப்பாளர் வேறு இடங்களுக்குச் செல்வதால் குடும்பத்தில் உள்ள முதியவர்கள் மற்றும் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர். உழைப்பவர்களுக்கு மன அழுத்தம் மற்றும் சமூகத் தனிமை போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றது.

“மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்”4

என்று பட்டினப்பாலை வெளிநாட்டிலிருந்து புலம்பெயர்ந்து புகாரில் வணிகம் செய்துவந்த மக்களைப் பற்றிக் குறிப்பிடுன்றது. இதையே,

“யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா”5

என்று கணியன் பூங்குன்றனார் எல்லா மக்களும் எல்லா இடங்களுக்கும் சென்று வாழ்க்கை அமைத்துக் கொள்வதனைக் குறிப்பிடுகிறார்.

“பரத் ஊருக்குப் போய் இரண்டு வருசமாயிருக்கும்போல, நடுவுல போனா விசா பிரச்சனையாயிடும்;. திரும்பி வர முடியாத மாதிரி இக்கட்டான சூழ்நிலை.” (நட்சத்திரவாசிகள்,ப.131) பரத் வெளிநாட்டில் வேலை செய்து வருகின்றான். பல வருடங்களாகத் தன் குழந்தையைக் கூடக் கொஞ்ச முடியாமல் இணையவழியில்தான் பார்த்துக் கொள்கின்றான். அந்தக் குழந்தை உடல்நிலை சரியில்லாமல் தவிக்கின்ற பொழுது தான் தன் குடும்பத்துடன் குழந்தையின் அருகில் இருக்க முடியவில்லையென்று வேதனைக்கு உள்ளாகின்றான். அதனை நினைத்து நினைத்துத் தான்

 E-ISSN : 2584 – 1238

தங்கியிருக்கின்ற அறைக்குள், என்ன செய்கின்றோம் என்று தெரியாமல் சுவரினை ஓங்கிக் குத்திக்கொண்டு, தலையணைப் பஞ்சுகளையெல்லாம் பிய்த்து எறிகின்ற அளவுக்கு பரத்திற்கு மனஅழுத்தம் ஏற்படுகின்றது. இவ்வாறு மனிதர்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு இடம்பெயருகின்ற பொழுது அனுமதிச்சீட்டு, ஒப்பந்தம் போன்றவற்றால் குறிப்பிட்ட நாட்களில் அங்கிருந்து உடனடியாகத் திரும்பி வர இயலாமை போன்ற சிக்கல் உண்டாகின்றது.

மக்கள் வெவ்வேறு பகுதிகளில் இருந்து இடம்பெயருகின்ற போது புதிய கலாச்சாரங்கள், தொழில்கள், உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் சிந்தனைகள் ஆகியவை பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இதனால் அங்கு கடைபிடிக்கப்படுகின்ற மொழிகளையும், பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும் மக்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

முடிவுரை

மக்களின் இடம்பெயர்தலானது அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைப்பதன் வழியாக முன்னேற்றமடையச் செய்ய வேண்டும். மாறாகப் பழங்குடி மக்களின் கட்டாயமான இடமாற்றமானது மனிதர்களின் பண்பாடு, கலாச்சாரம், மொழி, சூழல் சமநிலை ஆகியவற்றைச் சீர்குலைக்கிறது. அவை எதிர்காலச் சந்ததியினருடைய வாழ்க்கை முறையைக் கேள்வி;க்குறியாக்குகிறது. பொருளாதாரச் சமூகப் பின்னடைவுகள் ஏற்படாதவாறு இயற்கைச் சமநிலையைப் பேணிப் பாதுகாத்து மக்களுக்கும் விலங்கினங்களுக்கும் வாழ்வுரிமை அளிப்பதே இதற்கானத் தீர்வாகும்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம்-நூற்பா.31.
2. ரஸ்ஸல் கிங், மனித இடம்பெயர்வின் வரலாறு, ப.62.
3. அப்துல் ரகுமான், காடு, ப.34.
4. பட்டினப்பாலை,பா.218.
5. கணியன் பூங்குன்றனார், புறநானூறு,பா.192.

துணை நின்ற நூல்கள்

1. சேவல்கட்டு, (தவசி), புதுமைப்பித்தன் பதிப்பகம், சென்னை-40.
2. பருக்கை, (வீரபாண்டியன்),பரிசல் புத்தக நிலையம், சென்னை.
3. கானகன், (லஷ்மி சரவணகுமார்),ஸரோ பதிப்பகம், சென்னை.
4. நட்சத்திரவாசிகள், (கார்த்திக் பாலசுப்பிரமணியன்), காலச்சுவடு பதிப்பகம்,நாகர்கோவில்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

28. 'மழை நாளில் காகித கப்பல்' கவிதைத் தொகுப்பில் சமுதாயப் பார்வை

முனைவர் சி.தேவி,
உதவிப்பேராசிரியர்,முதுகலைத் தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
9442436396 - Devi-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.21739421.

Abstract

Literature is created in response to the needs of society. Merely cataloging societal ills as a form of awareness-raising yields little benefit; society expects a creative work to go beyond a mere lament and instead articulate a path toward upliftment arising from that very state of decline. Just as a drumstick tree is pruned to encourage better growth, rectifying societal flaws is a fundamental duty of every poet. The poems of Poet Santhakumari embody societal values by highlighting both the merits and the shortcomings of society.

Keywords : Literature - Santhakumari - Poetry - Poet

முன்னுரை :

சமூகத்தின் தேவைக்கேற்ப இலக்கியம் படைக்கப்படுகிறது. சமூக விழிப்புணர்வின் ஒருநிலையாய் அதன் அவலங்களைப் பட்டியலிட்டுக் கூறுவதால் பயன் பெரிதும் இல்லை. வெறும் இரங்கற்பாவாய் அமையாது, அவ்விறக்கத்தின் மூலம் ஏற்றம் காணுவதைக் கூறுவது படைப்பு நோக்கமாகச் சமூகத்தால் எதிர்பார்க்கப்படுகிறது. முருங்கையை ஒடித்து வளர்ப்பதைப் போல சமுதாயச் சீர்கேடுகளை திருத்துவது ஒவ்வொரு கவிஞரின் அடிப்படைக் கடமையாகும். சமுதாயத்தின் நிறை குறைகளை எடுத்துரைப்பதாகக் கவிஞர் சாந்தகுமாரி கவிதைகளில் சமூதாய விழுமியம் அமைகின்றன.

சமுகம் :

"சமுக இயலின் ஓர் அங்கமாக விளங்குவது வாழ்வியல் ஆகும். அதில் தனிமனித இயல்பு, பொருளாதாரம், சமயம், பண்பாடு, குடும்பம், திருமணம் போன்றவற்றை வெளிப்படுத்துவதே வாழ்வியல்"[1] ஆகும்.வாழ்வியல் என்னும் சொல்லானது மனிதனை சமுகத்துடன் இணைக்கக்கூடிய பாலமாகும். வாழ்வில் கூறுகள் மூலமாக மனிதன் செயல்படுவதினால் சமுகத்தில் அவருடைய பங்களிப்பு வெளிப்படுகின்றது.

வாழ்வியலை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

"தனிமனித வாழ்வியல், சமுக வாழ்வியல்"[2]

என்பவையாகும். இவை இரண்டும் சமுகத்தில் மனிதனது ஆளுமைத் திறனைப் புலப்படுத்துவதாக அமைகிறது.

மதச்சீர்கேடு :

மதம் என்பது இறை உணர்வை மக்கள் மனதில் ஏற்படுத்துவதுடன் அவர்கள் அன்பு கொண்டு வாழ்வதற்கு வழிகாட்டுவதாகும். மதத்தை உருவாக்கியவர்கள் இறைமை மூலம் உலகம் ஒரு குடும்பமாக வாழ வேண்டும். மக்கள் ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்த வேண்டும் என்று நல்லெண்ணத்தில் தான் தொடங்கினார்கள். அன்பும் அரவணைப்பும் எல்லா மதத்தினருக்கும் பொதுவானவையாகக் காணப்படுகிறன. இதனை 'இரட்சகர்?' என்றதலைப்பில்,

“மலையேறிச் சென்று
பெரும்பாறை தேடி
சாரங்கள் ஏதுமின்றி
சாகசமாய் எட்டி
'இயேசு ரட்சிக்கிறார்'
என்றெழுதியவன்
கால்தடுக்கி
குப்புற விழுந்தான்....!”(ம.நா.கா.க. ப-22)

- இன்று மனிதர்கள் அல்லா, இயேசு, சிவன், விஷ்ணு என்று மதவேறு பிடித்து வன்முறையில் ஈடுபடுகின்றனர். மனிதர்கள் இன்று மதம் மதம் என்று மதம் பிடித்து அலைகின்றனர்.இதனை, 'இந்தியன்' என்றதலைப்பில்,

“இந்துவுக்கு மயானம்,
கிறித்துவனுக்கு
கல்லறைத் தோட்டம்,
இசுலாமியனுக்கோ
கபரஸ்தான்.
மயானத்திலும்
இல்லை -
மதம் பிடியா
மனிதன்...”(ம.நா.கா.க. ப-56)

“மதம்” குறித்து தனது கவிதைகளின் மூலம் மக்களுக்கும் மதங்களற்ற மனங்கள் வேண்டும் என்று விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார்.

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

மூடநம்பிக்கை :

காரண காரியத் தொடர்பின்றி ஒரு செயலினை மேற்கொள்வது மூடநம்பிக்கையாகும். மனித குலத்தின்அறியாமையே மூடநம்பிக்கைகளுக்கு அடிப்படையாக அமைகிறது. மனிதனுக்குச் சில பொருட்களோ, நிகழ்ச்சிகளோ விளங்காத போது அச்சமடைகிறான். அதனாலே சில மூடநம்பிக்கைகள் தோற்றம் பெறுகின்றன. பாரதிதாசன் மூடநம்பிக்கைகளைக் கண்டித்து,

"மூடப்பழக்கம் முடிவுற்ற, கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்"[3]

என்று பாடியிருக்கிறார். பக்தியின் பெயராலே பல மூடநம்பிக்கைகள் உருவாக்கப்படுகின்றன.

"கற்பகாம்பிகைக்கு
கலங்காமல் விளக்கேற்ற
கல்யாணம் ஆகுமென்ற
காழியூர் நாராயணன்வாக்கு
காலாவதி ஆனது...."(ம.நா.கா.க. ப-20)

என்ற பாடல் வரிகளில் தெய்வத்திற்கு விளக்குப் போட்டால் திருமணம் விரைவில் கைகூடும் என்றுரைத்த சோதிடனின் கூற்று பொய்த்தது என்று மூடநம்பிக்கையினை சாந்தகுமாரி சாடியுள்ளார்.

சாதிப்பாகுபாடு:

சாதி என்பது மனித இனத்தை பாகுபடுத்துகிற ஒரு கருவி. இன்று நாடு முழுவதும் ஆழ்ந்து பரவிக்கிடக்கும் சாதித் தளையை வேரறுக்க வேண்டும் என்று பலரும் விரும்புகின்றனர். சாதிகள் இல்லையடி பாப்பா என்றார் பாரதி. இத்தகைய சாதிப்பாகுபாடு சங்க காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. இதனை,

"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன் கண்படுமே." [4]

இப்புறநானூற்று பாடல் மூலம் அறிய முடிகிறது. இக்கருத்தினை கவிஞர்சாந்தகுமாரி'மௌனம்' என்ற தலைப்பில்,

"சாதீய வேரறுக்க
சமநீதிதான் கிடைக்க
விஷயத்தை இப்போதாவது

வெளிச்சத்திற்கு கொண்டுவா, சகோதரி…!"(ம.நா.கா.க. ப-1)

சாதீய வேரறுப்பதற்கு தயாராகுங்கள் என்று சாந்தகுமாரியின் அறைகூவல் மேற்கூறிய கருத்தை அரண் செய்வதாக அமைந்துள்ளது.

ஏழ்மை:

ஒருவர் தனக்குப் போதுமான உணவு மற்றும் வாழ்க்கைக்குத் தேவையானவைகளை அடைய முடியாத போது ஏழ்மை நிலவுகிறது. கொடி மரத்துக்குக் கூட ஒரு பெருமை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு துணியாவது தொங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஏழை உடுத்திக் கொள்ள அந்த ஒரு முழத்துணி கூட கிடைக்கவில்லையே என்ற புதுக்கவிதை நயம்பட கூறுகின்றது. இதனை,

"பழக்காரியின்
இடுப்புக் குழந்தையின்
அம்மணத்தை
எட்டிப் பார்த்து
சிரித்தன,
கூடையிலிருந்து
ஆடையணிந்த
ஆஸ்திரேலிய
ஆப்பிள்கள்…!"(ம.நா.கா.க. ப-4)

ஆப்பிள் கூட ஆடையணிந்திருக்கிறது. குழந்தை ஆடையின்றித் திரிகின்றது என்ற ஏழ்மை நிலையினை அம்மணம் என்ற தலைப்பில் சாந்தகுமாரி கூறியுள்ளார்.

வறுமை:

இந்தியா வானோங்கிய இமயமும், வற்றாத ஜீவநதியான கங்கையும் வளங்கொழிக்கின்ற தேசமான போதும் வறுமை நாடாகவே இருந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள மக்களும் வறுமையில் வாழ்கின்றனர். வறுமை, மனிதன் பிறக்கும்போது உடன் பிறந்தது போலும் இதனை ஔவையார்,

"கொடிது கொடிது வறுமை கொடியது." [5]

என்று வறுமைக்கு ஒப்பான கொடுமை வேறொன்றும் இல்லை என்று பாடியுள்ளார். பொருள் இல்லாமையே வறுமைக்குக் காரணம் என்பதனை வள்ளுவர்,

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு

இவ்வுலகம் இல்லாகி யாங்கு."[6]

என்று கூறியுள்ளார். இதனை, 'பெயர்தல்' என்ற தலைப்பில்,

"நெடுஞ்சாலைப் பயணத்தில்
முன்செல்லும் வேனில்
பிரித்துக் கிடந்த கட்டிலும்
பெயிண்ட் உதிர்ந்த பீரோவும்
பிளாஸ்டிக் வாளியும், குடமும்
தட்டுமுட்டு சாமானும்
புடைத்திருந்த சாக்குப்பையின்
மேலுறங்கும் சிறுவனும்
நினைவு நாடாக்களைப் பின்தள்ள,
வீடுவீடாய் சட்டிதூக்கிய
வேதனைக் காலம் கண்ணில் தெரிந்தது...."(ம.நா.கா.க. ப-13)

வறுமையின் காரணமாக தன் குடியிருந்த நிலத்தை விட்டு இடம்பெயர்கின்றனர் என்பதனை தெளிவான கவிதை அடிகளின் மூலம் விளக்கியுள்ளார் சாந்தகுமாரி.

மனிதத்தன்மையின்மை:

நாம் மேற்கொண்ட நற்பண்பும் சுற்றுக் கொண்ட படிப்புமே ஒருவருடைய வறுமைக்கும் தேவைக்கும் உதவினாலே மிகச்சிறந்த மனிதத் தன்மையைப் பெற்றுவிட்டதாய் அமையும். கவிஞர் சிற்பி "மனிதனை மனிதனாக நினைத்து மதிக்கும் தன்மை, ஒருவரது துன்பத்தில் பங்கேற்று,உதவ முன்வரும் தன்மை, எல்லாச் சமயத்தினரும் தம்மை ஒத்தவர்களே, என்று நினைக்கும் மனப்பான்மை ஆகியவற்றை இளைய தலைமுறை மறவாது வாழ்வில் கடைப்பிடித்துச் செயல்படுபவர்களே மனிதநேயம் கொண்டவர்கள்" 7என்று, கவிதை வானம் என்னும் தம்நூலில்குறிப்பிட்டுள்ளார். ஆனால், இன்றைய சமுகத்தில் மனிதத்தன்மை காணாமல் போயிற்று என்பதனை, 'நேசம்' என்ற தலைப்பில்,

"அகன்று கிடந்த
தங்க நாற்கரச் சாலையில்
பாலூற்ற யாருமின்றி
இழுத்துக் கொண்டிருந்தது
ஏழைக் கிழவனின் உடல்.
நாலுநாளாய்
இழுத்துகிட்டுக்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கிடக்கிறார் என
உச்சுக் கொட்டியது
கூட்டம்.
அழுக்கடைந்த
அவரது சட்டையை
நனைத்தது
போவோர் வருவோர்
ஊற்றிய நீர்.
விருட்டென
எழுந்துபோன விவசாயி
தார்ச்சாலையை ஒட்டிய
மண்ணெடுத்துக்
கரைத்து ஊற்ற,
சட்டென்று நின்றது-
தங்கநாற்கரச் சாலைக்காய்
தன்பூமியைப் பறிகொடுத்த
கிழவனது உயிர்...!"(ம.நா.கா.க. ப-16)

இயந்திரமயமான இன்றைய உலகில் வாகனங்கள் பெருகிவிட்டன. போக்குவரத்து வசதிகள் பெருகிவிட்டது. அதனால் விளைநிலங்கள் அனைத்தும் தார்ச்சாலைகளாக மாற்றப்பட்டுவிட்டன. வாழ்வாதாரத்தை இழந்த விவசாயிகள் படும் துயரம் மற்றும் வாழும் வழியற்ற நிலை இங்கு சுட்டப்பட்டுள்ளது. வேளாண்மை பாதுகாக்கப்பட வேண்டும். வேளாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற தனது தார்மீக அக்கறையை ஆசிரியர் இங்கே வெளிப்படுத்தியுள்ளார்.

பணச்சூழல்:

இன்றைய சமுகத்தில் பணமே முக்கியமாகக் கருதப்படுகிறது. மனிதனது உயிர் பிரியும் நிலையில் கூட பணம் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. மனிதனைச் சுடுகாட்டில் எரிப்பதற்கு கூட பணம் தேவைப்படுகின்றது. இன்றைய சமூகத்தில் பணத்தினால் ஏற்பட்டுள்ள தாக்கத்தினை 'விலை' என்ற தலைப்பில்,

"காலெடுக்க ஒரு லட்சம்,
கண்வைக்க அரை லட்சம்,
இதயமெனில் பல லட்சம்;
உயிர் பிரிந்து போனபின்னே

'பாடி' வாங்க பத்து லட்சம்!
"போங்கடா போங்க!
பாடியை நீங்களே வச்சுக்குங்க.
அப்பா எப்போதும்
எங்கிட்டே இருக்காரு......!"(ம.நா.கா.க. ப-34)

மருத்துவமனைகளில் இறந்த பிரேதத்தின் பேரில் நடைபெறும் பேதம் மனிதநேயமற்ற செயலுக்குச் சான்றாய் அமைகின்றது. என்று பணத்தின் தாக்கத்தினை தனது கவிதை அடிகளின்மூலம்விளக்கியுள்ளார்சாந்தகுமாரி.

தனிமனிதஅறம் :

தனிமனிதர்கள் பின்பற்றத்தக்க அறங்கள் தனிமனித அறம் எனப்படுகிறது.

தன்னம்பிக்கைச் சிந்தனைகள் :

தன்னம்பிக்கை என்பது மனிதர் ஒருவர் தம் எண்ணங்களின்மீதும், தன் வலிமையின்மீதும் கொண்டுள்ள நம்பிக்கையாகும். வாழ்வில் உயரத் துணைநிற்பது. விடாமுயற்சி, கடின உழைப்பு, திட்டமிட்டு செயல்படல், தோல்வி கண்டு தளராமை போன்றவை தன்னம்பிக்கைக்குரிய குணங்கள் ஆகும். கவிஞர் கவிதாசன்,

“நமது
இரண்டு கைகளையும் இயக்குகின்ற
மூன்றாவது கைதான் தன்னம்பிக்கை” [8]

என்ற வரிகளில் உடலின் உறுப்பான கை நம்முடன் என்றும் இருப்பதுபோல மூன்றாவது கையான தன்னம்பிக்கையும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார். தன்னம்பிக்கை குறித்து கவிஞர் சாந்தகுமாரி 'விந்தை' என்ற தலைப்பில்,

“விதை நட்டு,
உரமிட்டு,
நீரூற்றியும்
வாராத
செடிகளைப் பார்த்துச்
சிரிக்கின்றன
சுவர்களுக்கிடையில்
முளைத்துக்
கிளைபரப்பும்
வீரிய மரங்கள்....!”(ம.நா.கா.க. ப-58)

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

என்று மரமானது உரமிட்டு, நீரூற்றி, வளர்கின்றன. அம்மரத்தை மையமாக வைத்து மனிதர்களுக்கு தன்னம்பிக்கைச் சிந்தனைகளை தூண்டுகிறார் கவிஞர் கே.சாந்தகுமாரி.

தொகுப்புரை:

சமுதாயம் என்ற சொல் நாம் உருவாக்கியதே. ஆனால் நம்மை நல்ல மனிதனாகவும் பொறாமை போட்டி நிறைந்த உலகமாகவும் உருவாக்குவதும் சமுதாயம் தான். நாம் இன்றும் சமுதாயக் கட்டமைப்புடன் பின்னிப்பிணைந்து தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம்மை வளர்ப்பதில் சமுதாயம் பெரும் பங்கு வகிக்கிறது. சமுதாயத்தின் ஒரு அங்கமாக இருக்கும் பெண்கள் குறித்தும் பெண்கள் இச்சமுதாயத்தில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்தம் சாந்தகுமாரி அழகிய கவிதை வரிகளின் மூலம் எடுத்துரைத்துள்ளார். சமுதாயத்தில் மண்டி கிடக்கும் பல செய்திகளையும் நம்பிக்கை தரும் சில மனிதர்களையும் சாந்தகுமாரி அவர்கள் மழை நாளில் காகிதக் கப்பல் என்னும் கவிதை தொகுப்பில் மூலம் உண்மையான சமூக சூழலை காட்சிப்படுத்தியுள்ளார். இதனை ஆய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளன.

அடிக்குறிப்புகள்:

1. பரிமணம், அ.மா, வாழ்வியல் களஞ்சியம்,தொகுதி-11,ப 589
2. சுப்ரமணியம், க.நா., நாவல் கலை, ப.78
3. பா.தாசன், கவிதைகள்,ப.15
4. புறநானூறு, பா.எ. 183
5. துரை பட்டாபிராமன், வாழ்வியல் உண்மைகள் ப.168
6. தனுஷ்கோடி (உ.ஆ) கு.எ.247
7. பழனிச்சாமி.செ., (ப.ஆ) சிந்தனைக் கவிஞர் கவிதாசன் படைப்பிலக்கியம் - பன்முக ஆய்வு ப.68

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

29.அரிதான தோற்கருவிகள்

க. வைரம்,
முனைவர் பட்ட ஆய்வாளார், இசைத்துறை,
ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம் - இசை மற்றும் ஆராய்ச்சி மையம்
15.A, கோகலே சாலை, தல்லாகுளம், மதுரை -625 002.
மின்னஞ்சல் : vanakkamvairam888@gmail.com
அலைபேசி : 88833 43634
DOI 10.5281/zenodo.21739630.

Abstract

Tholkappiyam provides evidence detailing the unique music and musical instruments associated with the five *Thinai* landscapes: *Kurinji*, *Mullai*, *Marutham*, *Neithal*, and *Paalai*. Instruments covered with animal hide are classified as *Thorkaruvigal* (membranophones). Initially, these instruments were used to protect crops, later for conveying messages, and as accompaniment for vocalists–roles they continue to fulfill today. They also play an immense role in divine worship.

Membranophones are categorized based on the number of playing surfaces–ranging from one to five faces (*orumugam*, *irumugam*, *mummugam*, *naanmugam*, and *aimugam*). Furthermore, they are classified into those that produce a fixed pitch and those designed to allow for pitch adjustments according to requirements.

Keywords : Tholkappiyam - Thinai - Kurinji - Orumugam - Mummugam

முன்னுரை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை திணைக்கும் தனித்துவமான இசையும் இசைக்கருவிகளும் இருந்ததை தொல்காப்பியம் சான்றுகளுடன் விவரிக்கிறது. தோல் போர்த்தப்பட்ட கருவிகளே தோற்கருவிகளாகும். முதலில் தோற்கருவிகள் பயிர்களைக் காப்பதற்கும், பின் செய்திகளைக் கொண்டு சேர்ப்பதற்கும் இசை பாடுவோர்க்குப் பக்க இசைக்கருவிகளாகவும் பயன்பட்டன. தற்காலத்திலும் பயன்படுகின்றன. தெய்வ வழிபாடுகளிலும் தோற்கருவிகளின் பங்கு அளப்பரியது.

தோற்கருவிகள் ஒருமுகம், இருமுகம், மும்முகம், நான்முகம் மற்றும் ஐமுகம் என்று பிரித்துக் காட்டப்படுகிறது. மேலும் ஒரு குறிப்பிட்ட சுருதியில் மட்டுமே இசைக்கக்கூடியவை என்றும் தேவைக்கேற்ப சுருதிகளை அமைத்துக் கொள்ளக் கூடிய முறையில் அமைந்தவை என்றும் வகைபடுத்திக் கூறப்படுகிறது.

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

அறிவனார் இயற்றிய பஞ்சமரபில்,

“பேரிகை படகம் இடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவில் தடாரி
யந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்கம்
ஆசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க வுபாங்கி துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே.”

என முப்பது தோற்கருவிகள் கூறப்பட்டுள்ளன.

அவை,

1.பேரிகை, 2. படகம், 3. இடக்கை, 4. உடுக்கை, 5. மத்தளம், 6. சல்லிகை, 7. கரடிகை, 8. திமிலை, 9. குடமுழா, 10. தக்கை, 11. கணப்பறை, 12. தமருகம், 13. தண்ணுமை, 14. தடாரி (தவில்), 15. அந்தரி, 16. முழவு, 17. சந்திரவளையம், 18. மொந்தை, 19. முரசு, 20. கண்விடுதூம்பு, 21. நிசாளம், 22. துடுமை, 23. சிறுபறை, 24. அடக்கம் (அடக்கப்பறை), 25. தகுணிச்சம், 26. விரலேறு, 27. பாகம், 28. உபாங்கி, 29. துடி, 30. பெரும்பறை.

இவ்வகையான தோற்கருவிகளேயன்றி, தமிழர் இசை மரபில் நூற்றுக் கணக்கான தோற்கருவிகள் உள்ளன. அவற்றில் சில அரிய தோற்கருவிகள் குறித்து அறியவேண்டியது அவசியமாகிறது.

பவுனி



MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

மத்தளம் போன்ற உருண்டை வடிவில் உடுக்கையை விடப் பெரிதானது இக்கருவி. இதன் ஒரு தலை சிறுத்தும் மற்றொன்று பெருத்தும் காணப்படுகின்றது. இது தோலிசைக் கருவி என்றாலும் இதனை வாசிக்கும் நுட்பம் நரம்பிசைக் கருவியையே ஒத்திருக்கும். இதன் சிறிய தலைப்பகுதியில் உடும்புத் தோல் போர்த்தப்பட்டிருக்கும். இதன் பெருத்த தலைப்பகுதி திறந்த நிலையில் இருக்கும். தோலின் மையப்பகுதியில் சிறிய ஓட்டையிட்டு அதில் ஒரு நரம்பால் முடிச்சிட்டு அதன் எதிர்நுனி திறந்த தலைப்பகுதி வழியாக வெளியில் வரும்படி அமைக்கப்பட்டிருக்கும்.

இடது கையால் அந்த நரம்பை இறுக்கமாக இழுத்துப் பிடித்துக்கொண்டு வலது கையில் விரலால் அந்த நரம்பைச் சுண்ட அந்த அதிர்வுதோலில் எதிரொலித்து உக்கிரமான நாதம் வெளிப்படுகிறது. மற்றொரு விரலில் சிறு சலங்கையை மாட்டிக்கொள்வதால் அந்தக் கலவையிசை கேட்பதற்கு மிக இனிமையாக உள்ளது.

ஆரம்பத்தில் மூங்கிலால் செய்யப்பட்ட இக்கருவி காலப்போக்கில் புளி, வேம்பு போன்ற மரங்களினால் செய்யப்படுகிறது. தற்போது பித்தளையினாலும் செய்யப்பட்டு வருகிறது. இக்கருவி திருமணங்களிலும் திருவிழாக்களிலும் வாசிக்கப்படுகிறது.

மண்மேளம்



மொடா மத்தளம், சட்டி மத்தளம், கட மத்தளம் எனப் பல பெயர்களால் மண்மேளம் அழைக்கப்படுகிறது. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஒருசில கிராமங்களில் மட்டுமே மண்மேளம் இசைக்கப்படுகிறது. அதுவும் தற்போது குறைந்துகொண்டே வருகிறது.

களிமண்ணையும் செம்மண்ணையும் தூளாக்கி நன்றாகச் சலித்தெடுத்துத் தண்ணீர் ஊற்றி நன்றாக மிதித்துப் பிணைந்து பிறகு நான்கு நாட்களுக்குமேல் ஊறவைப்பார்கள். அதன்பிறகு மண்ணைக்கொண்டு இரண்டு பானைகள் செய்து முடிக்கின்றனர். இந்த இரண்டு பானைகளும் முழுமையான வடிவம் இல்லாமல் (மேற்பகுதியில்லாத) அரைப்பானை வடிவில் அமைந்திருக்கும். பிறகு இந்த இரண்டு பானைகளையும் ஒன்றோடொன்று சேர்த்து நெருப்பில் சுடுகின்றனர். சுட்ட

பிறகு ஒரு பக்கம் மாட்டுத்தோல் மறுபக்கம் கன்றுத்தோல் போர்த்தி வார்த்துக் கட்டுவார்கள். இந்த வார்களுக்கும் மாட்டுத்தோலே பயன்படுகின்றன.

மண்மேளத்தை வலதுபுறம் பாலைக் குச்சி கொண்டும் இடதுபுறத்தை கையினாலும் இசைக்கின்றனர். இதனைச் சுருதி கூட்டியும் இசைக்க முடியும் என்கின்றனர். நல்ல பயிற்சியின்மூலம் இக்கருவி இசைக்கப்படுகின்றது. வாசிப்பிற்கென்று இலக்கண முறைகள் எழுத்து வடிவில் இல்லை. ஆனால் இதில் 32 வகையான தாளங்களை வாசிப்பதாகக் கூறுகின்றனர். இக்கருவி அம்மன் கோவில்களிலும் தனிமேடை நிகழ்வுகளிலும் இசைக்கப்படுகிறது.

தவண்டை



ஐயனார், கருப்பர், முனியாண்டி, வீரனார் போன்ற தெய்வங்களுக்கு 'மதலை எடுப்பு' என்னும் வழிபாட்டுச் சடங்கு வருடந்தோறும் நடப்பதுண்டு. குழந்தை வேண்டி குழந்தை பெற்றவர்கள் குழந்தையைப் போலவே சுடுமண் உருவம் செய்தும் சாமி சிலைகள் செய்தும் சுமந்து வருவர். பெரும் அரிவாளுடன் அருள்வாக்கு சொல்லும் பூசாரி மிரட்டலாக நடந்து வருவார். மேலும் மாரியம்மா, இராக்கம்மா, ஏலத்தம்மா, வெக்காளியம்மா போன்ற பெண் தெய்வங்களுக்கான தீச்சட்டி எடுப்பு, குண்டம் இறங்குதல் போன்ற நிகழ்வுகளின்போது உக்கிரமூட்ட இசைக்கப்படும் தோற்கருவியே தவண்டை.

இருமுனைகளிலும் விரிந்தும் இடையில் சுருங்கியும் உடுக்கை அமைப்பிலேயே இருந்தாலும் அதைவிட அளவில் பெரியது இக்கருவி. இது இருமுகக் கருவியானாலும் ஒருபுறத்தில் மட்டுமே வாசிக்கப்படும். இது வளைந்த மஞ்சள் அரளிக் குச்சியைக் கொண்டு இசைக்கப்படுகிறது. இக்கருவி வைரம் பாய்ந்த பலா மரக்கட்டையினைக் கொண்டு இதன் உடற்பகுதி செய்யப்படுகிறது. தற்போது வெண்கலத்தினாலான தவண்டையும் உண்டு. கனத்த ஆட்டுத்தோல் கொண்டு இதன் இருமுகங்கள் வார்க்கப்படுகின்றன.

தவண்டை தோலில் தொங்கவிட்டுக்கொண்டு இசைக்கப்படுகிறது. இதனை மேலோட்டமாக வாசிக்கும்போது தோய்வான சத்தமும் கொங்காரத்தை அழுத்திப் பிடித்து வாசிக்கும்போது வீரியமான சத்தமும் எழும்பும். உடுக்கையின் தொடர்ச்சியாகவும் இலக்கண வரம்புடைய பேரிசை தோற்கருவிகளுக்கு முந்தைய வடிவமாகத் தவண்டை விளங்குகிறது.

மகுடம்



மகுடமானது கணியான் கூத்து எனும் நிகழ்த்துக் கலையில் மட்டுமே இசைக்கப்படுகிறது. இது பார்ப்பதற்குத் தப்பட்டை போல இருந்தாலும் இந்த ஒருமுகத் தோலிசைக் கருவி பலவிதங்களில் வேறுபாடு கொண்டது. மிக முக்கியமாக இதனைக் கையால் மட்டுமே இசைப்பர். இதனை முதன்மைப்படுத்திப் பலபுராண நம்பிக்கைகளும் கர்ண பரம்பரைக் கதைகளும் கூறப்படுகின்றன. சுடலைமாடன் கதையும் இக்கருவியின் தொன்மத்தை உணர்த்துகிறது.

பூவரசு, வேம்பு, மஞ்சணத்தி ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மரத்தின் கட்டையைக் கொண்டு எட்டு செ.மீ. விட்டத்திற்கு ஒரு வளைவுச் சட்டம் செய்யவேண்டும். எருமைக் கன்றுக்குட்டியின் தோலினைக்கொண்டு சட்டத்தின் உதவியுடன் புளியங்கொட்டைப் பிசினால் ஒட்டி எல்லாப் புறமும் இழுத்துக் கட்டி சூரிய ஒளியில் ஒருநாள் முழுவதும் வைத்திருந்து இக்கருவி உருவாக்கப்படுகிறது.

நாதம் பொங்கும் இந்த இசைக்கருவியின் இசை ஓசையின் அடிப்படையில் உச்சம், மந்தம் என இரு வகைகளில் உள்ளன. உச்ச இசையைத் தரும் கருவிக்குத் ‘தொப்பி’ என்றும் மந்த இசையைத் தரும் கருவிக்கு ‘விளந்தலை’ என்றும் பெயர் வழங்குவர். இவ்விசைக் கருவிகளை உபயோகித்து ஆடுவதால் கணியான் கூத்தை மகுடாட்டம், மகுடக் கச்சேரி என்றும் அழைப்பர்.

இக்கருவி சுடலைமாடன், பன்றிமாடன், கருப்பசாமி, வண்ணாரமாடன், இசக்கியம்மன், முத்தாரம்மன், சந்தானமாரி போன்ற தெய்வங்களின் வரலாற்றைப் பாடி மகுடத்தை இசைக்கின்றனர்.

கொடுகொட்டி



கிரிகிட்டி, கிரிகட்டி, கிடுகிட்டி, கிடிக்கட்டி, கொடுங்கொட்டி எனப் பல பெயர்களில் இக்கருவி அழைக்கப்படுகிறது. இது இரு கருவிகள் இணைந்த தோலிசைக் கருவியாகும். அடியிற் குறுகி முகம் படர்ந்த இக்கருவியின் இரண்டு நடுப்புறமும் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கும். இடுப்பில் கட்டிக்கொண்டோ அல்லது கழுத்தில மாட்டிக்கொண்டோ இக்கருவியை வாசிப்பர்.

கனத்த பலாமரத்தைக் குடைந்து சட்டி போன்ற உருவம் செய்து மேலே ஆட்டுத்தோல் அல்லது மாட்டுத்தோல் கொண்டு வார்க்கப்படும். இதன் ஒருபுறத்தைத் தொப்பி என்றும் மறுபுறத்தை வளந்தலை என்றும் கூறுவர். தொப்பி மென்மையான தோலினாலும் வளந்தலை கடினமாக தோலினாலும் வார்க்கப்படும். ஒரு புளியங்குச்சியைத் தண்ணீரில் நன்கு ஊறவைத்து, பின் நெருப்பில் வாட்டி வளைத்து உருவாக்கப்பட்ட தடிமனற்ற குச்சியைக் கொண்டே இக்கருவியை இசைப்பர்.

பொய்க்கால் குதிரை ஆட்டத்திற்கு இக்கருவி இசைக்கப்படுகிறது. ஆதியன் எனப்படும் பூம்பூம் மாட்டுக்காரர்கள் உருமியோடு சேர்த்து இக்கருவியையும் இசைப்பர். அம்மக்கள் நிகழ்த்தும் ‘மாட்டுக் கல்யாணம்’ எனும் கூத்திற்குக் கொடுகொட்டி மிக்க துணையாக உள்ளது. இது பாரி நாதஸ்வரத்துடன் தெய்வ வழிபாடுகளில் இசைக்கப்படுகிறது.

முடிவுரை

அண்மைக் காலங்களில் தமிழரின் தொன்மையான மரபுகள் குறித்த சரியான புரிந்துணர்வு இல்லாமையால் நாம் அடையாளங்கள் பலவற்றை இழந்துவிட்டோம். அவற்றில் பேரிழப்பே இசை அடையாளங்களைத் தொலைத்ததுதான். உலகமயமும் அந்நியத்தின் மீதான மோகமும் நம் தொன்மங்களின் ஆணிவேரைப் புரையோடச் செய்து மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டன. தொன்மையான இசைக்கருவிகளைப் பாதுகாப்பதும் இசையைப் பரப்புவதையுமே நோக்கமாகக் கொண்ட ஏராளமானவர்கள் இசைத்துறையில் உள்ளனர். அவர்களிடத்தில் பயன்பாடற்று இருக்கும் இசைக்கருவிகளை வழங்குவதன் மூலம் பல இசைக்கருவிகளைப் பாதுகாக்கலாம். அரசு அழிவின் விளிம்பிலிருக்கும் இசைக்கருவிகளின்மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். வறுமையில் உழலும் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை இன்னும் மேம்படுத்த ஆவன செய்ய வேண்டும். இசைக்கருவிகளின் மீதான மக்களின் பார்வையை அதிகரிக்க அரசு தனி இடஒதுக்கீடுகளை

அமல்படுத்தலாம். மாணவர்கள் அடிப்படையிலிருந்து இசைக்கல்வியைக் கற்பதற்கான சூழல்களை உருவாக்க அரசும் இசைக்கலைஞர்களும் உறுதியேற்க வேண்டும்.

அடிக்குறிப்பு :

1. வீ.ப.கா.சுந்தரம், பஞ்சமரபு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட், சென்னை, முதற்பதிப்பு, 1991.
2. வெ.நீலகண்டன், வாழ்விழந்து வரும் கிராமிய இசைக்கருவிகள், பிளாக்ஹோல் மீடியா பப்ளிகேசன் லிட், சென்னை, முதற்பதிப்பு, 2011
3. மேலது

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

30.வரலாற்று ஆதாரங்களாக தமிழ் இலக்கியங்களின் படைப்புகள் - ஒரு ஆய்வு



முனைவர் ச.பூபாலன்,
உதவிப் பேராசிரியர் மற்றும் வரலாற்றுத் துறை தலைவர், கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காத்தாம்பள்ளம், கிருஷ்ணகிரி - 635108
cell : 9976508008
mail :balansaran58489.bs@gmail.com

DOI 10.5281/zenodo.21739968.

Abstract :

Tamil literary works are not merely creations distinguished by aesthetic beauty, emotional depth, and intellectual richness; they also serve as vital sources reflecting the history of Tamil society. Various social elements–such as political structures, economic conditions, religious evolution, cultural traditions, family systems, gender roles, and trade relations–are mirrored in this literature. Sangam literature documents the lifestyle of ancient Tamils through the lenses of nature, landscape classification, warfare, and romantic traditions. Epic literature reveals details regarding urban development, political administration, and religious transformations, while devotional literature highlights temple-centric social structures and the impact of religious movements. Medieval and modern literary works reinterpret history from fresh perspectives. This study approaches Tamil literature–spanning the Sangam era to the modern period–as historical source material, analyzing the political, social, economic, and religious information contained therein from a historiographical perspective. It emphasizes the necessity of a critical approach when utilizing literature as historical evidence, given the presence of imagination and metaphor within these texts. The central thesis of this study is that, when subjected to comparative analysis alongside inscriptions and archaeological evidence, Tamil literary works serve as crucial supplementary sources for reconstructing the history of the Tamil people.

Keywords:

Tamil literature, History of Tamils, Sangam literature, Epic literature, Devotional literature, Social structure, Political structure, Economic condition, Religious evolution, Cultural traditions, Historical sources, Historiography, Inscriptions, Archaeological evidence, Social history of Tamils.

ஆய்வுச்சுருக்கம் :

தமிழ் இலக்கியங்கள் கலைநயம், உணர்ச்சி ஆழம் மற்றும் சிந்தனைச் செழுமை கொண்ட படைப்புகளாக மட்டுமல்லாமல், தமிழர் சமூகத்தின் வரலாற்றைப் பிரதிபலிக்கும் முக்கிய ஆதாரங்களாகவும் விளங்குகின்றன. அரசியல் அமைப்பு, பொருளாதார நிலை, சமய வளர்ச்சி, பண்பாட்டு மரபுகள், குடும்ப அமைப்பு, பாலினப் பங்கு மற்றும் வர்த்தகத் தொடர்புகள் போன்ற பல

சமூக கூறுகள் இலக்கியங்களில் பிரதிபலிக்கின்றன. சங்க கால இலக்கியங்கள் பழந்தமிழர் வாழ்க்கை முறையை இயற்கை, நிலப்பிரிவு, போரியல் மற்றும் காதல் மரபுகள் ஆகிய கோணங்களில் பதிவு செய்கின்றன. காவிய இலக்கியங்கள் நகர வளர்ச்சி, அரசியல் நிர்வாகம் மற்றும் சமய மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன; பக்தி இலக்கியங்கள் கோயில் மையப்படுத்திய சமூக அமைப்பையும் சமய இயக்கங்களின் தாக்கத்தையும் எடுத்துரைக்கின்றன. நடுக்கால மற்றும் நவீன இலக்கியங்கள் வரலாற்றை புதிய சிந்தனை நோக்கில் மறுவாசிப்பு செய்கின்றன. இவ்வாய்வு சங்க காலம் முதல் நவீன காலம் வரை உள்ள தமிழ் இலக்கியங்களை வரலாற்று ஆதாரங்களாக அணுகி, அவற்றில் உள்ள அரசியல், சமூக, பொருளாதார மற்றும் சமய தகவல்களை வரலாற்று வரைவியல் கோணத்தில் பகுப்பாய்வு செய்கிறது. இலக்கியங்களில் கற்பனை மற்றும் உருவகங்கள் உள்ளதால் அவற்றை வரலாற்று ஆதாரங்களாக பயன்படுத்தும் போது விமர்சன அணுகுமுறை அவசியம் என்பதையும் வலியுறுத்துகிறது. கல்வெட்டுகள் மற்றும் தொல்பொருள் சான்றுகளுடன் ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளப்படும் போது, தமிழ் இலக்கியங்கள் தமிழர் வரலாற்றை மீளுருவாக்க உதவும் முக்கிய துணை ஆதாரங்களாக அமைகின்றன என்பதே இவ்வாய்வின் மையக் கருத்தாகும்.

முக்கிய வார்த்தைகள்:

தமிழ் இலக்கியங்கள், தமிழர் வரலாறு, சங்க கால இலக்கியங்கள், காவிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சமூக அமைப்பு, அரசியல் அமைப்பு, பொருளாதார நிலை, சமய வளர்ச்சி, பண்பாட்டு மரபுகள், வரலாற்று ஆதாரங்கள், வரலாற்று வரைவியல், கல்வெட்டுகள், தொல்பொருள் சான்றுகள், தமிழர் சமூக வரலாறு,

1. சங்க இலக்கியங்கள் - சமூக மற்றும் அரசியல் வரலாறு

சங்க கால இலக்கியங்கள் தமிழரின் தொன்மையான வாழ்வியலை பதிவு செய்த முக்கிய வரலாற்றுச் சான்றுகளாகும். கிமு 300 முதல் கிபி 300 வரை பரவிய சங்க காலம் தமிழர்களின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு அமைப்புகள் உறுதியடைந்த காலமாகக் கருதப்படுகிறது. இக்கால வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்கும் இலக்கியங்கள் வரலாற்று ஆய்வுக்கு முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன.

அரசியல் அமைப்பு மற்றும் ஆட்சி முறைகள்

புறநானூறு சங்ககால அரசியல் வரலாற்றை விளக்கும் முக்கிய ஆதாரமாகும். இதில் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூவேந்தர்களின் ஆட்சி, வீர மரபு, போர்முறை மற்றும் தானவிருப்பம் போன்ற அம்சங்கள் இடம்பெறுகின்றன. போரில் உயிர்நீத்த வீரர்களுக்காக நடுகல் அமைக்கும் மரபும் காணப்படுகிறது. மேலும் மன்னர்-புலவர் உறவு அக்கால அரசியல் மற்றும் இலக்கியத் தொடர்பை வெளிப்படுத்துகிறது.

சமூக வாழ்க்கை மற்றும் பண்பாட்டு அமைப்பு

அகநானூறு சங்ககால சமூக வாழ்க்கையின் நுட்ப அம்சங்களை எடுத்துரைக்கிறது. காதல், திருமணம், குடும்ப உறவுகள், பெண்களின் பங்கு போன்றவை இயற்கைச் சூழலோடு இணைந்து

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

சித்தரிக்கப்படுகின்றன. ஐந்திணை வகைப்பாடு மனித வாழ்வியல் மற்றும் நிலப்பரப்பின் தொடர்பை விளக்குகிறது.

பொருளாதாரம் மற்றும் வாணிபத் தொடர்புகள்

சங்க காலத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, வேட்டை, மீன்பிடி, உப்பு தயாரிப்பு, உலோக வேலைப்பாடு போன்ற தொழில்கள் முக்கிய வாழ்வாதாரமாக இருந்தன. பட்டினப்பாலை புஹார் நகரின் வளம், கடல் வாணிபம் மற்றும் யவனர் வருகையை குறிப்பிடுகிறது. இது தமிழர்களின் பன்னாட்டு வர்த்தகத் தொடர்புகளை உணர்த்துகிறது.

குடியியல் மற்றும் மரபுகள்

சங்க இலக்கியங்கள் ஊராட்சி மரபுகள், வீர மரபுகள், விருந்தோம்பல் பண்பு மற்றும் அறநெறி போன்ற சமூக பண்புகளை எடுத்துக்காட்டுகின்றன. மக்கள் மற்றும் மன்னர் இடையிலான உறவு, பொதுநலப் பொறுப்பு போன்றவை அக்கால சமூக ஒழுங்கை வெளிப்படுத்துகின்றன.

2. காவிய இலக்கியங்கள் - நகரம், சமயம் மற்றும் பொருளாதாரம்

தமிழ் காவிய இலக்கியங்கள் வரலாற்று உணர்வையும் கலைநயத்தையும் ஒருங்கிணைக்கும் முக்கிய படைப்புகளாகும். சங்க காலத்திற்குப் பின் தோன்றிய இக்காவியங்கள் நகர நாகரிக வளர்ச்சி, அரசியல் நிர்வாகம், சமய இயக்கங்கள் மற்றும் பொருளாதார அமைப்புகளைப் பற்றிய தகவல்களை வழங்குகின்றன. இவை நேரடி வரலாற்று ஆவணங்கள் அல்லாதபோதிலும், அக்கால சமூக வாழ்க்கையைப் புரிந்துகொள்ள உதவும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன.

சிலப்பதிகாரம் – நகர வளர்ச்சி மற்றும் அரசியல் பொறுப்பு

சிலப்பதிகாரம் மூன்று முக்கிய நகரங்களான மதுரை, புஹார், வஞ்சி ஆகியவற்றின் அரசியல், சமூக மற்றும் பொருளாதார நிலைகளை விளக்குகிறது. புஹார் நகரம் கடல் வாணிபத்தின் மையமாக இருந்ததையும், துறைமுகங்கள் மற்றும் வணிகர் சமூகங்களின் செயல்பாடுகளையும் எடுத்துரைக்கிறது. மதுரையில் கோவலன் வழக்கு அரசரின் நீதிமுறைப் பொறுப்பையும் தவறான ஆட்சியின் விளைவுகளையும் காட்டுகிறது. வஞ்சி நகரம் சேரர் ஆட்சியின் பெருமையை வெளிப்படுத்துகிறது.

மணிமேகலை – சமய பரிமாற்றம் மற்றும் துறவற வாழ்க்கை

மணிமேகலை பௌத்த சமயத்தின் சிந்தனைகள், கருணைத் தத்துவம் மற்றும் துறவற வாழ்க்கையை எடுத்துரைக்கிறது. இதில் சமண, பௌத்த மற்றும் வைதீக சமயங்களுக்கிடையேயான சிந்தனைப் பரிமாற்றமும் பிரதிபலிக்கப்படுகிறது. சமூக சமத்துவம், அன்னதானம் மற்றும் கருணை போன்ற மதிப்புகள் வலியுறுத்தப்படுகின்றன.

பொருளாதார மற்றும் பண்பாட்டுக் கூறுகள்

இரு காவியங்களிலும் நகர வாழ்க்கை, வணிகர்கள், கலைஞர்கள், நடனம், இசை மற்றும் விழாக்கள் போன்ற பண்பாட்டு அம்சங்கள் இடம்பெறுகின்றன. சந்தை அமைப்பு, கடல் வாணிபம் மற்றும் பொருட்களின் பரிமாற்றம் ஆகியவை அக்கால பொருளாதார வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன.

3. பக்தி இலக்கியங்கள் - சமய மற்றும் சமூக மாற்றங்கள்.

பக்தி இயக்கம் தமிழ் சமூகத்தில் பெரிய சமய மற்றும் சமூக மாற்றங்களை ஏற்படுத்திய முக்கிய இயக்கமாகும். குறிப்பாக கி.பி. 7-9 ஆம் நூற்றாண்டுகளில் உருவான பக்தி இலக்கியங்கள் தமிழர் வாழ்க்கை முறையிலும் சமயக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின. இந்நூல்கள் பக்தி உணர்வை மட்டுமன்றி, சமூக ஒழுங்கு மற்றும் கோயில் மையப்படுத்திய சமூக அமைப்புகளை வெளிப்படுத்தும் வரலாற்றுச் சான்றுகளாகவும் விளங்குகின்றன.

தேவாரம் – சைவ சமய வளர்ச்சி

தேவாரம் சைவ பக்தி இயக்கத்தின் முக்கிய இலக்கியமாகும். இதில் நாயன்மார்கள் பாடிய பாடல்கள் சைவ சிந்தனை, திருக்கோயில் மரபுகள் மற்றும் அக்கால சமூக ஒழுங்குகளை எடுத்துரைக்கின்றன. கோயில்கள் அரசியல் மற்றும் சமூகச் செயல்பாடுகளின் மையமாக இருந்ததையும் இது காட்டுகிறது.

நாலாயிர திவ்யப் பிரபந்தம் - வைணவ சமய வளர்ச்சி

நாலாயிர திவ்யப் பிரபந்தம் வைணவ பக்தி இயக்கத்தின் முக்கிய இலக்கியமாகும். 4000 பாடல்களைக் கொண்ட இந்நூல் வைணவ சமய வளர்ச்சியையும் கோயில் சார்ந்த சமூக அமைப்புகளையும் விளக்குகிறது. பக்தர்கள், கோயில் நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் இடையேயான உறவுகள் சமூக ஒழுங்கை உருவாக்கியதை உணர்த்துகின்றன.

சமூக மாற்றங்கள் மற்றும் அரசியல் உறவுகள்

பக்தி இலக்கியங்கள் சமயச் சிந்தனையை வளர்த்ததுடன் சமூக அமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. அரசர்கள் மற்றும் பக்தர்கள் கோயில் நிர்வாகம் மற்றும் சமூகச் செயல்பாடுகளில் இணைந்திருந்தனர். இதனால் கோயில்கள் சமூக மையங்களாக மாறி, சமூக ஒழுங்கு மற்றும் சமயப் பண்பாட்டை வளர்த்தன.

4. நடுக்கால மற்றும் நவீன இலக்கியங்கள் - வரலாற்று மறுவாசிப்பு

தமிழ் இலக்கியத்தில் சங்க மற்றும் காவிய காலத்திற்குப் பிறகு தோன்றிய நடுக்கால மற்றும் நவீன இலக்கியங்கள் வரலாற்று நிகழ்வுகளை மறுபார்வையுடன் எடுத்துரைக்கின்றன. இவை நேரடி வரலாற்றுச் சான்றுகள் அல்லாதபோதிலும், அரசியல், போர் மற்றும் சமூக அமைப்புகள் பற்றிய முக்கிய தகவல்களை வழங்குகின்றன.

நடுக்கால இலக்கியங்கள் - அரசியல் மற்றும் போர் வரலாறு

நடுக்கால இலக்கியங்கள் அரசர்களின் வீரச்செயல்கள், ஆட்சி முறைகள் மற்றும் போர் நிகழ்வுகளைப் பதிவு செய்கின்றன. *கலிங்கத்துப்பரணி* போன்ற படைப்புகள் சோழர் காலப்

போர்களையும் வீரர்களின் செயல்களையும் விவரிக்கின்றன. இதன் மூலம் அக்கால அரசியல் மற்றும் போர் வரலாறு குறித்து அறிய முடிகிறது.

நவீன இலக்கியங்கள் - வரலாற்று நாவல்கள்

19 மற்றும் 20ஆம் நூற்றாண்டில் தோன்றிய நவீன இலக்கியங்கள் வரலாற்று உண்மைகளுடன் கற்பனை கூறுகளை இணைத்து எழுதப்பட்டன. *பொன்னியின் செல்வன்* போன்ற வரலாற்று நாவல்கள் சோழர் கால அரசியல், சமூக மற்றும் நகர வாழ்க்கையை சுவாரஸ்யமாக வெளிப்படுத்துகின்றன. மொத்தத்தில், நடுக்கால மற்றும் நவீன இலக்கியங்கள் வரலாற்றை மறுபார்வையுடன் விளக்கும் முக்கிய மூலங்களாக இருந்து, கல்வெட்டுகள் மற்றும் தொல்பொருள் சான்றுகளுடன் இணைந்து தமிழர் வரலாற்றை புரிந்துகொள்ள உதவுகின்றன.

5. **தமிழ் இலக்கியங்கள் வரலாற்று ஆதாரங்களாக - நம்பகத்தன்மை மற்றும் வரம்புகள்**

தமிழ் இலக்கியங்கள் வரலாற்றை அறிய முக்கிய ஆதாரங்களாக இருந்தாலும், அவை நேரடி வரலாற்றுப் பதிவுகள் அல்ல. சங்க இலக்கியங்கள், காவியங்கள், பக்தி இலக்கியங்கள் மற்றும் நவீன வரலாற்று நாவல்கள் கலைநயம், உவமை மற்றும் கற்பனை கூறுகளை கொண்டுள்ளதால், அவற்றை விமர்சனமாக ஆய்வு செய்ய வேண்டும்.

நம்பகத்தன்மை

- தமிழ் இலக்கியங்கள் அக்கால சமூக வாழ்க்கை, குடும்ப அமைப்பு, பெண்களின் பங்கு, ஊராட்சி மரபுகள் போன்ற தகவல்களை வழங்குகின்றன.
- மன்னர்கள் ஆட்சி, போர் நிகழ்வுகள், நகர வளர்ச்சி மற்றும் வாணிபம் போன்ற அரசியல் மற்றும் பொருளாதார தகவல்களையும் பதிவு செய்கின்றன.
- தேவாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம் போன்றவை சமய சிந்தனை மற்றும் கோயில் மைய சமூக அமைப்புகளை விளக்குகின்றன.

வரம்புகள்

- இலக்கியங்களில் கற்பனை, உவமை மற்றும் கலைநயம் அதிகமாக இருப்பதால் சில விவரங்கள் வரலாற்று உண்மையல்லாமல் இருக்கலாம்.
- ஆசிரியர்களின் அரசியல் அல்லது சமயச் சார்பு கருத்துகள் தகவல்களை பாதிக்கக்கூடும்.
- சில இலக்கியங்களின் காலக்கட்டத்தைத் துல்லியமாக நிர்ணயிப்பது கடினம்.

எனவே, தமிழ் இலக்கியங்களை கல்வெட்டுகள் மற்றும் தொல்பொருள் சான்றுகளுடன் இணைத்து ஆய்வு செய்தால், தமிழர் வரலாற்றை நம்பகமாக புரிந்துகொள்ள முடியும்.

முடிவுரை

தமிழ் இலக்கியங்கள் தமிழர் சமூகத்தின் அரசியல், சமயம், பொருளாதாரம் மற்றும் சமூக பண்பாட்டை வெளிப்படுத்தும் முக்கிய ஆதாரங்களாகும். சங்க இலக்கியங்கள் மன்னர்கள் ஆட்சி, வீரச்செயல்கள் மற்றும் சமூக வாழ்வியலை விளக்குகின்றன. காவியங்கள் நகர வளர்ச்சி, வாணிபம் மற்றும் நீதிமுறைகளை சித்தரிக்கின்றன. பக்தி இலக்கியங்கள் கோயில் மைய சமூக அமைப்புகள்

மற்றும் சமய வளர்ச்சியை எடுத்துரைக்கின்றன. நடுக்கால மற்றும் நவீன இலக்கியங்கள் வரலாற்று நிகழ்வுகளை கற்பனை கூறுகளுடன் மறுபார்வையில் விளக்குகின்றன. இலக்கியங்கள் நேரடி வரலாற்று ஆவணங்கள் அல்லாததால், அவற்றை கல்வெட்டுகள் மற்றும் தொல்பொருள் சான்றுகளுடன் ஒப்பிட்டு விமர்சனமாக ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு ஆய்வு செய்யும்போது, தமிழ் இலக்கியங்கள் தமிழர் வரலாறு மற்றும் பண்பாட்டு வளர்ச்சியைப் புரிந்துகொள்ள முக்கியமான ஆதாரங்களாக விளங்குகின்றன.

References:

Primary Literary Sources (Primary Texts)

1. **புறநானூறு**. **அகநானூறு**. **பட்டினப்பாலை**. **சிலப்பதிகாரம்**. **மணிமேகலை**. **தேவாரம்**.**நாலாயிர திவ்யப் பிரபந்தம்**. **கலிங்கத்துப்பரணி**. **பொன்னியின் செல்வன்** – Kalki Krishnamurthy, *Ponniyin Selvan*.

Secondary Sources (Scholarly Books & Articles)

On Sangam Literature and History

2. Hart, George L. *Poems of Ancient Tamil: Their Milieu and Their Sanskrit Counterparts.*
3. Mahadevan, Iravatham. *Early Tamil Epigraphy: From the Earliest Times to the Sixth Century A.D.*
4. Zvelebil, Kamil. *Tamil Literature.* Leiden: E. J. Brill.

On Tamil Epics and Medieval Texts

5. Cutler, Norman. *Songs of Experience: The Poetics of Tamil Devotion.*
6. Srinivasan, Doris M. *Many Heads, Arms, and Eyes: Origin, Meaning, and Form of Multiplicity in Indian Art.*
7. Peterson, Indira Viswanathan. *Poems to Siva: The Hymns of the Tamil Saints.*

On Bhakti and Social Change

8. Shulman, David. *Tamil Temple Myths: Sacrifice and Divine Marriage in the South Indian Saiva Tradition.*
9. Hardy, Friedhelm. *Viraha-Bhakti: The Early History of Kṛṣṇa Devotion in South India.*

On Methods of Literary History

10. Thapar, Romila. *The Past as Present: Forging Contemporary Identities Through History.*
11. Bayly, Susan. *Caste, Society and Politics in India from the Eighteenth Century to the Modern Age.*
12. Chakrabarti, Dilip K. *The Archaeology of South Asia: From the Indus to Asoka, c. 6500 BCE-200 CE.*

31.கரிகால சோழனின் நீர் மேலாண்மை மற்றும் பகிர்மானங்கள் : ஓர் வரலாற்று ஆய்வு

பா. மஞ்சுஸ்ரீ,
மூன்றாம் ஆண்டு வரலாறு,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
காத்தாம்பள்ளம்,கிருஷ்ணகிரி

பேரா.ச. பூபாலன்
உதவிப் பேராசிரியர் மற்றும் வரலாற்றுத் துறை தலைவர்,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
காத்தாம்பள்ளம்,கிருஷ்ணகிரி

DOI 10.5281/zenodo.21740096.

Abstract :

It is a historical fact that all the ancient civilizations of the world flourished along riverbanks. Similarly, Tamil civilization thrived based on its water resources. Tamil tradition revered maritime voyages–referred to as *Munneer Vazhakkam*–and acknowledged the indispensability of water, encapsulated in the adage "The world cannot exist without water." Karikalan, a renowned monarch of the Chola Empire, holds a unique place in the history of irrigation in Tamil Nadu. The Kallanai (Grand Anicut), constructed by him to effectively harness the waters of the Kaveri River, remains a distinguished structure and stands as one of the world's oldest irrigation systems. It serves as a historical monument reflecting Karikalan’s visionary outlook and expertise in water management. In today's world, water resource conservation has emerged as a major challenge due to factors such as climate change, erratic rainfall, depleting groundwater levels, and the encroachment of water bodies. This research paper aims to examine and elucidate Karikalan’s irrigation policies, the historical significance of the Kallanai, and his contributions to water management in Tamil society, drawing upon historical accounts, Sangam literary evidence, inscriptions, archaeological findings, and historical research texts.

Keywords : Historical Facts - Tamil Tradition - Chozhas - Karikalan

முன்னுரை

உலகின் தொன்மையான நாகரீகங்கள் அனைத்தும் ஆற்றங்கரைகளை மையமாகக் கொண்டு வளர்ந்தன என்பது வரலாற்று உண்மையாகும். அதுபோலவே தமிழர்களின் நாகரிகமும் நீர்வளத்தை அடிப்படையாகக் கொண்டு செழித்து வளர்ந்தது. “முந்நீர் வழக்கம்” என்று கடற் பயணத்தையும், “நீரின்றி அமையாது உலகு” என்ற நீரின் இன்றியமையாமையும் போற்றியது தமிழ் மரபாகும். சோழப் பேரரசின் புகழ்பெற்ற அரசரான கரிகாலச் சோழன் தமிழகத்தின் நீர்ப்பாசன

வரலாற்றில் தனித்துவமான இடத்தை பெற்றவர். காவிரி ஆற்றின் வளத்தை முறையாக பயன்படுத்தும் நோக்கில் அவர் உருவாக்கிய கல்லணை உலகின் தொன்மையான நீர் பாசன கட்டமைப்புகளில் ஒன்றாக இன்றளவும் சிறப்புடன் விளங்குகிறது. இது கரிகால சோழனின் தொலைநோக்கு பார்வையையும் நீர் மேலாண்மைத் திறனையும் வெளிப்படுத்தும் வரலாற்றுச் சின்னமாகும். இன்றைய உலகில் காலநிலை மாற்றம், மழைப்பொழிவு மாறுபாடு, நிலத்தடி நீர்மட்ட குறைவு, நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு போன்ற காரணங்களால் நீர்வளப் பாதுகாப்பு பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. இவ்வாய்வு கட்டுரையானது கரிகால சோழனின் நீர் மேலாண்மை தொடர்பான வரலாற்றுச் செய்திகள், சங்க இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுகள், தொல்லியல் ஆதாரங்கள் மற்றும் வரலாற்று ஆய்வு நூல்களின் அடிப்படையில் அவரது நீர் பாசன கொள்கைகள், கல்லணையின் வரலாற்று சிறப்பு மற்றும் தமிழ்ச் சமூகத்தின் நீர்வள மேலாண்மையில் அவர் ஆற்றிய பங்களிப்பை ஆராய்ந்து விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கரிகால சோழன் காலத்திய அரசியல் சூழல் மற்றும் நீர்வளத் தேவைகள்

சங்க காலத்தில் கரிகால சோழனின் அரசியல் பலமும் சோழ நாட்டின் நீர்வளத் தேவைகளும் ஒன்றோடு ஒன்று மிக நெருங்கிய தொடர்புடையதாக இருந்தன. கரிகாலன் அரியணை ஏறிய காலகட்டத்தில் சோழ அரசு உள்நாட்டு பிரச்சினைகளாலும், சேர, பாண்டியர் மற்றும் குறுநில மன்னர்களின் (வேளிர்) அச்சுறுத்தல்களாலும் சூழப்பட்டிருந்தது. வெண்ணிப்போர் மற்றும் வாகைப் பறந்தலைப் போர்களில் பெற்ற மாபெரும் வெற்றிகளின் மூலம் கரிகாலன் தனது அரசியல் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி ஒட்டுமொத்த தமிழகத்தின் தலைசிறந்த பேரரசனாக உருவெடுத்தார்[1]. இந்த அரசியல் தந்திரமும் போர்களில் சிறைப்பிடிக்கப்பட்ட எதிரி நாட்டு வீரர்களின் மனித வளமுமே அவரது மாபெரும் நீர் மேலாண்மை திட்டங்களுக்கு அடித்தளமாக அமைந்தன. அரசியல் ரீதியாக பேரரசை வலுப்படுத்திய கரிகாலனுக்கு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அன்றைய சோழ நாட்டின் தலைநகரமான உறையூரும், முக்கிய துறைமுகமாக காவிரிப்பூம்பட்டினமும் காவிரி ஆற்றின் வளம் சார்ந்தே இயங்கின. ஆனால் காவிரி ஆற்றில் ஆண்டுதோறும் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கு பயிர்களை அழித்ததோடு மக்களின் வாழ்வாதாரத்தையும் சிதைத்தது. அதே சமயம் கோடைகாலத்தில் வறட்சியும் நிலவியது. பேரரசின் வரி வருவாய்க்கும் மக்களின் பசிப்பிணியைப் போக்கவும் வேளாண்மையை பெருக்குவது இன்றியமையாததாக இருந்தது.

> **"நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**
> **தட்டோர் அம்ம இவண் தட்டோரே "[2] (புறநானூறு - பாடல் 18, குடபுலவியனார்)**

இந்த அரசியல் மற்றும் பொருளாதார நீர்வள தேவைகளை உணர்ந்த கரிகாலன் நீர் மேலாண்மை நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்தார். இந்த அரசியல் தொலைநோக்கும்,

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

நீர்வள மேலாண்மைக்கான அணுகுமுறையும் பின்னாளில் சோழ நாட்டின் செழிப்பிற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக அமைந்தது.

கரிகால சோழனின் நீர் மேலாண்மைக் கொள்கைகள்

கரிகால சோழனின் நீர் மேலாண்மை என்பது வெறும் தற்காலிக தீர்வு அல்ல, அது தொலைநோக்குப் பார்வைக் கொண்ட திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையாகும். காவிரி ஆற்றின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தி,வறண்ட நிலங்களுக்கு நீரைத் திருப்பி , வேளாண்மையை நாட்டின் முதன்மை பொருளாதார சக்தியாக மாற்றுவதே அவரது முதன்மைக் கொள்கையாக இருந்தது.

“**காடு கொன்று நாடாக்கிக்**
குளம் தொட்டு வளம் பெருக்கி ”[3] (**பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்**)

இவ்வாறு காடுகளை அழித்து நாடாக்கியும்,குளங்களை தொட்டும் கரிகாலன் நீர் மேலாண்மையில் புதிய புரட்சியை ஏற்படுத்தினான்.

அ) வெள்ளக் கட்டுப்பாட்டுக் கொள்கை

சோழ நாட்டில் ஆண்டுதோறும் பருவமழை காலங்களில் காவிரி ஆற்றில் ஏற்படும் வெள்ளம் சோழ நாட்டின் பயிர்களையும்,மக்களையும் பேரழிவிற்கு உள்ளடக்கியது. இதை கட்டுப்படுத்த கரிகாலன் காவிரியின் இரு மதகுகளிலும் மிக வலிமையான கரைகளை எழுப்பினான். இதனை சங்க இலக்கியங்கள் “**காவிரி கரை நுகம்படக் கடந்தான்**”என்றும் பிற்கால செப்பேடுகள் **மலையடிவாரம் முதல் பூம்புகார் வரை காவிரிக்கு கரை கட்டிய சோழன்** என்றும் போற்றுகின்றன.

ஆ) நீர் சேமிப்பு மற்றும் விநியோகக் கொள்கை

காவிரி ஆற்றில் ஓடும் நீரின் வேகத்தை தடுத்து தேவையான போது பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் திருச்சியில் **கல்லணை** கட்டப்பட்டது. அணையில் தேக்கப்பட்ட நீரை வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்ல முறையான வாய்க்கால்களும், கிளை கால்வாய்களும்(**கொள்ளிடம்**)வெட்டப்பட்டன . இதன் மூலம் தஞ்சை பகுதி முழுவதற்கும் நீர் சமமாக விநியோகிக்கப்பட்டது. வெள்ளக் காலத்தில் காவிரி நீரை வீணாகக் கடலில் கலக்க விடாமல் தடுத்து பாசனத்திற்குத் திருப்புவதே இக்கொள்கையின் முக்கிய வெற்றியாகும்.

இ) சூழலியல் மற்றும் நிலத்தடி நீர் மேலாண்மை

ஆற்றின் பிரதான பாசனத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் சோழ நாடு முழுவதும் எண்ணற்ற ஏரிகளையும், ஊரணிகளையும், குளங்களையும் கரிகாலன் வெட்டினான். ஆற்று நீர் நேரடியாக

சென்றடையாத உட்புற கிராமங்களின் நீர் தேவையை பூர்த்தி செய்ததோடு நிலத்தடி நீர்மட்டத்தை எப்போதும் சீராக வைத்திருக்க உதவியது.

ஈ) மனித வளம் மற்றும் வீரர்களின் பங்களிப்பு

மாபெரும் அணையையும் கரைகளையும் கட்ட கரிகாலனுக்கு மிகப்பெரிய மனித வளம் தேவைப்பட்டது. எனவே கரிகாலன் போர்களில் சிறைப்பிடித்த எதிரி நாட்டு வீரர்களையும் (குறிப்பாக இலங்கை வீரர்கள்) உள்நாட்டு தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து கட்டுமான பணிகளில் ஈடுபடுத்தினார். இது போர்க்கால மனித வளத்தை நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு பயன்படுத்திய சிறந்த நிர்வாகக் கொள்கையாகும்.

கல்லணையின் உருவாக்கம், கட்டிடக்கலை மற்றும் பொறியியல் நுட்பங்கள்

உலகப் பொறியியல் வரலாற்றில் கி. பி இரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட **கல்லணை** ஒரு உன்னதமான மைல் கல்லாகும்.

"நுரையுறை வரன்றி இழிதரும் காவிரியைக்
கரை கொண்டு விணைத்த காவலோன் "[4]

(பொருநராற்றுப்படை- புலவர். முடத்தாமக்கண்ணியார்)

நவீன உபகரணங்களோ,சிமெண்ட் போன்ற பிணைப்பு பொருட்களோ இல்லாத அக்காலக்கட்டத்தில் ஓடும் நீரின் மீது கரிகால சோழன் அமைத்த கட்டுமானம் இன்றைய உலகப் பொறியாளர்களிடையே வியப்பில் ஆழ்த்துகிறது. இதன் கட்டடக்கலை மற்றும் தனித்துவமான பொறியியல் நுட்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

அ) அணையின் புவியியல் அமைப்பு

திருச்சிக்கு அருகே காவிரி ஆறு, காவிரி மற்றும் கொள்ளிடம் என இரண்டாகப் பிரிகிறது.கொள்ளிடம் தாழ்வான பகுதியில் இருந்ததால் வெள்ளகாலங்களில் அதிகப்படியான நீர் கொள்ளிடத்தில் பாய்ந்து வீணாக கடலில் கலந்தது.காவிரி பகுதி வறண்டது. எனவே, கொள்ளிடம் மற்றும் காவிரி இவ்விரண்டு ஆறுகளும் பிரியும் துல்லியமான புள்ளியை கண்டறிந்து காவிரியின் குறுக்கே கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

ஆ) அணையின் அடித்தள தொழில்நுட்பம்

சோழ நாட்டில் ஓடும் ஆற்று நீரில் அதுவும் நகரும் மணல் படுக்கையின் மீது அணை கட்டுவது என்பது மிகக் கடினமான செயல் ஆகும். காவிரி ஆற்றின் மீது பெரிய பெரிய பாறைகளைக் கொண்டு வந்து போட்டனர். நீரின் வேகத்தால் அந்தப் பாறைகள் மணலைத் தோண்டிக் கொண்டு

உள்ளே சென்றன. இருப்பினும், தொடர்ந்து செயல்பட்டனர். இவ்வாறு,தொடர்ந்து செயல்பட்டு ஒரு பாறை மணலுக்குள் புதைந்ததும் அதன் மேல் அடுத்த பாறையை போட்டனர். இவ்வாறு பாறைகள் ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கப்பட்டு ஆற்றின் அடிமட்டக் கடின பகுதி வரை சென்று நிலையான ஒரு அடித்தளத்தை இப்பாறைகள் உருவாக்கின.

இ) பிணைப்பு பொருள் மற்றும் வடிவமைப்பு

பாறைகள் நீரின் வேகத்தில் அடித்துச் செல்லப்படாமல் இருக்க, ஒரு தனித்துவமான பிணைப்பு பசயை பயன்படுத்தினர். களிமண்ணுடன் சில இயற்கை மூலிகைகளை கலந்து தயாரிக்கப்பட்ட இந்த நீர் புகாத ஒட்டும் களிமண் பாறைகளை ஒன்றுடன் ஒன்று பிரிக்க முடியாதவாறு பிணைத்துக் கொண்டது. அணை நேர்க்கோட்டில் கட்டப்படாமல் லேசான வளைந்த வடிவில் கட்டப்பட்டது. இது ஓடிவரும் நீரின் அழுத்தத்தை அணை முழுவதும் சமமாக பகிர்ந்து அதன் ஆயுளை நீட்டிக்க உதவியது.

இந்த **அணை சுமார்** 329 **மீட்டர்** (1080 **அடி**) **நீளமும்**, 20 **மீட்டர்** (60 **அடி**) **அகலமும்**,5.4 **மீட்டர்** (18 **அடி**) **உயரமும்** கொண்டதாக முற்றிலும் வெட்டப்பட்ட பாறைகளைக் கொண்டு பிரம்மாண்டமாக கட்டப்பட்டது.

காவிரி மற்றும் நீர் பாசன அமைப்பு

கரிகால சோழன் காவிரி ஆற்றை வெறும் வழிந்தோடும் நீரோட்டமாக பார்க்காமல் அதனை சோழநாடு முழுமைக்குமான ஒரு பிரமாண்டமான நீர்ப்பாசன வலைப்பின்னலாக மாற்றினார். கரிகாலன் திருவரங்கத்திற்கு மேற்கே பெரியதோர் அணையைக் கட்டி பல கால்வாய்களின் மூலம் காவிரி தண்ணீரை உழவுக்கு திருப்பி விட்டார். அக்கால்வாய்களுள் மிகவும் பெரியது இப்போது **வெண்ணாறு** என்று அழைக்கப்படுகிறது[5]. மேலும் தொலைவில் உள்ள வறண்ட நிலங்களுக்கும் நீர் சென்றடைய முறைப்பாசன முறையையும்,பெருமழைக் காலத்தில் பயிர்கள் அழுகாமல் இருக்க உபரி நீரை வெளியேற்றும் வடிகால் அமைப்பையும் உருவாக்கினார். இத்தகைய முறையான நீர்ப்பாசன அமைப்பினால் சோழநாடு முழுவதும் காவிரி நீர் பறந்து விரிந்து பொன் போன்ற நெல் விளைச்சலைக் கொடுத்ததை **பட்டினப்பாலை** வரிகள் மிக அழகாக விளக்குகின்றன.

"வான் பொய்யினும் தான் பொய்யா மலைத் தகைய கடற் காவிரி

புனல் பரந்து பொன் கொழிக்கும் "[6]

(பட்டினப்பாலை - கடியலூர் உருத்திரங்கண்ணனார்)

"**சோழநாடு சோறுடைத்து**" என்று சிறப்பித்துக் கூறுவதற்கு களமாக அமைந்தது காவிரியின் வற்றாத நீர் வளம் தான். அது ஆண்டின் எல்லா நாட்களிலும் மிகச் சிறப்பாக வளம் பெருக்கி நின்றது. சோழ நாட்டுக்குப் பெருமை தரத்தக்க பொருள்களில் முதன்மையானது காவிரியே ஆகும்[7].

கரிகால சோழனின் நீர் மேலாண்மையால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் வேளாண் மறுமலர்ச்சி

அ) வேளாண் தொழில்நுட்ப திசை மாற்றம்

கரிகாலனின் பாசன வசதியால் வெறும் விவசாயம் மட்டுமன்றி, அதிக நீர் தேவைப்படும் கரும்பு போன்ற பணப்பயிர்களும், ஊடு பயிர்களும் முதன்முறையாக பெரும் அளவில் அறிமுகப்படுத்தப்பட்டன. நிலத்திற்கு தடையின்றி நீர் கிடைத்ததால் சமூகம் மற்றும் அரசில் உழவர்கள் "**பூமிபுத்திரர்கள்** "என்றும் மிக உயர்ந்த அதிகாரி வர்க்கத்தினராகவும் மதிக்கப்படும் சமூக - பொருளாதார மாற்றம் நிகழ்ந்தது.

ஆ) அரசும் வரி விதிப்புக்கொள்கையும்

நீர் விநியோகம் முறைப்படுத்தப்பட்டதால், விளைச்சலுக்கு ஏற்ப அரசுக்குத் துல்லியமாக வரி செலுத்தும் முறை சீரமைக்கப்பட்டது. அரசாங்கம் அமைத்துக் கொடுத்த நீர் கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்காக உழவர்களிடமிருந்து **குடிமை** அல்லது **பாசன வரிகள்** பெறப்பட்டு,அவை மீண்டும் பொது நீர்நிலைகளை பராமரிக்கப் பயன்படுத்தப்பட்டன. இது சோழ அரசின் பொருளாதார சுழற்சியை வலுப்படுத்தியது.

இ) சந்தை நகரங்களின் உருவாக்கம்

கிராமப்புறங்களில் விளைந்த அதிகப்படியான உணவுப் பொருட்கள், **ஆவணங்கள்** எனப்படும் கிராமச் சந்தைகள் மற்றும் **நகரம்** எனப்படும் வணிக மையங்களுக்கு கொண்டுவரப்பட்டு பொருளாதாரப் புழக்கத்தை ஏற்படுத்தினார். வேளாண் விளைப் பொருட்களின் வர்த்தகத்தை கட்டுப்படுத்தவும்,வெளிநாடுகளுக்கு அனுப்பவும் மாபெரும் **வணிக குழுக்கள்** உருவாவதற்கு கரிகாலனின் வேளாண் புரட்சியே மூலதனமாக அமைந்தது.

இலக்கியம், கல்வெட்டு மற்றும் தொல்லியல் சான்றுகளில் கரிகால சோழனின் நீர் மேலாண்மை

இலக்கியங்கள்

கரிகாலனின் நீர் மேலாண்மை திட்டங்களை முதன் முதலில் பதிவு செய்தவை சங்க இலக்கியங்களும், பிற்கால இலக்கியங்களுமே ஆகும்.

அ)சங்க இலக்கியங்கள்

பட்டினப்பாலை,பொருநராற்றுப்படை,அகநானூறு,புறநானூறு

ஆ) பிற்கால இலக்கியங்கள்

கி.பி 12ம் நூற்றாண்டின் **பெரியபுராணம்** மற்றும் சோழர் கால உலா நூல்களான **மூவருலா** (விக்கிரமசோழன் உலா) ஆகியவை கரிகாலன் காவிரிக்கு கரைகட்டிய வரலாற்று நிகழ்வை "**உலகமே வியக்கும் படி காவிரிக்குக் கரை எடுத்தான் சோழன்**" என்று உறுதிப்படுத்துகின்றன[8].

கல்வெட்டு மற்றும் செப்பேடு சான்றுகள்

அ) அன்பில் செப்பேடுகள்

சுந்தர சோழன் காலத்து அன்பில் செப்பேடுகள் கரிகால சோழன் காவிரியின் இருபுறமும் மிக நீண்ட கரைகளை அமைத்து வெள்ளத்தை கட்டுப்படுத்தியதை "**காவிரி தீர பந்தனம்**"(காவிரிக்குக் கரை கட்டியவன்) என்று சமஸ்கிருதம் மற்றும் தமிழ் கல்வெட்டு வரிகளில் குறிப்பிடுகின்றன.

ஆ) திருவாலங்காடு செப்பேடுகள்

முதலாம் ராஜேந்திர சோழனின் ஆறாம் ஆண்டு திருவாலங்காடு செப்பேடுகள் கரிகாலனின் காவிரி கரை கட்டுமான பணிகளை பற்றி மிக விரிவாக பேசுகின்றன[9].

இ) பராந்தக சோழன் கல்வெட்டு

திருச்சி மற்றும் தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டுகளில் கரிகாலனின் மரபு வழி தோன்றல்கள் தங்களை "**காவிரி கரை கண்ட சோழன் வழியினர்**" என்று பெருமையுடன் பொறித்துள்ளனர். இது கரிகாலனின் நீர் மேலாண்மை பிற்கால சோழர்களாலும் போற்றப்பட்டதை காட்டுகிறது.

தொல்லியல் சான்றுகள்

கல்லணையின் அடியில் புதைந்துள்ள கட்டுமான அமைப்புகள் அறிவியல் பூர்வமான சான்றுகளாக விளங்குகின்றன.

அ) கல்லணையின் அடித்தளம்

19ஆம் 20-ம் நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் பொறியாளர் **சர் ஆர்தர் காட்டன்** மற்றும் **இந்திய தொல்லியல் துறையினர்** நடத்திய ஆய்வில், கல்லணையின் அடித்தளம் முற்றிலும் சங்ககாலத் தமிழர்களின் "**மிதக்கும் அடித்தள**"முறையில், வெட்டப்பட்ட பாறைகள் மற்றும் நீர் புகாக் களிமண் கொண்டு கட்டப்பட்டுள்ளது என்பதை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டது.

ஆ) பூம்புகார் அகழ்வாராய்ச்சி

காவிரிப்பூம்பட்டினத்தில் (பூம்புகார்) இந்திய தொல்லியல் துறை (ASI) நடத்திய அகழ்வாராய்ச்சியில் கரிகாலன் காலத்து சுடுமண் குழாய்கள்,செங்கல் மதகுகள் மற்றும் நீர் விநியோக கட்டமைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.. இது ஆற்றுநீரைத் துறைமுக நகரத்திற்குள் கொண்டு வந்த அவர்களின் துல்லியமான நீர்ப்பாசனப் பொறியியலுக்கு நேரடி தொல்லியல் சான்றுகளாக விளங்குகின்றன.

கரிகால சோழனின் நீர் மேலாண்மையின் தொடர்ச்சியும் தற்காலப் பயன்பாடும்

கரிகாலச் சோழனின் நீர் மேலாண்மை இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் அவரது தொழில்நுட்பம் இன்றும் எவ்வாறு தொடர்கிறது,தற்கால பயன்பாட்டிற்கு அது எவ்வாறு உதவுகிறது என்பதை பின்வரும் ஆய்வுப் பார்வைகளின் மூலம் அறியலாம்.

அ)கல்லணையின் தற்காலப் பயன்பாடு

கரிகாலன் கட்டிய கல்லணை இன்றும் கம்பீரமாக செயல்பட்டு ஒட்டுமொத்த காவிரி டெல்டா மாவட்டங்களின் (தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், நாகப்பட்டினம்)விவசாயத்திற்கு முதன்மை நீர் ஆதாரமாக விளங்கி வருகிறது. சங்ககாலத்தில் சில ஆயிரம் ஏக்கர்களாக இருந்த பாசனப்பரப்பு பிற்கால சோழர்கள், நாயக்கர்கள்,பிரிட்டிஷ் மற்றும் தற்கால தமிழக அரசின் தொடர் பராமரிப்புக் காரணமாக இன்று சுமார் **பத்து இலட்சம் ஏக்கருக்கும்** அதிகமான விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சும் அளவிற்கு விரிவடைந்துள்ளது.

ஆ) நவீன பொறியியலின் அடித்தளம்

19ஆம் நூற்றாண்டில் இந்திய நீர் பாசனத்துறையின் தந்தை என்று அழைக்கப்படும் **சர் ஆர்தர் காட்டன்** கல்லணையின் மிதக்கும் அடித்தள உத்தியை ஆராய்ந்து வியந்தார். இந்த தமிழர்களின் தொழில்நுட்பமே உலகெங்கும் உள்ள நவீன தடுப்பணைகளுக்கு இன்றும் அடித்தளமாக விளங்குகின்றது.

இ) நதிநீர் இணைப்புத் திட்டங்கள்

அ) தௌளீஸ்வரம் அணை- 1847 - 1852 (கோதாவரி நதி,ஆந்திரா)

சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் மணல் அடித்தள பொறியியலை ஆய்வு செய்து,அதே தொழில்நுட்பத்தில் இந்த அணையை ஆந்திராவில் கட்டினார்.

ஆ) கல்லணை கால்வாய் திட்டம் - 1925 - 1934 (மேட்டூர் அணை)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

காவிரியின் உபரி நீரைத் திருப்புவதற்காக கல்லணையின் வலது புறத்திலிருந்து வெட்டப்பட்ட "**புதிய ஆறு**" எனப்படும் கல்லணை கால்வாய் இந்த காலகட்டத்தில் தான் கட்டி முடிக்கப்பட்டது. இது கரிகாலன் கட்டிய கல்லணையின் அதே வளாகத்தில், அதன் தொடர்ச்சியாகவே ஆங்கிலேயர்களால் வடிவமைக்கப்பட்டது. கல்லணையின் தொழில்நுட்பத்தை புரிந்து கொண்ட பிறகே அவர்களால் இந்த புதிய கால்வாய் திட்டத்தை உருவாக்க முடிந்தது.

சுருக்கமாகச் சொன்னால்,1850 களில் தொடங்கிய பிரிட்டிஷ் முதல் இன்று நாம் பேசும் தேசிய நதிநீர் இணைப்பு வரை அனைத்திற்குமே **கரிகாலனின் இரண்டாயிரம் ஆண்டுப்** பழமையான தொழில்நுட்பமே அடித்தளம் ஆகும்.

ICID விருது

சர்வதேசப் பாசனம் மற்றும் வடிகால் ஆணையம் (ICID) கல்லணையை உலகளாவிய "**பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பு**" **(World Heritage Irrigation Structure)** என்று அங்கீகரித்துள்ளது.

முடிவுரை

கரிகால சோழனின் நீர் மேலாண்மை என்பது வெறும் மன்னனின் உள்கட்டமைப்புப் பணி மட்டுமல்ல, அது இயற்கையின் பேராற்றலைத் தடுத்து நிறுத்தாமல் நுட்பமான பொறியியல் மூலம் மனித குலத்தின் வாழ்வாதாரமாக மாற்றிய மாபெரும் சிந்தனைப் புரட்சியாகும்.இந்த வரலாற்று ஆய்வு, ஒரு பேரரசின் வீரம் என்பது போர்க்களங்களில் வெல்லும் நிலப்பரப்புகளில் மட்டுமல்ல, தன் நாட்டு மக்களின் பசிப்பிணி போக்க உருவாகும் நீடித்த நிலை தன்மை கொண்ட நீர் கட்டமைப்புகளிலும் அடங்கியுள்ளது என்று ஆய்வின் நோக்கத்தை முழுமையாக பூர்த்தி செய்கிறது. நவீன உலகத்தில் சிமெண்ட் மற்றும் கான்கிரீட் கொண்டு கட்டும் அணைகளின் ஆயுட்காலம் ஒரு சில நூற்றாண்டுகளோடு முடிவடைந்து விடும் நிலையில், எந்தவித நவீன இயந்திரங்களும் இன்றி கரிகாலன் எழுப்பிய கல்லணை இரண்டாயிரம் ஆண்டுகளை கடந்தும் இன்றும் தமிழகத்தின் நெற்களஞ்சியத்தை வாழவைத்துக் கொண்டிருப்பது உலகப் பொறியியலுக்கே சவாலாக விளங்கும் ஒரு வரலாற்று உண்மையாகும். இன்றைய உலகளாவிய பருவநிலை மாற்றம்,கடுமையான தண்ணீர் பற்றாக்குறை மற்றும் வறட்சி போன்ற சவால்களுக்கு நவீன தொழில்நுட்பங்களில் மட்டும் தீர்வு தேடாமல்,நமது முன்னோர்களின் பாரம்பரிய நீர் மேலாண்மை கோட்பாடுகளுக்குத் திரும்ப வேண்டியதன் அவசியத்தை இந்த ஆய்வு தற்காலச் சமூகத்திற்கு உணர்த்துகிறது. நீர் நிலைகளைப் பாதுகாப்பதையும்,மழைநீர்ச் சேகரிப்பையும்,ஆறுகளின் தூய்மையையும் வெறும் கடமையாக பார்க்காமல் கரிகாலனைப் போல ஒரு தலைமுறைச் சமூகக் கடமையாகவும்,வாழ்வாதாரப் பாதுகாப்பாகவும் மாற்ற வேண்டிய பொறுப்பு எதிர்காலச் சந்ததியினருக்கு உண்டு.முன்னோர்கள்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

நமக்காக விட்டுச் சென்ற நீர் ஆதாரங்களை சிதைக்காமல் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பதே நாம் அந்த மாமன்னனுக்குச் செய்யும் உண்மையான வரலாற்று நன்றிக்கடனாகும்.

மேற்கோள் நூல்கள்

- **முதல்நிலைச் சான்றுகள்**
  1. பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, அகநானூறு, புறநானூறு
  2. இந்திய தொல்லியல் சான்றுகள் (ASI)
- **இரண்டாம் நிலைச் சான்றுகள்**
  1. டாக்டர்.A. சுவாமிநாதன், தமிழர் பண்பாடு,சங்ககால வரலாறு (2019), பக்க எண் : 160 (போர் வெற்றி மற்றும் காவிரியும் கரிகாலனும்)
  2. புலவர்.கா. கோவிந்தன் எம். ஏ, தமிழர் வரலாறு (இரண்டாம் பாகம்) பக்க எண் : 7 - 27 (போர்), **30 - 31 (** கரிகாலன் பற்றிய கல்வெட்டு), - 33(காவிரி ஆறு)
  3. அ. சவரிமுத்து எம்.ஏ.பி.எட்,பழங்காலச் சோழர்களின் வரலாறு வரலாறு, (2018),பக்க எண் : 26 (காவிரி ஆறு), 39 - 43 (கல்லணையின் தேவை)
  4. மோகன்ராஜ்,தமிழ்ப் பண்பாடு மற்றும் பாரம்பரியம்,(2013),பக்க எண் : 84
  5. முனைவர். பா. சு. மூவேந்தன், பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை, பக்க எண் : 37 - 38 (காவிரியின் சிறப்பு)
  6. புலவர். கா. கோவிந்தன், தமிழர் வரலாறு, (2011) ,பக்க எண் : 217
  7. (திருவாலங்காட்டுச் செப்பேடுகள்)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

32. இந்தியாவில் மனித உரிமைகளின் வரலாற்றுப் பரிணாமம்

சு ப பவ்யா,
மூன்றாம் ஆண்டு வரலாறு,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
காத்தாம்பள்ளம்,கிருஷ்ணகிரி

பேரா.ச. பூபாலன்
உதவிப் பேராசிரியர் மற்றும்
வரலாற்றுத் துறை தலைவர்,
கொன்சாகா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
காத்தாம்பள்ளம்,கிருஷ்ணகிரி

DOI 10.5281/zenodo.21740170.

Abstract

Human rights are fundamental rights inherent to individuals by virtue of their birth as human beings. Upholding human dignity, equality, liberty, and justice, these rights serve as the foundation for the holistic development of the individual. The concept of human rights in India did not emerge solely in modern times; ideals of humanism and equality were emphasized in Sangam literature, the Vedas, Buddhist and Jain doctrines, and the administrative systems of ancient empires.

Over time, colonial rule, the Indian freedom struggle, the impact of the World Wars, the establishment of the United Nations, and the Universal Declaration of Human Rights (1948) served as pivotal milestones in the evolution of human rights in India. The enactment of the Indian Constitution provided legal protection for human rights. This study aims to examine the historical evolution of human rights in India from ancient times to the present, elucidating their development, legal safeguards, social significance, and future challenges.

Keywords : Human Rights - Justice - Sangam Literature - Indian Freedom - Buddhist - Administration

முன்னுரை

மனித உரிமைகள் என்பது மனிதன் மனிதனாகப் பிறந்ததன் அடிப்படையில் அவனுக்கு இயற்கையாகவே உரிய அடிப்படை உரிமைகளாகும். மனித கண்ணியம்,சமத்துவம்,சுதந்திரம் மற்றும் நீதியை நிலைநாட்டும் இவ்வுரிமைகள், தனிநபரின் முழுமையான வளர்ச்சிக்கான அடித்தளமாக விளங்குகின்றன. இந்தியாவில் மனித உரிமைகளின் கருத்து நவீன காலத்தில் மட்டும் தோன்றியதல்ல, சங்க கால இலக்கியங்கள்,வேதங்கள்,புத்த மற்றும் சமண கோட்பாடுகள், பேரரசர்களின் ஆட்சி முறைகள் ஆகியவற்றிலும் மனித நேயம் மற்றும் சமத்துவ சிந்தனைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

காலப்போக்கில் காலனித்துவ ஆட்சி,இந்திய விடுதலைப் போராட்டம்,உலகப் போர்களின் தாக்கம், ஐக்கிய நாடுகள் அமைப்பின் உருவாக்கம் மற்றும் 1948 ஆம் ஆண்டின் மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் ஆகியவை இந்தியாவில் மனித உரிமைகளின் வளர்ச்சியில் முக்கிய திருப்புமுனைகளாக அமைந்தன.இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது மூலம் மனித உரிமைகளுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பு வழங்கப்பட்டது. இவ்வாய்வுக்கு,இந்தியாவில் மனித

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

உரிமைகளின் வரலாற்றுப் பரிணாமத்தை பண்டைய கால முதல் இன்றைய காலம் வரலாற்று நோக்கில் ஆராய்ந்து, அதன் வளர்ச்சி, சட்ட பாதுகாப்பு, சமூக முக்கியத்துவம் மற்றும் எதிர்கால சவால்களை விளக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மனித உரிமை பொருள் மற்றும் வரையறை

வரலாற்றுப் பார்வையில் மனித உரிமைகள் ஒரு நாளில் உருவான கருத்து அல்ல. மனித சமூகத்தில் வளர்ச்சியோடு இணைந்து அவை படிப்படியாக உருவெடுத்தன.இந்திய சிந்தனையில் “**யாதும் ஊரே யாவரும் கேளிர் அனைவரும் சமம்” “அகிம்சை தர்மம்”** போன்ற கொள்கைகள் மனித உரிமைகளின் அடிப்படைச் சிந்தனைகளை பிரதிபலிக்கின்றன. பின்னர் உலகளவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், புரட்சிகள், உலகப்போர்கள் மற்றும் மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் (1948) ஆகியவை மனித உரிமைகளை சட்டரீதியான உரிமைகளாக வலுப்படுத்தினார். இந்தியாவில் மனித உரிமைகளுக்கு வலுவான சட்ட பாதுகாப்பு இந்திய அரசியலமைப்பு வழங்குகிறது. குறிப்பாக, அடிப்படை உரிமைகள் (Funadamental rights)ஒவ்வொரு குடிமகனின் கண்ணியமான வாழ்க்கை, சமத்துவம் மற்றும் சுதந்திரத்தை உறுதி செய்கின்றன. எனவே, மனித உரிமைகள் என்பது தனிமனித நலனை மட்டுமல்லாமல். ஜனநாயகம்,சமூக நீதி, மற்றும் மனித நேயத்தை நிலை நிறுத்தும் அடிப்படை தூணாகவும் திகழ்கின்றன.

வரையறை

“**மனித உரிமைகள் என்பது ஒவ்வொரு மனிதனும் மனிதனாக பிறந்ததன் காரணமாக இயற்கை அங்கவை பெற்றிருக்கும் யாராலும் பறிக்க முடியாத அடிப்படை உரிமைகள் ஆகும் இவ்உரிமைகள் மனிதனின் கண்ணியம் சுதந்திரம் சமத்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கின்றன”.**

இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் மனித உரிமைகளை பாதுகாக்கும் முக்கிய சட்ட அடித்தளமாக விளங்குகின்றன[1].

மனித உரிமைகளின் அவசியம்

மனித உரிமைகள் என்பது ஒரு தனி மனிதனின் அடிப்படை வாழ்க்கையைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், சமத்துவமான மற்றும் நீதி மிக்க சமூகத்தை உருவாக்குவதற்கும் இன்றியமையாததாகும்[2].

மனித உரிமைகளின் அவசியத்தை பின்வருமாறு விளக்கலாம் :

- ஒவ்வொரு மனிதனின் உயிர், சுதந்திரம் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கின்றனர்
- சமத்துவம் மற்றும் சமூக நீதியை நிலை நிறுத்துகின்றன.
- சாதி, மதம், இனம், மொழி, பாலினம் போன்ற அடிப்படையிலான பாகுபாடுகளைத் தடுக்கின்றன.
- ஜனநாயகத்தின் அடிப்படை மதிப்புகளை வலுப்படுத்துகின்றன.
  ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றன.

- கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பான வாழ்க்கைக்கான வாய்ப்புகளை உறுதி செய்கின்றன.
- நிலையான வளர்ச்சி மற்றும் அமைதியான சமூகத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

மனித உரிமைகளின் தோற்றமும் உலகளாவிய வளர்ச்சியும்

மனித உரிமைகள் என்பது நவீன காலத்தில் மற்றும் உருவான கருத்து அல்ல. மனித சமூகம் தோன்றிய காலம் முதல் மனிதனின் உயிர், சுதந்திரம் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கும் எண்ணம் பல்வேறு வடிவங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆரம்பத்தில் இவ்வுரிமைகள் இயற்கை உரிமைகளாகக் கருதப்பட்டன. பின்னர் அரசியல் மாற்றங்கள், புரட்சிகள் மற்றும் சர்வதேச நிகழ்வுகளின் மூலம் மனித உரிமைகள் சட்டப்பூர்வ அங்கீகாரம் பெற்றன.

இயற்கை உரிமை கோட்பாடு

இயற்கை உரிமை கோட்பாட்டின்படி, மனிதன் பிறந்ததன் அடிப்படையில் சில உரிமைகளை இயற்கையாகவே பெற்றிருக்கின்றனர். உயிர் வாழும் உரிமை, சுதந்திரமாக வாழும் உரிமை, சொத்துரிமை போன்றவை இயற்கை உரிமைகளாக கருதப்படுகின்றன. இவ்உரிமைகள் எந்த அரசாலும் வழங்கப்படுபவை அல்ல: மனிதனின் பிறப்பு உரிமைகளாகவும் பின்னர் இக்கோட்பாடு உலக நாடுகளின் மனித உரிமை சட்டங்கள் உருவாக அடிப்படையாக அமைந்தது[3].

மக்னா கார்டா (1215)

1215 ஆம் ஆண்டு இங்கிலாந்து மன்னர் ஜானால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மக்னா கார்டா மனித உரிமை வரலாற்றின் முக்கியமான ஆவணமாகக் கருதப்படுகிறது. மன்னரின் அதிகாரத்திற்கு சட்ட வரம்புகளை விதைத்து, குடிமக்களின் சில அடிப்படை உரிமைகளை அங்கீகரித்தது. சட்டத்தின் ஆட்சி மற்றும் நியாயமான விசாரணை போன்ற கொள்கைகள் இதன் மூலம் வலுப்பெற்றன. மனித உரிமைகளின் வளர்ச்சியில் இது ஒரு முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது[4].

அமெரிக்க சுதந்திர பிரகடனம் (1776)

1776 ஆம் ஆண்டு ஜூலை 4 அன்று அமெரிக்க தனது சுதந்திர பிரகடனத்தை வெளியிட்டது. இதில் அனைத்து மனிதர்களும் சமமாக பிறந்தவர்கள் என்றும், அவர்களுக்கு உயிர், சுதந்திரம் மற்றும் மகிழ்ச்சியை நாடும் உரிமை இயற்கையாகவே உண்டு என்றும் வலியுறுத்தப்பட்டது. இப்ப பிரகடனம் மனித உரிமைகளும் வளர்ச்சியில் முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது. பின்னர் உலக நாடுகளின் அரசியல் அமைப்புகளும் மனித உரிமை சட்டங்களும் இதன் தாக்கத்தால் உருவாகின.

பிரெஞ்சுப் புரட்சி (1789)

1789 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரஞ்சு புரட்சி மனித உரிமைகளின் வரலாற்றில் முக்கிய இடத்தை பெற்றுள்ளது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஆகிய கொள்கைகளை உலகிற்கு எடுத்துரைத்த இந்த புரட்சி மனிதனின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தியது. இதன் விளைவாக

மனிதன் மற்றும் குடிமக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம் வெளியிடப்பட்டது. இது உலக நாடுகளில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமை வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது.

உலகப் போர்களும் மனித உரிமைகளும்

முதல் உலகப்போரின் தாக்கம்

1914 முதல் 1918 வரை நடைபெற்ற முதல் உலகப் போர் உலக வரலாற்றில் மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தியது. இப்பொருள் கோடிக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்: மனித உயிர், சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு கடுமையாக பாதிக்கப்பட்டன. போரின் முடிவில் உலக நாடுகள் அமைதி மற்றும் மனித உரிமைகளின் அவசியத்தை உணர்ந்தன. இதன் விளைவாக 1919 ஆம் ஆண்டு நாடுகளின் சங்கம் உருவாக்கப்பட்டது. இருப்பினும், அது மனித உரிமைகளை முழுமையாக பாதுகாக்க தவறியது. ஆனால், மனித உரிமைகள் குறித்து உலகளாவிய சிந்தனை வளர்வதற்கு முதல் உலகப்போர் முக்கிய அடித்தளமாக அமைந்தது[5].

இரண்டாம் உலகப் போரின் தாக்கம் (1939 - 1945)

1939 முதல் 1945 வரை நடைபெற்று இரண்டாம் உலகப் போர் மனித வரலாற்றில் மிக கொடூரமான போராகக் கருதப்படுகிறது. இனப்படுகொலை, அணுகுண்டு தாக்குதல், கட்டாய இடம்பெயர்வு போன்ற மனித உரிமை மீறல்கள் உலக நாடுகளில் அதிர்ச்சிக் -குள்ளாக்கின இதன் விளைவாக 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டது. பின்னர் 1948 ஆம் ஆண்டு மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் வெளியிடப்பட்டது. இது உலக நாடுகள் மனித உரிமைகளை மதித்து பாதுகாக்க வேண்டிய பொதுவான தர நிலையை ஏற்படுத்தியது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் தோற்றம் (1945)

இரண்டாம் உலகப் போருக்கு பிறகு உலக அமைதி, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளின் நிலைநாட்டும் நோக்கின் 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டது. உலக நாடுகள் இடையே ஒத்துழைப்பை வளர்ப்பதோடு, மனித உரிமைகளை பாதுகாப்பதையும் அதன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக கொண்டது. பின்னர் மனித உரிமைகள் தொடர்பான பல சர்வதேச ஒப்பந்தங்களையும் பிரகடனங்களையும் ஐ.நா வெளியிட்டது.

இந்தியாவில் மனித உரிமைகளின் வரலாற்று பரிணாமம்

பண்டைய இந்தியாவில் மனித உரிமை சிந்தனைகள்:

பண்டைய இந்தியாவில் “மனித உரிமை” என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை என்றாலும், மனித கண்ணியம், சமத்துவம், நீதி, கருணை மற்றும் அஹிம்சை போன்ற உயர்ந்த கருத்துகள் வலியுறுத்த வேதங்கள், உபநிடதங்கள், புத்த சமயம், சமண சமயம், மற்றும் சங்க இலக்கியங்கள் மனிதனையும் மற்றும் சமத்துவத்தை போதித்தன. குறிப்பாக “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற சங்ககால கருத்து மனித உரிமை சிந்தனையின் ஆரம்ப வடிவமாக கருதப்படுகிறது[6].

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் மனித உரிமைகள்

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் இந்திய மக்களின் பல அடிப்படை உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன. கருத்துரிமை, பேச்சுரிமை, பத்திரிகை சுதந்திரம் போன்றவை பலமுறை ஒடுக்கப்பட்டன. ரௌலட் சட்டம் 1919 மற்றும் ஜாலியன் வாலாபாக் படுகொலை போன்ற நிகழ்வுகள் மனித உரிமை மீறல்களின் எடுத்துக்காட்டுகள் ஆகும். இந்திய நிகழ்வுகள் இந்திய மக்களிடையே சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வை அதிகரித்தன.

இந்திய விடுதலைப் போராட்டமும் மனித உரிமைகளும்

இந்திய விடுதலைப் போராட்டம் அரசு சுதந்திரத்திற்கான போராட்ட மாக மட்டுமல்ல: மனித உரிமைகள், சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கான போராட்டமாகவும் அமைந்தது. மகாத்மா காந்தி அகிம்சை மற்றும் சத்யகிரகத்தின் முழு மனிதக்கண்ணியத்தையும் உரிமைகளையும் வலியுறுத்தினார். பி ஆர் அம்பேத்கர் சமூகநீதி சமத்துவம் மற்றும் அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். விடுதலைக்கு பின்னர் இந்திய அரசியலமைப்பின் மனித உரிமைகள் அடிப்படை உரிமைகளாக இடம் பெற்றன.

இந்திய அரசியலமைப்பும் மனித உரிமைகளும்

1950 ஜனவரி 26 அன்று நடைமுறைக்கு வந்த இந்திய அரசியலமைப்பு, மனித உரிமைகளை பாதுகாக்கும் மிக முக்கியமான சட்ட ஆவணமாகும். இதில் அடிப்படை உரிமைகள் (பகுதி III , கட்டுரைகள் 12 - 25) அரசு கொள்கை வழிகாட்டும் நெறிமுறைகள் (பகுதி IV) கட்டுரை 36-51) மற்றும் அடிப்படை கடமைகள் (பகுதி IV A, கட்டுரை 51 A) ஆகியவை இடம்பெற்றுள்ளன.

அடிப்படை உரிமைகள் குடிமக்களின் சமத்துவம், சுதந்திரம், மதச்சார்பின்மை, கல்வி மற்றும் அரசியலமைப்பு சட்டம் பாதுகாப்பை உறுதி செய்கின்றன. அரசு கொள்கை வழிகாட்டும் நெறிமுறைகள் சமூக மற்றும் பொருளாதார நீதியை நிலைநாட்டு அரசுக்கு வழிகாட்டுகின்றன. 1976 ஆம் ஆண்டு 42வது அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் மூலம் சேர்க்கப்பட்ட அடிப்படை கடமைகள், ஒவ்வொரு குடிமகனும் அரசியல் அமைப்பை மதித்து, தேசிய ஒற்றுமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் நீதிமன்றத்தில் அமல்படுத்தக்கூடியவை, ஆனால் அரசு கொள்கை வழிகாட்டும் நெறிமுறைகள் நேரடியாக நீதிமன்றத்தில் அமல்படுத்த முடியாதவை என்பது முக்கியமான வேறுபாடு ஆகும். மேலும், அரசியல் அமைப்பின் “இதயம் மற்றும் ஆன்மா” என்ற அரசியலமைப்பு சட்ட பிரகாரம் உரிமையை கட்டுரை 32 பி ஆர் அம்பேத்கர் குறிப்பிட்டார். இது மனித உரிமைகளை பாதுகாக்கும் மிக முக்கியமான அரசியல் அமைப்பு ஏற்பாடாகும்.

மனித உரிமைகளை பாதுகாக்கும் அமைப்புகள்:

இந்தியாவில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு சட்ட மற்றும் நிர்வாக அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வமைப்புகள் மனித உரிமை மீறல்களை விசாரித்தால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க உதவுதல், மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வு

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

ஏற்படுத்துதல் மற்றும் அரசுக்கு பரிந்துரைகள் வழங்குதல் போன்ற முக்கிய பணிகளை மேற்கொள்கின்றன.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993 ஆம் ஆண்டு மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம், 1993 கீழ் நிறுவப்பட்டது. மனித உரிமை மீறல்கள் தொடர்பான புகார்களை விசாரித்தல், சிறைகள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களை ஆய்வு செய்தல், மனித உரிமைகள் குறித்து ஆராய்ச்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவை இதன் முக்கிய பணிகள் ஆகும்.

மாநில மனித உரிமைகள் ஆணையங்கள் அந்தந்த மாநிலங்களில் மனித உரிமைகளை பாதுகாக்கும் நோக்கில் செயல்படுகின்றன. மாநில அளவில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கைகளை அரசுக்கு பரிந்துரைக்கின்றன. மேலும் இந்திய நீதித்துறை, குறிப்பாக உச்ச நீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும், அரசியலமைப்பின் கட்டுரைகள் 32 மற்றும் 226 இன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மனித உரிமைகள் மீறப்பட்டால், பாதிக்கப்படுபவர்கள் நீதிமன்றங்களை அணுகி தங்களது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளலாம். எனவே, இந்த அமைப்புகள் அனைத்தும் இணைந்து இந்தியாவின் மனித உரிமைகளை வலுப்படுத்தும் முக்கிய தூண்களாக விளங்குகின்றன.

இந்தியாவில் தற்போதைய மனித உரிமை சவால்கள்.

இந்திய உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக இருந்தாலும், மனித உரிமைகள் தொடர்பான பல்வேறு சவால்கள் இன்றும் காணப்படுகின்றன. சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் புதிய மனித உரிமை பிரச்சினைகளும் உருவாகி, வருகின்றன. பெண்கள், குழந்தைகள், தலித் மற்றும் பழங்குடியின மக்கள், கல்வி மற்றும் சுகாதார உரிமைகள், டிஜிட்டல் தனியுரிமை போன்ற துறைகளில் மனித உரிமைகளை பாதுகாப்பது அவசியம் உள்ளது.

பெண்களின் உரிமைகள் தொடர்பாக பாலின பாகுபாடு, குடும்ப வன்முறை, பாலியல் தொல்லை மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் போன்ற பிரச்சனைகள் இன்னும் தொடர்கின்றன. குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாக குழந்தை தொழிலாளர் முறை குழந்தைக்கு திருமணம் மற்றும் கல்வி மறுப்பு போன்றவை முக்கிய சவால்களாக உள்ளன.

தலித் மற்றும் பழங்குடியின மக்களின் உரிமைகள் தொடர்பாக சமூகப்பாடு, நில உரிமை பிரச்சினைகள் மற்றும் கல்வி, வேலைவாய்ப்பு சமவாய்ப்பு இல்லாமை போன்ற பிரச்சனைகள் காணப்படுகின்றன. அதேபோல் கல்வி மற்றும் சுகாதார உரிமைகள் அனைவருக்கும் சமமாக கிடைப்பதை உறுதி செய்வது அரசின் முக்கிய பொறுப்பாகும்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக டிஜிட்டல் தனி உரிமை (டிஜிட்டல் பிரைவசி) ஒரு புதிய மனித உரிமை சவாலாக உருவெடுத்துள்ளது. தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பு, இணைப்பு பாதுகாப்பு மற்றும் இணைய வழி குற்றங்களை தடுக்க வலுவான சட்டங்கள் மற்றும் விழிப்புணர்வு அவசியமாகின்றன. எனவே, தற்போதைய மனித உரிமை சவால்களை எதிர்கொள்ள அரசு,

நீதித்துறை, மனித உரிமை அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்படுவது காலத்தின் தேவையாகும்[7].

மனித உரிமைகளை மேம்படுத்தும் வழிமுறைகள்:

மனித உரிமைகள் சட்டங்களின் மற்றும் இடம்பெறுவது போதுமானது அல்ல: அவை நடைமுறையில் முழுமையாக செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கு அரசு, நீதித்துறை, கல்வி நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். மனித உரிமைகள் பற்றி விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலம் மட்டுமே மனித உரிமை மீறல்களை குறைக்க முடியும்.

மனித உரிமை கல்வி மற்றும் விழிப்புணர்வு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும். மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கங்கள், பயிற்சிகள் மற்றும் ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வு பரப்பப்பட வேண்டும். சட்டங்களின் திறமையான அமலாக்கம் மிகவும் அவசியமாகும். மனித உரிமைகள் தொடர்பான சட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோர் மீது விரைவான மற்றும் பாரபட்ச மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகளின் பங்கு மனித உரிமைகளை பாதுகாப்பதில் முக்கியமானதாகும். தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையங்கள், மகளிர் ஆணையம், குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், மற்றும் தன்னார்வ அமைப்புகள் மனித உரிமைகள் தொடர்பான புகார்களை விசாரித்து, மக்களுக்கு சட்ட உதவியும் விழிப்புணர்வும் வழங்குகின்றன.

குடிமக்களின் பொறுப்புணர்வு மனித உரிமைகளை மேம்படுத்துவதில் முக்கிய இடம்பெறுகிறது. ஒவ்வொரு குடிமகனும் பிறரின் உரிமைகளை மதித்து, சட்டத்தை பின்பற்றி, சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் மனித நேயத்தை கடைபிடிக்க வேண்டும். எனவே, கல்வி, சட்ட அமலாக்கும், அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகளின் ஒத்துழைப்பு, குடிமக்களின் பொறுப்புணர்வு ஆகியவை ஒன்றிணைந்தால் மட்டுமே இந்தியாவில் மனித உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்பட்டு மேம்படுத்தப்பட முடியும்.

முடிவுரை

மனித உரிமைகள் என்பது ஒவ்வொரு மனிதனும் கண்ணியமான வாழ்க்கைக்கும், சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் அடிப்படையாக அமைந்த உரிமைகள் ஆகும். பண்டைய கால மனிதநேய சிந்தனைகளில் இருந்து தொடங்கி, மக்னா கார்டா, அமெரிக்க சுதந்திர பிரகடனம், பிரெஞ்ச் புரட்சி, உலகப்பொருள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் வரை மனித உரிமைகள் பல்வேறு வரலாற்று கட்டங்களை கடந்து வளர்ச்சி பெற்று உள்ளன.

இந்தியாவில் மனித உரிமைகளும் வளர்ச்சி, விடுதலைப் போராட்டத்தில் லட்சியங்களுடனும் இந்திய அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள், அரசு கொள்கை வழிகாட்டும் நெறிமுறைகள்

மற்றும் அடிப்படை கடமைகளுடனும் நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளது. தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையங்கள் நீதித்துறை மற்றும் தன்னார்வ அமைப்புகள் மனித உரிமைகளை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள், குழந்தைகள், தலித் மற்றும் பழங்குடியினர் உரிமைகள், கல்வி, சுகாதார மற்றும் டிஜிட்டல் தனி உரிமை போன்ற துறைகளில் பல்வேறு சவல்கள் இருந்தாலும், அவற்றை சமாளிக்க அரசு நீதித்துறை மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே, மனித உரிமைகளை மதித்து, பாதுகாத்து, மேம்படுத்துவது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். மனித உரிமைகள் முழுமையாக நிலை நிறுத்தப்படும் போது மட்டுமே சமத்துவம், சமூக நீதி மற்றும் ஜனநாயகத்தின் உண்மையான இலக்குகள் நிறைவேறும்.

மேற்கோள் நூல்கள்

1. மு. லட்சுமி காந்தத் - இந்திய அரசியல் (பக். எண். 85-87)
2. டி.டி. பாசு - இந்திய அரசியலமைப்பு (பக். எண். 45-48)
3. பிபின் சந்திரா - இந்திய விடுதலைப் போராட்டம். (பக். எண். 125-130)
4. ரொமிலா தாப்பர் - பண்டைய இந்தியா (பக். எண். 45-50)
5. டாக்டர் ஆர் கே பாலசுப்ரமணியன் - கான்ஸ்டிடியூஷன் ஆ்ஃப் இந்தியா (பக். எண். 1 - Last page)
6. வே. தங்கவேல் - ஹியூமன் ரைட்ஸ் (பக். எண். 1 - Last page)
7. கொடுமுடி ராஜகோபாலன் - ஹிஸ்டரி ஆ்ஃப் இந்தியன் ஃப்ரீடம் ஸ்ட்ரகுள் (பக். எண். 1 - Last page)

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

33.பரதவ மகளிரின் குடும்பக் கடமைகள்

ரோ.லில்லிமலர்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்: 21222014022016
ஏபிசி மகாலட்சுமி கல்லூரி தூத்துக்குடி

DOI 10.5281/zenodo.21740291

Abstract

The mention of *Parathava* women immediately brings to mind the *Neithal* landscape (the coastal region), as the *Parathavar* community traditionally inhabits the sea and its adjacent areas. Women belonging to this coastal region are referred to as *Parathi* or *Paravachi*. The family serves as the fundamental unit of all societies, and women bear the significant responsibility of structuring and sustaining these families; indeed, it is the woman who gives the family its unique identity. These families are governed by social customs and religious practices. In accordance with the principle that neither man nor woman exists without the other, they lead a shared domestic life. Within this balanced partnership, the husband earns a livelihood, while the wife shoulders the responsibility of managing and nurturing the household using those resources. The *Neithal* people lived in small huts situated along the coast. This article focuses on the duties and roles of *Parathava* women as they fulfill their domestic obligations within these families.

Keywords : Parathavar - Sangam Literature - Neithal Land - Society

முன்னுரை:

பரதவ மகளிர் என்று சொன்னாலே முதலில் நினைவுக்கு வருவது நெய்தல் நிலம் தான். ஏனெனில் கடலும் கடல் சார்ந்த பகுதியில் வசித்து வருவது பரதவர் தான். இதில் நெய்தல் நிலம் சார்ந்த பெண்களை பரத்தி என்றும் பரவச்சி என்றும் அழைப்பர். எல்லாச் சமூகங்களிலும் உள்ள அடிப்படை அமைப்பு குடும்பம் ஆகும். இத்தகைய குடும்பங்களை கட்டமைக்கும் பெரிய பொறுப்பு மகளிருக்கு தான் உள்ளது. மகளிரால் தான் குடும்பம் என்ற ஒன்று தனித்துவம் பெறுகின்றது. இக்குடும்பம் சமூக வழக்காலும் சமயத்தாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது.1 என குடும்பம் பற்றி விளக்கம் தருகின்றது. பெண் இல்லாமல் ஆண் இல்லை. ஆண் இல்லாமல் பெண் இல்லை. என்ற கூற்றின் படி இருவரும் இணைந்து இல்லற வாழ்வை நடத்தி வருகின்றனர். இச்சமநிலை பங்கில் குடும்பத்தில் கணவன் பொருளீட்டி வர அவற்றைக் கொண்டு குடும்பத்தை பேணிக்காக்கும் பொறுப்பு மனைவியைச் சார்ந்து இருக்கிறது. நெய்தல் நில மக்கள் கடலை ஒட்டிய பகுதிகளில் சிறு சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். இக்குடும்பங்களில் வாழ்ந்து தன்னுடைய இல்லறக் கடமைகளை செய்து வரும் பரதவ மகளிரின் கடமைகள் குறித்து இக்கட்டுரை அமைகின்றது.

இலக்கியம் கூறும் நெய்தல் நில மகளிர்:

நெய்தல் நில மகளிர் இலக்கியத்தில் பின்வரும் பெயர்களில் அறியப்படுகின்றன. தொல்காப்பியமும்;;

“பெயரும் வினையும் என்று ஆயிரு வகைய
தினை தொறு மரீஇய தினை நிலைப்பெயரே” 2

என்று கூறுகின்றது. இந்த நூற்பாவிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் நால்வகை நிலத்தும் மருவிய குலப்பெயரான என்று தொடங்கி நெய்தல் நிலத்துப் பெண்களை நுளைத்தியர் பரத்தியர் என்று கூறுகின்றார்.

பரத்தி நுளைச்சி ……………
………………………….
……….நுளைச்சியர்………பரத்தியர் 3

என்று நம்பி அகப்பொருள் மீனவப் பெண்களைப் பற்றி விளக்கம் தருகின்றது.

மேலே கூறப்பட்டுள்ள நுளைச்சியர் பரத்தியர் நுளத்தியர் என்ற பெயரானது சங்க இலக்கியத்தில் எங்கும் காணப்படவில்லை. இதற்கு மாறாக சங்க இலக்கியத்தில் பரதவ மகள் என்ற பெயரிலே அழைக்கப்படுகிறது.

நற்றிணையில் இரண்டு இடங்களில் காணப்படுகிறது.

மீன் எறி பரதவர் மகளே (நற். 45:3)
என் என நினையுங்கொல் பரதவர் மகளே (நற். 349:10)

குறுற்தொகையில் ஒரு இடத்திலும் காணப்படுகிறது.

நுண்வலைப் பரதவர் மடமகள் (குறுந்.184:6)

சிறுபாணாற்றுப்படையில் ஒரு இடத்திலும் காணப்படுகிறது.

நுதிவேல் நோக்கின் நுதிமகள் (சிறும்.153)

மதுரைக்காசியில் ஒரு இடத்திலும் காணப்படுகிறது.

………… மணல்மலி கானல்
பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப (மது.97)

இவ்வாறு சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத்துப் பெண்களை பரதவர் மகள் பரதவர் மடமகள் நுளையர் மகள் பரதவர் மகளிர் என்றே அழைக்கப்படுகின்றனர். இப்பரதவ பெண்கள் குடும்ப வாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அன்புறவோடும் தோழமையிலும் சிறந்து விளங்குகின்றனர். மேலும் இவர்களை நம்பியே குடும்ப வாழ்வு சிறப்பாக இயங்குகிறது. பரதவ மகளிரின் குடும்ப கடமைகள் குறித்து பின்வரும் தலைப்புகளில் காணலாம்.

கடமைகள்:

இல்லறம் நல்லறமாக அமைய மனைவியின் பங்கு முதன்மையானது. கணவன் ஈட்டி வரும் பொருட்களை கொண்டு குடும்பம் நடத்துவது என்பது மனையாளின் மிகப்பெரிய கடமை. பொருள் ஈட்டுவதோடு கணவனின் கடமை முடிந்து விடுகிறது. அவன் முடித்த இடத்தில் இருந்து மனைவியின் பணி ஆரம்பித்து விடுகின்றது. குடும்பத்தை பராமரிக்கும் முழுப்பொறுப்பும் மனைவியின் கடமையாகிறது. ஒரு குடும்பம் வாழ்வதற்கு வாழிடம் அவசியம் தேவைப்படுகிறது. அப்படி கிடைத்த வாழிடத்;தை தன்னுடைய அன்பால் பராமரிப்பது மனைவியின் முதன்மையான கடமையாகிறது. குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வது உணவுத் தயாரித்தல் போன்ற வேலைகளை செய்வது பரதவ மகளிரின் அடிப்படை கடமையாகிறது. மேலும் பரதவ மகளிர் நெய்தல் மலர்களைக்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கொண்டு தங்களுடைய இல்லங்களை அலங்கரித்தனர். என்ற செய்தியினை நற்றினை பின்வருமாறு கூறுகின்றது.

ஒள் நுதல் மகளிர் ஓங்கு கழிக் குற்ற
கண் நேர் ஒப்பின் கமழ் நறு நெய்தல்
அகல் வரிச் சிறு மனை..............(**நற்**: 283:1-3)

இக்கால கட்டத்திலும் நெய்தல் நிலப் பெண்கள் தங்களுடைய
வீடுகளிலும் கிடைக்கும் மலர்களைக் கொண்டு அலங்கரிக்கின்றனர்.

குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்தல்:

குடிநீர் இன்றி அணுவும் அசையாது. மனிதனின் வாழ்வும் சிறக்காது. நீர்வளத்தைப் பெருக்கச் சங்க காலத்திலேயே ஆறுகள் ஏரிகள் குளங்கள் இருந்தன.4 குளங்களில் இருந்து நீரை எடுத்து வந்து குடும்ப தேவையை நிறைவு செய்பவளாக பரதவ மகளிர் விளங்கினர். இன்றும் பெண்கள் தங்களுடைய நீர்த் தேவையை நிறைவு செய்ய குளங்களில் இருந்து தண்ணீர் எடுத்து வருவதைக் காணலாம். மேலும் நெய்தல் நில குடும்பங்களில் பெண்கள் மண்கலன்களை கொண்டு தண்ணீர் எடுத்து வந்த செய்தியினை பெரும்;;;;பாணாற்றுப்படை பின்வருமாறு கூறுகின்றது.

கோடை நீடினும் குறைபடல் அறியாக்
தோள்தாழ் குளத்த கோடு காத்திருக்கும். (**பெறும்.** 272-273)

மேலே கூறப்பட்ட செய்தியினைப் போன்று இன்றும் பெண்கள் தங்கனுடைய குடிநீர் தேவையை நிறைவுச் செய்ய இன்று வரையிலும் நவீன உத்தி முறைகளை கைக்கொண்டுள்ளனர். தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவால் எல்லாருடைய வீடுகளிலும் தொட்டிகள் மூலம் தண்ணீர் நிரப்பப்பட்டு மின்சாரத்தின் உதவியால் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யப்படுகிறது.

உணவு தயார் செய்தல்:

மனித உயிர்கள் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது ஆகும். இத்தகைய உணவினை தயார் செய்யும் மிகப்பெரிய பொறுப்பினை தன்னகத்தே கொண்டவள் மனையாள். இவை வெறும் உணவு மட்டும் அல்ல அவை சமுதாயத்தின் பண்பாட்டை பிரதிபலிக்கும் ஒன்றாக மாறிவிட்டது.
பண்டையகால தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர். இயற்கையில் கிடைத்த உணவுகளையே முதலில் உண்டனர். பின்பு நெருப்பினைக் கொண்டு சமைத்து உண்ண ஆரம்பித்து விட்டனர். அவ்வகையில் கடல் சார்ந்த நெய்தல் நிலத்தில் முக்கிய உணவாக விளங்குவது மீன் ஆகும். இத்தகைய உணவினை சமைக்க தனி ஆர்வம் கொண்டு விளங்குபவர்கள் பெண்கள். குடும்ப கடமைகளில் முதன்மையான பணி உணவு சமைத்தல் ஆகும். பரதவ மகளிர் தன்னுடைய கணவனுக்கும் தன் வீட்டில் உள்ள அனைவருக்கும் உணவு தயாரிக்கும் நிகழ்வினை சங்க இலக்கியம் மிக அழகாக எடுத்தியம்புகின்றது. அகநானூற்றுப் பாடலில் குடும்பத் தலைவி தன்னுடைய இளமகள் உப்பு விற்றுக் கொண்டு வந்த நெல்லினால் வெண்சோறு செய்து அயிலை மீனை இட்டு தயார் செய்த உணவோடு சேர்த்து புளிங்கறியினை கொண்டு கருவாடு சேர்த்து பரிமாறி மகிழ்ந்தனர். இதனை

நெடுந்திமிழ் தொழிலோடு வைகிய தந்தைக்கு

உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு
அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து
கொழுமீன் தடியொட குறுமகள் கொடுக்கும் (அகம்) ;60:3-6)

என்ற வரிகள் விளக்குகின்றன.

முடிவுரை:

மேலே கூறப்பட்டுள்ள கட்டுரையின் முடிவுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1.சங்க காலம் முதலே மகளிர் தங்களுடைய குடும்ப பணிகளை செய்தனர் தெரிய வருகிறது.

2. பரதவ மகளிர் பரத்தி பரவச்சி என்ற பெயர்களாலே அழைக்கப்படுவதை இலக்கிய தரவுகள் மூலம் அறியலாம்.

3. பரதவ மகளிர் தங்களுடைய குடும்ப கடமைகளை தானே நிறைவேற்றியதை தெரிய முடிகிறது.

4. இல்லறம் நடத்துவதற்குரிய அடிப்படை தேவைகளை செய்து நல்லறம் நடத்தியதை இலக்கிய குறிப்புகள் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது..

அடிக்குறிப்புகள்

1. தமிழ்க் கலைக்களசியம் பக் 4
2. தொல். பொருள். அகத்தணையில் நூ.20
3. நம்பி அகப்பொருள் விளக்கம் நூ 24
4. பதி இரா. சந்திரசேகரன் சங்க இலக்கியம் இலக்கிய வளமும் வாழ்வியல் அறமும் பக். 207

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

34.வெ.இறையன்பு புதினங்களில் குடும்ப உறவுகளும் பிற உறவுகளும்

ஆய்வாளர்
ஜெ.அமுதா,
பதிவு எண்:23112014022005,
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி -2.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி,திருநெல்வேலி

நெறியாளர்
முனைவர்.உ.விஜி,
உதவிப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்,
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி -2.

DOI 10.5281/zenodo.21740404.

Abstract:

The family structure serves as the foundation of the social order and is essential for human procreation. A family is defined by the life shared between a husband and wife within the bond of marriage. Domestic life–*Illaram*–is hailed globally as a supreme virtue and forms the basis of the family structure. It plays a pivotal role in making human life meaningful and purposeful. Relationships flourish through domestic life, and relationships constitute a significant part of human existence; they facilitate support for virtuous actions, the elimination of vices, and the provision of solace. While family ties are primarily based on blood relations, other bonds–such as those between teacher and student or friends–exist outside of blood kinship; consequently, every individual in society is identified by a specific relational title. This article explores these various systems of relationships.

Keywords : Iraiyanbu - Novel - Family - Foundation - Relationship

ஆய்வுச் சுருக்கம் :

சமூக அமைப்பிற்கு குடும்ப அமைப்பு தான் அடிப்படையாகத் திகழ்கிறது. மனித இனப்பெருக்கத்திற்கும் குடும்ப அமைப்பு அவசியமாகிறது. மண வாழ்க்கையில் கணவன் மனைவி நடத்தும் வாழ்க்கையே குடும்பமாகும். உலகில் சிறந்த அறமாக போற்றப்படுவது. இல்லறமாகும் இல்வாழ்க்கை குடும்ப அமைப்பிற்கு அடிப்படையாக அமைகிறது. மனிதனுடைய வாழ்க்கை மதிப்பும் பயனும் உடையதாக அமைவதற்கு இல்வாழ்க்கை முதன்மையாகிறது. இல்வாழ்க்கை மூலம் உறவுகள் வளர்கிறது. உறவு என்பது மனித வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கிறது. உறவுகள் என்பது நல்லனவற்றிற்குத் துணைபுரிதல், அல்லனவற்றை நீக்குதல், ஆறுதல் அளித்தல் போன்றவற்றிற்குத் துணை புரிகிறது. குடும்ப உறவுகள் அனைத்தும் இரத்த சம்பந்தப்பட்டவையாகும். ஆசிரியர் - மாணவர் உறவு, நட்புறவு போன்றவை இரத்த சம்பந்தமற்றவை ஆதலால் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒரு உறவுப் பெயரால் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய உறவு முறைகளைப் பற்றி ஆய்வதை இக்கட்டுரையில் காணலாம்.

முன்னுரை :-

உறவுகள் மனித குலத்தின் புனிதக் கதவுகள். மனதில் உள்ள அன்பின் வெளிப்பாடு. நம் நாட்டின் மரபுபடி உறவுகள் நம் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. உறவுகள் இல்லையென்றால் நாம் இன்பமாக வாழ இயலாது. நாம் ஒவ்வொருவரும் குடும்ப அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு வாழ்வு நடத்துகிறோம். குடும்பம் என்பது பல காரணங்களின் அடிப்படையில் அமைந்த ஒரு குழு எனலாம். இக்குடும்பங்களில் நிலவி வரும் உறவுகளை கணவன்-மனைவி உறவு, தந்தை மகன் உறவு, தாய் மகன் உறவு, மாமியார் - மருமகள் உறவு என பல வகைகளில் வகைப்படுத்தலாம். நட்புறவு, ஆசிரியர் - மாணவர் உறவு போன்றவையும் உறவுகளில் காணப்படுகின்றன. குடும்ப உறவுகளையும் பிற உறவுகளையும் விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

குடும்பம் :-

குடும்பம் என்பது மரபு வழிப்பட்ட ஓர் அமைப்பு. விலங்கோடு விலங்காக வாழ்ந்த மனிதன் உணர்வு வழிப்பட்டு விலங்கு நிலையிலிருந்து மாறி சமூகமாக வாழத் தொடங்கினான். மலைகளிலும் குகைகளிலும் வாழ்ந்த மனிதனின் சிந்தனை தன்னைப் பற்றி எழுந்தது. அதனால் விலங்குகளிலிருந்து பிரிந்து வாழத் தொடங்கும் போது குடும்பம் என்ற அமைப்பானது உருவாகத் தொடங்கியது ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வது குடும்பம் அக்குடும்பம் ஒழுங்கான பாலியல் எல்லைக்குட்பட்ட நிலையில், சமுதாயம் ஏற்கும் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

"குடும்பம் தனி மனிதருக்காகவும், சமுதாயத்திற்காகவும் பெரும்பங்காற்றுகிறது. இது பாலியல், இனப்பெருக்கம், பொருளாதாரம், கல்வி ஆகிய நான்கு முதன்மையான பணிகளைச் செய்கிறது". என்கிறார் பக்தவத்சல பாரதி. மனித இனப்பெருக்கத்திற்கு குடும்ப அமைப்பு அவசியமாகிறது.

உறவுகள் :

மனிதன் பிறக்கும் போதே உறவு தோன்றி விடுகிறது. குழந்தை பிறந்தவுடன் தன் தாயை முதலில் அறிந்து கொள்கிறது. அதன் பின்னர்தான் தந்தையையும் உடன் பிறப்புகளையும் பின்னர் இணை உறவுகளையும் பிரதிபலிப்பதற்கு உறவுகள் துணை புரிகின்றன.

"குருதி கலப்பாலும் பெற்றோர் கால் வழியாலும், மனைவியாலும் ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவுமுறை அமைகிறது என்கிறார். அ.ச.ஞானசம்பந்தன்

கணவன் - மனைவி உறவு :

ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து குடும்பம் நடத்தும் போது அவர்களிடையே தோன்றும் உறவு முறைப் பெயர் தான் கணவன் - மனைவி உறவு ஆகும். கணவன் மனைவி இருவருக்குமிடையே அன்புதான் முதன்மையானது. அன்பின் மூலம் தான் கணவன் மனைவி உறவில் நெருக்கம் ஏற்படும், வாழ்வு அர்த்தமுள்ளதாகும். அன்பான உறவின் மூலம் வாழ்க்கை சொர்க்கமாகும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL, MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

பண்பும் பயனும் அது"

இல்லறத்தை நடத்தும் இருவரிடமும் குறைவற்ற அன்பும் மனத்தூய்மையும் இருப்பது தான் வாழ்வுக்குரிய நற்குணமும் நல் பயனும் ஆகும் என்கிறார் வள்ளுவர். இத்தகைய கணவன் - மனைவி உறவினை வெ.இறையன்பு ஆத்தங்கரை ஓரம் புதினத்தில் சுட்டிக் காட்டுகின்றார்.

யூதிகா ஏழைக்குடும்ப பெண். சப்-கலெக்டராக பணியாற்றிய சுதீர் வரதட்சணை வாங்காமல் யூதிகாவை திருமணம் செய்து கொண்டார். இருவரும் நன்றாக வாழ்ந்து கொண்டிருந்தனர். பின்னர் வேலையில் நெருக்கடி காரணமாக கிராமத்திற்கு சென்று இருவரும் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். கிராம சூழல் யூதிகாவிற்கு பிடிக்காத காரணத்தால் உடல் நலக்குறைவு ஏற்படுகிறது. யூதிகாவை தன் தந்தை வீட்டிற்கு சென்று ஓய்வு எடுத்து வரும்படி சுதீர் கூறுகிறான். அதற்கு யூதிகா "இது சாதாரண காய்ச்சல் தான் சரியாகிவிடும் ஒரு முக்கியமான காலக் கட்டத்தில் நான் உங்களோடு இருப்பது தான் என்னுடைய கடமை நானும் இல்லாவிட்டால் நீங்கள் சாப்பிட மாட்டீர்கள்.

காய்ச்சல் இறங்கிய பிறகு யூதிகாவை அவளுடைய சொந்த ஊருக்கு அனுப்ப சம்மதிக்க வைப்பதற்கு சுதீர் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது.திருமணமான நாளிலிருந்து ஒருமுறைக் கூடத் தன்னை விட்டுப்பிரியாத மனைவி, இப்பொழுது முதல் முறையாக பிரிந்து செல்வதை நினைத்த பொழுது சுதீருக்கு சற்று நெஞ்சுக் கனமாக இருந்தது.இந்த அடிகள் கணவன் மனைவி இருவருக்குமிடையே அன்புதான் முதன்மையானது. அன்பின் மூலம் தான் கணவன் மனைவி உறவில் நெருக்கம் ஏற்படும் என்பதை கூறுகிறது."**கணவன் மனைவி உறவு உள்ளூறவாக உயிர் பிணைப்பாக இருக்க வேண்டும்"** என்று அருணன் கூறியுள்ளார்.

தந்தை மகன் உறவு :

குடும்பத் தலைவனுக்கும், தலைவிக்கும் பிறந்த ஆண் குழந்தையை மகன் என்று அழைப்பது வழக்கத்தில் உள்ளது. தாய்க்கு அடுத்தபடியாக பிள்ளைகளின் மீது அன்பு செலுத்துபவர் தந்தை "மகனையும், மகளையும் பெற்றெடுத்தவர் தந்தை, அப்பா, தகப்பன், தோப்பனார், நயினார், அப்பாரு, ஐயா, எந்தை, ஐயனார் ஆகியவை அப்பாவைக் குறிக்கும் சொற்கள் என்கிறார். முனைவர் தாயம்மாள், அறவாணன் நம் சமுதாயத்தில் தந்தை என்னும் உறவு சிறப்பிடம் பெற்று விளங்குகிறது. தலைமைப் பண்பு தந்தைக்கே வழங்கப்படுகிறது. குடும்பத்தினர் அனைவரும் தந்தையை சார்ந்தே வாழ்கின்றனர். இத்தகைய தந்தை மகன் உறவு நிலையை வெ.இறையன்பு புதினத்தில் கூறுகிறார்.

ஆத்தங்கரை ஓரம் நாவலில் கோவிந்த பாயின் மகன் சிமன், கோவிந்தபாயின் மனைவி தன் மகன் சிறுவயதாயிருக்கும் போது இறந்து போனாள். கோவிந்த பாய் மறுமணம் செய்து கொள்ளாமல் தன் மகன் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராக காணப்பட்டார். தன் மகனையே உலகம் என நினைத்து வாழ்ந்தார் இந்த தந்தை மகனின் உறவு பாசமான உறவு என்பதை இறையன்பு வெளிப்படுத்தியுள்ளார்.

தாய் மகன் உறவு :

ஈன்றாளுக்கு ஒப்பு கடவுளுமில்லை என்பர். சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்மையின் பெருமை தாய்மையில் அடங்குகிறது. தாய் என்ற உறவு அன்னை என்றும் அம்மா என்றும்

அழைக்கப்படுகிறது. ஒரு தாய் அவளது குழந்தைகளை உலகமாகக் கருதுகிறாள் அப்படிப்பட்ட தாய்க்கும் மகனுக்கும் இடையேயான உறவு பாசப் பிணைப்பாகும். இத்தகைய தாய் மகன் உறவு பற்றி வெ.இறையன்பு சாகாவரம் புதினத்தில் சுட்டிக்காட்டுகின்றார்.

நசிகேதன் வீட்டில் ஒரே மகன் நசிகேதனின் தாய் அவன் மீது அதிக அன்பு காட்டுகிறாள். ஒரு மாதத்திற்குள் நசிகேதனின் நண்பர்கள் மூன்று பேர் இறந்தனர். இதனால், அவன் மனநிலை பாதிப்படைகிறது நசிகேதனை பார்க்கும் நேரமெல்லாம் அவனது தாய் தன் மகனை பறி கொடுத்திடுவோமோ என்ற பயம் அவளுக்கு காணப்பட்டது.

“ஆசை ஆசையாய் வளர்த்த ஒரே மகன், எதையும் தங்கள் விருப்பமென்று திணிக்காமல் சுதந்திரமாக வளர்க்கப்பட்ட வாரிசு. அவனை எப்படியாவது இறுக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டும். மறுபடியும் சின்னக் குழந்தையைப் போலத் துள்ளிக் குதிக்கும் அவனை பார்க்க மாட்டோமா” என்று கூறுகிறாள். இந்த அடிகள் நசிகேதன் மீது அவன் தாய் கொண்டுள்ள அன்பை புலப்படுத்துகிறது

மாமியார் - மருமகள் உறவு :

தன் மகனுக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டவனை மருமகள் என்று அழைப்பர். மரு◌ூமகள்ஸ்ரீமருமகள் அதாவது மகளுக்கு அடுத்தபடியாக வந்தவள் என்பது பொருள் கொள்கிறது. குடும்ப சூழுலில் மாமியார் - மருமகள் உறவு பல நேரங்களில் போராட்ட உறவாகவும் அமைகின்றது. மாமியார்கள் எல்லாரும் கொடுமைக்காரிகள் இல்லை. தன் மகள் போல் நினைத்து அன்பு செலுத்தும் மாமியாரும் இருக்கின்றனர். இத்தகைய மாமியார் மருமகள் உறவை வெ.இறையன்பு தன்னுடைய சாகாவரம் புதினத்தில் கூறுகிறார்.

கோபியின் மனைவி பரிவர்த்தினி திருமணமான ஒரு மாதத்தில் கோபி இறந்தான் பரிவர்த்தினிக்கு கருணையின் அடிப்படையில் ஆசிரியர் பணி கிடைத்தது பரிவர்த்தினி கணவனை இழந்து தவிப்பதை பார்த்து மாமியார் வருந்துகிறாள் பரிவர்த்தினிக்கு மறுமணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் கோபியின் தாய்க்கு ஏற்பட்டது. ஆனாலும் ஓய்வூதிய பணத்தை எதிர்பார்க்காமல் மருமகளுக்கு நல்ல வாழ்க்கை கிடைத்தால் போதும் என நினைத்தாள் இதன் மூலம் மாமியார் மருமகள் மீது கொண்டுள்ள அன்பையும் இரக்கத்தையும் காண முடிகிறது.

காதலுறவு :

ஆணும் பெண்ணும் ஒருவர் மேல் ஒருவர் அன்பு கொள்வது காதல். சமுதாயம் காதலை எதிர்க்கிறது. காதல் செய்வதால் பழிச்செயல் ஏற்படுகிறது. ஆணும் பெண்ணும் காதலிக்கும் பொழுது சிக்கல்களையும், துன்பங்களையும் எதிர்கொள்ள நேரிடுகிறது. வெ.இறையன்பு ஆத்தங்கரை ஓரம் புதினத்தில் காதல் உறவை சுட்டிக் காட்டுகிறார்.

சிமன் ஆசிரமப் பள்ளியில் பயில்கிறான். அங்கு சிமனுக்கும் மிருதுளாவுக்கும் இடையே காதல் ஏற்படுகிறது. இருவரும் நேரம் கிடைக்கும் நேரங்களில் சந்தித்தனர். ஆனால், சில மாதங்களாக சிமன் மிருதுளாவை காண வரவில்லை. காண வராத சிமன் திடீரென ஒரு நாள் காண வருகிறான் அப்போது “மிருதுளாவின் கண்களிலிருந்து திரண்டு ஓடி வந்து ஒரு துளி சூடான கண்ணீர் சிமன் கைகளில் விழுந்து அவனுக்குப் பிரக்ஞையூட்டியது. அவன் அவள் விழிகளைத்

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

தீவிரமாய்ப் பார்த்தான். இதில் சிமன் - மிருதுளா இருவருக்குமிடையேயான காதலுறவை அறிய முடிகிறது.

ஆசிரியர் - மாணவர் உறவு :

சமூகத்தை இளைய தலைமுறையினரை நல்வழிப்படுத்துபவர்கள் ஆசிரியர்கள்ஸ்ரீஆசூஇரியர் ஆவார். ஆசு-குற்றம், இரியர் - நீக்குபவர். தம்பால் கல்வி பயில வரும் மாணவரிடத்திலுள்ள குற்றங்களை நீக்குபவர் ஆசிரியர் அத்தகைய ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையேயுள்ள உறவினை ஆசிரியர் 'சாகாவரம்' புதினத்தில் கூறுகிறார்.

நசிகேதன் தாவரவியல் ஆசிரியராக தான் படித்த பள்ளியில் பணியாற்றுகிறான். மாணவர்கள் நசிகேதனின் வகுப்பை தவற விட மாட்டார்கள். பள்ளியில் அவரை சுற்றி எப்போதுமே ஒரு கூட்டம் இருக்கும். அவர் ஒரு முறை பாடம் சொல்லிக் கொடுப்பது அப்;படியே மனதில் பதியும் வகுப்பு நேரம் முடிந்த பின்னர் மாணவர்கள் தங்கள் சொந்த பிரச்சனைகளை நசிகேதனிடம் கலந்து பேசுவார்கள் அன்பும், கனிவும் நிறைந்த ஆசிரியராக நசிகேதன் காணப்பட்டார்.

முடிவுரை :-

மனித சமுதாயத்திற்கு அடிப்படைத் தேவையாக விளங்குவது அன்பு என்பதை யாரும் மறுக்க முடியாது. இதனை வள்ளுவர் குறிப்பிடும் போது

"அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு" என்று விளக்குகிறார்.

இத்தகைய சிறப்புடைய அன்பு வாழ்க்கையில் இருப்பதனால் தான் உறவுகள் வலுப்பெறுகிறது.

துணைநூற்பட்டியல் :-

1. வெ.இறையன்பு,ஆத்தங்கரை ஓரம்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சிட்கோ இண்டஸ்ட்டீரியல்,அம்பத்தூர்,சென்னை 600 098
2. வெ.இறையன்பு,சாகாவரம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சிட்கோ இண்டஸ்ட்டீரியல்,அம்பத்தூர்,சென்னை 600 098
3. சு.சக்திவேல்,நாட்டுப்புற இயல் ஆய்வு,31,சிங்கர் தெரு,சென்னை 600 108
4. தாயம்மாள் அறவாணன்,உறவு முறைகள்,பாரி நிலையம்,சென்னை.
5. பக்தவத்சல பாரதி,பண்பாட்டு மானிடவியல்,மணிவாசகர் பதிப்பகம்,சென்னை

35.மோகமுள் நாவலில் பெண்ணியச் சிந்தனை

பொன்.கனகா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.
8754150309 - pon9514425928@gmail.com

DOI 10.5281/zenodo.21741992.

Abstract:

This paper examines the feminist ideas presented in Mogamul, the renowned Tamil novel by Thi. Janakiraman, by analyzing its female characters and their lived experiences. The study explores how the novel portrays issues such as women's education, patriarchal domination, gender inequality, social oppression, and the struggle for women's liberation. The paper argues that the novel emphasizes education, equality, self-respect, and freedom as essential for women's empowerment while exposing the structural barriers imposed by patriarchal society. Overall, the study concludes that Mogamul serves as a significant social novel that reflects feminist consciousness and advocates for recognizing women as equal human beings rather than as symbols of sacrifice or divinity

Keywords:

Feminism, Women’s Liberation, Patriarchy

முன்னுரை:

இலக்கியம் சமூகத்தின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. ஒரு சமூகத்தின் பண்பாடு, வாழ்க்கைமுறை, மனித உறவுகள் மற்றும் சமூகச் சிக்கல்களை நாவல்கள் ஆழமாக வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் தி. ஜானகிராமனின் மோகமுள் நாவல் பெண்ணின் வாழ்க்கை, கல்வி, சாதி, ஆணாதிக்கம் மற்றும் பெண் விடுதலை போன்ற கருத்துகளை யதார்த்தமாகப் பதிவு செய்துள்ள சிறந்த சமூக நாவலாகும். மோகமுள் நாவலின் பெண்மாந்தர்கள் வழியாக வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண்ணியம்:

மனித இன மறு உற்பத்தியோடு மட்டுமே வரையறுக்கப்பட்ட பெண், புதிய தொழில்மய சமூகத்தில் கூடுதலாகப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் நிலை தோன்றியது. ஆணுக்கு இணையாக பொருளாதார வாழ்வு மேற்கொண்ட போதே, பெண்சிக்கல் தொடங்கிவிட்டது என்று கூறலாம். புதிதாக பெண்கள் ஏற்றுக்கொண்ட பாத்திரங்களால் முரண்பாடுகளும் சிக்கல்களும் மன விரிசல்களும் தோன்றின. இவற்றிற்கான காரணங்களும் தீர்வுகளும் தீர்க்கின்ற முறைகளும் ஓர் ஒழுங்கு முறையில் இணைந்த போது 'பெண்விடுதலை' என்ற புதிய சிந்தனை எழுந்தது. இதனைத் தொடர்ந்து

இதற்கான இயக்கங்கள் ஆய்வுகள் அமைப்புகள் ஆகிய அனைத்தையும் தழுவிய 'பெண்ணியம்' என்ற விடுதலைக் கருத்தியலும் கோட்பாடும் தோற்றம் கொண்டன.

பெண்ணியம் இன்று பரவலாகவும் ஆழமாகவும் வளர்ந்து வரும் ஒரு கருத்தியல். இலக்கியத்திலும் சரி சமூகத்திலும் சரி பெண்கள் பற்றிய கருத்துகள், எதிர்பார்ப்புகள், மதிப்பீடுகள் ஆகியனவற்றில் மாற்றம் ஏற்படவேண்டும் என வலியுறுத்துகிறது.

“இயற்கையிலேயே அமைந்த உடலும் மனமும் சார்ந்த வேறுபாடுகளை மனதிற்கொண்டு கால, இட, மொழி, இன, சாதி, சமய வட்டார வேறுபாடுகள் எவற்றின் அடிப்படையிலும் இல்லாமலும், உலகளாவியதும் மானுடப் பொதுமை சான்றவையுமான நியதிகளையும் நீதிகளையும் அடிப்படையாக வைத்தும் பெண்ணின் கடமைகள், பொறுப்புகள், உரிமைகள், சமூகநிலை ஆகியவற்றைச் சித்தரிப்பதே பெண்ணியம்” (பெண்ணியச் சிந்தனைகள், ப.7) என்று மீனாட்சி முருகரத்தினம் கூறுகிறார்.

பெண்கள் அடிமை நிலையிலிருந்து விடுதலையடைதல், சமுதாயம் படைத்திருக்கும் பெண்மைப் புனைவுகளை உடைத்து மறு உருவாக்கம் பெறுதல், பெண்களின் முன்னேற்றம் முதலான கருத்துக்களை உள்ளடக்கிய பெண்விடுதலை இயக்கத்தின் செயல்பாடுகள் 'பெண்ணியம்' என்ற கருத்து நிலை உருவாகக் காரணமாக இருந்தது எனலாம்.

தேவதத்தா, **"சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலை மாறுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரைமுறையாகும் இப்போதைய நிலையில் கொள்ளலாம்"** (தமிழிலக்கியமும் பெண்ணியமும், ப.2) என்று பெண்ணியத்தை வரையறை செய்துள்ளார்.

பால்பாகுபாடு, ஆணாதிக்கம், தந்தைவழிக் குடும்பம் முதலானவை இக்காலச் சமூக நடைமுறையில் இருப்பதைப் புரிந்து கொண்டு அவற்றிற்கு எதிராகப் பெண்களும் ஆண்களும் செயல்படுவதே பெண்ணியம் எனப் பெண்ணியத்திற்குப் பொதுவிளக்கம் கூறலாம்.

மோகமுள் நாவலில் பெண்ணியச் சிந்தனை:

பெண்களை வீட்டுடன் மட்டும் தொடர்புபடுத்திப் பார்க்கும் மனப்பான்மை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி வளர்ந்துள்ளது. 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்றும் 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு' என்றும் கூறுவதிலிருந்து பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டதையும் அவளின் அடிமை நிலையும் தெளிவாகப் புலனாகிறது.

மோகமுள் நாவலில் வரும் யமுனாவிற்கும் கல்வி மறுக்கப்பட்டுள்ளதைப் பெண் ஒடுக்கமுறையாகவே கொள்ளலாம். பெண்களின் தாழ்நிலைக்கும் சிக்கல்களுக்கும் பல சமயங்களில் பெண்ணினமே காரணமாக இருப்பது போலத்தான் இக்கல்வி மறுப்பிலும் ஒரு பெண்ணே மற்றொரு பெண்ணின் வளர்ச்சிக்குத் தடையாகிறாள்.

“எனக்கு ஆசாரமும் வேண்டாம் நாகரிகமும் வேண்டாம்மா. நாலு எழுத்துப் படிச்சவனாப் பார்த்து கொடேன்னு தான் சொல்றேன். வீட்டுக்கு வரப்பவே. 'இன்னிக்கு ஹோட்டல்லெ கொதிக்கிற சாம்பார் கால்லெ கெட்டிப்பிடிச்சு. கோழி நறுக்கறப்போ விரல்லே கத்தி பட்டிச்சு'ன்னு பொண்டாட்டியோட பேசற ஆளத்தான் பார்த்துக் கொண்டிருக்கணுமா? என்னையும் எட்டுக்கிளாசுக்கு மேலே படிக்க வைக்கமாட்டேன்னுப்பிட்டே,. என்னைக் கையைப் புடிச்சுகிறவன் கூட தற்குறியா இருக்கனுமாம்மா" (மோகமுள், ப.52) என்ற யமுனாவின் கூற்றிலிருந்து அவளுக்கு கல்வி மறுக்கப்பட்டதை உணரலாம் தனக்கு வரவிருக்கும் கணவன் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று துணிச்சலோடு கூறும் பெண்ணாகவும் அவள் காணப்படுகிறாள்.

பெண்களுக்குக் கல்வி அவசியம் வேண்டும் என்பதையும் அவர்கள் படித்தால் தான் முழுமையான வாழ்க்கை வாழ முடியும் என்றும் இந்நாவலில் பாபு வாதாடுகிறான். யமுனா படிக்காததால் தான் அவள் அடங்கி ஒடுங்கி வீட்டில் இருக்கிறாள் என்றும் அவள் படித்திருந்திருந்தால் எந்தச் சிக்கலைகளையும் எதிர்க்கக் கூடியவளாக இருந்திருப்பாள் என்றும் பாபு கூறுவதிலிருந்து ‘பெண் விடுதலை’ பெற வேண்டும் என்ற எண்ணம் புலனாகிறது.

பெண்கள் வெளியே செல்லக்கூடாது, அப்படிச் சென்றால் 'கும்டா' போட்டுக்கொண்டுதான் செல்ல வேண்டும் என்று கூறும் சமுதாயத்தை எதிர்கொள்ள படிப்பு மிகவும் அவசியம் என்பதை பாபு பின்வருமாறு கூறுகிறான். **“படிச்சு இந்த மாதிரி வாழறது முட்டாள்தனம்னு புரிஞ்சுக்கணும். இதைவிடப் பூரணமான வாழ்க்கையைப் பொம்மனாட்டிகள் வேறு எங்கெங்கேயோ நடத்திண்டு சந்தோஷமா இருக்கிறதைத் தெரிஞ்சுக்கணும். அப்பதான் தைரியம்வரும். ஆதாரத்துக்கு ஒண்ணை வச்சுக்காம தைரியம் வந்து விடாது. அப்படித் தைரியம் வந்தா சங்கடங்கள் நிறைய இருக்கு."** (மோகமுள், ப.128) என்று கூறுவதிலிருந்து பெண்கள் படித்தால் மட்டுமே முன்னேறுவார்கள் என்ற கருத்து வெளிப்படுகிறது. மேலும், "படிச்சா, விஷமம் எங்கே இருக்குன்னு கண்டுபிடிச்சு வச்சுக்கவாவது முடியும். எது நல்லது, எது கெட்டது, எது பத்திரம் எது ஆபத்துன்னு புரிஞ்சுக்க முடியும். தைரியம்னா இதுதான், அறிவு தான் தைரியம்." என்ற பாபுவின் கூற்றிலிருந்து அவன் பெண் கல்விக்குக் குரல் கொடுப்பவனாக காணப்படுகிறான்.

பெண், வீட்டிற்குள் அடைந்து கிடக்காமல், நவீனக்கல்வி கற்றுப் பொதுவாழ்வில் பங்காற்றி, செயலூக்கமான தனி நபராகச் சமூக உற்பத்தியில் ஈடுபடுகிற போதுதான் விடுதலை பெறுவாள் என்று பெண்ணியம் கூறுகிறது. பாபு இதனையே கூறுகிறான்.

பெண் விடுதலை:

பெண் என்பவள் தடையற்ற விதத்தில் 'பெண்மை' உணர்வுகளை வெளிப்படுத்தி வாழ்வதே பெண் விடுதலை என்று கூறலாம். ஆண், பெண் விடுதலை குறித்துப் பேசியதற்கும் பெண்கள் தங்கள் விடுதலை பற்றிப் பேசியதற்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கால மாறுபாட்டில் பெண்கள் முன்னேறி வருகின்றனர். பெண்கள் ஆண்களுக்கு சரிநிகர் சமானமாக குரல்

MUTHTHARASI – ART LITERARY CULTURE TAMIL JOURNAL,MADURAI.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கொடுக்கின்றனர். பெண் முன்னேற வேண்டும் என்று கூறிய ஆண்கள் அவர்கள் முன்னேறுவதைக் கண்டு வெறுப்படைகிறார்கள். சமத்துவம் கோரும் பெண்களை ஆண்களாகவே நினைக்கின்றார்கள். பெண் விடுதலை என்பது ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் மறுக்கப்பபட்ட ஒன்றாகவே இருக்கிறது.

மோகமுள் நாவலில் வரும் பாபு படித்து பட்டம் பெற்றுச் சென்னை நகரில் வசித்து வருகிறான். அவன் படித்த பெண்கள் ஆணுக்குச் சரிநிகரான சமத்துவம் கோருவதை விரும்பாதவனாகவே உள்ளான். **"பெண்கள் கூட வரவர விலகி கொண்டே போகிறார்கள். சமத்துவம் கேட்கிற போராட்டத்தின் முதற்கட்டம் போலிருக்கிறது. ஆண்களோடு சேர்ந்து சேர்ந்து போட்டிபோட்டுப் போட்டு இவர்களுக்கும் ஆண் தன்மை வந்துவிட்டதோ?...அரும்பு மீசையும் வீச்சு நடையுமாகப் போகிற பெண்களைப் பார்க்கும் போது, இது என்ன இழவு...?" (மோகமுள், ப.599)** என்று கூறுவதிலிருந்து அவனுடைய ஆண் ஆதிக்க எண்ணம் வெளிப்படுவதைக் காணலாம்.

பெண்ணைத் தெய்வமாக வணங்க வேண்டும் என்ற தந்தையின் எண்ணத்தை ஏற்று வாழும் பாபுவின் பார்வையில் பெண்ணின் சமத்துவக்குரல் இழவாகத் தோன்றுகிறது. பெண்ணின் சமத்துவக் கோரிக்கையானது, ஆணுக்கு பெண், தனது பெண் தன்மையை விட்டு, ஆண் தன்மை பெறுவதாகத் தோன்றுகிறது.

பெண் என்பவள் ஆணின் நுகர்ச்சிக்கு ஏற்ற காமப் பொருளாகவோ, சேவைப் பொருளாகவோ தெய்வீகப் பொருளாகவோ இல்லாமல், தன்னிலை பெற்று முன்னேற்றம் பெறுகிற போது, அந்த மாற்றம் ஆணுக்குக் கலக்கத்தை உண்டாக்குகிறது. கீழ்சாதி மக்கள் இப்படித்தான்வாழ வேண்டும் என்று மேல் சாதிக்காரர்கள் தம் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றனர். ஆனால் புதிய சூழலில் அடிமைநிலை, சாதிநிலை என்ற எல்லைகளை அம்மக்கள் மீறும் போது, 'ஆசாரம் கெட்டுவிட்டது' 'ஒழுங்கு சிதைந்து விட்டது' என்று ஆதிக்கச் சாதிகளின் கூக்குரல் எழுகிறது. பாபுவின் குரலும் இதனை ஒத்ததேயாகும். புதிய சூழலில் பெண் தனது ஆற்றலை வெளிப்படுத்தும் போது, அச்செயல் ஆணுக்குப் பெண் தன்னோடு போட்டி போடுவதாகத் தோன்றுகிறது. பெண் சுதந்திரம் என்பது ஆணுக்குத் தன் ஆதிக்கத்தைப் பெண் பறிப்பதாகவும் மறுப்பதாகவும் தோன்றுகிறது எனலாம்.

சுதந்திரம் பெறுவதற்காகப் பாதிக்கப்பட்டவர்கள் மேற்கொள்கிற எல்லா முயற்சிகளும் ஆதிக்கத்தாரின் பார்வையில் தங்களுடைய ஆதிக்கத்தைப் பறிக்கும் முயற்சியாகவே தோன்றும். ஆதிக்கம் செலுத்துபவர்கள், தங்கள் ஆதிக்கத்திற்குச் சரிவு வருமோ என்ற எச்சரிக்கையோடு தான் விடுதலை முயற்சிகளை நோக்குவார்கள். இந்த நோக்குத்தான் பாபுவிடம் வெளிப்படுகிறது எனலாம்.

'அரும்பு மீசையும்,' வீச்சுநடையும் ஆண்மைக்கான சைகைகளாகும். இந்தச் சைகைகளை, ஆதிக்கத்திற்கு உட்பட்ட பெண் செய்வதாகத் தோன்றுகிற போது, அச்செயல் ஆணுக்குப் பெண் எல்லை மீறிச் செல்வதாகத் தோன்றுகிறது. சமத்துவம் கேட்கிற பெண்களின் செயல், ஒழுக்க மீறலானது என்று பாபு நினைக்கிறான். பெண்கல்விக்குக் குரல் கொடுத்தாலும்,பெண்விடுதலையை

வெறுக்கும் ஆண் ஆதிக்கம் பாபுவிடம் வெளிப்படுகிறது. இந்நாவலின் மாந்தர்கள் வழியே பெண் விடுதலைக் கருத்தை தி.ஜா. மறுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

சக்தி தத்துவமும் பெண் ஒடுக்குமுறையும் :

மோகமுள் நாவலில் வரும் பாபுவும் ராஜமும் பெண்களைத் தெய்வமாக எண்ணி வழிபடுகின்றனர். இந்நாவலில் வரும் தேவி உபாசகரான ராஜூ, இராமகிருஷ்ண பரமஹம்சர் போல பெண்களைத் தெய்வமாக வணங்கி வருகிறார். பாபுவும் ராஜமும் போற்றுகிற சக்தி வழிபாடும், பக்தியோகமும் பெண்ணைப் பாலியல்ரீதியில் ஒடுக்கியதன் ஒரு வெளிப்பாடுதான் என்று கூறலாம். பெண்ணைத் தெய்வமாக ஆண் வழிபடுவதோடு ஆணைத் தெய்வமாகப் பெண் வழிபடுவதை ஒப்பிட்டால் ஒரு வேறுபாடு புலப்படும். பெண் ஆணை வழிபடுவது பெண்ணின் ஒழுக்கமாகி கடமையாகிறது. பெண்ணை வழிபடுவது ஆணுக்கு ஆன்ம சக்தி பெறுவதற்கான மனப்பயிற்சியாகும். இவ்விரு வழிபாடுகளிலும் ஆண்தான் மையம் கொள்கிறான்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய சங்கரரரின் வேதாந்தத்தில் சக்தி தத்துவம் தோன்றியதாகக் கூறுவர். அவர் கூறிய அறுவகை வழிபாடுகளில் சக்தி வழிபாடும் அடங்கும். **“சக்தி என்பது அழகு (ரம்யா) ஆசை (ராதா) உணவு (அன்னபூர்ணா) பொறுமை (பூமாதா, ஜகதீஸ்வரி) செல்வம் (லஷ்மி) ஆகிய அம்சங்களனைத்தும் நிரம்பப் பெற்ற பெண் வடிவமாகப் பார்க்கப்படுகிறது”** (இந்துப் பெண்ணியம், ப.74) என்கிறார் க.பரிமளம்.

சக்தி தத்துவமும் பக்தியோகமும் பெண்ணை அன்புமயமானவள், அழகுமயமானவள் என்ற எல்லைக்கு அப்பால் பார்ப்பதில்லை; அவளை அறிவு, சுதந்திரம் ஆகியவற்றோடு சம்பந்தப்படுத்திப் பார்ப்பதில்லை. அப்படிப் பார்ப்பதும் பெண்மைக்கு ஏற்றதல்ல. ஆகையால் பெண் விடுதலை என்பது பெண்மைக்கும் அன்புக்கும் நளினத்திற்கும் மென்மைக்கும் எதிரானது என்று சக்தி தத்துவம் கூறுகிறது எனலாம்.

பெண்ணைப் பால் அடிப்படையில் மட்டும் அணுகாமல் ஒரு மனிதப் பிறவியாகப் பார்க்க வேண்டும், அப்போது தெய்வம் சக்தி, பராசக்தி, அன்னபூரணி போன்ற தெய்வீகப் புனைவுகள் அவளுக்குத் தேவைப்படாது என்று பெண்ணியம் வலியுறுத்துகிறது. பெண்ணை மனித உயிரியாகப் பாராமல், அவளுக்குப் புனித மகுடங்களைச் சூட்டுவது இன்னொரு விதமான ஒடுக்குமுறையாகவே பெண்ணியம் கருதுகிறது.

"பெண்மையைப் போற்ற பெண்ணையே கடவுளாக வைத்து, அதன் அழகையும் அருளையும் சிலையாய் வடித்து செய்த அழகிய சதி இது" (மோகமுள், ப.67) என்று பாபு எண்ணுகிறான். சக்தி தத்துவம் பெண்ணுக்குரிய தத்துவம் அல்ல என்றும் பெண்ணைப் பற்றி ஆணுக்கு எழுந்த பாலியல் சிக்கலால் தோன்றிய தத்துவமே என்றும் இன்றைய பெண்ணியலாளர் கூறுகின்றனர். இது பெண்ணை பாலியல் தளத்தில் மட்டுமே வைத்து நோக்குவதால் எழுந்த தத்துவமாகும். பெண்ணிடம் பாலியல் உறவும் உணர்வும் சிக்கலாகியிருப்பதாக ஆண்கள்

EDITION – IV VOLUME - I
AUG -2026 E-ISSN : 2584 – 1238

கருதுவதற்கு, அவளிடம் வளர்ந்து வரும் ஆற்றல்களில் முழுநிறைவுக்கு விழைகிற தேவை ஒன்று நசுக்கப்பட்டதே காரணமாகும்.

சக்தி வழிபாடு செய்கிற பாபுவுக்கு முடக்கப்பட்ட பெண் தன் சக்தியை வெளிப்படுத்துகிறபோது ஏற்க முடியவில்லை. பெண்ணைச் சக்தியாக வழிபட ஆண் ஒப்புகிறானே தவிர அவளுடைய மெய்யான சக்தியை அவனால் ஒப்ப முடியவில்லை. அவளைச் சக்தி என்று கும்பிடுவது ஒடுக்கு முறையின் ஒரு வடிவமாகவே இருக்க முடியும். பெண்ணைச் சமமாகப் பார்க்கிறபோது அவள் ஒரு மனிதப் பெண்ணாகத் தெரிவாளேயொழிய தெய்வீக சக்தியாகவோ தெய்வமாகவோ தெரிய மாட்டாள் என்று பெண்ணியியலாளர் கூறுகின்றனர். தந்தைவழிச் சமூகப் பண்பாட்டில், பெண்மை புனைவுகள், பெண்ணின் யதார்த்த வாழ்க்கை நிலையை மூடிமறைக்கின்றன என்று கூறலாம்.

பெண்ணை, சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்க வேண்டும் என்றும், அப்போது அவளுக்குத் தெய்வம் சக்தி, பராசக்தி, அன்னபூரணி போன்ற தெய்வீகப் புனைவுகள் தேவைப்படாது என்றும் பெண்ணியம் வலியுறுத்துகிறது. பெண்ணை இணையான ஒரு மனித உயிரியாகப் பாராமல் மேற்படிப் புனித மகுடங்களை ஆண்கள் சூட்டுவது இன்னொரு விதமான ஒடுக்குமுறையாகவே பெண்ணியம் கருதுகிறது.

முடிவுரை:

மோகமுள் நாவல் பெண்ணின் வாழ்வியல் சிக்கல்களையும், சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கம், கல்வி மறுப்பு, சாதிய ஒடுக்குமுறை மற்றும் பெண் விடுதலை குறித்த கருத்துகளையும் ஆழமாக எடுத்துரைக்கிறது. பெண்ணின் முன்னேற்றத்திற்கு கல்வி, சமத்துவம் மற்றும் சுயமரியாதை இன்றியமையாதவை என்பதை நாவல் வலியுறுத்துகிறது. பெண்ணை மனிதராக மதித்து சம உரிமையுடன் அணுகுவதே உண்மையான பெண்ணியம் என்பதை இந்நாவல் உணர்த்துகிறது. மோகமுள் நாவல் பெண்ணியச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் முக்கியமான சமூக நாவலாகத் திகழ்கிறது என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகிறது.

துணை நூற்பட்டியல்:

1. அரங்க மல்லிகா, 1995, தமிழிலக்கியமும் பெண்ணியமும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
2. பரிமளம்,க., 1995, இந்துப் பெண்ணியம், மதுரை: சமுதாய சிந்தனை செயல் ஆய்வு மையம்.
3. மீனாட்சி முருகரத்தினம், 1999, பெண்ணியச் சிந்தனை, மதுரை: மனித நேய நூல் வெளியீட்டு நிறுவனம்
4. ஜானகிராமன்,தி., 1994, மோகமுள், சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்